# உள்ளமெனும் கோவிலிலே

ஜெய்சக்தி

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் தலைப்பு | : உள்ளமெனும் கோவிலிலே |
| ஆசிரியர் | : ஜெய்சக்தி |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : செப்டம்பர், 2006 |
| தாள் | : 11.6 kg வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 272 |
| நூல் கட்டுமானம் | : சாதா அட்டை பைண்டு |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூல் வெளியிடுவோர் | : ஸ்ரீ செல்வ நிலையம்<br>4, முத்துக் கிருஷ்ணன் தெரு,<br>பாண்டிபஜார் அருகில்,<br>சென்னை - 600 017 |

**விலை ரூ. 85.00**

| | |
|---|---|
| ஒளி அச்சு | : 'சிவம்'ஸ், போன்: 9444232005 |
| அச்சிட்டோர் | : சேகர் கிராபிக் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 005. |




# உள்ளமெனும் கோவிலிலே

# உள்ளமெனும் கோவிலிலே

கலையரங்கம் கலகலப்பாக இருந்தது.




'எல்லாம் பாக்கறதுக்கு அழகாத்தான் இருக்குது' என்று இழுத்தாள் வெண்ணிலா. 'ஆனா, உனக்கு இந்த ஐடியா மட்டும் பிடிக்க மாட்டேங்குது 'இல்லே' என்று சிரித்தாள் நீலா.

'ஆமா!' என்றாள் வெண்ணிலா.

'இங்கு பாருடி. இது நீ நினைக்கற மாதிரி ஷோ இல்லே. நம்ம ஊர் உடைகளை டிசண்டா போட்டுட்டு வந்துகாட்டற ஃபாஷன் ஷோ. நீயே வேண்ணா உள்ளே வந்து பாரு.... யாருமே உடம்பை வெளிக்காட்டற மாதிரி உடை உடுத்திகிட்டு இருக்க மாட்டாங்க. உடுத்தற உடையை கொஞ்சம் ரசனையோட உடுத்திக்கலாம்னு காட்டறதுதான். ஐடியா.... வேற எதுவும் இல்லே!' என்றாள் நீலா.

'என்னவோப்பா.... நான் உனக்கு ஹெல்ப் செய்யறதுக்காகத்தான் வந்தேன்.' என்று முணுமுணுத்தாள் வெண்ணிலா.

'அதுவும்.... நான் புடவைதான் உடுத்திக்கப்போறேன்னு தெரிஞ்சதுக்கப்புறம்... இல்லே!' என்றாள் நீலா.

'ஆமாடி... நீலா பெண்கள் தங்களோட கௌரவத்தை விட்டுக் குடுக்கக் கூடாதுடி. 'திறமையாலிங்கு மேனிலை சேர்வோம்னு' பாரதியார் சொல்லியிருக்காரில்லே.... அது மாதிரி நம்ம திறமையாலதான் நாம முன்னேறணுமே தவிர வேற விதமான

சலுகைகளினால இல்லே! தோற்றம் காட்டி, கவர்ச்சி காட்டி வர்ற வெற்றியெல்லாம் தோற்றத்திற்கோ, கவர்ச்சிக்கோ பங்கம் வர்றப்போ அதுவும் அழிஞ்சு போயிடும். ஆனா, அறிவால திறமையால வர்ற வெற்றி என்னைக்கும் நிலைச்சு நிற்கும்... தெரியுதா?' என்றாள் வெண்ணிலா.

'அம்மா.... கிரண்பேடி! போதும். அதையெல்லாம் நாம தனியா வச்சுக்குவோம். இப்போதைக்கு நீ எப்படி அழகாப் புடவை கட்டிக்குவியோ.... அதே ஸ்டைல்ல எனக்கும் கட்டி விடு' என்றாள் நிலா.

வெண்ணிலாவும் தன் பேச்சை விட்டு விட்டு உதவி செய்ய ஆரம்பித்தாள்.

அதே சமயம் ஒரு இளைஞன் அவர்கள் பேச்சை முழுவதுமாகக் கேட்டு விட்டு ஒரு புன்னகையுடன் நகர்ந்ததை இருவருமே கவனிக்கவில்லை.

∴ ∴ ∴

'நாகேஸ்வரி, நம்ம கந்தசாமி அண்ணன் இல்லே' அவரு ஒரு வரன் கொண்டு வந்திருக்காரு... மாப்பிள்ளையோட வசதி கேட்டா மலைப்பா இருக்கு. ஆனா, நம்ம வெண்ணிலாவைப் போன வாரம் அந்த ∴பேஷன் ஷோவில பாத்துட்டு இவளையேதான் கல்யாணம் பண்ணுவேன்னு சொல்றானாமா?' என்றார் ஆச்சரியத்துடன்.

நாகேஸ்வரி கணவனைப் பார்த்தார். 'அது சரி உங்க தங்கை மகன் கார்த்திகேயன் வேற வெண்ணிலாவைக் கல்யாணம் பண்ணலாம்னு இருக்கான் போலே. அப்புறம் எப்படி?' என்று ஆழம் பார்த்தார்.

சங்கரராமன் ஒரு நிமிடம் முகவாய்க்கட்டையை நீவிக் கொண்டு யோசித்தார். பிறகு சொன்னார்.



'ஆனா, நம்ம பொண்ணு வெண்ணிலாவுக்கு அப்படி ஒன்றும் ஐடியா இருக்கற மாதிரித் தெரியலையே? கேட்டுடுவோமா?' என்றார்.

அதே சமயம் வெண்ணிலா கையில் ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு சிரித்தபடி உள்ளே வந்தாள்.

'அப்பா.... இந்த அத்தானைப் பாருங்க.... லெட்டர் போடுங்கன்னா.... கார்ட்டூன் வரைஞ்சு அனுப்பியிருக்காரு!' என்று சிரித்தாள்.

கோணலான கோடுகளில் இரண்டு உருவங்கள் வரைந்து 'இது நான் நீ அது நீ!' என்று எழுதியிருந்தான் கார்த்திகேயன்.

சங்கரராமன் மனைவியைப் பார்த்தார். 'பாத்தியா, இந்தத் துப்புக் கெட்ட பையன் எப்படிப் பொழச்சு.... என்னத்தைப் பண்ணப் போகுதோ' என்றார்.

'ஏம்பா.... அத்தானைத் திட்டறீங்க?' என்றாள் வெண்ணிலா.

'பின்னே என்னம்மா செய்யச் சொல்றே? அவன் எந்தக் கம்பெனியிலாவது தொடர்ந்து ஒரு மூணு வருஷமாவது அவ்வளவு ஏன் ஒரு வருஷமாவது ஏதாவது ஒரு இடத்துல உருப்படியான நிலைக்கற வேலை செஞ்சிருக்கானா?' என்று கவலையாகப் பேசினார்.

அதிலுள்ள உண்மை புரிந்ததனால் வெண்ணிலாவும் அமைதியாகி விட்டாள்.

'சரி... அதை விடு... இப்படி உட்காரு...' என்றார் அம்மா.

'என்னம்மா?'

'இல்லே! உனக்கு ஒரு வரன் வந்திருக்கு.'

'ஓ!'

'ஆமா.. பேரு தினகரனாம். நம்ம ஊர்ல பெரிய டெக்ஸ்டைல் இண்டஸ்டரி வச்சிருக்காரே அவரு.. மகன்' என்றார் அப்பா.

'ஓ....! ஆதவன் இண்டஸ்ரிதானேப்பா? ஐயோ... அவங்க பெரிய இடமாச்சே.. ஒத்து வருமாப்பா..?' என்றாள் வெண்ணிலா.

'இல்லம்மா.. போன வார விழாவில உன்னைப் பாத்தாராம். நீயும், நிலாவும் பேசிக்கிட்டிருந்ததைக் கேட்டாராம். உன்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சாம். உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன் அப்படிங்கறாராம்' என்றார் அப்பா.

வெண்ணிலா அமைதியாக அமர்ந்திருந்தாள்.

அப்பா மெதுவான குரலில் 'ஏம்மா... உனக்கு கார்த்திகேயனைக் கல்யாணம் பண்ணனும்னு ஏதாவது ஐடியா இருக்கா?' என்றார்.

வெண்ணிலா அப்பாவைத் தீர்க்கமாக பார்த்தாள்.

'அப்பா... எனக்குக் கார்த்தி அத்தானைப் பிடிக்கும். ஆனா, கல்யாணம்கற ஐடியா இல்லே. ஏன் செல்வம் அத்தானைக் கூடத்தான் பிடிக்கும். அப்படியெல்லாம் இல்லப்பா. என் வாழ்க்கைக்கு எது நல்லதுன்னு நீங்க முடிவு செஞ்சா சரிப்பா!' என்றாள்.

'அப்பாடா! பெரிய கவலை விட்டது!' என்பது போல் பார்த்தார் சங்கரராமன்.

'இன்னும் ஒண்ணும் முடிவாயிடலம்மா... ஜாதகப் பொருத்தம் பார்க்கணும். பெரியவங்க உட்கார்ந்து பேசணும். நிறைய இருக்கு. முதல்ல உனக்குப் பிடிச்சதான்னு சொல்லு....' என்றார்.

தினகரன் அன்றைக்குப் பரிசளிப்பு விழாவில் மேடையில் தந்தையோடு அமர்ந்திருந்ததைப் பார்த்திருந்தாள். ஆள் நன்றாகவே இருந்தான். அமைதியாக, அழுத்தமாக அமர்ந்திருந் தான். பரிசு கொடுக்க அவனைத்தான் அழைத்தார்கள்.



புன்னகை முகத்துடன் பரிசுகளைக் கொடுத்து விட்டு அழுத்தமாகவே அமர்ந்து விட்டான். அந்த ஃபாஷன் ஷோவில் கலந்து கொண்ட பெண்கள்தான் முணுமுணுத்தார்கள்.

'இந்த ஃபாஷன் ஷோவுக்கு ஐடியாவே இவருதானாம்.' என்று.

அப்போது மட்டும் கவனித்துப் பார்த்தாள். உண்மையாகவே ஃபாஷன் ஷோ தரமாக இருந்தது. சிறப்பாகவும் நடந்தது.

திருப்பூரில் நிறையப் பேர் குடும்பத்துடன் வந்து பார்க்கிற அளவில் நாகரீகமாகவே இருந்தது. அதற்குப் பிறகு பள்ளிக் குழந்தைகள் கலை நிகழ்ச்சி வேறு நடந்தது.

அன்றைய நிகழ்வுகளெல்லாம் நினைவுக்கு வர ஆச்சரியமாக இருந்தது. தன்னை ஒரு பொருட்டாக அவர் கவனித்திருக்கிறார் என்பதே அவளுக்கு வாய்ப்பு. அதைக் காட்டிலும் ஆச்சரியம் தன்னைப் பெண் கேட்டது. அப்பாவிடம் ஒன்று மட்டும் சொன்னாள்.

'அப்பா... கேரக்டர் பத்தி மட்டும் கொஞ்ச நல்லா விசாரிச்சுக்குங்கப்பா! என்றாள்.

'அவங்க பணம் பாத்து மட்டும் பொண்ணைக் குடுக்கற ஆள் நான் இல்லம்மா. உன்னைக் கண் கலங்காம வச்சுக்கற ஆள்ன்னா மட்டும்தான்.... பொண்ணு குடுப்பேன்... போதுமா?' என்று அப்பா அளித்த உறுதியில் அமைதியானாள்.

கல்யாணம் பற்றிய கனவுகளோடும் 'சற்றே நாணம் கலந்த அச்சத்தோடும் காத்திருந்தாள்.

∴ ∴ ∴

பணம் வசதிகள் எல்லாம் இருந்ததால் திருமணம் ஒரே மாதத்தில் முடிந்தது. தினகரனின் 'பெற்றோர் 'எங்க கூட்டம் ரொம்பப் பெரிசு. நிறையப் பேர் வசதியானவங்க. அவர்களைக்

கவனிக்கலே. இவங்களைக் கவனிக்கலேன்னு பேச்சு நிறைய வரும். அதனால, நிச்சயதார்த்தம்னெல்லாம் தனியா வைக்க வேண்டாம். கல்யாணத்துக்கு முதல் நாள் நைட் நிச்சயதார்த்தம் வச்சுக்கலாம்' என்றார்.

வெண்ணிலாவின் பெற்றோர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

மாப்பிள்ளை ஏதாவது முன் கூட்டியே பேசக்கூடும் தொடர்பு கொள்ளக் கூடும் என்று அவள் நினைத்தற்கு மாறாக அவன் தொடர்பு கொள்ளவே இல்லை.

பெரியவர்களே எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டார்கள்.

நிச்சயதார்த்தம் நடந்த போது மட்டும் தன் நண்பர்கள் ஒன்றிரண்டு பேருடன் சற்றுத் தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

கைகளை லேசாகப் பின்னால் கட்டியபடி நின்று கொண்டிருந்தான்.

ஒரே ஒருமுறை அவள் முகம் பார்த்தான். அவன் பார்வையிலிருந்து எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

பார்வையைக் கீழே தாழ்த்திக் கொண்டாள். பின்னலில் ஆங்காங்கே கற்கள் பதித்த பதக்கங்கள் பதித்து, தங்க நிற சரிகைப்பட்டில் தேவதையைப் போலிருந்தாள்.

நிச்சயதார்த்தம் முடிந்தபின் அறையில் தோழிகளோடு அமர்ந்திருந்தாள்.

'ஏய்! உங்க மாப்பிளை இன்னைக்கே பாக்கெட்ல போட்டுக்கற மாதிரிப் பாத்துட்டிருக்கிறாரு தெரியுமா!' என்றாள் நீலா.



'அப்படியெல்லாம் ஒன்னுமில்லே. நானும் ஒரு தடவை அவர் முகத்தைப் பார்த்தேன். முகத்தில இருந்து எதையும் கண்டுபிடிக்க முடியலை' என்றாள் வெண்ணிலா.

'ஓஹோ! தரிசனம் ஆயாச்சா?' என்று இருவரும் சிரிக்கையில் அறைவாசலில் நிழலாடியது.

திரும்பினார்கள்.

கார்த்திகேயன் நின்று கொண்டிருந்தான்.

'அத்தான்! வாங்க வாங்க.... எங்கே கல்யாணத்துக்கு வராமப் போயிடுவீங்களோன்னு நினைச்சேன்' என்று ஆர்வமாக வரவேற்றாள் வெண்ணிலா.

'வெண்ணிலா, உன்கிட்டப் பேசணும்' என்றான் இறுகிய குரலில்.

நீலா உடனே 'பேசிகிட்டிருங்க.... ஒரு நிமிஷம்' வந்தர்றேன்' என்று நகர்ந்தாள்.

வெண்ணிலா, அத்தானின் முகம் பார்த்தாள். முகம் வாடியிருந்தது.

'என்னங்க அத்தான்?'' என்றாள்.

'என்ன வெண்ணிலா.... இப்படிப் பண்ணிட்டே?' என்றான்.

வெண்ணிலா புரியாமல் பார்த்தாள்.

'என்னங்க அத்தான்?' என்றாள் மறுபடியும்.

'ஏன்... நிலா... நான் ஒருத்தன் உன்னையே நினைச்சுகிட்டுக் காத்துகிட்டிருக்கேன்னு தெரிஞ்சும் இப்படிப் பண்ணிட்டியே?' என்றான்.

'ஓ!....' என்று திகைத்தாள் வெண்ணிலா.

பிறகு தேற்றிக் கொண்டவள் போல் சொன்னாள்.

'அத்தான்! இப்படி உங்களுக்கு ஐடியா இருக்குன்னு எனக்குத் தெரியலியே... அதுவுமில்லாமல்' எனக்கு அப்படி ஈடுபாடு வர்லையே?' என்றாள்.

அவள் துரதிருஷ்டம் தன் முதலாக அவளிடம் பேசலாம் என்று அவள் அறை நோக்கி வந்த தினகரன் கார்த்திகேயன் சொன்னதைக் கேட்டுவிட்டான் என்பதையும் முகம் சுருங்கப் போய்விட்டான் என்பதையும் அவள் அறியவில்லை.

நிச்சலனமாக அவள் தொடர்ந்து பேசினாள். 'அத்தான்! இந்த முறைமாப்பிள்ளை கான்செப்ட் எல்லாம் இப்ப மாறிகிட்டு வருது. அதனாலயோ என்னமோ எனக்கு அப்படி தோணலே. செல்வம் அத்தானையும், உங்களையும் நான் ஒண்ணாத்தான் நினைச்சேன்' என்றாள்.

'ப்ளீஸ்! இப்ப ஒரு வார்த்தை சொல்லு. நான் போய் தினகரன் கிட்டே பேசறேன்' என்றான். கெஞ்சினான்.

'எனக்கு இன்னைக்குத்தான் பத்திரிகையே கிடைச்சுது. மும்பையிலிருந்து ஃப்ளைட்ல வர்றேன்' என்று கையைப் பிடித்துக் கொள்ள வந்தான்.

வெண்ணிலா நகர்ந்து கொண்டாள். 'அத்தான், ப்ளீஸ் ! சீன் கிரியேட் பண்ணாதீங்க. அம்மாவும், அப்பாவும் என் சம்மதம் கேட்டு இந்தக் கல்யாணத்தை அரேன்ஜ் பண்ணியிருக்காங்க. அவங்களை அவமானப்படுத்தற எந்தக் காரியத்தையும் நான் செய்ய விரும்பலே. நீங்க நல்ல பொண்ணாப் பாத்துக் கல்யாணம் பண்ணிக்குங்க... ப்ளீஸ்!' என்றாள்.

அதே நேரம் நீலா வந்தாள்.

கார்த்திகேயன் கடுகடுத்த முகத்துடன் அறையை விட்டு வெளியேறினான். ஆனால் சும்மாயிருக்கவில்லை.



தினகரனிடம் போய்ப் பேசினான். தினகரன் சிந்தனை யிலாழ்ந்தான்.

* * *

'என்ன இருந்தாலும் இப்படி ஜோடிப் பொருத்தம் கிடைக்கறது ரொம்பக் கஷ்டம்டி' என்று கேலி செய்து கொண்டிருந்தார்கள் தோழிகள்.

'எனக்குத்தாண்டி. இவ தேங்க் பண்ணனும்' என்றாள் நீலா.

'எதுக்கு?' என்றார்கள் தோழிகள்.

'அந்த ஃபாஷன் ஷோவுக்கு வான்னு கூப்பிட்டப்ப வர முடியாதுன்னு அடம் பிடிச்சா இல்ல? அந்த ஃபாஷன் ஷோவுலதான் மாப்பிள்ளை இவளைப் பாத்துப் பிடிச்சுப் போயி பொண்ணுக் கேட்டுருக்காரு... தெரியுமா?' என்றாள் நீலா.

'சே...! நான் என் சான்ஸை மிஸ் பண்ணிட்டேண்டி' என்று போலியாக அங்கலாய்த்துக் கொண்டாள் கிருஷ்ணா என்கிற கிருஷ்ணவேணி.

'ஏன்?' என்றார்கள் மற்றவர்கள்.

'என்னையும் தாண்டி. நீலா அன்னைக்கு ஃபாஷன் ஷோவுக்குக் கூப்பிட்டா... நான்தான் வர மாட்டேன்னுட்டேன். ஐ மிஸ்ட் எ சான்ஸ்' என்றாள்..

'நேரம் தாண்டி. அப்படியே நீ வந்திருந்தாலும் மாப்பிள்ளை என்னவோ அப்படி உன்னை சூஸ் பண்ணி பிக் மிஸ்டேக் பண்ற ஆள் மாதிரி எனக்கு தெரியலே' என்றாள் ரமா.

'அது கரெக்ட்தான். நம்ப நிலாவைப் பாரு. பெரிச அலங்காரம்னெல்லாம் அலட்டிக்கமாட்டா.... ஆனா, எல்லாரையு திரும்பிப் பார்க்க வைக்கற மாதிரி ஏதோ அவகிட்டே இருக் என்றாள் நீலா.

'சும்மாயிருங்கடி!' என்று புன்னகைத்தாள் நீலா.

'இன்னைக்கும் பார்! ஒட்டியாணம், வங்கி, வளையல் மாட்டிகிட்டு அம்மிணி நடந்து வந்தப்ப... எனக்கே சிறு கிறுன்னு தலை சுத்துச்சு. மாப்பிள்ளை இந்நேரம் அங்க தூங்காம உட்கார்ந்துகிட்டிருப்பாரு' என்றாள் கிருஷ்ணா.

'வந்தாலும் வருவாரு. பாருங்க!' என்றாள் ரமா.

சட்டென்று அமைதி நிலவியது அறையில், நிஜமாகவே அறை வாசலில் தினகரன் நின்று கொண்டிருந்தான்.

'வெண்ணிலா விதிர் விதிர்த்துப் போய் நின்றாள். அவன் லேசான புன்னகையுடன் 'ஒரு நிமிஷம் உன்கிட்ட பேசணும்' என்றான்.

அவள் வெளியே வந்தாள்.

'வெண்ணிலா!' என்று அழைத்தான்.

'வெண்ணிலா' சற்றும் எதிர்பாராத அந்தக் கேள்வியைக் கேட்டான் தினகரன்.

ஒரு நிமிடம் அவனை ஆழப் பார்த்தாலும் கோபித்துக் கொள்ளாமல் பொறுமையாகவே பதில் சொன்னாள் வெண்ணிலா.




தோழிகளின் கேலியினால் முகம் சிவந்து நிற்கிற வெண்ணிலாவை சிந்தனையுடன் பார்த்தான் தினகரன்.

'வெண்ணிலா!' என்றான் உணர்ச்சியற்ற குரலில். அப்போது நேரம் பதினொன்றரை மணி.

'ம்!' என்றாள் தரையைப் பார்த்து நின்றபடி.



'பாருங்க... வெண்ணிலா. இந்த நேரம் இப்படிக் கேக்கற ரொம்ப அபத்தமா இருக்கும். ஆனா, வேற வழியில்லே' என்றான்

அவள் முகம் தெளிவானது. இது ரொமான்ஸுக்கான நேர அல்ல என்பது புரிந்தது.

'சொல்லுங்க' என்றாள்.

'நீங்க இந்தக் கல்யாணத்துக்கு மனப்பூர்வமாத்தா சம்மதிச்சிருக்கீங்க.... எந்தக் கம்பல்ஷனும் இல்லையே!' என்றா

அவள் லேசான அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்.

'என்ன இப்படிக் கேக்கறீங்க? அம்மா, அப்பா என்கி சம்மதம் கேட்டதற்கப்புறம்தான் உங்களுக்கு சம்ம சொன்னாங்க. நோ கம்பல்ஷன்' என்றாள் பதட்டமாக.

'ஒண்ணும் டென்ஷனாக வேண்டாம். எதுக்கும் நேடி கேட்டுக்கலாம்னுதான்... நத்திங் வெரி சீரியஸ்' என்றான் தின ஆதரவாக.

தலையைக் குனிந்து கொண்டாள்.

'உங்களுக்குத்தான் என்னை ரொம்பப் பிடிச்சுப் போய் கேட்டதாகவும்' என்று இழுத்தாள்.

அவன் இயல்பாகச் சிரித்தான்.

'ஆமாமா! அதுல எந்த சந்தேகமும் தேவையில்லே. மயங்கித்தான் போயிட்டேன்.. இப்பக் கூட மயக்கமா நின்னுகிட்டிருக்கேன்... ஆனா... உங்க சைடிலயும் எ பிரச்சினை இருக்கக் கூடாதில்லே...' என்றான் மறுபடியும்.

அவள் முகம் மறுபடியும் சிவந்தது.

'இல்லே... சந்தேகம் வேண்டியதில்லே!' என்றாள்.

'தட்ஸ் குட்!' என்றான். பிறகு ஒரு விதமான குரலில்,

'நிலா...! ரொம்ப அழகா இருக்கே' என்றான்.

ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. அவள் தவித்துப் போய் நிற்பதைப் பார்த்தும் உண்மையை உறுதி செய்பவன் போல பார்த்துக் கொண்டு நின்றான்.

'ம்... கடிகாரத்தைத் திருப்பினா நேரமே மாதிடற மாதிரி ஒரு கடிகாரம் கிடைக்கதன்னு வச்சக்க... பன்னிரண்டு மணி நேரம் முன்னாடி போற மாதிரி வச்சிடுவேன். எப்படா காலையில வரும்னு இருக்கு' என்றான் கிறக்கமான குரலில்.

வெண்ணிலா ஏதோ ஆதரவு தேடுவதுபோல் தவிப்புடன் சுற்று முற்றும் பார்த்தாள். பிறகு 'ஃபிரண்ட்ஸ் ரொம்ப கேலி செய்வாங்க...' என்றாள்.

'இன்னைக்கு ஒரு நாள்தானே... செய்வாங்க... விடு' என்றான்.

மனமில்லாதவன் போல் 'குட் நைட்' என்று நகர்ந்தான்.

வெண்ணிலாவும் கன்னக் கதுப்புகள் சிவந்து போக உள்ளே நுழைந்தாள். தோழிகள் எல்லாம் கலகலவென்று சிரித்தார்கள்.

'என்னடி சொன்னாரு?' என்றார்கள்.

'ம்ஹூம்... அதெல்லாம் சொல்வேனா?' என்று வெட்கத்துடன் உறுதியாக மறுத்துவிட்டாள். அவர்களும் கேட்கவில்லை.

அவள் மனதுக்குள்ளே முடிஞ்சா நேரத்தையே மாத்தி வச்சடுவேன் என்று அவன் சொன்ன விதமே காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. அவளும் கனவுகள் நிறைந்த உறக்கத்துடனேயே நேரம் கழித்தாள்.

∴ ∴ ∴



'எதற்காக அந்தப் பெண்ணிடம் உளறிக் கொட்டினோம்' என்று நினைத்தபோது தினகரனுக்கும் மனதுக்குள் புன்னகை மலர்ந்தது.

எப்பேர்ப்பட்ட ஞானியும் பெண்கள் முன்னே மதி மயங்கி விடுகிறார்கள் என்றால் தான் எம்மாத்திரம்.

படபடக்கும் கண்களுடனும், வெட்கம் நாணம் என்று எல்லாம் போட்டி போட அவள் தயங்கிக் கொண்டு வந்து நின்ற விதம் நினைத்த போது மனதில் மகிழ்ச்சி பொங்கியது. அது நடிப்பாக இருக்க முடியாது என்று தோன்றியது.

கன்னங்கள் சிவந்து போவது என்பது இயற்கையான விஷயம். அதிலே எங்கே நடிப்பு வரமுடியும் என்று அவனுக்குப் புரியவில்லை. ஆனால், அதற்கு முன்னால் நடந்த விஷயம் உறுத்தத் தான் செய்தது.

வெண்ணிலாவின் அத்தானாம். கார்த்திகேயனாம் நேற்று எங்கேயிருந்து திடீரென்று குதித்தான்.

சோக மயமாய் வந்தான். 'சார்! வெண்ணிலாவை நான் உயிராய் நினைக்கிறேன். இப்படி நீங்கள் வந்து எங்க நிம்மதியைக் கெடுத்துட்டீங்களே' என்று அழாக்குறையாக நின்றான்.

தினகரன் உடனே ஒன்றும் நிலைகுலைந்து போய் விடவில்லை. மாறாக நிதானமாக அமரச் செய்தான்.

'சார் நல்லா யோசிச்சுச் சொல்லுங்க. உங்களுக்கு நிலாவைப் பிடிக்குது. ஆனா, நிலா உங்களைத்தான் கல்யாணம் செஞ்சுக்கற மாதிரி எதுவும் சொல்லலையே!' என்றான்.

'அவ... எப்படி சார் சொல்வா! சொன்னா அவங்க வீட்ல ஒத்துக்கணுமே' என்றான்.

'சரி, நான் என்ன செய்ய முடியும்னு பாக்கறேன்' என்று அனுப்பி வைத்தான்.

மூன்றாம் மனிதன் ஒருவன் வாயிலிருந்து கேட்கிற ஒரு விஷயத்தை வைத்துக் கொண்டு எப்படி முடிவெடுப்பது! அதனால்தான் தானே நேராகப் போய்க் கேட்டான்.

அவளது சிவந்த கன்னங்கள் அவனுக்குத் தேவையான பதிலை அளித்து விட்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

நிம்மதியாக மேற்கொண்டு காரியத்தில் இறங்கினான்.

கார்த்திகேயன் மறுபடியும் பார்க்க வந்த போது 'வேண்டாம்... இந்த விஷயம் வீக்கானா பிரச்சினையாகும். காலைல வரைக்கும் முயற்சி செய்யறேன். எப்படியாவது கல்யாணத்தை நிறுத்த முடியுமான்னு' என்று சொல்லி அனுப்பி வைத்தான்.

கார்த்திகேயன் அந்தப் பக்கம் போனவுடன் மனதிற்குள் எண்ணிக் கொண்டான்.

'மனதுக்குப் பிடித்த பெண்ணைத் தாரை வார்த்துக் குடுக்கறதுக்கு நான் ஒன்றும் தியாகி இல்லே.... மிஸ்டர். கார்த்திகேயன்' என்று சொல்லிக் கொண்டான்.

கார்த்திகேயன் திருமணம் நிற்கப் போகிறது என்ற கனவில் காத்துக் கொண்டிருக்க.... குறிப்பிட்ட முகூர்த்தத்தில் குறிப்பிட்ட நேரத்தில் அழகாகத் தாலியைக் கட்டி முடித்தான் தினகரன்.

'கார்த்திகேயன் வருவான் விளக்கம் கேட்பான்' என்று அவன் காத்திருக்க கார்த்திகேயன் கண்ணில் படவேயில்லை.

மறுநாள் காலையில் கூரியரில் ஒரு தபால் வந்து சேர்ந்தது.

படித்த தினகரனின் முகத்தில் குழப்பம் தெரிந்தது.

ஃ ஃ ஃ

'பெரிய தவறு செய்து விட்டீர்கள் மிஸ்டர். தினகரன். விருப்பமில்லாத ஒரு மனத்தை சிறைப்படுத்தி விட்டீர்கள்.



அப்பாவும், அம்மாவும் ஒன்றாக நின்று கொண்டு நீ மட்டும் இந்தப் பணக்கார மாப்பிள்ளையைக் கல்யாணம் செய்துக்கலேன்னா நாங்க ஒன்னாத் தற்கொலை செய்து கொள்வோம் என்று கதறி அழுதால் எந்தப் பெண்தான் என்ன செய்வாள்? அப்படித்தான் வெண்ணிலா ஒத்துக் கொண்டாள். அப்படியொரு மிரட்டலுக்குப் பின் எத்தனை முறை கேட்டாலும் நான் அதே பதில்தான் சொல்வேன் அத்தான். என்னை மன்னிச்சிடுங்க... மனசளவிலே நான் செத்துப் போயிட்டேன். உடம்புதான் தினகரனுக்கு மனைவியாகப் போகிறது. நீங்க யாரோ ஒரு நல்ல பெண்ணைக் கல்யாணம் செய்துகிட்டு நல்லா இருங்கன்னு சொல்கிறாள். உங்கள் மனமல்ல... தோற்றமல்ல... வெறும் பணம் மட்டுமே என் வெண்ணிலாவை விலைக்கு வாங்கியிருக்கிறது. மூன்று பேர் வாழ்க்கையை சிதைத்து விட்டீர்கள். தினகரன் என்று எழுதியிருந்தான். மொட்டைக் கடிதம். ஆனால், யாரென்று புரிந்தது.

இந்த முறை தினகரன் சற்று அதிகமாகக் குழம்பிப் போனான்.

தாயாரிடம் சொன்னான். 'அம்மா... ஒரு வாரம் கழிச்சு சடங்கு வச்சுக்கலாம்' என்று.

அவனுக்கென்றிருந்த ஒரே ஒரு இளைய சகோதரன் சுதாகரன் அவன் அமெரிக்காவிலிருந்து வந்திருந்தான். அவன்தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்தான்.

சுதாகரனுக்கும் அண்ணியை மிகவும் பிடித்துவிட்டது.

'அண்ணி! அண்ணன் இந்த ஃபாஷன் ஷோவுல எல்லாம் இன்ட்ரஸ்ட் காட்ட மாட்டாரு. நான்தான் சொன்னேன். ஃபாஷன் ஷோ ஃபாரின் கன்ட்ரீஸ்ல வேற விதமா இருக்கு. நம்ம ஊர்ல அதை நம்ம ஊர் டிரஸ்ஸஸ் அறிமுகப் படுத்தறதுக்கு யூஸ் பண்ணலாம்னேன். அப்புறம்தான் ஒத்துகிட்டாங்க' என்றான்.

'ஆமாங்க... சுதா... எனக்கும் கூட இதைப் பத்தி பெரிய கருத்து இருந்ததில்லே. ஆனா அன்னைக்கு அந்த ஃபாஷன் ஷோ

பாத்தப்புறம் காட்டன் சாரியை இப்படி வித விதமாகக் கட்டலாமா! பிளவுஸ்ல இத்தனை விதங்கள் இருக்கான்னு ஒரே ஆச்சரியமாப் போச்சு' என்றாள்.

'ஆமா... இப்ப நாம எக்ஸ்பாண்ட் பண்ணனும் போல இருக்கு' என்றான் சுதாகரன்.

சுதாகரனும், தினகரனும் சரி மற்ற பெண்களிடம் அவ்வளவு சீக்கிரம் கலகலப்பாகப் பழகிவிடவில்லை என்பது வெண்ணிலா வுக்குப் புரிந்தது.

தினகரன் தனது இருபத்தெட்டு வயதின் ஆரம்பத்தில் இருந்தான் என்றால் சுதாகரன் இருபத்து நான்காவது வயதில் இருந்தான்.

சுதாகரன் வெண்ணிலாவிடம் இயல்பாய் நட்புக் கொண்டதை தினகரன் ஒருவிதமாக மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டான்.

அண்ணி தன்னைக் காட்டிலும் இளையவள் என்ற போதிலும் 'அண்ணி' என்று மரியாதையாய் அழைத்தான். அவளும் 'சுதா' என்று அழைத்தாலும் வாங்க. போங்க என்றே பேசினாள்.

தினகரனின அப்பா வேலுசாமிக்கும். அம்மா ராஜேஸ்வரிக்கும் இதைப் பார்த்து மிகவும் சந்தோஷம்.

'எங்களுக்கும் இரண்டும் பையனாப் போச்சு அதனாலே நீதான் இனிமே எங்களுக்குப் பொண்ணு' என்று பாராட்டிக் கொண்டார்கள்.

அங்கே வந்ததற்குப் பிறகு அந்த நான்கைந்து நாட்களில் அவளும் அவர்களோடு நட்புக் கொண்டாள். எல்லாமே இயல்பாகப் போய்க் கொண்டிருந்தது.

இடையிலே ஒன்றிரண்டு முறை தினகரன் ஜாடையாக விசாரித்தான்.

'ஏன்... நிலா... உனக்கு கார்த்திகேயனைப் ரொம்பப் பிடிக்குமா?' என்று.



'எனக்கு கார்த்தி அத்தானையும் பிடிக்கும் செல்வம் அத்தானையும் பிடிக்கும்' என்று இயல்பாகச் சொன்னாள். பிறகு அவள் கார்த்தி 'ரொம்ப அவுட் ஸ்போக்கன். ஆனா, செல்வம் அத்தான்.... ரொம்ப அமைதி' என்றாள்.

'இவங்க ரெண்டு பேரும் உன்னைப் பொண்ணு கேட்கலயா?' என்றான்.

'தெரியலை. கார்த்தி அத்தானுக்கு ஏதோ இன்ட்ரஸ்ட் இருந்த மாதிரி என்கிட்டே வந்து சொன்னாரு. நான் எங்கம்மா அப்பா சொன்ன மாதிரிதான் கேட்பேன். நீங்க வேறு நல்ல பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கங்கன்னு சொன்னேன்' என்றாள்.

வெண்ணிலா சொன்ன விஷயமே அந்தக் கடிதத்தில் இருந்தது நினைவு வந்தது. ஆனால் அதில் சொல்லப்பட்ட விதம் வேறு மாதிரி இருந்தது. இவள் சொல்கிற விதம் வேறு மாதிரி இருக்கிறதே' என்று எண்ணிக் கொண்டான்.

இந்த ஐந்தாறு நாட்களில் இயல்பாக அவன் தேவைகளைக் கவனித்தாள். அவனுடைய டிரஸ் ரெடியாக இருக்கிறதா என்று பார்ப்பதிலிருந்து ஷு பாலிஷ் போட்டிருக்கிறதா என்பது வரை கவனித்தாள்.

வீட்டின் வேலைகளில் இயல்பாகக் கலந்து கொண்டாள் உறவினர்களிடம் நன்றாகப் பேசினாள். குடும்பத்துக்கு ஏற்றப எல்லா நடந்து கொண்டாள். கலகலப்பாக இருந்தாள்.

சடங்குக்கு முன்னால் இன்னும் கொஞ்சம் உறுதிப் படுத்தி கொள்ள வேண்டும் என்று நினைத்தான்.

பிற்பகலில் தனது அறையில் இருந்தான். வேலையாளி மூலமாக வெண்ணிலாவை மேலே அனுப்பச் சொன்னான்.

பெற்றோர்கள் புரிந்து கொண்டவர்களாக 'உடனே அனு வைத்தார்கள்.

அவன் உள்ளே நுழைந்தபோது கண்ணாடி முன்னே நின்று தலை வாரிக் கொண்டிருந்தான். திரும்பிப் புன்னகைத்தான்.

அவள் அருகில் வந்தான்.

'நிலா!' என்றான் கிறக்கமான குரலில்.

'ம்...!' என்றாள் அவளும் மெல்லிய குரலில்.

'நிலா! இன்னைக்கு ஏதோ ஏற்பாடுகள் நடக்குது தெரியுமில்லே!' என்றான்.

'ம்...! என்றாள் தலையைக் குனிந்து கொண்டு.

'ஆக்சுவலா.... எல்லா உறவுக்காரர்களும் போனதுக்கப்புறம்... வச்சுக்கலாம்னேன். ஆனா, அம்மாதான் ஏதோ நலங்கு, கிலங்குன்னு இருக்குடா... முக்கியமானவங்க இருக்கட்டும்னாங்க' என்றான்.

மெல்ல அவள் முகம் நிமிர்த்தினான். அந்தக் கண்களில் வெட்கம் தெரிந்தது.

அவன் மனம் நிம்மதியடைந்தது.

'உனக்கொன்றும் அப்ஜக்ஷன் இல்லையே!' என்றான்.

அவள் 'ம்ஹூம்' என்பது போல் மௌனமாகத் தலையாட்டினாள்.

'குறும்பும், தாபமும் தொனிக்கிற அவன் சிரிப்பு அவளை என்னவோ செய்ய அவன் மார்பில் தலை சாய்த்துக் கொண்டாள்.

தினகரனின் கைகள் அவளை வளைத்துப் பிடித்துக் கொண்டன.

'எதுக்கும்... உன்னோட விருப்பத்துக்கும் இடம் கொடுத்துத் தெரிவிக்கனும்... இல்லே!' என்றான்.



'உங்க விருப்பம்தான்... என் விருப்பம்' என்றாள். அவன் தன்னை மறந்த நிலையில் அவள் முகத்தைத் தன் கைகளில் ஏந்தி சற்றுநேரம் தன் மனத்தை வெளிப்படுத்தினான்.

மெல்ல வெட்கத்துடன் விலகிக் கொண்டாள்.

'ரொம்ப நேரமானா கீழே யாரும் ஏதாவது நினைச்சுக்கப் போறாங்க' என்றாள்.

'ஒண்ணும் நினைக்க மாட்டாங்க... நாம என்ன திருட்டுத் தனமாவா சந்திக்கிறோம். யு ஆர் மை வைஃப்... ஸ்வீட் ஹார்ட்!' என்று வாயடைத்தான்.

'சற்றுக் கழித்து' சரி.. போ..!' என்று அனுப்பி வைத்தான்.

இரண்டு மனங்களும் அன்றைய நிகழ்வை ஆவலோடு எதிர்பார்க்கையில் ஏழு மணி வாக்கில் அந்த போன் வந்தது.

யார் சொல்வதையும் கேட்காமல் தினகரன் ஸ்பாட்டுக்குக் கிளம்பிப் போனான். வரப்போகிற விபரீதத்தை அறியாமல்.




'அண்ணா! நீ இரு... நான் போய்ப் பாத்துட்டு வரேன்' என்ற தம்பியின் குரலைக் கேட்டும் அவன் நிற்கவில்லை. அவன் பின்னாலே ஓடி வருவதையும் சட்டை செய்யவில்லை.

மனமெல்லாம் கேட்ட செய்தியின் அதிர்ச்சியிலே ஆழ்ந்திருந்தது.

'சார்!' எக்ஸ்போர்ட் யூனிட்ல இருக்கற பஞ்சு குடோ... பத்திகிட்டு எரியுது!' என்ற பதட்டமாய் தன் மேனேஜரின் குர... கேட்டு ஓடி வந்தான்.

அத்தனை அவசரத்திலும் வெண்ணிலாவை அழைத்து 'நிலா.. அவசரமா ஒரு நியூஸ். என்னன்னு பாத்துட்டு வந்தர்றேன்' என்று சொல்லி விட்டுத்தான் போனான்.

காரை வேகமாக ஓட்டிக் கொண்டு போனான். தன்னுடைய இருபது ஏக்கர் பரப்பளவில் இருக்கும் அந்தத் தொழில் நிறுவனத்தின் சற்றுத் தொலைவிலேயே காரை நிறுத்த வேண்டி வந்தது.

நிறுத்தினான்.

இறங்கி வேகமாக நடந்து போனான். அலுவலக உதவியாளர்கள். மேனேஜர் ஜி.எம்., ஏ.எம் என்று ஒரு கூட்டமே திரண்டிருந்தார்கள்.

ஃபயர் சர்வீஸ்க்கு போன் செய்திருந்தார்கள். எப்போதும் இது மாதிரி எதிர்பாராத நிகழ்வுகளுக்குத் தயாராக இருப்பார்கள் என்ற போதும் இந்த முறை இந்த விபத்து சற்றும் எதிர்பாராததாக இருந்தது.

போராடித்தான் தீயை அணைத்தார்கள்.

இரண்டு மணி நேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. ஒரு வழியாக மேற்பார்வை முடித்து நிமிரும்போது இரவு மணி பத்தாகி யிருந்தது.

சுதாகர்தான் 'அண்ணா பிராப்ளம்தான் முடிஞ்சு போச்சே... நீங்க புறப்பட்டுப் போங்க... வீட்ல எல்லாரும் கவலையா இருப்பாங்க' என்றான்.

அப்போதுதான் வீட்டு நிலவரமே அவனுக்கு நினைவு வந்தது. மறுப்பேதும் சொல்லாமல் புறப்பட்டான்.

புறப்பட்டவன் ஞாபகமாக வெண்ணிலாவை அழைத்துப் பேசினான்.



'நிலா... இங்கே கொஞ்சம் பிராப்ளம்' என்று சுருக்கமாகச் சொன்னான்.

'உங்களுக்கு... ஒன்றும் ஆகலையே! நீங்க நல்லாத்தானே இருக்கீங்க' என்றாள் பதட்டமாக.

'ஐ ஆம் ஆல்ரைட்' என்று இது நேரம் வரை தாங்கள் எடுத்த நடவடிக்கைகளை சுருக்கமாகச் சொன்னான்.

'ஏங்க.... ஹெவி... லாஸோ?' என்றாள் கவலையாக.

'ஆமா. கொஞ்சம்... ஹெவிதான். சரி... விடு... மேனேஜ் பண்ணிக்கலாம் பிஸினஸ்ன்னா ரிஸ்க் ஃபேக்டர் இருக்கத்தான் செய்யும்' என்றான். பிறகு 'நான் இப்பக் கிளம்பி வந்துட்டே இருக்கேன். இதைப் பத்தி நீ ஒன்னும் வொரி பண்ணிக்காதே!' என்றான்.

'சரிங்க!' என்றாள்.

அடுத்ததாகப் பெற்றோர்களுக்கும் பேசினான். பிறகுதான் அந்த எண்ணம் தோன்றியது. என்ன இருந்தாலும் தனக்கென்று ஒருத்தி வந்தவுடன் முதலில், அவளுக்குத்தானே போன் செய்யத் தோன்றியது. உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

லேசான சிரிப்புடன் நடையை எட்டிப் போட்டான். அதே சமயம் எதிரே ஒரு கார் ஹெட் லைட்டைப் போட்டபடி வேகமாக வந்தது.

ஏதோ சிந்தனையிலேயே வந்தவன் சட்டென்று விலகிக் கொண்டு நின்றான்.

கார் சர்ரென்று சென்றது.

நீண்ட நடைபாதை அவனுடைய ஃபாக்டரிக்குள்ளேயே இருந்தது.

'யார் இப்படி ஓட்டிக் கொண்டு போவது ரெக்லெஸ்ஸாக?!' என்று சிந்தனை செய்து கொண்டே கிராஸ் செய்து நேர் எதிராக நின்ற தன் காருக்கு அவன் போக யத்தனிக்கையில்தான் அது நிகழ்ந்தது.

வேகமாக ஒரு லாரி வந்தது. மறுபடியும் அனிச்சைச் செயலாக அவன் விலக அந்த லாரியிலிருந்து நீட்டிக் கொண்டிருந்த ஏதோ ஒன்று அவனைக் கீழே தள்ள லாரியின் பக்கங்களில் மோதித் தூக்கி யெறியப்பட்டான்.

தூக்கியெறியப் படுகையில் நினைவு தப்புகிற நேரத்தில் அவன் பார்வை லாரியில் இருந்து எட்டிப் பார்க்கிற உருவத்தின் மீது படிந்தது.

மெல்லச் சுயநினைவை இழந்தான். தன்னைச் சுற்றிலும் நடப்பது புரிந்தும் எதும் செய்ய இயலாதவனாக சரிந்து சாய்ந்தான்.

நினைவு உள்ளே ஆழ ஆழப் போய்க் கொண்டே இருந்தது.

❖ ❖ ❖

வெண்ணிலா யாரோ தன்னை உலுக்குகிறாற் போல் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

அவளைச் சுற்றி அவளுடைய பெற்றோர்கள் நின்றார்கள்.

சுதாகரும் ஓடி அலைந்து கொண்டிருந்தான். ஐ.சி.யூனிட்டில் இருப்பதாகச் சொன்னார்கள். டாக்டர்களும் பரபரப்பாக அலைந்து கொண்டிருந்தார்கள்.

'என்ன நடக்குது... இங்கே!' என்று கதறிக் கொண்டிருக்கிற அண்ணியிடம் வந்து அன்பாகச் சொன்னான் சுதாகர்.

'அண்ணி. மேஜர் ஆக்ஸிடன்ட், லாரி ஒன்று மோதிடுச்சு. அண்ணன் மயக்கத்திலே இருக்காங்க. உடனடியா ஆபரேஷன் பண்ணனுங்கறாங்க' என்றான்.



அவளிடத்திலேயும், அவளுடைய பெற்றோரிடத்திலேயும் கையெழுத்து வாங்கினார்கள்.

உண்ண உணவு தங்குமிட வசதியைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் அன்று ஆஸ்பத்திரியில் வராண்டாவில் தரையில் அமர்ந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அவள் இருந்த நிலை பார்த்து சுதாகரன் மனம் உருகிப் போனான்.

'அண்ணி! நீங்க ஏதாவது சாப்பிடுங்க...' என்றான். போய் ஜூஸ் வாங்கி வந்தான். வற்புறுத்தினான் என்பதற்காகக் கொஞ்சமாகக் குடித்தாள்.

'ஆபரேஷன் செய்யப் போகிறார்கள்' என்றார் தினகரனின் அப்பா.

அங்கே இருந்த பெண்கள் எல்லாம் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கையில் தன்னுடைய சோகத்தையெல்லாம் காட்டிக் கொள்ளாமல் விஷயங்களை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார் வேலுசாமி.

எலும்பு அறுவை சிகிச்சை மருத்துவர்கள் இரண்டு பேர் அந்த அறுவை சிகிச்சையைச் செய்தார்கள்.

ஆறுமணி நேரம் அறுவை சிகிச்சை நடை பெற்றது.

வேலுசாமி உறவினர்களையெல்லாம் அனுப்பி வைத்து விட்டார். வெண்ணிலாவின் குடும்பமும், தினகரனின் குடும்பமும் மட்டும் காத்திருந்தார்கள்.

நீலா மட்டும் பெற்றோர்களிடம் அனுமதி பெற்று வெண்ணிலாவுடன் இருந்தாள்.

ஒவ்வொரு நிமிடமும் யுகமாகக் கழிந்தது. அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது என்பதற்குப் பிறகுதான் எல்லாருடைய

மனங்களிலும் ஒரு தெளிவு ஏற்பட்டது. ஆனால் அந்த மகிழ்ச்சி ஒன்றும் நிலையான மகிழ்ச்சியாக இருக்கப் போவதில்லை

வெண்ணிலாவுக்கு சோதனை மிகுந்த ஒரு காலமும், வாழ்க்கையும் காத்திருக்கிறது என்பது அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

∴ ∴ ∴

உறவினர்கள் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்தது. ஆஸ்பத்திரியில் கூட்டம் போட வேண்டாமென்று அவர்கள் கண்டித்ததால் மெதுவாகப் போவதும் வருவதுமாக இருந்தார்கள்.

முதல் நாளிரவு ஒரு நிகழ்ச்சி நடந்திருந்தது.

வெண்ணிலா அழுது கொண்டேயிருக்கிறாளே என்று நீலாவை அவளுடைய பெற்றோர் துணைக்கு அனுப்பியிருந்தார்கள்.

ஐ.சி. யூனிட்டில் ஒரே ஒரு முறை அவனைப் பார்க்க அனுமதித்தார்கள்.

கண்கள் மூடி மயக்கத்தில் இருந்தான். அவளுக்குப் பார்க்கவே முடியவில்லை. 'எப்படி ஸ்மார்ட்டா நடமாடிக்கிட்டிருப்பாரு. இப்படி சோர்ந்து படுத்திருக்காரே! என்று மாய்ந்து போனாள். வெடித்து அழுதாள்.

'அந்தப் பொண்ணை அந்தப்புறம் கூட்டிட்டுப் போங்க...' என்று நர்ஸுகளே அனுப்பி வைத்துவிட்டார்கள்.

தளர்ந்து போய் அமர்ந்திருந்தவளை நீலா மடியில் சாய்த்துக் கொண்டாள்.

'நிலா... இப்படியே அழுதுகிட்டிருந்தீன்னா உன் உடம்பு கெட்டுப் போயிடும் பேசாமக் கொஞ்ச நேரம் படு' என்றாள் நீலா கண்டிப்பான குரலில்.



எதுவும் பேசுவதற்காகக் கூடத் தெம்பில்லாமல் பேசாமல் நீலாவின் மடியில் தலையைச் சாய்த்துக் கொண்டாள். கண்மூடிப் படுத்துக் கொண்டாள்.

அந்த நேரம்!

அவள் அமர்ந்திருப்பதை அறியாத தினகரனின் உறவுக்காரர்கள் சிலர் பேசிக் கொண்டார்கள்.

'அத்தே! கல்யாணம்ன்னா என்ன விளையாட்டுங்களா? குலம், கோத்திரம் பார்த்துப் பண்ணோனும் செய்யணும்னு எதுக்குச் சொல்றாங்க! தினகரனோட வசதி என்ன? இவங்க வசதி என்ன? அப்படியென்ன ஊர்ல இல்லாத அழகுன்னு இந்தப் பொண்ணைப் போய்க் கல்யாணம் பண்ணிகிட்டு வந்தாங்களோ தெரியலை! வந்தவுடனே ஆளையே அடிச்சுப் போட்ட மாதிரிப் படுக்க வச்சிருச்சு' என்றாள் ஒரு பெண்.

'ஆமா... இந்த ராசி, கீசின்னும் சொல்றாங்களே! அதெல்லாம் நம்பறதா நம்பாம இருக்கறதான்னு... தெரியலே' என்றாள் ஒருத்தி.

'ஏன்.. நம்பாம! பாரு போன வாரம் வரைக்கும் நல்லா இருந்த பையன் இந்தப் பொண்ணு கழுத்தில தாலியைக் கட்டினவுடனே அந்தப் பொண்ணை தொடறதுக்கு முன்னாலேயே இப்படி ஆகிப் போச்சே! கண்டிப்பாய் பொண்ணோட ராசிதான் தாக்கிப் போடுச்சு' என்று பேசிக் கொண்டார்கள்.

அதைக் கேட்டதும் அவள் பெரிதாக அழ ஆரம்பித்தாள். அந்த சத்தத்தைக் கேட்டவுடனே அவர்கள் திடுக்கிட்டுப் போய் அவசரமாகக் கலைந்தார்கள்.

நீலாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பொங்கிப் பொங்கி அழுகிற தோழியை விதவிதமாகத் தேற்றிப் பார்த்தாள்... திடீரென்று எழுந்து அமர்ந்தாள்.

'நீலா... எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணுடி...!' என்றாள்

'சொல்லு' என்றாள் நீலா.

'எங்கயாவது எப்படியாவது கொஞ்சம் தூக்க மாத்திரை வாங்கிக் குடு. ஒட்டு மொத்தமாகப் போட்டுட்டு ஒண்ணாப் போய்ச் சேர்றேன்' என்றாள்.

'சும்மாயிர்றி!' பைத்தியமாட்டப் பேசிகிட்டு...! இவர்களுக் கெல்லாம் என்ன பேசிட்டு ரெண்டு நாள்ல போயிடுவாங்க...

அதுக்கப்புறம் தினகரை நினைச்சுப் பாரு. இப்படி இவங்க சொல்ற நிலைமையைப் பார்த்தா... குறைந்தது ஆறு மாசமாவது படுக்கையிலதான் இருக்கணுமாட்ட இருக்கு. என்ன இருந்தாலும் வைஃப் பக்கத்துல இருந்து கவனிக்கிற மாதிரி இருக்குமா? இக்னோர் திஸ் டைப் ஆஃப் டாக் 'புரியுதா?' என்றாள்.

சரியென்று வெண்ணிலா படுத்துக் கொண்டாள். பிறகு மீளவும் எழுந்தாள்.

'சரிடி... நீலா நீ சொல்ற மாதிரி பேசறது யாரோவா இருந்தா பிரச்சினை இல்லே! ஒருவேளை அவரே அந்த மாதிரி... நம்பினா நான் என்ன செய்வேன்?' என்றாள்.

'என்ன செய்ய? என்னாலதானே இப்படி ஆச்சு. உங்களை நல்லாத் தேற்றி விட்டுட்டு அந்தப்பக்கம் போறேன். பிடிச்ச பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் செஞ்சுக்குங்கன்னு வந்துற வேண்டியதுதான்' என்றாள் நீலா ஏதாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக.

'அதுவும் கரெக்ட்தான்.' என்று மறுபடியும் சமாதானமாகிக் கொள்கிற தோழியை வேதனையாகப் பார்த்தாள்.

'பாவம். அவளே வேதனையில் இருக்கிறாள். அவளை ஏன் இந்தப் பெண்கள் இப்படி வதைக்கிறார்கள். உண்மைதான் இங்கே பெண்ணுக்குப் பெண்ணேதான் எதிரி. இரக்கமில்லாமல் கருத்துச் சொல்கிறார்கள். தங்கள் வீட்டில் ஒரு பெண்ணுக்கு இப்படி



நடந்திருந்தால் எவ்வளவு வேதனைப் பட்டிருப்பார்கள். அதையேன் நினைத்துப் பார்க்க மாட்டேன் என்கிறார்கள்' என்று வெகுவாக வேதனைப் பட்டுப் போனாள்.

அவர்களுக்கென்று ஒதுக்கியிருந்த அறைக்கு அவளை அழைத்துப் போனாள். அந்த வார்டில் டியூட்டியில் இருந்த டாக்டரிடம் போய் விஷயம் சொன்னாள்.

'சார்! போற போக்கைப் பார்த்தா.. என் ஃபிரண்டுக்கு டிப்ரஷன் வந்துடும் போல இருக்கு' என்றாள் கவலையாக.

டியூட்டி டாக்டர் அவளுக்கு உறக்கத்திற்காக மாத்திரை கொடுத்தார். அதற்குப் பிறகுதான் வெண்ணிலா உறங்கினாள்.

நீலாவுக்குக் கோபமாக வந்தது. 'யார் ராசியில்லாதவர்கள்? போன மாதம் இந்த நேரம் கலகலப்பும் சிரிப்புமாகத் தன்னோடு வெண்ணிலா வந்து கொண்டிருந்தாள். இந்தப் பாழாய்ப் போன தினகரன் இவளைப் பார்த்து ஆசைப்பட்டுக் கல்யாணம் செய்து கொண்டவன். ஏதோ பிரச்சினை என்றால் யாரையாவது அனுப்பி வைக்க வேண்டியதுதானே. தானே போகாவிட்டால் என்ன? போய்க் கையைக் காலை முறித்துக் கொண்டு வந்ததுமல்லாமல் இந்தப் பெண்ணை வேறு வேதனைப் படச் செய்கிறான் இவனுக்குத் தாலி கட்டிக் கொண்ட பாவத்துக்காக இந்தப் பெ இவ்வளவு பட வேண்டுமா?' என்று கோபமாக இருந்தாள்.

தன் வீட்டுக்கு போன் செய்தாள். 'அம்மா! வெண்ணிலா ரொம் மோசமான மூட்ல இருக்கா. நான் ரெண்டு நாளைக்கு அவ க இருக்கேன். என்ன?' என்றாள்.

அவர்களும் ஒத்துக் கொண்டார்கள்.

மறுநாள் காலையில் வெண்ணிலாவின் மாமனார் வரு வரட்டும் பேசிக் கொள்கிறேன் என்று கறுவிக் கொ காத்திருந்தாள்.

எட்டு மணிக்கு அவர் வரும் போது ஆயுதமேந்தாத பத்திரகாளியாய் அவர் முன்னாலே போய் நின்றாள்.

கேள்விகளை எடுத்து வீசினாள்.

அவளது கேள்விகளைக் கேட்ட வேலுசாமி கொஞ்சம் திகைத்துத்தான் போனார்.

பின்னர் சிந்தனையிலாழ்ந்தார்.




**வேலு** முதலில் தன் மனைவியையும், மகனையும் அழைத்துப் பேசினார். அதற்குப் பிறகு சற்றே நிலைமை மாறியது.

அன்றைக்குப் பிற்பகல் முதல் நாளைப் போலவே வெண்ணிலாவும் நீலாவும் பெஞ்சில் அமர்ந்திருந்தார்கள்.

வெண்ணிலா இப்போது மனம் தெளிந்திருந்தாள். 'யாரோ என்னவோ பேசிவிட்டுப் போகட்டும் நம்ம கடமையைச் செய்வோம்' என்று விரக்தியுடன் அமர்ந்து இருந்தாள்.

அப்போதுதான் உறவினர்கள் பேசிக் கொள்வது காதில் விழுந்தது.

'ஏன்... ராதா! நேத்து வேலுசாமி அண்ணன் ரொம்பக் கோபிச்சுக்கிட்டாங்க. புள்ளையைப் பத்தி யாரும் தப்பு சொல்லாதீங்க. ஏன்னா, கல்யாணத்துக்குப் பொருத்தம் பாக்கறதுக்காக ஜோசியர் கிட்டே போய் ஜாதகம் பார்த்தோம். அப்ப சொன்னாரு. இந்தப் பையனுக்குக் கிடைச்சிருக்கிற அருமையான ஜாதகம் இது. விட்றாதீங்க, ஏன்னா, பையனுக்கு இந்த வருஷம் பெரிய கண்டம் இருக்கு. இந்த ஜாதகத்துக்கு நல்ல மாங்கல்ய பலம் இருக்கு. ரெண்டு ஜாதகமும் சேர்ந்ததுன்னா பையன் எப்படியும்



மீண்டு வந்துருவான்.. அப்படீன்னாரு 'சொல்லப் போனா அந்தப் புள்ளையோட ஜாதக பலன்தான் எங்க பையனைக் காப்பாத்தியிருக்குன்னு நாங்க நம்பறோம். அப்படீங்கறாரு' என்றாள்.

வலுக்கட்டாயமாக தினகரனின் தாய் ருக்மணியும், வேலுவும், சுதாகரனும் அப்படியொரு கருத்தைப் பரப்பினார்கள். அதற்குப் பிறகு வெண்ணிலாவைக் குற்றம் சாட்டும் பேச்சு குறைந்தது. மெது மெதுவாக நின்றே போனது.

'பரவாயில்லைடி. உங்க மாமனாரு!' என்று சிலாகித்துக் கொண்டாள் நீலா. ஐ.சி.யூனிட்டிலேயே நான்கைந்து நாட்கள் வைத்திருந்தார்கள். பிறகுதான் அறைக்குக் கொண்டு வந்தார்கள்.

வெண்ணிலா உடனிருந்து கவனித்துக் கொண்டாள். நன்கு பேச ஆரம்பித்தவுடன்.

'பயந்துட்டியா... வெண்ணிலா! சமாளிக்கலாம். கவலைப் படாதே!' என்று ஆறுதல் சொன்னான்.

அடக்கி வைத்திருந்த சோகமெல்லாம் வெடிக்க வெடித்து அழுதாள். படுத்த வாக்கிலேயே அவள் வலக்கையைத் தன் இடக்கையால் பிடித்துக் கொண்டான்.

'சரி... சரி.. நான்தான் பொழச்சுட்டேனே... ஒரு ஆறு மாசம். அப்புறம் எழுந்து நடமாடிடுவேன்.. டோன்ட் வொர்ரி...!' என்று தேற்றினான். ஆனால் அவர்கள் யாருக்குமே தெரிந்திராத விஷயம் என்னவென்றால் ∴பிராக்சர் சிறியதுதான் என்ற போதிலும், இடுப்புப் பகுதியில் எங்கேயோ முரட்டு அடி பட்டிருந்தது என்பதும் அதனால் இடுப்புப் பகுதிக்குக் கீழே பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை டாக்டர்கள் யாரும் சொல்லவில்லை என்பதுதான்.

* * *

'செல்வம்... அத்தான்!' என்று செல்வத்தைப் பார்த்ததும் அழுதாள் வெண்ணிலா.

'என்ன... நீலா... இப்படி ஆகிப் போச்சு!' என்று வெகுவாக வருத்தப்பட்டான் செல்வம்.

'நல்லவேளை. அத்தான். அந்த லாரி வர்றதைப் பார்த்து இவரு சட்டென்று விலகியிருக்காரு. இல்லேன்னா வந்த வேகத்துல... ஐயோ... நினைக்கவே முடியலை' என்று புலம்பினாள்.

செல்வம் கழிவிரக்கத்துடன் அவளைப் பார்த்தான். அதற்குள் தினகரன் தலையிட்டு,

'விடு... வெண்ணிலா! அது நடந்ததென்னவோ ஒரு தடவை. நீ அதை நினைச்சு... நினைச்சு ஏன் கஷ்டப்பட்டுக்கறே!' என்றான்.

'ஐயோ! என்னால மறக்கவே முடியலிங்களே!' என்றாள்.

செல்வம் அவனிடம்' ஏன்... தினகர் அண்ணா, அந்த வண்டியோட நம்பர் நோட் பண்ணினீங்களா?' என்றான்.

'ம்... அப்படி மயக்கத்திலே சாயும் போதும் நம்பரை நோட் பண்ணினேன். போலீஸ் விசாரணைக்கு வந்தவங்ககிட்டே விவரம் சொல்லியிருக்கேன்' என்றான் தினகரன்.

அதே சமயம் அந்த லாரியிலிருந்து எட்டிப் பார்த்த உருவம் தன் மனதில் பதிந்து போயிருந்தது என்பதையும், அதைப் பற்றிய விவரங்களைத் தான் போலீஸில் சொல்லவில்லை என்பதை மனதில் வைத்துக் கொண்டானே தவிர யாரிடமும் தெரிவிக்க வில்லை. மாறாக அந்த விவரத்தின் ஆழம் வரை போய்ப் பார்ப்பது என்று முடிவு மட்டும் செய்து கொண்டான்.

அப்போது செல்வம் கேட்டான்.

'ஏன்.. நீலா... கார்த்தி வந்து பார்த்தானா?'



'இல்லைங்கத்தான்... அது மட்டுமல்ல... அவரு கல்யாணத்துக்கு முதல் நாள் வந்து அபத்தமா ஒரு காரியம் பண்ணினாரு' என்றாள் வெண்ணிலா.

'ஓ...!' என்று விவரமாகக் கேட்டுக் கொண்டான். பிறகு சொன்னான்.

'ஆமா! ஒரு நிரந்தர வேலை கிடையாது. உழைச்சுச் சம்பாதிக்கனும்னு எண்ணம் கிடையாது. என்னமோ ரௌடி மாதிரி சுத்திகிட்டு உன்னை வேறு பொண்ணுக் கேட்கறானா? நம்ம நெருங்கின குடும்பங்கள்லே நீ ஒருத்திதான் பொண்ணு. உன் வாழ்க்கை நல்லா அமையனும்னு இல்லே.. அவன் நினைக்கனும். அவன் கிடக்கறான் விடு' என்று தேற்றினான் செல்வம்.

தினகரன் இருப்பதைக் கணக்கிலேயே எடுத்துக் கொள்ளாமல் அவர்கள் இருவரும் கார்த்திகேயனைப் பற்றி வருத்தப் பட்டுப் பேசிக் கொள்வதை தினகரன் தலையிடாமல் கேட்டுக் கொண்டான்.

'இத பாரு! கார்த்தி வந்தான்னா, உள்ளயே சேர்க்காதே! நான் அவங்க அம்மா அப்பாகிட்டே பேசிக்கிறேன்' என்றான் செல்வம். மேலும் சொன்னான்.

'வெண்ணிலா, எப்ப வேணும்னாலும் கூப்பிடு. போன வாரம் ஆபீஸ்ல வெளியூர் டூர் அனுப்பிட்டாங்க. இல்லன்னா கூடவே இருந்திருப்பேன். இப்ப சீட் மாதிட்டேன். இனிமே வெளியூர் போற வேலையிருக்காது. எப்ப வேணும்னாலும் உதவிக்கு வருவேன்' என்றான்.

'ரொம்பத் தாங்க்ஸ்ங்க அத்தான். இங்கே இவரோட ஆபீஸ் இருந்து நிறையக் கூட்டம் கூட்டமா வந்து நாங்க கூட இருக்கோம்... னு ஒரே கெஞ்சல். அதனால பாத்துக்கறதுக்கு ஆளுக்கு ஒன்னும் பஞ்சம் இல்லே. இப்போதைக்கு யாரும் அவரைத் தொல்லை பண்ணக் கூடாதுன்னு சொல்லி வச்சிருக்கு என்றாள்.

மெதுவாகத் திரும்பிக் கணவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். லேசான புன்னகையுடன் கண்களை மூடிக் கொண்டான் தினகரன்.

கண்களில் களைப்புத் தெரிந்தது. உடனே வெண்ணிலா தன் அத்தானிடம் திரும்பிக் கையை வாயில் வைத்து 'உஷ்' என்று எச்சரித்தாள். அவனும் புரிந்து கொண்டான்.

'சரி... நிலா... கிளம்பறேன். மாப்பிள்ளை ரெஸ்ட் எடுக்கட்டும்' என்று புறப்பட்டான்.

கணவனுக்குப் போர்வையை நன்றாகப் போர்த்தி விட்டு எதிரில் இருந்த அட்டென்டென்ட்ஸ் படுக்கையில் அமர்ந்து கொண்டு அவன் ஆழ்ந்த மூச்சு விட்டு உறங்குவதைக் கனிவோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

∴ ∴ ∴

நாட்கள் வேகமாக ஓடின. கிட்டத்தட்ட பத்து நாட்களாகி விட்டன. அன்று மாலை வந்த டாக்டரிடம் கேட்டான். 'சார், இன்னும் எத்தனை நாள் ஆஸ்பத்திரி வாசம். நிறையே வேலை பெண்டிங் இருக்கு.'

டாக்டரின் பதிலில் ஒரு தயக்கம் தெரிந்தது. 'எப்படி சொல்றதுன்னு தெரியலே! ஆனா சொல்லாம இருக்கவும் முடியாது' என்றார்.

அவன் அமைதியாகப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தான்.

டாக்டர் சொன்னார் 'சார் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். எலும்பு ஒன்னுதான் எந்த வயசில வேண்ணாலும் வளரும். உங்களுக்கு எலும்பு ஃபிராக்சர் ஒரு பிரச்சினையேயில்லை' என்று தயங்கினார்.

அவன் புன்னகைத்தான்.



'ப்ளீஸ். அவுட் வித் இட்! இந்த சஸ்பென்ஸ்தான் தாங்க முடியலே' என்றான்.

'சார், உணர்வு நரம்புகள்ல எங்கயோ பிராப்ளம். எங்களால கண்டு பிடிக்க முடியலே. ஆனா நீங்க படுக்கையில கொஞ்ச நாள் இருக்க வேண்டி வரும். அதனால ஆபீஸையெல்லாம் பாத்துக்கிடறதுக்கு நீங்க வேற ஆள் ஆரேன்ஜ் பண்ணிக்கனும்' என்றார்.

அறையில் அதிர்ச்சிகரமான அமைதி நிலவியது.

அவன் நீண்ட அமைதியில் ஆழ்ந்து விட்டதை எல்லாரும் பீதியோடு பார்க்கையில் அவன் 'ப்ளீஸ்! எல்லாரும் என்னைத் தனியா விடுங்க!' என்றான்.

அப்பாவும், அம்மாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். நிலாவும் கலக்கமானாள்.

'ப்ளீஸ்! பயப்படாதீங்க.... ஐ வாண்ட் டு அனலைஸ் திங்ஸ்' என்றான். புன்னகைத்தான்.

மற்றவர்கள் வெளியே இருக்கையில் அவன் முழுமையாக் கேட்டு அறிந்து கொண்டான்.

ஐந்து ஆண்டு காலம் தொழில் நடத்தி அதன் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொண்டவன் ஆதலால் அதிர்ச்சிகளை விழுங்கி அவனுக்குப் பழக்கம் இருந்தது.

முழுமையாக மனத்தில் வாங்கிக் கொண்டான். பிறகு நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

'டாக்டர்... சார்! ஒன்னு செய்ங்க. இதை முழுமையா என் பேரண்ட்ஸ் கிட்டே சொல்ல வேண்டாம். நிலாவுக்கு தெரிய வேண்டாம்' என்றான்.

'ஓ.கே! ஆனா நான் சொன்ன பிரிகாஷன்ஸ்ல நீங்க எச்சரிக்கையா இருக்கணும். சரியா' என்றார்.

அது பார்த்துக்கறேன்! அதுல ஒண்ணும் பிரச்சினையில்ல. இ வில் பி கேர்ஃபுல்' என்றவன் டாக்டரை ஆழ்ந்து பார்த்தான். பிறகு சொன்னான்.

'எப்ப சரியாகும்?'

டாக்டர் இப்போது தன் முறைக்குப் பெருமூச்சுவிட்டார்.

பிறகு சொன்னார். 'தெரியலே!' என்று.

'ஓஹ்!' என்றான். மறுபடியும் மௌனமானான். பிறகு மறுபடியும் டாக்டரைப் பார்த்தான்.

'சரி... இதுக்கு எனக்கு தயவு செய்து உண்மையான பதிலைச் சொல்லுங்க... சரியாகுமா? சரியாகாதா?' என்றான்.

டாக்டர் இப்போது ஆழ்ந்து அவன் முகத்தைப் பார்த்தார்.

'இதுக்கும் எனக்கு உண்மையான பதில் சொல்லத் தெரியலே. நான்தான் சொன்னேனே. எலும்பு முறிவு ஒரு பிரச்சினையே யில்லை. சரியாயிடும்ன்னு. ஆனா, இந்த நரம்பு பிராப்ளம் எங்கிருந்து ஆரம்பிக்குதுன்னு தெரியலே. நம்ம மாவட்டத்துல இருக்கற புகழ் பெற்ற நரம்பு சிகிச்சை நிபுணர்தான் உங்களுக்கு வைத்தியம் பாக்கறாரு அவரும் இதைப் பத்தி ஒரு முடிவுக்கு வர முடியாம முழிக்கிறாரு. அநேகமா அடுத்த மாசம் ஒரு பெரிய கான்ஃபரன்ஸ் மதுரையில இருக்கு. அதுக்கு நிறைய ஃபாரின் டாக்டர்ஸ் வர்றாங்க. அங்க வச்சு உங்களோட கேஸை டிஸ்கஸ் பண்றதா இருக்கோம்' என்றார்.

அவன் அமைதியாக உள்வாங்கிக் கொண்டான்.

'மெடிக்கல் சயின்ஸால பதில் சொல்ல முடியாத விஷயங்கள்ல இதுவும் ஒண்ணு. உண்மையாய் சொல்லப் போனா நெகடிவ்வா



வும் உங்க கேஸ்ல முடிவு பண்ண முடியாது. ஆனா பாஸிடிவ்வாவும் உங்க கேஸை முடிவு செய்ய முடியாது' என்றார்.

அவன் அமைதியாகவே கேட்டுக் கொண்டான். டாக்டர் மேலும் தொடர்ந்தார்.

'அதுக்காக உங்களோட ட்ரீட்மெண்ட் தொடரும். பிஸியோ தெரபியெல்லாம் நீங்க செய்ய வேண்டியிருக்கும். கொஞ்சம் எலும்பு சரியானவுடனே' என்றார்.

தினகர் சரியென்பது போல் தலையாட்டினான். டாக்டர் கடைசியாக ஒரு வார்த்தை சொன்னார்.

'மிஸ்டர். தினகர் உங்களைப் பத்தி நிறையக் கேள்விப் பட்டிருக்கேன். எந்தச் சூழ்நிலையையும் உங்களுக்கு அட்வான்ட்டேஜியஸ்ஸா மாத்திக்கக் கூடிய திறமை உங்களுக்கு இருக்குன்னு. விஷ் யூ பெஸ்ட் ஆஃப் லக்' என்று.

'தாங்க் யூ' என்றான்.

டாக்டர் வெளியே போனவர் சும்மாயிருக்கவில்லை. தினகரனின் பெற்றோர்களை அழைத்து சற்று நேரம் பேசினார். அதற்குப் பிறகு வெண்ணிலாவை அழைத்து சற்று நேரம் பேசினார்.

வேலுசாமியும், ராஜேஸ்வரியும் சிந்தனையிலாழ்ந்தவர்களாக அறைக்கு உள்ளே வந்தார்கள்.

அவர்கள் முகம் பார்த்து அவன் வாஞ்சையாகப் புன்னகைத்தான்.

'அப்பா... பயப்படாதீங்க.. சமாளிக்கலாம்...' என்றான்.

வேலுசாமியின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. மகனின் அருகில் அமர்ந்து கொண்டார்.

'அப்பா... இந்த விஷயம் நமக்குள்ளே இருக்கட்டும். சுதாவுக்கு மட்டும் விஷயத்தைச் சொல்லி... வரவழைச்சுக்குவோம். அப்பா

முந்தி மாதிரியில்லே. நிறைய வசதிகள் வந்தாச்சு... இருந்த இடத்துல இருந்தே பிஸினஸ் நடத்தலாம். எதுவும் மாறிடாது' என்றான் ஆறுதலாக.

'சரிப்பா!' என்றார் அப்பா. ஆனா அவரது பதிலில் அவருக்கே நம்பிக்கையில்லை என்பது தெளிவாக அவனுக்குப் புரிந்தது.

அதே நேரம் வெண்ணிலா உள்ளே நுழைந்தாள்.

வேலுசாமியும் ராஜேஸ்வரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'இந்தப் பெண் இனி வாழ்நாளெல்லாம் தாதிப் பெண்ணாக இருக்க வேண்டுமா?' என்ற கேள்வி அவர்களுக்குள்ளே விசுவரூபம் எடுத்தது.

'டாக்டர் என்ன சொன்னாரு நிலா!' என்றான் தினகரன்.

'அது ஒண்ணுமில்லே! அதிகம் காரம், புளி இல்லாம சமைச்சுக் குடுக்கணுமாம். கான்ஸ்டிபேஷன் வராம பார்த்துக்கணுமாம்... அடிக்கடி ஜூஸ் குடுக்கணுமாம்' என்றாள்.

டாக்டர் என்ன பேசினார் என்பது எல்லாருக்கும் தெரிந்திருந்த போதும் அவள் அதை இயல்பாக மறைத்து விட்டு எளிமையாகப் பேசியதைப் பார்த்து அவனுக்கு வியப்பாய்ப் போனது. ஆனால், உள்ளே ஆழ்ந்த சிந்தனையும் ஓடியது.



இப்போது வருத்தப்பட்டான் தினகரன். அப்போதும் சுதாகரன் சொன்னான்.

'அண்ணா, முக்கியமான விஷயமெல்லாம் இருக்கு நீ போகாதே அண்ணா!' என்று.

நான்தான் கேட்கவில்லை. ஒரு வேளை சுதாகரனுக்கு இந்த விபத்து ஆகியிருந்தால்! வேண்டாம்! அவன் தாங்க மாட்டான்!



திடீரென்று அந்த எண்ணம் தோன்றியது. இந்த விபத்து ஒருவேளை தாக்குதலோ! தன் மீதே குறி வைத்து நடத்தப்பட்டதோ!

யோசனையில் ஆழ்ந்தான்.

வீட்டுக்கு வந்து பத்து நாட்களாகி இருந்தது. ஆழ்ந்த அமைதியில் இருந்தான்.

டி.வி. செட் பண்ணி வைத்து விட்டார்கள். அலுவலகத்திலிருந்து போன் வந்து கொண்டே இருந்தது. பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

ஆங்கிலேயர்கள் படுக்கையில் அமர்ந்த வண்ணமே சாப்பிடுவது போல் அவனுக்கென்று சின்ன மேஜை ஒன்று செய்தார்கள். அது போட லேப் டாப் வைத்துக் கொள்ளவும் ஒரு சிறிய மேடை அமைத்துக் கொடுத்தார்கள்.

இடுப்புக்குக் கீழே உணர்வு இல்லை என்பது ஒன்றைத் தவிர மற்றபடி இயல்பாக இருந்தான்....

இரண்டு வேலையாட்கள் அவனுக்கென்றே கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருகிற மாதிரி இருந்தார்கள்.

வெண்ணிலா எப்போதும் உடன் இருந்தாள். அவன் தேவைகளைக் கவனித்துக் கொண்டாள்.

கலகலவென்று பேசுவாள். அவனையும் கலந்து கொள்ள வைப்பாள்.

சுதாகரனும் தினமும் காலையில் அண்ணனிடம் ஆலோசனைகள் கேட்டுக் கொள்வான். ஜி.எம். பர்சனல் மேனேஜர் என்று யாராவது வந்து அவனைப் பார்த்துக் கொண்டேதான் இருந்தார்கள்.

தனிமை என்பது இருக்கவில்லை என்றாலும் அவனே எழுந்து நடமாட முடியாத குறை அவனுக்குள் இருந்தது.

எல்லாரும் அதைப் பத்திப் பேசுவதைக் கவனமாகத் தவிர்த்தார்கள்.

வெண்ணிலா அவனுக்கு ஹாக்கின்ஸ் உடைய புத்தகம் ஒன்றை கொண்டு வந்து கொடுத்தாள்.

ஆழ்ந்து படித்தான். மனத்தில் தெம்பு கூடியது.

அன்றைக்கு சுதாகரனை வரவழைத்தான்.

'சுதா... நீ என்ன முடிவு பண்ணியிருக்க! மறுபடியும் அமெரிக்கா போறியா?' என்றான்.

'அண்ணா, இப்போதைக்கு இந்த இயர் படிக்க முடியாது. அடுத்த வருஷம் கண்டின்யூ பண்ணிக்கறேன்னு.... பர்மிஷன் கேட்டிருக்கேன். கிராண்ட் பண்ணிடுவாங்கன்னு நினைக்கிறேன்.' என்றான்.

'நல்லதாப் போச்சு!' என்று நிம்மதியானான்.

அன்று மாலை!

சுதாகரன் கலகலவென்ற சிரிப்போடு வந்தான்.

'அண்ணா! செஸ் போர்டு... காரம்போர்டு... கார்ட்ஸ் எல்லாம் வாங்கிட்டு வந்திருக்கேன். எது ஆடலாம் சொல்லு?' என்றான்.

தினகரனுக்கு சிரிப்பு வந்தது. ஆனாலும் சகோதரனின் மனம் நோக வேண்டாமென்று 'கார்ட்ஸே விளையாடலாம்' என்றான்.

விளையாடினார்கள்.

சற்று நேரம் கலகலப்பாக இருந்தது.

'என்டா... கிலு கிலுப்பை வாங்கிட்டு வர்லையா?' என்றான் தினகரன்.

'அது எதுக்கு?' என்றான் சுதாகரன்.



'கொஞ்ச நேரம் விளையாடிட்டு அப்புறம் தூங்கலாம்... இல்லே!' என்றான்.

'அது எதுக்கு? தூக்கம் வர்லேன்னா, அண்ணிகிட்ட சொல்லுங்க... அழகாத் தாலாட்டு பாடுவாங்க...' என்றான் சுதாகரன்.

தினகரன் சிரித்தான்.

'சுதா...! என் ஃபிரண்ட்ஸ்க்கெல்லாம்... நான் ஈவ்னிங் அவர்ஸ்ல ஃப்ரீதான்னு தகவல் குடுத்துடு. ஒருத்தன் மாத்தி ஒருத்தன் வந்துகிட்டிருப்பாங்க. பொழுது போகும்' என்றான்.

'அண்ணா! கவலைப்படாதே! நம்ம சொந்த பந்தங்களுக்கெல்லாம் இப்பத்தான் பேஷன்டை வந்து பாக்கலாம்னு கிரீன் சிக்னல் குடுத்திருக்கு!

'நாளையிலிருந்து பாரு... சாத்துக்குடிப் பழமும், ஆப்பிளும் ஹார்லிக்ஸுமா வந்து குமியப் போகுது' என்று சிரித்தான்.

'அது சரி! ஆளாளுக்கு அட்வைஸ்ன்னு கொல்லுவாங்களேடா!' என்றான்.

'அதுக்கென்ன பண்றது? இந்தக் கல்யாணம், கட்டடம் கட்டறது, நோயாளியைப் பாக்க வர்றது இங்கயெல்லாம் இலவச அறிவுரை கொடுக்கறதுல நம்ம ஆளுங்க எக்ஸ்பர்ட்ஸ். ஏதோ கொஞ்சம் போனாப் போகுதுன்னு.... காதில வாங்கிக்க வேண்டியதுதான்' என்றான்.

சிரித்தார்கள்.

தினகரன் திரும்பி நிலாவைப் பார்த்தான்.

'ஆமா... நிலா! நிறையப் பேர் பார்க்க வருவாங்க.... ஆளாளுக்கு ஏதோ ஒண்ணு சொல்வாங்க பொறுத்துக்கணும்... சரியா?' என்றான்.

'சரிங்க!' என்று புன்னகைத்தாள் நிலா.

'சரி... நீ போய்க் கொஞ்சம் ரெஸ்ட் எடு... போ' என்று அனுப்பி வைத்தான்.

'எப்ப எது வேண்ணாலும் கூப்பிடறேன் சரியா?' என்றான்.

அதற்குப் பிறகுதான் நகர்ந்தாள்.

சகோதரர்கள் இருவரும் தொழில் பற்றிய விவரங்களை விவாதிப்பதில் ஆழ்ந்தார்கள்.

அறையில் போய் ஓய்வெடுக்க ஆரம்பித்தாள் வெண்ணிலா!

∴ ∴ ∴

எட்டு மணி வாக்கில் டிபன் டிரேயைத் தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டு வந்தாள் வெண்ணிலா.

தினகரன் அவளை ஆழ்ந்து பார்த்தான். 'கிட்டதட்ட யூனிஃபார்ம் போடாத நர்ஸ் ஆயிட்டே!' என்றான்.

குரலில் ஆதங்கம் தொனித்தது.

'எல்லாம் நீங்க எழுந்து நடமாடற வரைக்கும்தானே! அப்புறமும் நான் நீங்க கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரத்தானே போறேன்!' என்றாள்.

அவன் மௌனமாகச் சாப்பிட்டான். இரவு நேரங்களில் எளிமையான உணவுதான் உண்டான்.

சாப்பிட்டு முடித்தவுடன் வேலையாட்களை அழைத்து தள்ளு வண்டியை அனுப்பி விட்டு அவன் முகம் பார்த்தாள்.

அப்போதுதான் அவன் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

'வெண்ணிலா... டாக்டர் உன்கிட்டே எல்லா விஷயத்தையும் சொன்னாரா?' என்று.

வெண்ணிலா, அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

'ம்.. சொன்னாரு!' என்றாள்.



'ஒருவேளை எனக்கு... உணர்வு நரம்புகள் வேலை செய்யாமலே போகலாம்கிற நிலைமையும் ஏற்படலாம்... தெரியுமா?' என்றான்.

அவள் அவன் வாயைப் பொத்தினாள்.

'நடக்காத ஒண்ணை நாம ஏன் நினைச்சுக் கவலைப்படணும். எனக்கு எல்லாத்துக்கும் அப்பாற்பட்ட அந்த சக்தி மேல அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கு. அது நமக்கு நல்லதே செய்யும்னு நான் நம்பறேன்' என்றாள்.

'ப்யூர் எஸ்கேபிஸம்... தப்பித்தல்' என்றான். கேலியாகச் சிரித்தான். அவள் சட்டென்று குறும்பாகச் சிரித்தாள்.

'அத்தான்! உங்க தம்பி சொன்னாரே... அது மாதிரித் தாலாட்டுப் பாடட்டுமா?' என்றாள்.

'பாடுவியா... என்ன?'

'எனக்கு இது வரைக்கும் உங்களை மாதிரி என் பாட்டைக் கேட்டே ஆகணும்கிற சூழ்நிலையில யாரும் வகையாச் சிக்கலை. கிடைச்சிருக்கிற வாய்ப்பை விடுவேனா?' என்றாள்.

அவன் கண்களிலும் சிரிப்புத் தோன்றியது.

'ம்... வேற வழியில்ல... போவிருக்கு!' என்று அவனும் சிரித்தான். பாடினாள்.

நீலாம்பரி ராகத்தில் மாற்றி மாற்றி நான்கைந்து பாடல்கள் பாடினாள்.

எல்லையற்ற அமைதியை உணர்ந்தான். அப்படியே உறங்கிவிட்டான்.

அவள் சற்று நேரம் நின்று பார்த்தாள். குனிந்து அவன் நெற்றியில் இதழ் பதித்தாள்.

பக்கத்திலேயே இருந்த தனது படுக்கையறைக்குப் போனான்.

∴ ∴ ∴

'ஆதி காலந்தொட்டு பெண்கள் நாங்கள் இப்படித்தான் அடிமைப் படுத்தப்படுகிறோம்... அந்தக் காலத்திலேயே ஒருத்தன் கற்பை நிரூபிப்பதற்கு கனலிலே விழு என்றான். அதற்கப்புறம் ஒருத்தன் பெண்ணையே பணயப் பொருளாக்கினான். இன்னைக்கு நீ... என்னைத் தாதியாக்கி விட்டாய். இது எத்தனை நாளைக்கு? நான் உனக்கு... சேவகம் செய்து... வெறும் சோறு சாப்பிட்டு அதிலேயே நிறைவடைந்து... இதுதானா... உன் காதலால் எனக்குக் கிடைத்த பரிசு...' என்று தலைவிரி கோலமாக நின்று கொண்டு கை நீட்டி அவனைக் கேள்வி கேட்டாள் வெண்ணிலா.

அவன் முன்னாலே கூனிக் குறுகி நின்றான் தினகரன்.

'எங்களைச் சிறைப் பிடிப்பதிலும், வதைப் படுத்துவதிலும்... உங்களுக்கென்ன பெருமை! இதுக்குப் பேர்தான் அன்பா... காதலா...!' என்று கண்கள் சிவக்க அவள் மேலும் கேள்விகள் கேட்டாள்.

'ஓ... நோ...! நோ!' என்று பெருங்குரலெடுத்துக் கத்தினான் தினகரன்.

'கைகளால் ஓங்கிப் பக்கவாட்டில் குத்தினான், கையில் டம்ளர் பட்டுக் கீழே விழுந்து உருண்டு ஓடியது.

திடுக்கிட்டு விழித்தான்.

கனவு! முகமெல்லாம் வேர்த்து விட்டது. வியர்வை முத்துத் துளிகளாக அரும்பி நிற்க அவன் வேகமாக மூச்சு விடுகையில் வெண்ணிலா ஓடி வந்து விளக்கைப் போட்டாள்.

'அத்தான்! என்ன ஆச்சு...!' என்று கையைப் பிடித்தாள்.



அவள் பக்கத்திலிருந்த டவலை எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டான். மெல்லிய குரலில் சொன்னான்.

'கனவு ! கெட்ட கனவு!' என்று.

'அது மனசுக்குள்ள... ஏதாவது குழப்பமா.... இருக்கும்!' என்றாள்.

அவளும் அவன் முகத்தை துடைத்து விட்டாள். குடிக்கத் தண்ணீர் கொடுத்தாள். வேலையாளை அழைத்து சூடாகப் பால் கொண்டு வரச் சொன்னாள்.

'டாக்டர்... சொன்னாங்க... அத்தான்! டிப்ரஷன் வரும்னு. நீங்கதான் தைரியமாயிருக்கணும். கொஞ்சம் பொறுங்க... நாளையில இருந்து ∴பிஸியோ தெரபிக்கு வராங்க. இந்த எலும்பு ∴பிராக்சர்... கொஞ்சம் சரியானா வீல் சேரில உட்கார்ந்தர்லாம். அப்புறம் வேணும்னா... ஆபீஸுக்கு போயிரலாம்' என்று குழந்தைக்கு சொல்வது போல் சொன்னாள்.

பாலில் தூக்க மாத்திரையைக் கலந்து கொடுத்தாள்.

'தூங்குங்க... அத்தான்!' என்றாள்.

'நிலா... என் கவலையெல்லாம்.... அதில்லே!' என்று அவன் குமுறலாகச் சொன்ன போது

'எதுவாயிருந்தாலும் இப்பக் கவலைப் பட வேண்டாங்கத்தான்' என்றாள்.

அவன் உறக்கத்தில் ஆழ்ந்தான்.

அவள் சிந்தனையுடன் அறைக்குப் போனாள். டாக்டர் சொன்னது நினைவுக்கு வந்தது.

'அம்மா... இது மாதிரி... உடல்நிலை நன்றாக இருந்து அதற்கப் புறம் கிரிப்ள்ட் ஆக இருக்க வேண்டிய சூழ்நிலை வரும்போது

மனிதர்களால் அதை ஜீரணிக்க முடியாதும்மா டிப்ரஷன் வரும் நிம்மதி குறையும்... அத்தனை கோபத்தையும் கூட இருக்கறவங்க கிட்டேதான் காட்டுவாங்க... உங்களுக்குத்தான் ரொம்பப் பொறுமை வேணும்' என்றார்.

நல்ல வேளையாக வெண்ணிலா யோகா கற்றிருந்தாள். அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு யோகா செய்து விட்டுத்தான் வெளியே வருவாள். மாலையில் நேரம் கிடைக்கும் போது தியானமும் செய்வாள்.

'எப்படியோ சமாளிக்கலாம்!' என்றுதான் எண்ணினாள். ஆனால் அவளுடைய பொறுமையையும் சோதிக்கும் அளவில் விஷயங்கள் நடக்கப் போகிறது என்பது அன்றைக்கும் புரியவில்லை.

∴ ∴ ∴

'**த**ம்பீ!' என்று அம்மாவும், அப்பாவும் வந்தார்கள்.

அவன் நியூஸ் பேப்பரை மூடிவைத்து விட்டு அமர்ந்தான். 'சொல்லுங்கப்பா!' என்றான்.

'இன்னைக்கிருந்து சொந்தக்காரங்க எல்லாரும் உன்னைப் பாக்கறதுக்கு வர்றாங்கப்பா... ஆளாளுக்கு ஒண்ணைச் சொல்லு வாங்கப்பா. ரொம்பப் பொறுமையா இருக்கணும்' என்றார்.

'சரிப்பா!' என்றான்.

அவர் மேலும் தயங்கினார். பிறகு சொன்னார். 'உறவுக்காரர் களுக்கு எலும்பு முறிவு தெரியும் மத்த விஷயங்கள் தெரியாது என்றார்.

'சரிப்பா! நான் சொல்ல மாட்டேன். நீங்க சொல்லாம இருந்தாச் ரி!' என்றான்.



அம்மா ஆழ்ந்த கவலையுடன் பார்த்தார். 'தம்பி! நாம யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்யலே. கடவுள் ஏன் நம்மளை இப்படி சோதிக்கறாருன்னு புரியலே' என்றார்.

வேலுசாமி தொடர்ந்தார். 'கவலைப்படாதே... தம்பி. நம் கடவுள் நம்மைக் கைவிட மாட்டாரு. அதிலயும் உன் பெண்டாட்டி தினமும் காலையில கோயிலுக்குப் போயி உன் பேருக்கு அர்ச்சனை பண்ணிட்டு வர்றா. ஏதேதோ விரதம் இருக்கா. அதுக்கெல்லாம் பலன் இல்லாமலா போயிடும்' என்றார்கள்.

மேலும் சற்று நேரம் பேசி விட்டுப் போனார்கள்.

பாவம்! அம்மாவுக்கும் அப்பாவுக்கும் புரியவில்லை. கவலைப் படாதே என்று திரும்பத் திரும்ப மருமகளைப் பற்றிப் பேசி அவனைப் பெரிய கவலையில் ஆழ்த்தி விட்டோம்! என்பது.

சிந்தனையிலாழ்ந்தான். கடைசியில் 'அப்படித்தான் செய்ய வேண்டும். வேறு வழியில்லை' என்று முடிவு செய்து கொண்டான்.




ஒருவர், இருவராக உறவினர்கள் வந்து கொண்டே இருந்தார்கள்.

பங்காளிகள், அவர்களது கொண்டான், கொடுத்தார் குடும்பத்தினர் என்று வந்த வண்ணமாக இருந்தார்கள்.

இரண்டு நாட்கள் முதலில் உற்சாகமாக இருந்தது தினகரனுக்கு. ஆனால், அதற்குப் பிறகு போரடிக்க ஆரம்பித்தது. குறிப்பிட்ட ஒரு வாய்ப்புக்காகக் காத்திருந்தான்.

அந்த வாய்ப்பும் வந்தது.

அன்றைக்கு அவனுக்கு பெரியம்மா முறையில் ஒரு பெண்மணி வந்திருந்தார். சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார். பிறகு பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தார்.

அந்தச் சத்தம் கேட்டு அறை வாசலுக்கு வந்த வெண்ணிலா நின்றாள்.

அப்போது அந்தப் பெண்மணி சொல்லிக் கொண்டிருந்தார்.

'ஐயோ... தம்பி! நான் சொல்றதைக் கேளு. சில பொண்ணுங்க... ராசி அப்படி... உன்ற வீட்டுப் பொண்ணு காலடி வச்சவுடனே இப்படி ஆயிப்போச்சு. ஒத்து வராது போல இருக்கு. முதல்ல கழிச்சுக் கட்ற வேலையைப் பாரு!' என்றார்.

கணவன் ஏதாவது பதில் சொல்லக் கூடும் என்று எதிர்பார்த்து நின்றாள்.

'நம்ம நேரம்... இப்படி!' என்றோ, 'அவ பாவம் என்ன செய்வா' என்றோ, 'நானாத்தான் பிரியப்பட்டுக் கல்யாணம் செய்தேன்' என்றோ ஏதாவது சொல்வான் என்று பார்த்தாள்.

அவன் எதுவும் சொல்லவில்லை.

பெரியம்மா போனதற்குப் பிறகு அவள் அவனுக்குக் காபி எடுத்துக் கொண்டு அறைக்குப் போனாள்.

கடந்த நாட்களில் உள்ளே நுழைந்தவுடன் அவளும் புன்னகைப்பாள். அவனும் புன்னகைப்பான்.

இன்றைக்கு நிலா புன்னகைத்தாள். அவன் திரும்பப் புன்னகைக்கவில்லை. மாறாக முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டான்.

அவள் முகம் வாடியது.

தினகரனின் முகம் பார்க்காமல் காபியை டம்ளரில் ஊற்றி நீட்டினாள்.

அவன் வாங்கிக் கொண்டான். பிறகு 'நீ... போ... நான் குடிச்சுக்கறேன்.' என்றான்.



நிலா நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்.

'சொல்றேன்... இல்ல!' என்றான்.

அவள் பாவமாக அவன் முகம் பார்த்தாள்.

'எனக்கு என்னமோ உன் முகத்தைப் பாக்கவே பிடிக்கலைன்னு ஒப்பனா சொன்னாத்தான் போவியா!' என்றான்.

அவள் கண்களில் நீர் நிறைந்தது. வேகமாகத் தனது அறைக்கு ஓடினாள்.

பக்கத்து அறையில் அவள் தேம்பியழுகிற சத்தம் கேட்டும் அவன் அவளை அழைக்கவில்லை. தேற்றவும் முயற்சிக்கவில்லை.

அன்றைக்கெல்லாம் பெரும்பாலும் அவன் எதிரில் வராமல் அவன் தேவைகளை மட்டும் பின்னணியில் இருந்து அவள் நிறைவேற்றிக் கொண்டிருந்தாள் என்பதை அறிந்தும் அவன் அவளிடம் பேச முயற்சிக்கவில்லை.

∴ ∴ ∴

அடுத்த நாள்!

அவனுக்கு உதவியாக இருந்த வேலைக்காரர்கள் இரண்டு பேருமே லீவு கேட்டிருந்தார்கள். அதனால் வேறு வழியின்றி அவளை காபி எடுத்துக் கொண்டு போனாள்.

தினமும் அவளே காபி போட்டு எடுத்துக் கொண்டு போவாள்.

'டெலிஷியஸ்' என்று ரசித்துக் குடிப்பான். இன்றைக்கென்னவோ விளக்கெண்ணெய் குடித்தாற் போல் முகத்தை வைத்துக் கொண்டான்.

ஒரு வாய் குடித்திருப்பான். பிறகு 'த்தூ...! மனுஷன் குடிப்பானா... இதை!' என்று வீசியெறிந்தான்.

காபி டம்ளர் கனீர் என்ற சத்தத்துடன் கீழே விழுந்தது.

காபி சிதறிப் பரவியது.

அவள் அன்றைக்கு ஒரு முடிவோடு இருந்தாள். நேற்று முதலில் கோபப்பட்ட போதும் பிறகு யோசித்தாள்.

கண்ணசைவிலும் கையசைவிலும் காரியங்கள் நடத்திக் கொண்டிருந்த ஒரு முதலாளி. அதிலும் இளைஞன். நாலைந்து தொழில்களை ஒரே சமயத்தில் நடத்திக் கொண்டிருந்த ஒருவருக்கு படுக்கையில் முடங்கிக் கிடக்கிற நிலையென்பது எவ்வளவு கொடுமையாக இருக்கும் என்று யோசிப்போம். மனத்தில் அனுதாபம் பிறந்தது!

இதையே வேறு மாதிரி யோசிப்போமே... அவருக்கு ஒருவேளை இப்படியெல்லாம் ஆகாமல் இருந்தால் ஹனிமூனுக்குப் போகலாம் என்று சொல்லிக் கொண்டிருந்தான். அப்போது எவ்வளவு சந்தோஷம் அனுபவித்திருப்போம். அவரால் கிடைக்கிற சந்தோஷங்களுக்குத் தயாராக இருந்த மனது துக்கத்துக்கும் தயாராகத் தானே இருக்க வேண்டும். கொள்ளென்றால் வாயைத் திறக்கிற குதிரை கடிவாளமென்றால் வாயை மூடிக்கொள்கிற மாதிரியா... நான்? அவருடைய சந்தோஷங்களைப் பகிர்ந்து கொள்கிற நான் துக்கங்களையும்தான் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்திருந்தாள்.

அதனாலோ என்னவோ இப்போது முகத்தில் எந்த உணர்வும் காட்டாமல்,

'சாரிங்க! வேற காபி கொண்டு வரேன்!' என்று போனாள்.

பத்தே நிமிடத்தில் வேறு காபி கொண்டு வந்தாள். அவன் குடித்து முடிக்கிற நேரத்தில் தரையைச் சுத்தம் செய்தாள்.

கள்ளமில்லாத முகம் என்பார்களே அது போல் கன காரியமாகத் தரையைச் சுத்தம் செய்கிற மனைவியைப் பார்த்த



அவனுக்குள்ளும் ஏதோ நகர்ந்திருக்கிறாற் போல் தோன்றியது. அதற்குப் பிறகு ஒன்றும் பேசவில்லை. ஆனால் பிற்பகலில் மறுபடியும் ஆரம்பித்தான்.

'ஏன்.. நிலா!' இந்த ராசி ராசிங்கிறாங்களே... அது பத்தி என்ன நினைக்கறே?' என்றான்.

அவள் நின்று அவனைப் பார்த்தாள்.

'ஏன்... கேக்கறீங்க?' என்றாள்.

'ஒருத்தர் சொன்னா அதை உதாசீனம் பண்ணலாம், எல்லாருமா ஒண்ணு போல சொல்வாங்க?' என்றான்.

அவள் மௌனமாக நின்றாள்.

'புரியலையா. உன்னோட ராசிதான்... என் கை காலை முடக்கிடுச்சுன்னு எல்லாரும் சொல்றாங்களே அதுல உண்மை யிருக்குமோ?' என்றான்.

'உங்களுக்கே அப்படி ஒரு நம்பிக்கை வந்தா... நான் என்ன செய்ய முடியும்?' என்றாள் முணுமுணுப்பாக.

'டயலாக் பேசாதடி. போய்த் தொலைடி' என்றான். அவள் சட்டென்று அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

கண்களில் முட்டிய கண்ணீரை அடக்கிக் கொண்டாள். கீழே வந்து எதையும் காட்டாமல் நடமாடிக் கொண்டிருந்தாள். ஆனால் அவன் நடத்தையை எல்லாரும் தெரிந்து கொள்ளும் நேரமும் வந்தது.

∴ ∴ ∴

ஃபிஸியோ தெரபிஸ்ட் மெது மெதுவாகக் கால்களை அசைத்து எக்சர்ஸைஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அவனும் உடனிருந்து உதவி செய்து கொண்டிருந்தாள்.

என்ன ஆனதோ தெரியவில்லை. வேலையாட்கள் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் லீவு என்றார்கள்.

தன்னை வறுத்தெடுப்பதற்காகவே அவனே லீவு கொடுத்திருப் பானோ என்ற சந்தேகமும் எழுந்தது!

'பார்க்கலாம் பார்க்கலாம்! எவ்வளவு தூரம் போகிறதென்று' என்ற எண்ணிக் கொண்டாள்.

பொறுமையாக இருப்பதென்று முடிவு செய்து கொண்டாள்.

மறுநாள் காலை.

'குளிக்க வைக்கட்டுமா?' என்றாள்.

'வேண்டாம்... டவல் பாத் குடு' சாயங்காலமா... தம்பி வந்தவுடனே குளிச்சுக்கறேன்' என்றான்.

அவளும் டவல்பாத் கொடுத்தாள். அப்போது கிண்டலாகச் சிரித்தான்.

'இங்க... பாரு! எத்தனை நாளைக்கு இப்படித் துடைச்சு விட்டு... சேவகம் பண்ணிக்கிட்டு இருப்பே...' என்றான் தினகரன்.

'எத்தனை நாளைக்கு அவசியமோ அதுவரைக்கும்!' என்றாள் வெண்ணிலா.

'ஒரு மாசம். சரி... விடு... ஒரு ஆறு மாசம்... அப்புறம்... என் மேல் வெறுப்பு வரும். உன் மேல கோபம் வரும். அவ்வளவு ரத்துக்குப் போயிக்கணுமா... என்ன? பெஸ்ட் ஐடியா... இப்பவே வகிடு... அம்மா வீட்டுக்குப் போயிடு...' என்றான்.

அவள் நிமிர்ந்து நேரடியாகப் பார்த்தாள்.

பாருங்கத்தான்... இப்படியெல்லாம் பேசினா, நான் விடுவேன்னு நினைக்காதீங்க...' என்றாள்.



அவள் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. அவள் துடைப்பதைத் தொடர்ந்தாள். முதுகைத் துடைத்து விடுகையில் அவன் தொடர்ந்தான்.

'பாரு... வெண்ணிலா! கையாலாகாத ஒரு நிலைமையில என்னைப் போல ஒருத்தன் இப்படிக் கிடக்கறதுங்கறது எவ்வளவு கொடுமை தெரியுமா? அதிலயும்... ஒரு இளம்வயசு மனைவியைப் பக்கத்திலே வச்சுகிட்டு... ரொம்பக் கஷ்டம்... நிலா..' என்றான்.

அவள் மௌனமாக அவன் என்னவோ பேசிக் கொண்டு போகட்டும் என்று எண்ணிக் கொண்டே வேலையைச் செய்தாள்.

அவன் குரலில் கோபம் தொனிக்கச் சொன்னான். 'அப்புறம்.. ஒரு ஸ்டேஜ்ல நான் உன் மேல சந்தேகப் பட வேண்டி வரும்' என்றான்.

அவள் பெருமூச்சு விட்டாள். பிறகு சொன்னாள் 'அத்தான்.. நீங்க படுக்கையில இருக்கறதுங்கறது ரொம்பக் கஷ்டமான விஷயம்தான். இதுல ஏன் எப்பப் பாரு நம்ம ரெண்டு பேர் உறவைப் பத்தியே நினைச்சுக் கஷ்டப்பட்டுக்கறீங்க... உங்களை நம்பி இருக்கிற ரெண்டாயிரம் தொழிலாளிகளை நினைச்சுப் பாருங்க... அவங்களுக்காக மறுபடியும் எப்பத் தொழிற்சாலைக்குப் போகப் போறோம்னு கனவு காண ஆரம்பியுங்க.. உங்க வாழ்க்கையை அதோட பெரிய பெரிய கடமைகளை நினைச்சுப் பாக்கறப்ப என் கவலை ரொம்ப சின்னக் கவலைதான்' என்றாள்.

அவன் பேச்சற்றுப் போனான்.

சற்று நேரம் அமைதியில் கழிந்தது. பிறகு மறுபடியும் சிரித்தான்.

'ரொம்பக் கெட்டிக்காரத் தனமா பேசி விஷயத்தை மாத்திட்டே... இல்லே!' என்றான்.

அவள் மறுபடியும் மௌனம் சாதித்தாள். அவன் தொடர்ந்தான்.

'நிலா.. ஒன்னு புரிஞ்சுக்க... உன்னைப் பார்க்கும் போதெல்லாம். என்னோட கையாலாகத் தனம்தான் எனக்கு நினைவுக்கு வருது. அது என்னைப் பாதிக்குது. யு பெட்டர் ஸ்டே அவே...ஃபிரம்.. மி' என்றான்.

'சரி... அதுதான்... உங்களுக்குப் பிடிச்சதுன்னா நான் அப்படியே இருந்துக்கறேன். ஆனா, அத்தை மாமாவுக்கு தெரிஞ்சா... ரொம்ப வருத்தப்படுவாங்க... அவங்களுக்காகவாவது அப்பப்ப ரூமுக்கு வர்றதுக்கு அனுமதியுங்க' என்றாள்.

அவன் மறுக்கவில்லை.

∴ ∴ ∴

இரவெல்லாம் வெண்ணிலாவுக்கு உறக்கம் வரவில்லை.

கடைசியில் கணவனும் தான் ராசியில்லாதவள் என்று நம்ப ஆரம்பித்தாகி விட்டது. இனி யாருக்காக இப்படி இங்கே இருக்க வேண்டும் என்று மனது பெரிதாக ஓலமிட்டது.

ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தவள் அதிலே அந்த ஞானி சொல்லியிருந்தார்.

'பொறுமையாக இருப்பதும் ஒரு போராட்டம்தான் ' என்று.

உண்மைதான்...! கணவனுக்கு எதுவுமே செய்வதற்கு இருக்கவில்லை யென்ற கோபத்தைத் தன் மேல் காட்டுகிறான்.

ஸ்டீஃபன் ஹாக்கின்ஸைப் பற்றி அவளும் படித்திருக்கிறாள். அது போல் கணவனும் ஏதாவது சாதிக்கிற மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டும். தான் உறுதியாக உடனிருக்கத்தான் வேண்டும் என்று தேற்றிக் கொண்டாள். ஆனாலும் கண்களில் கண்ணீர் கரகரவென்று ஓடத்தான் செய்தது.

சற்று நேரம் உறங்கவில்லை.



பன்னிரெண்டு மணியிருக்கும் விழித்தாள். பக்கத்தில் கணவனது அறையில் டி.வி. ஓடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

எட்டிப் பார்த்தாள்!

தினகரன் உறங்கி விட்டிருந்தான்.

அவள் டி.வி.யை ஆஃப் செய்தாள். போர்வையை நன்றாகப் போர்த்தி விட்டாள். சற்று நேரம் நின்று பார்த்தாள். அப்படிப் பார்க்கும் போது முகம் நிர்மலமாக இருந்தது.

'இவரா டம்ளரைத் தூக்கி வீசுகிறார். என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது!

தலையணையை சரிப்படுத்தினாள். தலையணைக்குக் கீழே அவளுடைய போட்டோ இருந்தது.

நிச்சயதார்த்தத்தின் போது சர்வாலங்கார பூஷிதையாக நின்ற நிலையில் எடுக்கப்பட்ட போட்டோ.

கடந்த வாரத்தில் அந்த போட்டோவை வைத்துக் கொண்டு கிண்டல் செய்து கொண்டிருந்தான்.

'யாராவது சினிமா ப்ரொடியூஸர்ஸ் பார்த்தன்னா... கடவுள் வேஷம் போடறதுக்குக் கூப்பிட்டுருவானுங்க....' என்று.

'நீங்க சிவன் வேஷம் போடறதா இருந்தா சொல்லுங்க.. நான் பார்வதி வேஷம் போடத் தயார்' என்று அவளும் கூட வாயடித்தாள்.

'ஹேய்! என் கழுத்தில பாம்பைக் கட்டி விடறதுல அப்படி ஒரு இன்ஸ்ரஸ்ட்டா என்ன?' என்று சிரித்தான். பிறகு திடீரென்று நினைவு வந்தாற்போல்.

'அப்புறம்... இன்னொரு விஷயம் இருக்கு... தெரியுமா தலையில ஒரு கொண்டை வச்சுக்கணும். அதுல வச்சுக்க ஒ… பொண்ணைத் தேடணும்' என்றான்.

அவள் நின்றாள். அவனை முறைத்தாள்.

'தேடுவீங்க... தேடுவீங்க... முதல்ல அவளுக்கு உதை விழும். அப்புறம்... உங்களுக்கு...' என்றாள்.

அவன் 'ம்..!' என்று கிறக்கப் பார்வையுடன் பார்க்க 'ம்... அட! அதெல்லாம் இப்ப நடக்காது' என்று ஓடி விட்டாள்.

அவன் சிரிப்பு அவளைத் தொடர்ந்து. இப்போது நினைவுக்கு வர மெல்லப் புன்னகைத்துக் கொண்டாள்.

'சும்மாவாவது... கணவன் தன்னைச் சீண்டுகிறார் என்று தோன்றியது. அப்படி நம்பிக் கொள்வதே நல்லது என்று எண்ணிக் கொண்டாள். மனுஷன் அவளது எண்ணத்தை அவன் சுக்கு நூறாக உடைக்கும் வரை!



'ராத்திரி ஏன் நிலா வந்து டி.வி.யை ஆஃப் செஞ்சே?' என்றான் தினகரன்.

'ஆமா... நீங்க ரொம்ப டீப்பாத் தூங்கிட்டீங்க... அதான்' என்றாள்.

'போட்டோவைப் பாத்தியா' என்று அவனும் கேக்கவில்லை.

வேலைக்காரர்களின் உதவியுடன் அவனை பாத்ருமுக்குள் அனுப்பி விட்டு அவள் வெளியே வந்து படுக்கையில் விரிப்பை மாற்றுவதற்காகத் தலையணையை எடுத்தவள் அதிர்ந்து போனாள்.

நேற்று அவள் தலையணையின் கீழே இருந்த படம் இரண்டாகக் கிழிக்கப் பட்டு வைக்கப்பட்டிருந்தது.

அவள் கண்களில் நீர் நிறைந்தது.



சட்டென்று பக்கத்தில் இருந்த தனது அறைக்கு ஓடிப் போய் வாஷ் பேஸினில் முகம் கழுவிக் கொண்டு வந்தாள். முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் வைத்துக் கொண்டாள்.

அவன் குளித்து முடித்து வந்தவுடன் வேலையாட்கள் அவனைப் படுக்கையில் கிடத்த உதவினார்கள். இப்போதெல்லாம் சற்றே சரிவாக அமர்ந்து கொள்ள அனுமதிக்கப்பட்டான்.

அப்படி அமர்ந்து கொண்டான்.

காலை ஒரு ஐந்து நிமிடம், பத்து நிமிடம் கீழ் நோக்கித் தொங்கப் போட்டாற்போல் வைத்துக் கொள்ளச் சொன்னார்கள்.

அவனுக்கு எந்த உணர்வும் தெரியவில்லை. என்ற போதும் அவ்வப்போது அப்படி வைக்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டார்கள்.

இப்போது காலையில் அவனுக்கு உணவு கொடுத்தார்கள் சாப்பிட்டான்.

வேலையாட்கள் தனிமை கொடுத்துப் போனார்கள். 'சூடா ஒரு கப் காபி சாப்பிடறீங்களா?' என்று ஊற்றிக் கொடுத்தாள்.

வாங்கிக் கொண்டான்.

'போட்டோ பாத்தியா?' என்றான்.

'ம்!' என்றாள்.

'நம்ம ரெண்டு பேரும் சேர்ந்திருந்தா நம்ம வாழ்க்கையும் இப்படித்தான் ஆகிப் போயிடும்' என்றான்.

அவள் அனுதாபத்துடன் அவனைப் பார்த்தாள். அவன் முகம் இறுகியது. வார்த்தைகள் குத்தீட்டியாய் வெளிவந்தன.

'அனுதாபம் எனக்கும் பிடிக்காது!' என்றான்.

'நீங்களா ரொம்பக் கற்பனை பண்ணிக்கறீங்க. நான் உங்களை அனுதாபமாப் பாக்கலை. அட்மையர் பண்றேன். இங்க இருந்து

கிட்டே நீங்கள் ஆபீஸ் நடத்தற விதம் பார்த்து எல்லாரும் ஆச்சரியப் படறாங்க' என்று என்னென்னவோ சொல்ல வேண்டுமென்று நினைத்தாள். ஆனால் வார்த்தைகள் வரவில்லை.

அவனைப் பார்த்து விழித்தாள்.

'அனுதாபத்தின் அடிப்படையில் வாழற வாழ்க்கை கடைசியில வெறுப்புலதான் முடியும்' என்றான் கசப்புடன்.

'ப்ளீஸ்! முதல்ல உடம்பு நல்லாகட்டுமே! அப்புறம் அதைப் பத்தியெல்லாம் யோசிக்கலாம்' என்றாள் வெண்ணிலா பணிவான குரலில்.

'உடம்பு சரியாகப் போறதில்லேங்கறேன். மறுபடியும் மறுபடியும் அதையே சொல்லிக்கிட்டு!' என்று கப்பை மறுபடியும் வீசினான்.

அவள் நின்றாள். அவளை வெறித்துப் பார்த்தான். அவன் குரலின் காரம் சற்றும் குறையாமல் சொன்னான்.

'இத பாரு! என்ன இருந்தாலும் ஒரு ஹஸ்பெண்ட் வைஃப்ன்னா, அவர்களுக்குன்னு சில சந்தோஷங்கள் இருக்கு. இருக்கணும். அது இல்லாத பொய்யான வாழ்க்கை நிலைக்காது...' என்றான்.

அவள் மௌனமாக மீண்டும் கோப்பைச் சில்லுகளைப் பொறுக்கிக் கொண்டு தனது படுக்கையறைக்குள் நுழைந்து அந்த வாசல் வழியாக வெளியேறி அதே கணத்தில் சுதாகரன் உள்ளே நுழைந்தான்.

தினகரன் அவன் எதையாவது பார்த்திருப்பானோ என்பது போல் அவன் முகம் பார்க்க. அவன் எதையும் காட்டிக் கொள்ளாத புன்னகையுடன்.

'அண்ணா! இன்னைக்கென்ன இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' என்றான்.

இரண்டு பேரும் சற்று நேரம் அலுவலக விஷயம் பேசினார்கள்.



சுதாகரன் புறப்பட்டுப் போனான். ஆனால் போனவன் சற்று நேரம் தாயாரிடம் பேசிவிட்டுப் போனான்.

∴ ∴ ∴

அன்றைக்குப் பிற்பகல்.

ராஜேஸ்வரி உள்ளே நுழைந்தார்.

'தினா, நான் வேண்ணா சித்த நேரம் இருக்கேன். வெண்ணிலா போய் ரெஸ்ட் எடுக்கட்டும்' என்று அனுப்பி வைத்தார்.

வெண்ணிலா அறைக்குள் போய் நிஜமாகவே உறங்கி விட்டாள்.

முதல் நாளிரவு உறக்கமில்லாமல் தவித்ததாலோ என்னவோ இப்பொழுது தூக்கம் தேவைப்பட்டது.

அதே நேரம்!

தாயார் மகனிடம் மெல்ல ஆழம் பார்த்துக் கொண்டிருந்ததை அவள் அறியவில்லை.

∴ ∴ ∴

இரவு நேர உணவு

கோதுமை வகைகளில் ஏதாவது ஒன்றை தயாரிப்பாள் வெண்ணிலா.

தாயரித்துக் கொண்டிருந்தாள். அன்றைக்கு வெண்ணிலாவின். அம்மாவும் அப்பாவும் வந்து தினகரனைப் பார்த்து விட்டுப் போனார்கள்.

வெண்ணிலா யாரிடமும் தன் வேதனையை வெளியிடுவ தில்லையென்று திடமாக முடிவெடுத்திருந்தாள்.

'எவ்வளவுதான் பேசினாலும் சரி. கஷ்டப்படுத்தினாலும் சரி.. பொறுத்துக் கொண்டே ஜெயிப்பது என்று முடிவு செய்திருந்தாள்.

உணவை எடுத்துக் கொண்டு போய் பரிமாறினாள்.

அவனால் அவளைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

கோபமாகப் பேசுகிற நேரங்களில் தவிர மற்ற நேரங்களில் அவள் இருப்பதை அவன் சட்டை செய்வதில்லை.

பகல் முழுவதும் அலுவலக வேலையும், உறவினர்கள் வருகையும், போன் பேசுவதுமாக நேரம் ஓடிவிடும்.

பிற்பகலில் சற்று நேரம் உறங்குவான். பிறகு மீண்டும் சுதாகரன் வருகை, பி.எம்.ஜி.எம் என்று யாராவது வருவார்கள்.

கட்டிடம் நடந்து கொண்டிருப்பதையெல்லாம் சுதாகரன் ஹாண்டி காமிராவில் எடுத்துக் கொண்டு வந்து போட்டுக் காட்டினான்.

வசதிகள் இருந்ததால் பெரிய அளவில் ஊனம் எதையும் தடுத்து நிறுத்தி விடவில்லை.

இரவில்தான் சற்று நேரம் இருவருக்கும் தனிமை கிடைக்கும். அப்போதுதான் அவளைக் கடித்துக் குதறினாற்போல் பேசுவது.

அன்றிரவு வேலுசாமி கூட வந்து சற்று நேரம் பேசி விட்டுப் போனார்.

இரவு உணவு அமைதியாக உண்டான். 'பரவாயில்லையே!' என்று நினைத்துக் கொண்டாள் ஆனால், விஷயம் அத்தோடு முடியவில்லை.

'வெண்ணிலா. ரொம்பக் கசகசப்பா இருக்கு. கொஞ்சம் துடைத்து விடறியா?' என்றான்.



அவளும் ஹீட்டரைப் போட்டு வெது வெதுப்பாய் ஒரு டப்பில் நீர் கொண்டு வந்து துடைத்து விட்டாள்.

அவன் இடி இடியென்று சிரித்தான்.

'இதுக்கு மேலே எதுவும் நடக்காது' தெரியுமா?' என்றான்.

அவள் மௌனமாக டவலைப் பிழிந்து உலரப் போடப் போனாள்.

அவன் சலிக்காமல் மேலும் தொடர்ந்து குத்தலாக ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

அவள் பொறுக்க முடியாமல் வாயைத் திறந்தாள். 'பாருங்கத்தான்... நீங்க இப்படி என்னைச் சீண்டறதுனால ஒரு பிரயோஜனமும் இல்லை. அப்படியெல்லாம் உங்களை நட்டாத்தில விட்டுட்டு நான் போக மாட்டேன்' என்றாள்.

'என்னை கரையேத்தறதுக்கு நிறையப் பேர் இருக்காங்க.. நீ உன் வழியைப் பாத்துக்க...' என்றான்.

'தாங்க்ஸ் ஃபார் தி அட்வைஸ்' என்றாள். ஆனால் அயராமல் நின்றாள்.

அவன் அவளை ஆழ்ந்து பார்த்தான். பிறகு வெறி கொண்டாற்போல் சிரித்தான்.

'பார்க்கலாம்... எத்தனை நாளைக்கு நடக்குதுன்னு...' என்றான்.

அவள் அலட்டிக் கொள்ளாமல் தனது அறைக்குப் போனாள். ஆனால் தனது அறைக்குப் போனதும் வெடித்து அழுதாள்.

அவன் எதையோ மனதில் வைத்துக் கொண்டு செய்கிறான் என்று தெரிந்தது. ஒருவேளை தன் மீது அவனுக்கு உண்மையாவே வெறுப்பாக இருந்தால்...!

எத்தனை நாளைக்கு இதைத் தாங்கிக் கொண்டே இருப்பது

வெளியே நடந்தால் தேவலை போல இருந்தது. இறங்கினாள். பின்னாலேயிருந்த கார்டனில் நடந்தாள்.

மெல்ல நிமிர்ந்து வானத்தைப் பார்த்தாள். அந்தப் பெரிய வானமென்னும் கூரைக்குக் கீழே தான் மட்டுமே தனியாய் நிற்பது போல் உணர்ந்தாள்.

வாழ்க்கை ஏன் இப்படியொரு கொடுமையைத் தனக்குச் செய்கிறது என்ற எண்ணம் ஏற்பட்டவுடனே வாய்விட்டு அழ வேண்டும் போல இருந்தது.

புல்தரையில் முழங்காலில் முகம் புதைத்து அழுதாள்... விக்கி விக்கி அழுதாள்.

அதே நேரம்!

சுதாகரன் தன் தாயையும், தந்தையும் தனது படுக்கையறை ஜன்னலுக்கு அழைத்து அண்ணி அமர்ந்து கொண்டிருந்த காட்சியைக் காட்டினான்.

அம்மாவும், அப்பாவும் கவலையாகப் பார்த்துக் கொண்டார்கள்.

∴ ∴ ∴

தாறுமாறாகக் கிழிந்திருந்த போட்டோ கண்ணுக்குள்ளே வந்து நின்றது.

இரண்டு துண்டுகளும் பெரிதாகிக் கொண்டே வந்தன.

உருவங்கள் பாதி பாதியாகத் தெளிவில்லாது பிம்பங்களாக மாறி மாறி அசைந்தபடி கண்ணுக்குள் வந்து போயின.

பயங்கரமாக இருந்தது.

'ஓ!' என்ற அலறலுடன் விழித்தாள் வெண்ணிலா எழுந்து அமர்ந்தாள். முகத்தில் முத்து முத்தாக வியர்வை அரும்பியிருந்தது.

உடல் நடுங்கியது!



அவளது அலறல் சத்தம் பக்கத்து அறையில் கேட்டது போலும்.

'வெண்ணிலா!' என்று அழைத்தான் தினகரன்.

'அத்தான்!' என்று மறுமொழி கொடுத்தாள்.

'என்ன... சத்தம்!' என்றான்.

'ஒன்றுமில்லே! கனவு! என்றாள்.

'ஓ! என்று அமைதியானான்.

தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளவே சற்று நேரம் ஆகியது.

'என்ன விதமான கனவு இது!' என்று பயந்து போனாள்.

அவள் உள் மனது சொன்னது!

'போட்டோவை அப்படி இரண்டு துண்டாகக் கிழித்துப் போட வேண்டுமென்றால் மனதில் எவ்வளவு வெறுப்பு இருக்க வேண்டும். கொஞ்சம் அன்பிருக்கிறது என்று தெரிந்தாலும் அதை வைத்துக் கொண்டு வாழ்நாள் முழுவதையும் ஓட்டலாம். ஆனால், இந்த வெறுப்பை எத்தனை நாளைக்கு சுமப்பது?' ஏன் இன்னொரு மனது கேட்டது.

'உனக்கு அவன் மீது அன்பு இருக்கிறதா. இல்லையா? என்பதை அலசிக் கொள். உனக்கு அன்பு இருக்குமானால் எதை வேண்டுமானாலும் எத்தனை நாள் வேண்டுமானலும் சகித்துக் கொள்ளலாம். ஜெயித்துக் காட்டலாம்... தெரியுமா?'

'ஒரு வேளை தான் பிரிந்து போனால்தான் அவருக்கு மகிழ்ச்சியென்றால் என்ன செய்வது? பெற்றோர்கள் எப்படி நொந்து போவார்கள்? மாமனார், மாமியார் என்ன நினைப்பார்கள்? தான் அவன் மேல் வைத்திருக்கிற பிரியத்தைத் தினகரன் ஏன் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறான்' என்று கோபமாக வந்தது.

எழுந்து முகம் கழுவினாள்.

சற்று ஆசவாசப் படுத்திக் கொண்டாள். அதே நேரம் தினகரனின் குரல் கேட்டது.

'வெண்ணிலா!' என்று.

எழுந்து போய் அவன் படுக்கையருகில் மௌனமாக நின்றாள்.

'என்ன ஆச்சு?' என்றான் தினகரன்.

'கனவு!' என்றாள். கட்டில் விளிம்பைக் கைகளால் நீவிக் கொண்டே!

'என்ன கனவு!' என்றான்.

சொன்னாள். அவன் முகத்தில் எந்த உணர்வும் காட்டாமல் கேட்டுக் கொண்டான்.

பிறகு கிண்டலாகச் சிரித்தான்.

'பாத்தியா! ஃபிரஸ்ட்ரேஷன் ஆரம்பிச்சிருச்சு!' என்றான்.

அந்த நேரம் அவன் சட்டையைப் பிடித்து 'ஏன்டா... இப்படிப் படுத்தறே!' என்று கதற வேண்டும் போல் இருந்தது.

வெறித்துப் பார்த்தாள். 'அதெல்லாம்.... ஒன்றும் இங்கே வேலையாகாது' என்பது போல் பார்த்தானே தவிர அலட்டிக் கொள்ளவில்லை.

'இந்த மாதிரி நேரங்கள்ல' உனக்கு... நான்.. எனக்கு... நீ... என்று பேசறதெல்லாம்... சினிமாவில் நடக்கும்.. வாழ்க்கையில் இல்லை!' என்றான்.

'ஏற்கனவே கனவு கண்டு பயந்து போயிருக்கேன்... அதுல நீங்க வேற' என்று முணுமுணுத்தாள்.

'என்ன?! உனக்கு ஆறுதல் சொல்லச் சொல்றியா? நாளைக்கே எனக்கு சரியாயிரும்னு பொய் சொல்லச் சொல்றியா? அப்படிச்



சொன்னா அது எப்படியிருக்கும் தெரியுமா? குருடனுக்
நொண்டி வழி காட்டற மாதிரித்தான் இருக்கும்' என்றான்.

அவள் ஏதும் பேசத் தெரியாமல் வெறித்துப் பார்த்த
கொண்டு நின்றாள்.

'என்னய்யா... தப்பாய் சொல்றே! நீ வேண்ணா நொண்டிய
யிருக்கலாம். நான் ஒன்றும் குருடியில்லேங்கறயா? யு அ
பிளைண்ட் டு ரியாலிடி!' புரியுதா?' என்றான்.

அவள் சட்டென்று திரும்பித் தன் அறையை நோக்கி நடந்தா

அவன் கிண்டல் சிரிப்பு அவளைத் தொடர்ந்தது. 'என்கிட்
இருந்து, என் பேச்சில் இருந்து வேண்ணாத் தப்பி ஓடலா
ரியாலிட்டியில இருந்து ஓட முடியாது' என்றான்.

அவள் திரும்பிப் பார்க்கவில்லை.

அவள் களைப்புடன் படுக்கையில் சாய்ந்தாள். அவ
முகத்திலும் எல்லையில்லா வேதனை படிந்திருந்தது.

கண்கள் கலங்கின. உதடுகள் துடித்தன. பிடிவாதம
உணர்வுகளை நிலைப்படுத்தினாள்.

கண்களை அழுந்த மூடிக் கொண்டாள். ஆனால், அவனு
உறக்கம் வரவில்லை.




'அப்பா!' என்று வந்து நின்றான் சுதாகரன்.

'வாப்பா!' என்றார் வேலுசாமி. 'உட்காரு சுதா!' என்றார்.

அமர்ந்தான் 'அப்பா! அண்ணன் ரூமில...' என்று முதல் நாள் தான் கண்ட காட்சியை விவரித்தான்.

'அம்மா... சொன்னாப்பா! உங்க அண்ணனுக்கு டிப்ரஷன் வரும். கோபதாபம் அதிகமாக இருக்கும்னு டாக்டர் சொன்னாருப்பா... அதான் என்ன பண்றதுன்னு தெரியாம. முழிச்சுகிட்டிருக்கேன்...' என்றார் வேலுசாமி.

'அப்பா... கோப தாபம்... வரலாம். ஆனா... இது கொடுமைப்பா. ஏற்கனவே அண்ணி நிறைய கனவுகளோட இங்க வந்திருப்பாங்க. அதுலயே பெரிய அடி விழுந்திருச்சு. மேல மேல அண்ணன் இப்படி சித்ரவதை செஞ்சா என்னப்பா நியாயம்?' என்றான் வருத்தத்துடன்.

'சுதா! உங்க அண்ணனோட இயல்பு இப்படிப்பட்டதில்லே. எனக்கே ஒன்னும் புரியலே. நிலாகிட்டே பேசவுமா...?' என்றார்.

'அண்ணி, ஒன்னுமே நடக்கலேம்பாங்க... பாரத நாட்டுப் பெண்களாச்சே. கற்பின் திலகங்கள்...' என்றான் கடுப்புடன்.

மேலும் சற்று நேரம் பேசினார்கள். 'சரிப்பா... நான் உங்கண்ணன் கிட்டே பேசறேன்' என்றார்.

அதற்குப் பிறகுதான் சுதாகரன் நிம்மதியாய்க் கிளம்பிப் போனான்.

∴ ∴ ∴

'இந்தா.. இதை டைப் பண்ணு!' என்று ஏதோ பேப்பரை வீசினான் தினகரன்.

நிலா அமைதியாக வாங்கிக் கொண்டாள்.

கம்ப்யூட்டரில் டைப் செய்து பிரிண்ட் அவுட் எடுத்துக் கொடுத்தாள்.

படித்துப் பார்த்தான். ஏதாவது தவறிருந்தால் திட்டலாம் என்று பார்த்தான் போலும். எதுவும் கிடைக்கவில்லை.

'சரி... போ!' என்று அனுப்பி விட்டான்.



'போ! வா!' என்று ஒற்றைச் சொற்களை அவன் உதாசீனமாக வீசுவதைக் கேட்டு அவளுக்கும் கோபம் வரும். அவளுக்கு மட்டும் உடல் நலம் சீராக இருந்திருந்தால் கண்டிப்பாக எதிர்ப்புக் காட்டியிருப்பாள். ஆனால், எதுவும் பேசுவதற்கு வழியில்லாதவள் போல் வாங்கிக் கொண்டாள்.

கதவு வரை போனவளை அழைத்தான். 'ஏன்.. நிலா... இப்படிப் போ!' 'வா' ன்னு உதாசினம்மா நடத்தறனே... உனக்குக் கோபம் வர்லையா?' என்றான் சற்றே எரிச்சலோடு.

அவள் அவனை நேராகப் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

'நீங்கள் என்னைக் கோபப்படுத்தணும்னே கஷ்டப்பட்டு முயற்சி பண்றீங்கன்னு தெரிஞ்சதுக்கப்புறம் கோபம் வர்லே. சிரிப்புத்தான் வருது!' என்றாள்.

அவன் திகைத்துப் போய்ப் பார்த்தான்.

'நா பக்கத்துலதான் இருக்கேன். லேசாக் குரல் கொடுத்தீங்கன்னா போதும். வந்துடுவேன்' என்றாள். நகர்ந்து விட்டாள்.

அவன் அடிவாங்கியவன் போல் அமர்ந்து விட்டான். பிற்பகலில் அப்பா வந்தார்.

'நிலா.... நீ கொஞ்ச நேரம் போம்மா!' நா தினகரன் கிட்டே பேசணும்!' என்றார்.

அவளும் சரியென்று முன்னால் போனாள்.

வேலுசாமி மகனைத் தீர்க்கமாகப் பார்த்தார். 'தம்பி! என்ன நடக்குது இங்கே?' என்றார்.

'என்ன நடக்குது?' என்றான் அவன் அதே குரலில்.

'தினம் ஒரு கப்பும் சாஸரும் உடையுது. யார் மேல கோபம்ப்பா... உனக்கு!' என்றார்.

அவன் சற்று நேரம் மௌனமாக வேறெங்கோ பார்த்தபடி இருந்தான். பிறகு நீண்டதொரு பெருமூச்சு விட்டான். அப்பாவை நேரடியாகப் பார்த்தான். அப்பாவின் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொன்னான்.

அப்பாவின் முகம் மலர்ந்தது.

'நினைச்சேன் இப்படித்தான் ஏதாவது இருக்கணும்னு நினைச்சேன்' என்றார். எழுந்தார்.

'சரிப்பா! அந்தப் பொண்ணுகிட்டே நான் பேசறேன்!' என்றார்

பேசினார். ஆனால் எதிர்ப்புறம் இருந்து அப்படி ஒரு எரிமலை வெடிக்கும் என்பது அவர் எதிர்பாராதது.

* * *

'நான் என்ன பணத்துக்காக வந்தவளா? தாலி கட்டிட்டு வந்தவ. வாழ்க்கையில சுகதுக்கங்கள்ல ஒண்ணா இருக்கோம்னு அக்கினி சாட்சியா தாலி கட்டிட்டு வந்தவங்க. என்னைப் பார்த்து இப்படிக் கேட்டுட்டீங்களே!'

என்று தேம்பியழுகிற மருமகளை மாமனாரும், மாமியாரும் கழிவிரக்கத்துடன் பார்த்தார்கள்.

'அம்மா! அவன் சொல்றதுலயும் நியாயம் இருக்கு. வயசுப் பொண்ணு வாழ்நாள் முழுக்க கைகால் வராதவனோட வாழ்க்கை நடத்த முடியுமா? நான் அவ மேல வச்ச பிரியம் உண்மைன்னா, அவ நல்லாயிருக்கணும்னு நினைக்கணுமில்லே. நல்ல விதமா சொன்னா அவ கேட்க மாட்டாப்பா. அதுக்குத்தான் வெறுப்பேத்தறேங்கறான்...' என்றார்.

அவள் வெறித்துப் பார்த்தாள்.

'சில விஷயங்கள் பேசறதுக்கு நல்லா இருக்கும்ப்பா. ஆனா, வாழ்க்கை முழுக்க அவ ஏம்பா... சுமை.. சுமக்கணும்னு கேக்கறான்.



இப்போதும் நிலா அழுதாள்.

'அழாதம்மா!' என்றார் மாமியார்.

'இல்லைங்கத்தே! இது சந்தோஷக் கண்ணீர். தனக்கு இத்தனை பிரச்சினை இருக்கிறப்ப... தன்னைப் பத்தி நினைக்காம... என்னைப் பத்திக் கவலைப்படறாரே! இதுக்கு மேலே என்ன வேணும்' என்று அழுதாள்.

'மாமியாரும், மாமனாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். இப்போது நிலா ஒரு முடிவோடு எழுந்தாள்.

'சரி...விஷயத்தை என்கிட்டே சொல்லீட்டீங்க... இல்லே... நான் பாத்துக்கறேன்... விடுங்க' என்றாள்.

'அம்மா.. சண்டை எதுவும் போடாதம்மா?' என்றார் ராஜேஸ்வரி தயக்கத்துடன்.

'சண்டையா!' என்று சிரித்தாள் நிலா கண்களில் கண்ணீரைத் துடைத்தபடி.

'இல்லே! நான் வேற விதமா டீல் பண்ணிக்கறேன்' என்றாள்.

புயல் போல எழுந்தாள். நேராக அவன் அறை நோக்கிப் போனாள்.

* * *

டி.வியில் ஏதோ கார்ட்டூன் நிகழ்ச்சி ஓடிக் கொண்டிருந்தது. சிரிக்கவே தோன்றாமல் இறுக்கமான முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் தினகரன்.

வேகமாக உள்ளே வந்தாள் வெண்ணிலா. அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

'ரொம்பக் கெட்டிக்காரன்னு நினைப்பாய்யா... உனக்கு? தியாகியா நீ? என்னைப் பேக் பண்ணி அனுப்பிட்டுப் புது

வாழ்க்கை அமைச்சுக்க செய்யப் போறியாக்கும்... நான் கேட்டனா.. உன் கிட்டே!' என்று வெடித்தாள்.

அவன் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அதற்காக டென்ஷனாகி விடவும் இல்லை. அவளை அழப் பார்த்துக் கொண்டு சொன்னான்.

'நான் சொல்றதைப் புரிஞ்சுக்கோ...' என்றான். 'எள்ளுதான், எண்ணெய்க்குக் காயுதுன்னா... அந்த இன்னொன்னும் எதுக்குக் காயணும்!' என்றாள்.

'நீங்க ஒன்னும் எள்ளும் இல்லை... நான் அந்த இன்னொன்றும் இல்லே.. புரியுதா? அப்படியெல்லாம் கஷ்டத்தைக் கண்டா ஓடிப் போற ஜாதி நான் இல்லே! நான் தெரியுதா? ஸ்டாப் டீலிங் மீ.. மிஸ்டர். தினகரன். அப்புறம் யு வில் ஃபேஸ் தி காஸிக்வன்ஸஸ்' என்றாள் மிரட்டலாக.

அவன் பதில் சொல்லுமுன் மீண்டும் தன் அறைக்குப் போனாள். தனது அறைக்கதவை அறைந்து சாத்தினாள்.

அவன் கண்களில் முதலில் திகைப்பும், பிறகு லேசாகச் சிரிப்பும் தோன்றியது.

அவன் வசதியாகச் சாய்ந்து அமர்ந்து சானலை மாற்றினான்.

காத்திருந்தான்!

⁂ ⁂ ⁂

ஒரு மணி நேரம் போயிருக்கும்!

மெல்ல அவளது அறைக் கதவு திறந்தது. சிவந்து போன முகத்தோடு வெளியே வந்தாள்.

அவன் சுவாரசியமாகப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். தயக்கத்துடன் அவன் அருகில் வந்தாள். நின்றாள்.



அவன் புன்னகையுடன் 'உட்காரு! நிலா!' என்றான்

அமர்ந்தாள். 'பாரும்மா! நான் சொல்றதை சரியாப் புரிஞ்சுக்க... நான்தான் உன்னைப் பிரியப்பட்டுக் கல்யாணம் செஞ்சுகிட்டேன். உன்னைப் பொறுத்தவரை இது அரேன்ஜ்ட் மேரேஜ்தான். நல்ல வேளையா நமக்குள்ளே எதுவும் நடக்கலே. இந்த ஸ்டேஜ்ல பிரிஞ்சு போறதுதான் சேஃப்' என்றான்.

'அதிருக்கட்டும்... எனக்கு இதுக்கு மட்டும் பதிலை சொல்லுங்க... நான் ராசியில்லாதவங்கறதை நீங்க நம்பறீங்களா!' என்றாள்.

அவன் சிரித்தான். 'ஐ டோன்ட் பிலீவ் தட். அந்த மாதிரி மூட நம்பிக்கையெல்லாம் எனக்கு இல்லே. ஆனா, உன் லைஃபை மட்டும்தான்' என்று மேலே பேச அவள் கையை நீட்டித் தடுத்தாள்.

'அது ஒன்னு போதும்.' என்றாள். பிறகு சொன்னாள்.

'வாழ்க்கைன்னா... சந்தர்ப்ப வாதம் இல்லைங்க... இப்ப நீங்களே ஹெல்த்தியா இருந்து என்னை டார்ச்சர் பண்ணினீங்கன்னா, அந்த மாதிரி நான் பிரிஞ்சு போற முடிவை எடுக்கலாமாயிருக்கும். ஆனா இந்த மாதிரி நேரத்துல... நான் உங்களை விட்டுப் போக மாட்டேன். நீங்க மட்டும் நல்லாயிருந்திருந்தா... என்னை எப்படி வச்சிருந் திருப்பீங்க...? ஒருவேளை... எனக்கு இப்படி ஆகியிருந்தா... என்னை விட்டு விலகியிருப்பீங்களா?' என்றாள்.

அவன் இறுகிய முகத்துடன் 'இல்லை!' என்றான். 'அப்புறம்...!' என்னை மட்டும் ஏன் விலக்கப் பாக்கறீங்க...' என்றாள்.

அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். கண்ணீர் பெருக்கினாள்.

'ஃபிஸிகல் ரிலேஷன்ல மட்டும்தான் சந்தோஷமா? நட்புலயும், கூட இருக்கறதுலயும் கூட சந்தோஷம் இருக்குங்க...' என்றாள்.

அவன் பெருமூச்செறிந்தான். மெல்ல அவள் தலையைக் கோதிக் கொடுத்தான். பிறகு சொன்னான்.

'ஆனா... ஒரு கண்டிஷன்' என்றான்.

'சொல்லுங்க!' என்றாள்.

'எப்பவாவது இந்த வாழ்க்கையில சலிப்பு ஏற்பட்டா மறைக்காம என்கிட்டே சொல்லணும். எந்த பாயின்டலயும் நீ விரும்பினா வேற வாழ்க்கை ஏற்படுத்திக்கலாம். அதுக்கு ஒத்துகிட்டா... நீ இங்கே இருக்கலாம்' என்றான் தினகரன்.

'போவா நீ திருந்தவே மாட்டியா' என்பது போல் பார்த்தாள்.

அவனும் அசராமல் பார்த்தான். அவள் பெருமூச்சு விட்டாள்.

'சரி..! சொல்றேன்' என்றாள். பிறகு தொடர்ந்து,

'ஆனா... அதுக்காக நீங்க எந்த ட்ரிக்கும் பண்ணக் கூடாது. எந்த டிராமாவும் பண்ணக்கூடாது...!' என்றாள் அவளும் நிபந்தனையாக.

அவன் சிரித்தான்.

'அக்ரீட்'! என்றான்.

'சரி... வி... கேன்... பி... பிரண்ட்ஸ். காண்ட் வீ?' என்றாள். அவன் புன்னகைத்தான். 'டிரை பண்றேன்' என்றான்.

அவள் சிரித்தாள். 'நட்புக்கெல்லாம் ஒன்றும் டிரை பண்ண வேண்டிய அவசியமேயில்லை. ரெண்டு விஷயம் மட்டும் ஞாபகம் வச்சுக்குங்க... நீங்க நினைக்கிற அளவுக்கு நான் ஒன்னும் சோகமா நடமாடல்லே... எப்படியாவது... இந்த சூழ்நிலையை நீங்க ஜெயிக்கணும். அதுக்கு நாம எந்த விதமா ஹெல்ப் பண்ணலாம்னு தான் யோசிச்சுகிட்டிருக்கேன்.' என்றாள்.

அவன் கண்களில் வியப்புத் தெரிந்தது.



'ஆமாங்க... இப்ப சூழ்நிலையை ஜெயிக்கறதுதான் முக்கியமே தவிர. நம்மை நாம ஏமாத்திக்கறது இல்லே!' என்றாள்.

'ஓ.... கே! டீச்சர்' என்றான் சிரித்தான்.

அவளும் கலகலவென்று சிரித்தாள்.

'நிலா! அப்பா ஒண்ணு சொன்னாங்க... தெரியுமா! என் ஜாதகத்துல பெரிய தோஷமாம். முடிஞ்சிருக்க வேண்டிய ஆளாம். உன் ஜாதகம் பலத்தாலதான் தப்பிச்சேனாம்...' என்றான்.

அவள் புன்னகைத்தாள்.

'எனக்கு அதிலயெல்லாம் பெரிய நம்பிக்கையெல்லாம்... இல்லே! ஆனா. அவங்க அப்படி நம்பற வரைக்கும் அவங்க யாரும் உன்னை அப்படியெல்லாம் பேச மாட்டாங்க இல்லெ!' என்றான்.

'யார் எதை நம்பினாலும், நம்பாவிட்டாலும் நான் நகர்றதாயில்லை' என்றாள்.

'யப்பா! சரியான விடாக்கண்டியா இருப்பே போல இருக்கே!' என்றான்.

அவள் சிரித்தாள்.

சற்று நேரம் கலகலப்பாகப் பேசிக் கொண்டார்கள். சிரித்தார்கள்

அதே நேரம்! மேலே வந்த சுதாகரன். கலகலவென்ற சிரிப்பைக் கேட்டு ஒரு நிமிடம் திகைத்தான்.

'இதோடா! ஒரு நிமிடம் எரிமலை வெடிக்கிறது. மறு நிமிட பனிக்கடலாமாறிருது' என்று சிரித்துக் கொண்டான்.

கீழே போய்ப் பெற்றோர்களிடம் சொன்னான். ராஜேஸ்வ கன்னத்தில் கைவைத்துக் கொண்டார்.

'பரவாயில்லைங்க...! மருமக கெட்டிக்காரிதான். என்ன மாயம்
செஞ்சாளோ... தெரியலை!' என்று சிரித்தார்.

மேலே மறுபடியும் சிரிப்பலை கிளம்பியது. 'ஆமா! எங்க தமிழ்
மேடம் என்னை' குதிரன்னு 'கூப்பிடுவாங்க.... நீலாவை'
நெடியன்னு 'கூப்பிடுவாங்க....' என்றாள்.

'ஏன் அப்படி!' என்றான் தினகரன்.

'அது அவ பேரு நீலா. என்பேரு... நிலாவா அதனால...' என்றாள்

சிரித்தான்.

'காலேஜ் டேஸ்ல கலாட்டவாத்தான் இருந்திருப்பீங்க... போலே'

'காலேஜ் டேஸ்ல கலாட்டவாத்தான் இருந்திருப்பீங்க... போலே'
என்றான். 'அதெல்லாம். நிறையக் கதை இருக்கு. அதை
யெல்லாம்.... இன்னொரு நாளைக்கு சொல்றேன்' என்றாள்.

'சரி... தூங்குங்க...!' என்றாள். அவன் வசதியாகப் படுத்துக்
கொள்ள உதவி செய்தாள்.

மெல்ல அவன் நெற்றியில் இதழ் பதித்தாள் 'குட்நைட்'
என்றாள்.

தனது அறைக்கதவு வரை போனாள். திரும்பி வந்து.

'தினகரன்.... இனிமே டிராமா போடறதையெல்லாம் விட்ருங்க.
உங்களுக்கு பினிஷ் வர்ற அளவுக்கு டிராமா போட வர்லே. தட்
வாஸ் எ வொஸி அட்டெம்ப்ட்!' என்றாள்.

அவன் சிரித்தான்.

'ஹேய்! போய் இன்னைக்காவது நிம்மதியாத் தூங்கு' என்றான்.

அவன் செல்லை எடுத்து அருகில் வைத்தாள்.



அறைக்குப் போனவுடன் வெண்ணிலா சிந்தனையில்
ஆழ்ந்தாள்.

'என்னதான் சரிசெய்து கொண்டாலும் ஒரே ஒரு
பிரச்சினைதான். தீர்ந்திருக்கிறது. இருவரும் ஒருவருக்கொருவர்
பிரச்சினையாக இருக்கிற நிலையை மட்டுமே கடந்திருக்கிறோம்.
இன்னும் அவர் உடல் நிலைக்கேற்ப வாழ்க்கையை அமைத்துக்
கொண்டு வாழ்க்கையைச் சந்திக்க வேண்டிய பெரிய பிரச்சினை
காத்திருக்கிறது என்பது இருவருக்குமே புரிந்திருந்தது.




'உங்கிட்டயும் சண்டைக்கு வந்தானா?
என்ன?' என்றான் செல்வம்.

'ஆமாங்கறேன். கிறுக்குப் பய புள்ளே
நாளைக்கு மணவறையில தாலி கட்டிக்கப் போற
புள்ளகிட்டே போயி. நான் உன்னைக் கல்யாணம்
பண்ணிக்கலாம்னு இருந்தனேன்னு கேட்டிருக்
கான். பாரு. துப்புக் கெட்ட பய!' என்று பொரிந்தார் சங்கரராமன்.

'சரி.... சரி... விடுங்க.... மாமா! அவனுக்குத் தெரிந்தது
அவ்வளவுதான் கூடவே வளர்ந்த பொண்ணு அவளைப் போயி
கட்டிக்கறேன்னு கேக்கறான் பாருங்க' என்றான்.

'அது சரிப்பா! அத்தை மகளைக் கட்டிக்கறது நம்ம ஊர்ல
வழக்கம்தான்னு வை. ஆனா. அதுக்காக அவளுக்கும் பிரியம்
இருக்கணுமில்லே. சரி! கட்டிக் குடுத்தா வச்சுக் காப்பாத்தறதுக்கு
வக்கிருக்கணும் இல்லே! எதுவுமே இல்லாம.. கல்யாணத்தை
நிறுத்தறேங்கறான்னா' என்று பொரிந்தார்.

ராஜேஸ்வரியின் கண்கள் கலங்கின.

'அத்தே! கவலைப்படாதீங்க. வெண்ணிலா ரொம்ப நல்லவ. அவளுக்குக் கடவுள் சோதனைகள் குடுத்தாலும் ஜெயிப்பா' என்றான் ஆறுதலாக.

'நீயாவது அடிக்கடி போய்ப் பாத்துட்டு வாப்பா!' என்றார் சங்கரராமன்.

'என்ன சொல்லுங்க! இந்தக் கல்யாணத்துல பொறாமை புடிச்சுப் பேசனவங்க பல பேருக்கு. இப்ப, வெறும் வாய்க்கு அவல் கிடைச்ச மாதிரி இருக்கு' என்றார் நாகேஸ்வரி.

திரும்ப வரும்போது செல்வம் சிந்தனையிலாழ்ந்தான்.

அவ்வளவு தூரம் திருமணத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தவன், கல்யாணத்துக்குப் பிறகு எங்கே போனான்? ஆளையே காணவில்லை. மாப்பிள்ளைக்கு வேறு முதலிரவுச் சடங்கு வைத்திருக்கிற நாள் பார்த்து ஆக்ஸிடெண்ட் ஆகிறது. அதற்கும் இதற்கும் தொடர்பு இருக்குமோ?'

அதே போல அங்கே இன்னொரு மனத்திலும் ஓடிக் கொண்டிருப்பதை அவன் அறியவில்லை.

∴ ∴ ∴

'என்னது நிலா, ஒரே சத்தமா இருக்கு' போர்டிகோவில ஏதாவது வேலை நடக்குதா?' என்றான் தினகரன்.

'ஆமாங்கத்தான், மாமா ஏதோ ஆட்களை வரச்சொல்லி இருக்காரு. ஏதோ போனது வந்தது எல்லாம் ரிப்பேர் பாப்பாங்க போல இருக்கு' என்றாள் வெண்ணிலா.

'நிலா... வீட்ல என்கூடவே அடைஞ்சு இருக்கே. எங்கயாவது போயிட்டு வாயேன்' என்றான் தினகரன்.



'எனக்கு உங்களை விட்டுட்டு எங்க போயும் நிம்மதியாய் இருக்க முடியாதுங்க. கோவிலுக்கு வேணுமானா இன்னைக்குப் போலாம்னு நினைக்கறேன்' என்றாள்.

'சரி! சுதாவைக் கூட்டிட்டுப் போயிட்டு வா!' என்றான்.

சுதாகரன் கோவிலுக்கு அழைத்துப் போனான். ஆனால் உள்ளே வரவில்லை.

'நீங்க போயிட்டு வாங்கண்ணி!' என்று வெளியே நின்று கொண்டான்.

ஆழ்ந்து கேட்க ஆரம்பித்தாள் வெண்ணிலா?????

∴ ∴ ∴

ஈசுவரன் கோவிலில் மனமுருகி வேண்டிக் கொண்ட பின் வெளியே வந்தாள். சுதாகரன் அப்போதுதான் அதைக் கவனித்தான்.

ஏதோ ஒரு உருவம் சற்று தொலைவில் நின்று தங்களையே பார்த்துக் கொண்டிருந்ததை. ஒரு ஓரமாக நின்றபடி தனது உருவம் முழுமையாகத் தெரியாதபடி நின்று பார்த்துக் கொண்டிருந்தது.

'சே! அண்ணனுக்கு இப்படி அடி பட்டாலும் பட்டது! பெரிய துப்பறியும் மூளையாட்டம் நினைப்பாயிருச்சு!' என்று தன்னைத்தானே உலுக்கிக் கொண்டான்.

சிரித்துக் கொண்டான்.

'என்னங்க சுதா!' என்றாள்.

'இல்லே.... அங்க பாருங்க! அந்த ஆள்.. என்னமோ... நம்மளையே பாக்கற மாதிரி ஒரு எண்ணம்' என்று கை காட்டினான்.

அந்த ஆள் சட்டென்று திரும்பி நடந்தான். வெண்ணிலா பார்க்கும் போது அங்க யாருமிருக்கவில்லை.

'யாரையும்... காணமே!' என்றாள்.

'ஓ...' என்றான் சுதாகரன். அதற்கு மேல் வளர்த்தவில்லை.

காரில் வரும்போது அண்ணியிடம் சொன்னான். 'அண்ணி, அண்ணனுக்கு இந்த மாதிரி ஆனதுக்கு... இதுவே ஃபாரினா யிருந்தா... முதல் வேலை விவாகரத்துதான்...' என்றான்.

'அப்படியா... சொல்றீங்க? அப்ப... வாழ்க்கைன்னா என்னன்னு புரியாதவங்கன்னு அர்த்தம்' என்றாள் வெண்ணிலா.

சுதாகரன் அதோடு நிறுத்திவிட்டான் என்றுதான் நினைத்தாள். ஆனால் அவன் அதோடு நிறுத்தவில்லை.

∴ ∴ ∴

சீரான மூச்சு விட்டபடி உறங்குகிற கணவனின் நெற்றியில் இதழ் பதித்து விட்டு நிமிர்ந்தாள் வெண்ணிலா.

அறைவாசலில் சுதாகரன் நின்றான்.

அவள் முகம் சிவந்தது.

'டிஸ்டர்ப் பண்ணீட்டனோ?' என்றான்.

'இல்லல்லே... வாங்க!' என்றாள் மேலும் சிரித்த முகத்துடன்.

'அண்ணி, சும்மா... உங்களோட கொஞ்ச நேரம் பேசிகிட்டிருக் கலாம்னு வந்தேன்' என்றான்.

'ஓ... பேசலாம்... வாங்க!' என்று ஹாலுக்கு வந்தாள்.

'அண்ணி! மனசுக்குப் பிடிச்சவங்களை பிரிய நேர்றது எவ்வளவு கொடுமை இல்லே!' என்றான்.

அவன் கண்களில் ஏதோ சோகம் தென்பட்டாற் போல் தோன்றியது.



'அண்ணி! உங்களுக்கு எங்க குடும்பக் கதை தெரியாதில்லே அப்பா.. ஒரு மூந்நூறு பேர் வேலை செய்யற மாதிரி ஒரு சின்ன பனியன் கம்பெனி வச்சிருந்தாரு. அண்ணன் அதைப் பெரிசாக்கினாரு. என்னை சென்னையில ஒரு கல்லூரிக்கு அனுப்பிப் படிக்க வச்சாரு. ரொம்ப செல்லமாக வச்சுக்குவாரு' என்று ஆரம்பித்தான்.

∴ ∴ ∴

'ஹாய் ரீனா!' என்றான் சுதாகரன்.

'ஹாய்! சுதா!' என்று வந்தாள் ரீனா.

'ஹேய் ! யு ஆர் லுக்கிங் க்யூட்!' என்றான்.

'ஓ! தாங்க்ஸ்'! என்றாள்.

சுதாகரின் நட்பு வட்டங்களில் அவளும் ஒன்று. அவள் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு காரில் வந்து இறங்கினாள்.

பகட்டான உடைகள் அணிந்து வருவாள். அதனால் அவள் பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருக்க வேண்டுமென்று அவன் கணிப்பு.

தினகரன் அவனைச் சென்னையில் கல்லூரியில் சேர்க்கும் போதே சொல்லியிருந்தான்.

'தம்பி! சென்னை ஒரு மாதிரியான ஊர். பணக்காரக் குடும்பத்துப் பையன்னு காட்டிக்காதே. யு கேன் என்ஜாய் லைஃப். ஆனா, எந்த வில்லங்கத்துலயும் மாட்டிக்காதே!' என்று.

அதனால் சுதாகரன் தன் வசதியைப் பற்றிப் பெரும்பாலும் சொல்லிக் கொள்ள மாட்டான்.

'சின்னதா ஒரு பனியன் கம்பெனி' என்று மட்டும் சொல்லியிருந்தான்.

ரீனாவை அவனுக்கு மிகவும் பிடிக்கும். அவளோடு சுற்றுவதில் அவனுக்குப் பிரியம்.

அவளுக்கு அவன் தனது நண்பர்களில் முக்கியமானவள்.

'ஹாய் ரீனா! உன்னை ரெண்டு நாளாக் காணலே' என்றான்.

'சதாவோட டூர் போயிருந்தேன்' என்றாள்.

'ஓஹோ! நீ பாட்டுக்கு ஜென்ட்ஸோட டூர் போனா உங்க வீட்ல ஒன்னும் சொல்ல மாட்டாங்களா?'

'நாங்கள்ளாம் ரொம்ப சோஷியலாப் பழகுவோம்' என்றாள்.

அந்த முறை வீட்டுக்குப் போன போது அண்ணன் கேலி செய்தான்.

'என்னடா! காலேஜ்ல கேர்ல் ஃப்ரெண்ட்ஸ் அதிகம்னு கேள்விப் பட்டேன்.'

சுதாகரனும் சிரித்து விட்டுப் போவான் என்று எதிர்பார்த்தான் மாறாக அவன் முகம் சிவந்தது கண்டு யோசனையில் ஆழ்ந்தான்.

மெதுவாக விவரம் வரவழைத்தான்.

'அண்ணா! ரீனான்னு ஒரு பொண்ணு!' என்று ஆரம்பித்து சொன்னான்.

'சதா! ஆறு மாசம் ஒரு வருஷத்துலயெல்லாம் ஒரு முடிவுக்கு வந்தரக் கூடாது. கொஞ்சம் யோசித்து நிதானமா முடிவுக்கு வா. ஆனா,' வசதியாவன்னு மட்டும் எந்தக் காரணத்துக்காகவும் சொல்லாதே' என்றான்.

'சரிங்கண்ணா!' என்றான்.

∴ ∴ ∴



விடுமுறை முடிந்து வந்தவுடன் ரீனா மெல்ல அவனிடமிருந்து விலகுகிறாற்போல் தெரிந்தது.

மாறாக சிவப்பா ஒல்லியாக புதிதாக இரண்டாமாண்டில் வந்து சேர்ந்தவன் ஒருவனுடன் நெருங்கிப் பழகுகிற மாதிரித் தெரிந்தது.

'சுதாகரன் ஒரு நாள் கேட்டான்' ரீனா ராகேஷ் கூடத்தான் இப்பல்லாம் ரொம்ப நெருக்கமா?' என்றான்.

அவள் அதற்குப் பதில் சொல்வதற்கு மாறாக 'யு நோ... ராகேஷ் இஸ் வெரிரிச். ஹி வான்ட்ஸ் டு மேரி... மீ?' என்றாள்.

சுதாகரன் மனம் வாடிப் போனான்.

'ஓ! நீ என்ன சொன்னே?!' என்றான்.

'பாரு! சுதா... லைஃப்ல பணம் ரொம்ப முக்கியம் தெரியுமா ராகேஷ்கிட்ட இருக்கற பணத்துக்கு அவன் என்னையெல்லா மேரேஜ் பண்ணிக்கறேன்னு சொல்றதே... பெரிய விஷய என்றாள்.

இரண்டு மூன்று முறையாக போனில் உற்சாகமில்லாம பேசுகிற தம்பியிடம் நைசாகப் பேசி விஷயம் கறந்தான் தினகர பிறகு சொன்னான்.

'சுதா! உனக்கு ரீனாவைப் பிடிச்சிருக்கலாம். ஆன ரிலையபிலிடி இருக்கிற மாதிரித் தெரியலியே...' என்றான்.

'அண்ணா! ஆனா அவளை ரொம்பப் பிடிக்குதே!' என்ற தம்பி கவலையாக.

தினகரன் சிந்தனையிலாழ்ந்தான்.

∴ ∴ ∴

'அண்ணா!' என்று ஆச்சரியமானான் சுதாகரன்.

கல்லூரி வாசலில் தன் தம்பிக்காக காத்திருந்தான் தினகரன்.

'ஃப்ளைட்டில வந்தேன்' என்று புன்னகைத்தான். தான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அழைத்துப் போனான்.

'தம்பி! டேய்! இந்த இளவயசுல வர்ற காதல் எல்லாம் சில நேரத்துல இன்பாச்சுவேஷன் மாதிரி ஆயிடும்' என்றான்.

'அண்ணா! ரீனா ரொம்ப அழகு!' என்றான். சுதாகரன் திரும்பத் திரும்பக் கிளிப்பிள்ளை போல தான் சொன்ன பாடத்தையே படிக்கிற சகோதரனை பார்த்தான்.

'தம்பி! உன்னோட இந்த மேட்டரை ஃபைனலைஸ் பண்ணிட்டுப் போகணும்கறதுக்காகத்தான் வந்தேன்!'

சுதாகரனுக்கு உள்ளூர சந்தோஷமாக இருந்தது. அண்ணன் தன்னுடைய ஆசையை சிறுபிள்ளைத்தனமாக எடுத்துக் கொள்ளாமல் இதற்காக வேலை மெனக் கெட்டுத் திருப்பூரில் இருந்து ஓடி வந்திருக்கிறானேயென்று. தன் எண்ணத்தை வெளியிடவும் செய்தான்.

'தம்பி! காலேஜ் டேஸ்ல இதெல்லாம் சகஜம்தான். ஆனா, எவ்வளவு டீப்பா இறங்கியிருக்கேன்னு தெரிஞ்சுக்கணுமில்லே. அந்த அளவுக்கெல்லாம் அந்தப் பொண்ணு வொர்த்தான்னு தெரிஞ்சுக்கணுமில்லே' என்றான்.

சுதாகரன் அண்ணனை ஆச்சரியமாகப் பார்த்தான்.

'டேய்! ரொம்ப ஆச்சரியமாய்ப் பார்க்காதே. தோளுக்கு மிஞ்சினாத் தோழனடா!' என்றான். சிரித்தான். உடனே சீரியஸான முகபாவத்துடன்.

'ஆனா.. இதுல மேற்கொண்டு என்னோட யோசனைகளையும் சீரியஸா எடுத்துக்கணும்' என்றான்.



சுதாகரன், 'சரிண்ணா!' என்றான்.

'சரி... நீ காலேஜுக்கு போ! இன்னைக்கு சாயங்காலத்துக்குள்ள அந்தப் பொண்ணைப் பத்தின எல்லா விஷயங்களும் என் கைக்கு வந்துடும் 'சரியா' என்றான்.

∴ ∴ ∴

அன்று மாலைக்குள்ளாகவே ரீனாவைப் பற்றிய எல்லா விவரங்களையும் சேகரித்து விட்டான்.

சற்றே கவலையில் ஆழ்ந்தான். மாலையில் சகோதரனிடம் பேசினான்.

சுதாகரனின் முகம் வாடியது. அவன் இப்படி விஷயத்தை எதிர்பார்க்கவில்லை.

'அப்படியா... சொல்றே!' என்றான்.

'ஆமாடா... தம்பி பி கேர்ஃபுல்' என்றான்.

தினகரனுக்குக் கிடைத்த விஷயங்கள் திருப்திகரமாக இல்லை.

பெண் மிகச் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவள் என்பது முதல் விஷயம். அதைக்கூட அவன் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அடுத்துக் கேள்விப்பட்ட விஷயம் கொஞ்சம் ஜீரணிக்க முடியாததாக இருந்தது.

'குடும்பமும் சரியில்லாத குடும்பம். அந்தப் பெண்ணின் தாயார் முறையாகத் திருமணம் என்றில்லாமல் அவ்வப்போது யாரோடாவது வாழ்கிறாள் என்று தெரிந்தது. அதிலும் கூட சூழ்நிலைகளால் தவறு செய்து அதற்குப் பிறகாவது ஒழுக்கமாக இருந்திருப்பார் என்றாலும் கூட தினகரன் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தான். ஆனால், வசதிகளுக்காகத் தொடர்ந்து வாழ்க்கையை விலைபேசுகிற குடும்பத்தோடு எப்படி சம்பந்தம் பேச முடியும்?

கவலையிலாழ்ந்தான்.

சகோதரனிடம் முழுமையாகச் சொன்னான்.

'அண்ணா! ரீனா அப்படியில்லை!' என்றான் சுதாகரன் பிடிவாதமாக.

தினகரன் பெருமூச்சு விட்டான். 'பாரு தம்பி, இந்த மனைக் குதிரைக்கு ஒப்பிடறாங்க. ஏன் தெரியுமா? அது நமக்கு அடங்காது. அதனாலதான், நான் இப்ப எது சொன்னாலும் உனக்குப் பிடிக்காது. ஏன்னா, உனக்கு அந்தப் பெண்ணை அவ்வளவு பிடிச்சுப் போயிருக்கு. இன்னும் ஒரு வருஷம் படிப்பிருக்கு. அந்தப் பொண்ணோட பழகிப் பாரு. அதுக்கப்புறமும் அந்தப் பொண்ணோட கேரக்டர் உனக்குப் பிடிச்சிருந்தா பாக்கலாம்' என்றான்.

சுதாகரன் மனம் மகிழ்ந்து போனான். 'தேங்க்ஸ்... அண்ணா!' என்றான்.

தினகரன் புறப்படும்போது ஸ்டேஷன் வரை வந்தான்.

'அண்ணா, நீ ரொம்ப ஸ்வீட் அண்ணா!' என்றான்.

தினகரன் சிரித்தான். ஆனால், உள்ளுக்குள் அவனுக்குக் கவலையிருந்தது.

அன்றைக்குப் பிற்பகல் சென்னை நண்பன் ஒருவர் சொன்னார்.

'வேண்டாம்... தினா! உன் தம்பியை விலகிடச் சொல்லு. அந்தப் பொண்ணோட அம்மா மட்டுமில்ல. அந்தப் பொண்ணே சரியில்லை' என்று.

தினகரன் லேசான பெருமூச்சுடன் அவனிடம் சொன்னான்.

'ஒன்னும் பண்றதுக்கில்லடா. இந்த விஷயத்துல நாம வேண்டாம்னு சொல்லச் சொல்லத்தான் பிடிவாதம் அதிகமாகும். பட்டுத் தெளியட்டும். வலியும் காயமும்தானே மனுஷனைப் பக்குவப் படுத்துது. பட்டுத் தெளிஞ்சு வரட்டும்'' என்றான்.



'அது சரி... போ! தம்பி. தம்பின்னு உருகிட்டிருக்கியே. உனக்கெப்பக் கல்யாணம்!

'பொறுப்பா... நானே அந்த ஆக்ஸிடெண்ட்டை நினைக்கப் பாக்கவே பயந்துகிட்டிருக்கேன். இப்ப ஏதோ என் பாட்டுக்கு ஃப்ரீயா இருக்கேன். அப்புறம்... ஏழு மணிக்கே வீட்ல அட்டென்டென்ஸ் குடுக்கணும்' என்று சிரித்தான்.

'இல்லல்லே... நான் என்ன கேக்கறேன்னா. உனக்குக் காலேஜ் டேஸ்ல இப்படி எதுவும் நடக்கலையா?' என்றான் நண்பன்.

'நடக்கலையே... நண்பா! நான் கொஞ்சம் டஃபான ஆளு. அதுக்குத் தகுந்த மாதிரிக் கிடைக்கலியே' என்று சிரித்தான்.

ஆனால் அவன் உள்மனது எச்சரித்தது போலவே சுதாகரன் ஒரு புதைகுழிக்குள்தான். சிக்கிக் கொண்டான். மீட்க முடியுமா? என்று தினகரனே கவலைப்படும் அளவுக்கு.




'ஹாய்! ரீனா!' என்றான் சுதாகரன் ஆவலாக.

'ஹாய்!' என்றாள் வழக்கம் போல்.

சுதாகரன் இப்போதெல்லாம் ரீனாவிடம் ஒரு வேறுபாட்டை உணர்ந்தான்.

'சுதா! ராகேஷ் எப்பேர்ப்பட்ட பணக்காரன் தெரியுமா? என்கிட்டே யெல்லாம் பழகறதே பெரிய விஷயம்' என்று வாய்க்கு வாய் ராகேஷ் புராணம்தான்.

ஒரு கட்டத்தில் 'நானும் பெரிய பணக்காரன்தான்' என்று சொல்ல வேண்டும் என்று தோன்றியது. ஆனால் கூடவே உள்மனது எச்சரித்தது.

'வேண்டாம். அண்ணன் என்னவோ காரணத்துக்காக தான் சொல்ல வேண்டாம்னு சொல்லியிருக்காங்க' என்

கட்டுப்படுத்திக் கொண்டான். கொஞ்சம் யோசிக்கவும் ஆரம்பித்தான்.

அந்த வாரம் முழுவதும் யோசித்தான். தனக்கு ஒரு பெண்ணைப் பிடிக்கிறது என்பதற்காக சென்னைக்கே அது பற்றிப் பேச வந்த அண்ணன் தவறாகவா சொல்வார்? அதிலும் தன் விருப்பத்துக்கு எப்போதுமே மதிப்புக் கொடுக்கிற அண்ணன்!

யோசிக்க ஆரம்பித்தான்.

அண்ணன் தலையெடுத்துத் தொழிலைப் பார்க்க ஆரம்பித்தவுடன் எது வேண்டுமானாலும் அண்ணனிடம்தான் அவன் கேட்பது. இரண்டு பேரும் ஜாலியாகக் கலாட்டா கூட செய்து கொள்வார்கள். ஆனால், முக்கியமான விஷயங்களில் எச்சரிக்க வேண்டுமென நினைத்தால் நாசூக்காக எச்சரித்து விடுவான்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று வரம் என்றால் அண்ணன் தனக்குக் கிடைத்தது வரம் என்று எண்ணிக் கொள்வான். அதனால் நிதானமாக அண்ணனின் அறிவுரையைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தான்.

கல்லூரிக்கு வந்து சேர்ந்த முதலாமாண்டில் இருந்த அந்தக் கள்ளமில்லாத் தன்மை இந்த இரண்டு ஆண்டுகளில் குறைந்திருந்தது. அது மட்டுமல்லாமல் தினகரன் தம்பி சென்னைக்குப் போய்ப் படிக்கிறேன் என்று கேட்டதுமே அனுப்பி வைத்ததற்கு ஒரு காரணம் உலகம் புரிய வேண்டும் என்பதுதான். இப்போது மெது மெதுவாக சிந்திக்கும் திறன். எதையும் அலசிப் பார்க்கும் திறன் பெற்றிருந்தான்.

ரீனாவைப் போன்ற எத்தனையோ பெண்களைப் பார்த்து விட்டான். ஆனால், முதன் முதலாக மனதில் ஏற்பட்ட நெகிழ்வு என்பதனாலோ என்னவோ இன்னமும் ஓரத்தில் அவள் மீது ஒரு ஈர்ப்பு இருந்தது.



எதற்கும் ஒரு முறை தன் மனதில் உள்ளதை வெளியிடுவோமே என்று நினைத்தவன் ஒரு நாள் அவளிடம் சொன்னான்.

'ரீனா! உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்!' என்று.

'தாங்க்யூ' என்றாள். பிறகு தன் பெருமையான ஒரு பார்வையுடன். அவனைப் பார்த்து சிரித்தாள்.

'அதென்னவோ சுதா! நிறையப் பேருக்கு என்னைப் பிடிக்குது' என்றாள். அவனுக்கு மண்டையில் யாரோ 'சொடேர்' என்று அடித்தாற்போல் இருந்தது.

'என்னை யாரென்று நினைத்துக் கொண்டாய்' என்று கோபப் பட வேண்டும் போல் இருந்தது. ஆனால் கட்டுப்படுத்திக் கொண்டான்.

அவள் அதே அலட்டலான சிரிப்புடன் தொடர்ந்தாள்.

'அதிலயும் ராகேஷுக்கு என்னை ரொம்பப் பிடிக்குது' என்றாள் மீண்டும்.

சுதாகரன் இறுகிய முகத்துடன் நிற்பதை ஒரு ரசனையுடன் பார்த்துக் கொண்டாள். வேண்டுமென்றே மேலும் மேலும் அவனைச் சீண்டுவது போல் ராகேஷின் பெருமையையே பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்த சுதாகரன் கடுப்பானான்.

'பார். ரீனா இனிமே ராகேஷைப் பத்திப் பேசறதாயிருந்தா... என்கிட்டே பேசாதே!' என்ற எழுந்து போனான்.

ரீனா பெரிதாக ஒன்றும் வருத்தப்பட்டுக் கொள்ளவில்லை.

சொன்னது போலவே ஒன்றிரண்டு மாதங்கள் சுதாகரன் அவளோடு பேசவேயில்லை.

கடைசி ஆண்டாக இருந்ததனால் படிப்பில் கவனம் செலுத்தினான். இன்னும் ஒரே ஒரு செமஸ்டர் பாக்கியிருந்தது.

என்ன இருந்தாலும் உள்ளத்தின் ஒரு பகுதி காலியாகவே இருந்தது போலிருந்தது. விழுங்கிக் கொண்டு நடமாடினான்.

ஒரு நாள் சகோதரனிடம் பேசும்போது தன் கவலைகளையெல்லாம் சொன்னான். 'தம்பி! நானும் உன்னோட அந்த ரீனாவைப் பத்தின எல்லா செய்திகளையும் கலெக்ட் பண்ணிகிட்டுத்தான் இருக்கேன். இப்ப வேண்ணா நீ யாருங்கறதை உன் கிளாஸ் மேட்ஸ்கிட்டே சொல்லிக்கலாம். எப்படியும் அது அவ காதுக்குப் போய்ச் சேரும். அவளோட பிஹேவியர் மாறும். ஆனா, அந்தப் பொண்ணுகிட்டே நீ சீரியஸாய் ஏதும் வாக்குறுதி கொடுக்கறதுக்கு முன்னாடி என்கிட்டே பேசு. நான் உனக்கு சொல்றதுக்காக ஒரு விஷயம் வச்சிருக்கேன். சொல்றேன்' என்றான்.

'சரிண்ணா! அதை இப்ப சொல்லக் கூடாதா!' என்றான் லேசான குறு குறுப்புடன்.

'அந்தப் பொண்ணுகிட்டே நீ ஏதும் சீரியஸாப் பேசறதாயிருந்தா மட்டும்னு சொல்லியிருக்கேனே' என்றான். வழக்கமான தனது மர்மச் சிரிப்புடன்.

செல்லை ஆஃப் செய்தான்.

⁂ ⁂ ⁂

'ஐயோ! சுதா... இது என்ன மர்மக் கதை மாதிரி போகுது. உங்கண்ணன் பயங்கரமான ஆளா இருப்பார் போல இருக்கே. அது சரி... உங்கண்ணனுக்கு காலேஜ் டேஸ்ல இந்த மாதிரி அனுபவம் இல்லையோ?' என்றாள் குறு குறுப்புடன்.

சுதாகரன் அண்ணியைக் கூர்ந்து பார்த்தான். கலகலவென்று சிரித்தான்.



'அண்ணி! அண்ணன் ரொம்ப அழுத்தமான ஆளு. அண்ணனை ஒரு மாதிரியான பொண்ணுக நெருங்கினாலே அப்படியே புழுவைப் பார்க்கற மாதிரி பார்ப்பாரு. பாருங்க...! அவங்க வெந்து சாம்பலாயிடுவாங்க' என்று சிரித்தான்.

'ஆமா, மனசுல என்ன இருக்குன்னு காட்டாம ஆட்களை வறுத்தெடுக்கறதுல உங்கண்ணன் ரொம்பக் கில்லாடிதான்!' என்று சிரித்தாள்.

இருவரும் சிரித்தார்கள்.

'அப்புறம்.. சுதா! மீதிக் கதை எப்போ?' என்றாள்.

சுதாகரன் நின்றான். அண்ணியைத் தீவிரமாகப் பார்த்தான்.

'அண்ணி! கதை இல்லைங்க அண்ணி! காயம்!' என்றான்.

'ஓ! ஐ.ம் சாரி!' என்றாள் பதட்டமாக. மேலும் சொன்னாள். 'நீங்க ஒரு மாதிரி அப்ஜெக்டிவா அதைப் பத்திப் பேசினதாலே நீங்க கடந்து வந்துட்டீங்கன்னு நெனச்சேன்' என்றாள்.

'கடந்துட்டேன்தான்... அண்ணி! ஆனா காயம்... காயம்தான்!' என்றான்.

'குட்நைட் அண்ணி!' என்று சட்டென்று போய்விட்டான்.

அவன் போன பாதையைப் பார்த்தபடி கணவன் என்ன செய்கிறார் என்று எட்டிப் பார்த்தாள் நிலா.

அவன் புன்னகையுடன் வரவேற்றான். 'என்ன நிலா! இளவல் ஏதோ உரையாடின மாதிரி இருந்தது' என்றான்.

'ம்... அவரோட காலேஜ் அனுபவம் எல்லாம் சொல்லிகிட்டிருந்தாரு. யாரோ.. ரீனாவாம்' என்று இழுத்து நிறுத்தினாள்.

அவன் ஆச்சரியமாகப் பார்த்தான். 'ஆச்சரியமாய் இருக்கே! அவ்வளவு ஃப்ரீயா உன்கிட்டே எல்லாம் சொன்னானா?' என்றான்.

'இன்னும் முழுதும் சொல்லலை!' என்றாள் நிலா.

'சரி... விடு வா! கொஞ்ச நேரம் செஸ் விளையாடலாம். தூக்கம் வர்லே' என்றான்.

அவளும் சிரித்துக் கொண்டே அமர்ந்தாள். சற்று நேரம் கலகலவென்று சிரித்துக் கொண்டார்கள்.

∴ ∴ ∴

'ஆதவன் பனியன் கம்பெனி உங்களுதா?' என்று ஆச்சரியமானான். புவனேசுவரன்.

'ஆமடா!' என்று புன்னகைத்தான் சுதாகரன்.

'சொல்லவே இல்லை!' என்று ஆச்சரியமானார்கள். நண்பர்கள்.

'ஏண்டா... டி.வி.யில எல்லாம் அடிக்கடி அட்வர்டைஸ்மென்ட் வருதே. அந்த ஆதவன் பனியனா' என்றான் இன்னொருவன்.

'நம்பலேன்னா, இதைப் பாருங்க!... என்று ஒரு ஆல்பத்தை எடுத்துக் காட்டினான்.

பார்த்தார்கள்!

ஆதவன் பனியன் கம்பெனியின் ஆண்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

'உங்க அண்ணன் என்னடா. சூப்பர் ஃபிகரா இருக்காரு!' என்று அடுத்த ஆச்சரியம் அவர்களுக்கு.

செய்தி காற்றில் பறந்து சேர வேண்டிய இடத்தில் சேர்ந்தது.

ரீனாவிடம் மெதுவாக மாற்றமும் ஏற்பட்டது. ஒரு நாள் அவனிடம் வந்து சொன்னாள்.

'சுதா! நீங்க சொன்னது சரிதான். ராகேஷ்.. நம்பத் தகாத ஆள்தான்! என்றாள் சோகம்போல்.



'ஹலோ! நான் ஒண்ணும் ராகேஷ் நம்பத் தகாத ஆளுனெல்லாம் சொல்லலே... ராகேஷ் பெருமையை என்கிட்டே பேசாதேன்னுதான் சொன்னேன்!.

'சரி! எப்படியோ.... விடுங்க! நான் தப்பிச்சுட்டேன்' என்றாள்.

சுதாகரன் கேள்விக் குறியாகப் பார்த்தான்.

'இல்லே சுதா! மேரேஜ் பண்ணிக்கறேன்னு கெஞ்சிட்டு இப்ப முடியாதாம். ஏதோ ஒரு பெரிய இடம் கிடைச்சிருச்சு போல இருக்கு!' என்றாள்.

சுதாவுக்கு என்னமோ சாத்தான் வேதம் ஓதுகிறது என்ற எண்ணம் தோன்றியது.

அமைதியாக கேட்டுக் கொண்டான். அவள் சட்டென்று அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

'சுதா... என்னை மன்னிப்பியா?' என்றாள்.

'நான் யாரு உன்னை மன்னிக்கறதுக்கு... எப்பவும் போல ஃபிரண்ட்ஸா இருப்போம்...' என்றான்.

நடந்ததை அண்ணனிடம் பகிர்ந்து கொண்டான். அவன் சிரித்தான்.

'நடிகையர் திலகம் ரேன்ஜுக்கு ஆக்ட் பண்ணினாளாக்கும். தயாராயிரு சகோதரா! இனிமே நீதான் எனக்கு வாழ்க்கையேன்னு அடுத்த டயலாக் இன்னும் ஒரே வாரத்தில் ரிலீஸாகப் போகுது..' என்றான்.

கடகடவென்று சிரித்தான்.

சுதாகரன் இப்போது ஒரு வெளியாளைப் போல அடுத்து நடக்கப் போவதைப் பார்க்கக் காத்திருந்தான்.

தினகரன் சொன்னது போலவே நடந்தது.

அடுத்த வாரத்தில் ஒரு நாள்! ரீனா ரொம்பவும் வாடிய முகத்துடன் வந்தாள்.

'சுதா! என்னை மன்னிப்பியா... சுதா... இனிமே வாழ்ந்தா உங்களிடம்தான் வாழ்வதுன்னு முடிவு!' என்றாள்.

சுதாகரன் ஒரு காலத்தில் இந்த வார்த்தைகளுக்காக ஏங்குவதுண்டு. ஆனால், இப்போது அவை பொருளே இல்லாது வெறும் காற்றைப் போல் தெரிந்தன.

உடனே சுதாகரனின் முகம் மலரும். அணைக்காத குறையாகப் பாய்ந்து தன் உணர்வுகளை வெளிப்படுத்துவான் என்று எதிர்பார்த்த ரீனா சற்றே ஏமாந்து போனாள்.

சுதாகரன் ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டான் 'ஏன்... ராகேஷ் ஃபைனலா முடியாதுன்னு சொல்லீட்டானாக்கும்?' என்று கேட்டான்.

ரீனா விழித்தாள்.

சீரியஸாகக் கேட்பது போலவும் இருந்தது. விளையாட்டாகக் கேட்பது போலவும் இருந்தது.

'அதுதான் அன்னைக்கே சொன்னேனே!' என்றான்.

'யோசிப்போம்! ரீனா யோசிச்சுத் தெளிவா முடிவெடுப்போம்' என்றான் சுதாகரன்.

இப்படியொரு நிதானமான பதிலை ரீனா எதிர்பார்க்கவில்லை. சற்றே ஏமாற்றத்துடன் கிளம்பிப் போனாள்.

இதையும் அண்ணனிடம் பகிர்ந்து கொண்டான். அவன் சீரியஸாக ஆலோசனை சொன்னான்.

'சரி! ஒன்னு செய்! ராகேஷை மீட் பண்ணு! எது உண்மைன்னு தெரிஞ்சு போகும் இல்லே!'



'இல்லைண்ணா! எனக்கு இப்பவே நம்பிக்கை குறைஞ்சு போச்சு. எதுக்கு அனாவசியமா ஆராய்ச்சி பண்ணிகிட்டு.'

'அதெல்லாம் வேண்டாம்... தம்பி! ஒரு விஷயத்துல இறங்கினா தெளிவா முடிவுக்கு வரணும். முழுசா அலசிப் பாத்துடணும். ராகேஷை மீட் பண்ணிடு' என்றான்.

'சரி... அதையும்தான் செய்வோமே!' என்று முடிவெடுத்து ராகேஷைப் பார்த்தான்.

அவன் இடி இடியென்று சிரித்தான்.

'வாட்! நான் ரீனாவைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னேனா? எப்போ? சுதா, என்னோட ஸ்டேட்டஸ் தெரியுமா உனக்கு? நீ உன்னோட ஸ்டேட்டஸையே புரிஞ்சுக்கலை. அந்தப் பொண்ணுகிட்டே என்னமோ இருக்குன்னு ரொம்ப சீரியஸா அலைஞ்சுகிட்டு இருக்கறே!' என்றான்.

'இல்லல்லே! அப்படியெல்லாம் ஒன்னும் இல்லே! ரீனா சொல்றது எவ்வளவு தூரம் உண்மைன்னு தெரிஞ்சுக்கத்தான் உங்களைப் பார்க்க வந்தேன்.'

'சரி... அப்பத் தெரிஞ்சுக்க நான் இப்ப சொல்றதை நல்லாப் புரிஞ்சுக்க தம்பி. இட் வாஸ் நாட் ஈவன் அன் அஃபேர் ரெண்டு பக்கமும் தெளிவாய் புரிஞ்சுகிட்டு நடந்த ஒரு விஷயம். ரீனா மாதிரி பேக் கிரவுண்ட் உள்ள பொண்ணையெல்லாம் நானோ நீயோ கல்யாணம் பண்ணிக்க முடியாது. சரி... பேக் கிரவுண்டை விடு. நீ நினைக்கற மாதிரியெல்லாம் அந்தப் பொண்ணு கமிட்மெண்ட்டோட நடந்துக்கற மாதிரிப் பொண்ணு இல்லே... புரியுதா?' என்றான். மறுபடியும் சிரித்தான்.

சுதாகரன் முகம் வாடியது. ராகேஷ் சொல்வது உண்மையென்று அவனுக்குத் தெரியும். ராகேஷ் மேலும் சொன்னான்.

'சுதா... அவளுக்கு நிறைய திங்ஸ் வாங்கிக் குடுத்திருக்கேன். அது மட்டுமில்லாம ரெண்டு லட்ச ரூபா குடுத்திருக்கேன். என்னோட ஸ்டாண்ட் என்னன்னு அவளுக்கும் தெரியும். இப்ப உனக்கு அந்தப் பொண்ணுகிட்ட ஒரு ஸாஃப்ட் கார்னர் இருக்கின்னு தெரிஞ்சுகிட்டு அடுத்த நாடகம் ஆரம்பிச்சுட்டா...' என்றான்.

'சரிங்க... மிஸ்டர் ராகேஷ். ரொம்பத் தாங்க்ஸ் ஃபார் தி இன்ஃபர்மேஷன்' என்றான்.

கிளம்பினான்.

∴ ∴ ∴

'தம்பி! நீ ஒண்ணும் சின்னக் குழந்தையில்லை. விஷயங்களை அலசிப் புரிஞ்சுக்கற பக்குவம் உனக்கு வந்தாச்சு. நான் உனக்கு அண்ணன்னாலும் சில விஷயங்களை நீதான் முடிவெடுக்கணும். உனக்கு அந்த சுதந்திரம் இருக்கு' என்றான், அண்ணன்.

மறுநாள் காலையில் நேரில் வந்தான்.

இரண்டு நாட்கள் அவனை மகாபலிபுரம் சினிமா என்று அழைத்துப் போனான்.

ரீனாவைப் பற்றிப் பேசவேயில்லை. மூன்றாம் நாள் காலையில் சுதாகரனே சொன்னான்.

'அண்ணா! நீ கிளம்பு. உனக்கு நிறைய வேலையிருக்கு... என்ன இருந்தாலும் எனக்குக் கொஞ்சம் வருத்தம்தான். அந்தப் பொண்ணு எந்த நினைப்போடு பழகியிருந்தாலும் நான் முதல்ல சின்சியராத்தான்... அந்தப் பொண்ணை 'லைக்' பண்ணினேன்' என்றான்.

கண்கள் கலங்கின. உதடுகள் துடித்தன.

தினகரன் அவனைத் தோளோடு அணைத்துக் கொண்டான்.



'ஃபர்கெட்... இட்... தம்பி! கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்கும். ஆனா, யு வில் கம் அவுட் ஆஃப் இட். டோன்ட் வொர்ரி...!' என்றான்.

சுதாகரன் செய்கிற முடிவு அவனிடமிருந்தே உதித்ததாகவே இருக்க வேண்டும் என்று நினைத்தான் தினகரன். அவன் எதிர்பார்த்தாற் போலவே சுதாகரனும் முடிவெடுத்தான். ஆனால், உள்ளத்தின் ஆழத்தில் ஏற்பட்ட காயம் ஆறவில்லையென்பதையும் புரிந்து கொண்ட சகோதரன் வேறு ஒரு ஏற்பாடு செய்தான்.




'அண்ணா! எதுக்கு என்னை இப்ப நாடு கடத்தணும்கிறே?' என்று செல்லமாகச் சிணுங்கி னான் சுதாகரன்.

'டேய்! எனக்குக் கூடக் கிடைக்காத வாய்ப்பை உனக்குக் குடுக்கறேன்கறேன். வேண்டாங்கறியே!' என்றான் தினகரன் மெல்லிய புன்னகையுடன்.

அமெரிக்காவில் ஒரு பல்வலைக். கழகத்தில் இரண்டு ஆண்டுகள் மனித வளம் பற்றிப் படிக்கிற மாதிரி ஒரு ஏற்பாடு செய்திருந்தான்.

வெளிநாடு சென்று விட்டு வந்தால் மனதிலே தெளிவு ஏற்படும். உலகத்தில் மனித உறவுகளில் எத்தனை விதமான மாறுபாடுகள் இருக்கின்றன என்று புரிதல் ஏற்படும் என்று கருதினான் தினகரன். ஆனால், அதைச் சொல்லவில்லை.

சுதாகரனும் கிளம்பினான். அது நிகழ்ந்தது சென்ற ஆண்டு. இப்போது இரண்டாமாண்டில் இருந்தான்.

தனது கடந்த கால அனுபவங்களை விளக்கமாகச் சொன்ன சுதாகரன் இன்னொன்றும் சொன்னான்.

அதைக் கேட்டதற்குப் பின்புதான் மகிழ்ச்சியும், சோகமும் கலந்த உணர்வோடு படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள் வெண்ணிலா.

∴ ∴ ∴

'தம்பி! என்ன இருந்தாலும் சின்னப் பொண்ணு. அதை ஏன் இப்படி வறுத்தெடுக்கறே!' என்றார் அப்பா.

தினகரன் சற்று நேரம் வெறுமையான பார்வையுடன் வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்பா வருத்தமாக அவனைப் பார்த்தார். பிறகு சொன்னார்.

'தம்பி! என்னப்பா... ஒண்ணுமே பேச மாட்டேங்கறே!' என்றார்.

'அப்பா! முதல்ல சொன்னீங்களே, சின்னப் பொண்ணுன்னு அதனாலதான் இப்படியெல்லாம் செய்யறேன்..' என்றான்.

அப்பா புரியாதவராய் வெறித்துப் பார்த்தார். 'புரியலே!' என்றார்.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

'நல்லா யோசிச்சுப் பாருங்க. டாக்டர் என்ன சொன்னாரு! எனக்குக் காலுங்க ரெண்டும் இப்படியே இருக்கலாம்.. ஃபிலிங்ஸ் வந்தாலும் வரலாம்... அப்படின்னு! ஒரு இளம் வயசுப் பொண்ணு!' என்றவன் அதற்கு மேலும் அப்பாவிடம் எப்படிச் சொல்வது என்று நினைத்தானோ என்னவோ நிறுத்தி விட்டான்.

கனமான ஒரு அமைதி நிலவியது. சற்றே சங்கடத்துடன் கீழே பார்த்துக் கொண்டிருந்த அப்பா சொன்னார்.

'அது சரிப்பா! அதை நல்ல விதமா சொல்லி...' என்று அவர் தொடரு முன்னே அவன் குறுக்கிட்டான்.



'அப்பா... நம்ம ஊர் லேடீஸ்... சொன்னாக் கேட்க மாட்டாங்கப்பா... அதான் வெறுப்பேத்தினேன்' என்றான்.

சற்று நேரம் அமைதி காத்த அப்பா சொன்னார்.

'எனக்கென்னமோ அப்படியெல்லாம் அந்தப் பொண்ணு புரிஞ்சு போற பொண்ணு மாதிரித் தெரியலே... பேசிப் பார்க்கறோம் என்று. அதுக்கப்புறம் நடந்ததெல்லாம் உங்களுக்கே தெரியுமே அண்ணி!' என்றான் சுதாகரன்.

'தனக்குத் துணை வேண்டும் என்று நினைக்காமல் என்னுடைய வாழ்க்கையை சீர் படுத்த வேண்டும்' என்று நினைக்கறாரே என்று பெருமையும், பெருமிதமும் மனதில் உதித்தது.

நீண்ட யோசனைக்குப் பிறகு மனம் தெளிவானது.

'நல்ல வேளையாக மனம் விட்டுப் பேசினோம்...' என்று எண்ணிக் கொண்டாள்.

திருமணத்திற்குப் பிறகு அன்றைக்குத்தான் நிம்மதியாக உறங்கினாள்.

∴ ∴ ∴

'என்னது வெளியே ஒரே தட்டிக் கொட்டற சத்தமா... இருக்கு...' என்றான் தினகரன்.

'என்னமோ... தெரியலை... ஆளுங்ககிட்டே மாமா பேசிகிட்டிருந்தாங்க...' என்றாள் வெண்ணிலா. 'ஏதோ கொஞ்சம் ரிப்பேர் வொர்க் நடக்குது போலே!' என்றாள்.

'ஓஹோ!' என்றான் தினகரன்.

'சரி... வா! இங்கே உட்காரு!' என்றான்.

அமர்ந்தாள்.

'இப்ப நம்ம ரெண்டு பேருமா சேர்ந்து நாள் முழுக்கவும் செய்ய வேண்டிய வேலைகளை ஒரு லிஸ்ட் போட்டுக்குவமா?' என்றான்.

'ம்... செய்யலாமே!' என்றாள் உற்சாகமாக.

'காலையில ஃபிஸியோ தெரபி... அப்புறம் குளியல்... டிபன், கொஞ்சம் ரெஸ்ட்... ஒன்பதரை மணிக்கு சுதாவோட டிஸ்கஷன்... அப்புறம் ஆபீஸ் சம்பந்தமா பேச்சுக்கள்...'

இடையில் புகுந்த வெண்ணிலா 'ஆனா கண்டிப்பா மத்தியானம் கொஞ்சம் ரெஸ்ட்...'

அவன் சிரித்தான்.

'ஆமா.. அப்புறம் மறுபடியும் ஜி.எம்.. மாதிரி யாரையாவது வரவழைச்சு ஃபைல் பார்க்கறது... இப்படி... ஏதாவது... மாலை முழுதும் குடும்பத்துக்காக... கொஞ்சம் டி.வி. பார்க்கறது?'

வெண்ணிலாவுக்கு உள்ளுக்குள் ஒரு ஆச்சரியம்தான். தன் ஊனத்தைப் பற்றி மனசு வருந்தியோ... குறையாகவோ அவன் பேசியதேயில்லை.

'ஆகிப் போச்சு. அத வச்சுகிட்டு நாம எவ்வளவுக்கெவ்வளவு சிறப்பா செயல்பட முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு செயல் படணும்கிறதுதான் முக்கியம்...!' என்பான்.

அவளுக்கு பிரமிப்பாக இருக்கும். அவள் மீண்டும் சொன்னாள்.

'ஆனா, எந்த நிமிஷம் கஷ்டமா இருக்குதுனு தோணினாலும் ஒய்வு எடுத்துக்கணும். என்ன?' என்றாள். கண்டிப்பான டீச்சரைப் போல.

அவன் புன்னகைத்தான். 'ஆமா! தட் இஸ் அன்டர்ஸ்டுட். அது மட்டுமில்லே! இது நம்ம தோராயமா போடற ஒரு ஷெட்யூல்தான் இது. மாறலாம். திடீர்னு இடையில சொந்தக் காரங்க வருவாங்க... ஃபிரண்ட்ஸ் வருவாங்க....' என்றான் தினகரன்.



'ஆமாங்க! ஒரு விஷயத்துல நாம கடவுளுக்கு நன்றி சொல்லணுங்க. இப்படி நாள் முழுக்க செய்யறதுக்கு ஏதாவது இருக்கே!' என்றாள் வெண்ணிலா யதார்த்தமாக.

'அது சரி! அப்ப இப்படி இடுப்பொடிச்சு உட்கார வச்சதுக்காகத் திட்டலாமோ?' என்றான் குறு குறுப் பார்வையுடன்.

அவள் நின்றாள். ஒரு நிமிடம் யோசித்தாள். 'கண்டிப்பா... திட்டலாம். உரிமையாய் சண்டை போடலாம். நான் தினமும் கோயிலுக்குப் போய் என்ன செய்யறேன்னு நினைக்கறீங்க... சண்டைதான் போடறேன். அவருக்கு எதுக்காக இப்படி ஒரு தண்டனையைக் குடுத்திருக்கிறே? இது எந்த விதத்துல நியாயம்னு சண்டைதான் போடறேன்' என்றாள். உண்மையான கோபத்துடன்.

அவன் சட்டென்று சிரித்து விட்டான். 'போச்சுரா, என்னத்தான் மிரட்டறேன்னு நினைச்சேன். கடவுள்கிட்டேயும் மிரட்டல்தானா?' என்றான்.

அவள் மறுபடியும் அதே தீவிரத்துடன் சொன்னாள்.

'கடவுள்ங்கறது ஒரு நம்பிக்கைன்னா, அந்தக் கடவுளுக்கு யோசிக்கறதுக்கு மனசு இருக்கு, காது குடுத்துக் கேட்கறதுக்கு ரெண்டு காது இருக்குதுன்னு ஏன் நம்பக் கூடாது.' என்றாள்.

அவன் மௌனமானான்.

'ஆமா! வாழ்க்கையே நம்பிக்கைதான்!' என்றான். அவன் முகம் மென்மையாக மாறியது.

வெண்ணிலா ஆழமாகப் பார்த்தாள். பிறகு அவனருகில் நெருங்கினாள். அவன் முகத்தைக் கையிலேந்தி நெற்றியில் முத்தமிட்டாள்.

'அத்தான்! எனக்குத் தெரியும்! நீங்க உங்க வலியையும், வேதனையையும் எங்களுக்குக் காட்டாம இருக்கணும்னு

எவ்வளவு போராடறீங்கன்னு எனக்குத் தெரியும்! இதை ஜெயிக்கணும்கறதுல எவ்வளவு வேகமா இருக்கீங்கன்னு எனக்குத் தெரியும். இந்தப் போராட்டத்தில் நீங்க தனியில்லே அத்தான், நானும் கூட இருக்கேன்' என்றாள்.

அவன் ஒரு நிமிடம் கண்களை மூடி அமர்ந்திருந்தான். பிறகு சொன்னான்.

'இந்தத் தியாகமெல்லாம் கொஞ்ச நாள் பெருமையா இருக்கும். ஆனா, நீ இழக்கறது என்னன்னு தெரிய வரும் போது ரொம்ப வருத்தப்பட வேண்டியிருக்கும்' என்றான்.

அவள் வாஞ்சையாகப் புன்னகைத்தாள். 'அத்தான்! நீங்க உறவுன்னா ஒரே ஒரு கோணத்துல பார்க்கறீங்க.. நான் அப்படிப் பாக்கலே... உங்களோட இருக்கறதே எனக்குப் போதும்...' என்றாள்.

அவன் சிரித்தான். அதில் கேலி இருந்ததோ என்னவோ அவள் கண்டு கொள்ளவில்லை. சீரியஸாகச் சொன்னாள்.

'பாத்துக்கலாம்... அத்தான்... சமாளிக்கலாம்.. தாம்பத்தியத்துல எத்தனையோ நிலைகள் இருக்கு... அப்படிக் குழந்தை ஆசை வந்தா.. தத்து எடுத்துக்கறேன் இல்லேன்னா... இப்பத்தான் டெஸ்ட் ட்யூப் பேபின்னெல்லாம்.. சொல்றாங்களே! ஏதாவது வழி இருக்கும் அத்தான்' என்றாள்.

அவன் நிஜமாகவே திகைத்துப் போனான். தன் மனைவி இவ்வளவு தூரம் யோசித்து வைத்திருப்பாளென்று அவன் நினைக்கவில்லை போலும். கொஞ்சம் அதிர்ச்சியாகவே இருந்தது. ஆச்சரியமாகவும் இருந்தது.

செண்டிமெண்டாகவோ, ஏதோ தியாகமாகவோ இல்லாமல் நடைமுறை சாத்தியங்களை யோசித்திருக்கிறாள் என்றும் மகிழ்ச்சியாக இருந்தது. மனம் தெளிந்தாற்போல் இருந்தது.



அவள் சட்டென்று கலகலவென்று சிரித்தாள். 'சே! போங்கத் தான்! ஒரே ஃபிலாஸஃபியா இருக்கு!' என்றாள்.

அவனும் புன்னகைத்தான்.

பிறகு 'அத்தான்! நாளைக்கிருந்தே ஒரே சஸ்பென்ஸ்தான். தினம் ஒரு புதுத்திட்டம்தான் பாருங்க!' என்றாள்.

'சரி... உங்களுக்கு டிபனுக்கு நேரமாச்சு! அதைப் பார்க்கிறேன்!' என்று ஓடினாள்.

அவன் மனதும் இரண்டு விதமாகப் போராட ஆரம்பித்தது. ஒரு பக்கம் மகிழ்ச்சி குபு குபுவென்று பொங்கியது என்றால், மறுபக்கம் கேள்விகளும் அலையலையாக் கிளம்பியது.

∴ ∴ ∴

'இன்னைக்கென்ன சஸ்பென்ஸ்' என்றான் காலை டிபன் சாப்பிடுகையில். 'இன்னும் ஒரு ரெண்டு நாள் டைம் குடுங்க. அப்புறம்.. பாருங்க!' என்றாள்.

அதே நேரம்! செல்வம் வந்தான்.

'என்ன வெண்ணிலா! அம்மா வீட்டையே மறந்துட்டியா என்ன? அத்தை ஒரே கம்ப்ளெயின்ட்' என்றான்.

'நான் இவரை விட்டுட்டு எங்கயுமே போக முடியலிங்க. செல்வம் அத்தான். மனசு கேக்கறதில்லே நான் இருந்தா அவர் முக பாவம் பாத்தே சட்டுன்னு அவரோட தேவை என்னன்னு புரிஞ்சுக்குவேன்...' என்றாள் அக்கறை நிறைந்த குரலில்.

அறைக்குள் நுழைந்த மாமியார் சிரித்தார். 'பாத்தியா! தினா! உன் பொண்டாட்டி கவலையை. நாங்கள்ளாம் இருக்கோமில்ல ஒரு நேரம் பாத்துக்குவோம். நீ உங்க அம்மா வீட்டுக்குப் போயிட்டு வா!' என்றார் அன்புடன்.

'சரிங்கத்தை!' என்றான். பிறகு செல்வத்திடம் திரும்பி 'சரிங்கத்தான் வர்ற சனிக்கிழமை மத்தியானமா இவர் ரெஸ்ட் எடுக்கிற நேரமா வர்றேன்னு அம்மாகிட்டே சொல்லுங்க!' என்றான்.

'அதெல்லாம்... நீயே சொல்லிக்க' அப்பத்தான் போன்லயாவது பேசுவே. போன் செய்தே ரெண்டு நாளாச்சன்னு அதுவேற கம்ப்ளெயின்ட் அதெப்படிம்மா... கல்யாணம்னு ஒன்று ஆனாலே பொறந்த வீட்டுக்காரங்களையெல்லாம் கழட்டி விட்டுடறீங்க..!' என்று சற்று நேரம் கலாட்டா செய்தான்.

'அதானே!' என்ற சுதாகரனும் இணைந்து கொண்டான். 'அண்ணி! அம்மா வீட்டுக்குப் போயிட்டு வாங்கண்ணி! அப்புறம் நாங்க ஏதோ உங்களை வீட்டுச் சிறையில வச்சுட்டோம்னு நினைச்சுக்கப் போறாங்க!' என்றான் கேலி போல.

அவள் முகம் சிவக்கச் சிரித்தாள். 'சுதா! செல்வம் அத்தான் பேசறதை நம்பாதீங்க... அவரு இப்படித்தான் சும்மா கலாட்டா செய்வாரு நான் தினமும் அம்மா, அப்பாகிட்டே பேசிக்கிட்டுத்தான் இருக்கேன்' என்றாள்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் விடைபெற்றுப் போனதற்குப் பின் அவர்களுக்கு வழக்கமான வேலைகள் காத்திருந்தன.

தினகரன் உண்மையாகவே சுறு சுறுப்பாகி இருந்தான். நாள் முழுதும் வேலைகள் இருந்தது.

எல்லா நவீன வசதிகளையும் பயன்படுத்தி தொழிலைக் கிட்டத்தட்ட அவன் நேரடிப் பார்வையில் வைத்திருந்தான் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரே இடத்தில் அடைந்து கிடக்கிறோம் என்ற ஒரு உணர்வுதான் அவன் மனத்தில் உள்ளூர அரித்துக் கொண்டிருந்தது.



அடுத்த நாள் காலை!

'அத்தான்...!' என்று பரபரப்பாக வந்தாள். 'இன்னைக்கு நீங்க சீக்கிரமே ரெடியாகறீங்க!' என்றாள்.

'ஏன்? யாராவது பாக்க வர்றாங்களா?' என்றான் ஆர்வமாக...

'அப்படித்தான் வச்சுக்குங்களேன்!' என்றாள். அவனும் சுறுசுறுப்பாகத் தயாரானான்.

ஒன்பதரை மணி வாக்கில் சுதாகரன் வந்தான். கூடவே ஆட்களும் வந்தார்கள்.

'அண்ணா! வசதியா உட்கார்ந்துக்க!' என்று அமர வைத்தார்கள்.

மெல்லக் கட்டிலையே நகர்த்தினார்கள். சக்கரம் பொருத்தியிருந்த சற்றே உயரமான கட்டில். மாடியிலிருந்து புதிதாக' ராம்ப்' எனப்படும் சறுக்கு வசதி அமைத்திருந்தார்கள்.

கட்டிலை மெல்ல நகர்த்திக் கீழ்த் தளத்துக்குக் கொண்டு வந்தார்கள்.

'ஹலோ!' என்ன நடக்குது?' என்று அவன் கேட்க...

'கொஞ்சம் பொறுங்கத்தான்!' என்றாள் வெண்ணிலா.

அந்தப் பெரிய பங்களாவின் முன் பகுதியில் முழு நீளத்துக்கு இருந்த போர்ட்டிகோவைப் பாதியாகத் தடுத்திருந்தார்கள்.

கண்ணாடித் தடுப்புக்களால் ஒரு அலுவலக அறை. அவன் கட்டிலில் அமர்ந்தபடியே கையாளத்தக்க விதத்தில் கைக்கெட்டிய இடத்தில் அனைத்து வசதிகளும் இருந்தது.

இந்தப் பக்கம் இழுப்பறை மாதிரி அமைப்பு. திரும்பினால் லேப்டாப் வைத்துக் கொள்கிற மாதிரி வசதி என்று ஆரம்பித்து ஒரு சிறிய அலுவலகத்தையே அமைத்திருந்தார்கள் வெண்ணிலாவும், சுதாகரனும்.

அதைக் காட்டிலும் அவன் உள்ளிருந்து பார்த்தால் தெரிகிற மாதிரி. ஆனால் வெளியிலிருந்து பார்த்தால் அவன் இருப்பது தெரியாத மாதிரிக் கண்ணாடித் தடுப்புக்கள்.

செடி கொடிகள் அசைவதையும் புல்வெளியையும் பார்த்த அவனுக்கு உள்ளம் நெகிழ்ந்தது.

'கொஞ்சம் இந்தக் கட்டிலை கார்டனைப் பார்க்கிற மாதிரி நகர்த்துங்க' என்றான்.

நகர்த்தினார்கள்! சற்று நேரம் பூத்துக் குலுங்குகிற ரோஜாப் பூக்களைப் பார்த்தான்.

கண்களை அழுந்த மூடிக் கொண்டான். பிறகு திறந்தான். சுற்றிலும் எல்லாரையும் ஒரு முறை பார்த்தான்.

எல்லாரும் நெகிழ்ச்சியாய் நின்றிருந்தார்கள்.

'அப்பாடா!' என்பது போல் அவன் மகிழ்ச்சியாகச் சிரிக்க அங்கே கலகலப்புத் தோற்றிக் கொண்டது!




'இங்க பாரு! படுக்கையறையை விட்டு வெளியே நகர்த்திட்டு வந்துட்டீங்க. ஆனா, இப்பவும் நான் கிரிப்பிள்ட்தானே?' என்றான் தினகரன்.

'நீங்க கிரிப்பிள்டா இல்லையாங்கறதை ங்கதான் தீர்மானிக்கணும்.' என்றாள் வெண்ணிலா.

'வாட் யூ மின் பை தட்?' என்றான் தினகரன்.

'அத்தான்! ஹெலர் கெல்லர்ன்னு ஒரு அம்மாவைப் பத்தி நான் டிச்சிருக்கேன். கண்ணு தெரியாது. காது கேட்காது. ஊமை. ஆனா



அந்த எல்லாப் பிறவி ஊனங்களையும் ஜெயிச்சு அந்த அம்மா.. உலக நாடுகளுக்கெல்லாம் போயிட்டு வந்துட்டாங்க... தெரியுமா?' என்றாள் வெண்ணிலா.

'ம்..!' என்று உள்வாங்கிக் கொண்டான். 'பிறவி ஊனத்தையே ஜெயிச்சாங்க... இடையில் வந்த இந்த ஊனத்தை ஜெயிக்க முடியாதாடா? அப்படீங்கறே!' என்றான் புன்னகையுடன்.

'ஐயய்யோ! அப்படி வாடா. போடான்னெல்லாம் சொல்லலே...!' என்று சிரித்தாள் வெண்ணிலா. 'ஆனா மேட்டர் அதுதான்' என்றாள்.

'ம்...!' என்று மறுபடியும் சற்று நேரம் சிந்தித்தான். பிறகு கேட்டான்.

'அப்ப... பள்ளிக் கூடத்திலே கணக்குப் போடும் போது மாறிலி, மாறும் காரணின்னு கணக்குப் போடுவமே... அது மாதிரி இப்போதைக்குக் கால் ரெண்டையும் ஒண்ணும் செய்ய முடியாதுன்னு வச்சுக்குவம், மேற்கொண்டு என் செய்யறதுன்னு யோசிப்போம்...' என்றான் தினகரன்.

அதற்குப் பிறகு ஒரு மாதத்தில் அவன் செயல்பட்ட விதம் பார்த்து வெண்ணிலா அரண்டு போனாள்.

'ரிமோட் கண்ட்ரோல் 'என்பார்களே அது போல் நாட்களுக்குள்ளாக சகோதரனை அழைத்து மறுபடியும் பேசினான்.

'சுதா! என்னடா... படிப்பு விஷயம் பண்ணி என்ன முடிவு செஞ்சே?' என்றான்.

'அண்ணா! இது என்னன்னா பெரிய படிப்பு. நான்தான் ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கிட்டேனே... நீ மட்டும் கொஞ்சம் தேறி ஆபீஸுக்கு வா... அப்புறம் நான் ஃபாரின் போய்க்கறேன்' என்றான்.

சொன்ன மாதிரியே சுதாகரன் சகோதரனுக்குப் பல விதத்திலும் உதவியாக இருந்தான்.

நம்பிக்கைக்குரிய சகோதரனை அலுவலகத்தில் தன்னுடைய பிரதிநிதியாக வைத்துக் கொண்டு காரியங்களை நடத்திக் கொண்டான்.

அப்பாவும் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொண்டார். இரண்டு மாதங்கள் ஓடியிருக்கும்!

ஒரு நாள் தினகரனின் படுக்கையறைக்கு இரவு நேரம் வந்தாள் வெண்ணிலா.

'என்ன... நிலா!' என்றான்.

'இல்லே! ஒரு ஆயுர்வேத வைத்தியரைப் பார்த்தேன். ஏதோ மூலிகை எண்ணெய் போட்டு நீவினா கொஞ்சம், கொஞ்சமா சரியாகுங்கிறார்' என்றாள்.

'ஏம்மா... நம்மதான் இப்ப அலோபதியில இருக்கோமே' என்றான்.

அவள் தீவிரமான பார்வையுடன் சொன்னாள்.

'இல்லே! நான் நம்ம டாக்டரையும் கேட்டேன் வெளியே அப்ளை செய்யறதுதானே... செஞ்சுக்குங்க அப்படிங்கறார்' என்றாள்.

ஒத்துக் கொண்டான்.

இரவு நேரங்களில் அந்த வைத்தியம் வேறு ஆரம்பித்தார்கள். இதற்கிடையிலே மெதுவாக ஒரு சக்கர நாற்காலியில் உட்கார வைக்க ஆரம்பித்தார்கள்.

இன்னும் மகிழ்ச்சியானான்.

படுக்கையிலேயே முடங்கிக் கொண்டிருந்த நிலைமை மாறி வீட்டுக்குள்ளேயே நகர்வதற்கான வாய்ப்புக் கிடைத்தவுடனே அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டான்.



வீட்டில் எங்கே வேண்டுமானாலும் போய் வருகிற வகையில் வசதிகள் செய்தார்கள். ஆனால், சக்கர நாற்காலியில் உட்கார வைக்கும் போது யாராவது தூக்கித்தான் அமர வைக்க வேண்டி வந்தது.

அந்த நேரங்களில் அவன் முகத்தில் லேசான ஒரு வேதனை மின்னி மறையும். அந்த சமயம் நிலாவோ, சுதாகரனோ யாராவது ஒருவர் ஏதோ ஒரு ஜோக் அடித்து அவன் சிந்தனையை மாற்றி விடுவார்கள்.

அவனும் புரிந்து கொண்டாலும், புரியாதவன் போலவே இருந்து கொள்வான்.

அந்த நேரத்தில்தான் வெண்ணிலா அந்தச் செய்தியை அறிந்தாள். மகிழ்ந்து போனாள். உடனே சுதாகரனிடம் ரகசியமாகத் திட்டம் தீட்டினார்கள்.

∴ ∴ ∴

'அத்தை மாமா, நல்லாயிருக்கீங்களா!' என்று சிரித்தபடி நுழைந்தான் செல்வம்.

'வாப்பா... வா! உனக்காவது நாங்க இருக்கோம்கறது ஞாபகம் இருக்கா?' என்றார் சங்கரராமன்.

'என்ன மாமா இப்படிக் கேட்கறீங்க? நான்தான் வாரத்துக்கு ரெண்டு தரம் வர்றேனே?' என்றான்.

'ஆமாப்பா... நீ வர்றதான். ஆனா, எங்களுக்கு வெண்ணிலாவைக் கல்யாணம் பண்ணி அனுப்பினதிலிருந்து வீடே வெறிச்சுன்னிருக்கு. மாப்பிள்ளைக்கு வேற இப்படியாயிருச்சு. எங்கயும் வெளிய போகப் பிடிக்காம அடைஞ்சு கிடக்கறோம்' என்றார்கள்.

செல்வம் வாஞ்சையாகப் புன்னகைத்தான்.

'நீங்கதான் அந்தக் காலத்துலயே ஒரு குழந்தையோட போதும்னு நிறுத்திட்டீங்களே' என்றான்.

சங்கராமன் புன்னகைத்தான். அந்தப் புன்னகையில் சற்றே சோகம் தெரிந்தது.

'உனக்குத் தெரியாதுப்பா... வெண்ணிலாவுக்கு முன்னாடி இரண்டு குழந்தைகள் தக்கலே. என்னவோ ஆர்.எச் ஃபேக்டராம். அது எங்களுக்குத் தெரியலே. அப்புறம்தான் டாக்டர்ஸ் ஏதோ இன்ஜக்ஷன் போட்டு வெண்ணிலா தங்கினாப்ல....' என்றார்.

'ஓஹோ! அப்படியா?' என்றான் செல்வம்.

'என்ன தம்பி, நம்ம வெண்ணிலா லைஃப் இப்படியாயிருச்சு...' என்று மிகவும் வருத்தப்பட்டார் சங்கரராமன்.

'மாமா! கவலைப்படாதீங்க! தினகர் ரொம்ப நல்லவரா இருக்காரு. என் லைஃப் எப்படியானாலும் சரி... வெண்ணிலா லைஃப் கெட்டுப் போக விட மாட்டேன் அப்படீன்னு என்கிட்ட தனியா சொன்னாரு' என்றான்.

பெற்றோர்களின் முகம் மலர்ந்தது.

'ம்.. அப்படியா?' என்றார்கள்.

செல்வம் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு மறுபடியும் தொடர்ந்தான்.

'ஆனா... வெண்ணிலாதான் ஒரேயடியா இனி வாழ்க்கைன்னு ஒன்னு இருந்தா அது உங்களோடதான் அப்படீன்னு சொல்லிட்டாளாம்' என்றான்.

'ஓ!' என்றார்கள். 'இதுல விசித்திரம் பாத்தியா... ரெண்டு பேர் பேசறதுலயும் நியாயம் இருக்கு....' என்றார் அப்பா.

'அது அப்படித்தான்!' என்றான் செல்வம்.



'ஆனா... மாமா...! மத்தபடி ரெண்டு பேரும் ஒத்துமையா இருக்காங்க. கலகலப்பா இருக்காங்க' என்றான் செல்வம்.

மறுபடியும் ஒரு மௌனம் நிலவியது. அதற்குப் பிறகு சங்கரராமன் சொன்னார்.

'ரெண்டு பேருமே ஒருத்தர் மத்தவர்களை சந்தோஷப் படுத்திக்கறதுக்காக நடிச்சுக்கறாங்கப்பா.... நிலா இங்க வந்தப்பல்லாம் ஒரே அழுகைதான். அப்பா, நான் சங்கடப் படக் கூடாதுங்கறதுக்காக அவரு வேதனையை வெளிய காட்டிக்கற தில்லே. ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே கட்டியாண்ட மாதிரி இருந்தவருக்கு இப்படி முடங்கியிருக்கிறது எவ்வளவு கஷ்டமா இருக்கும்னு கொட்டித் தீர்த்துட்டுப் போறா' என்றார்.

நாகேஸ்வரி 'நாங்க என்ன செய்யணுன்னே தெரியலை. அதான் கோயில் கோயிலா போய் வேண்டிட்டு வர்றோம்' என்றார்.

'ஆமாங்கத்தே! நமக்கு மீறின விஷயங்களை நாம ஒன்றும் செய்ய முடியாது. ஆனா, எனக்குப் பூரண நம்பிக்கையிருக்கு. தினகர் அண்ணன் கண்டிப்பா எழுந்து நடமாடுவாரு' என்றான்.

சற்று நேரம் அதையே பேசிக் கொண்டார்கள். பிறகு செல்வம் புறப்படும்போது அத்தை, மாமாவிடம் கேட்டான்.

'ஏங்கத்தே... இந்தக் கார்த்திகேயன் ஏதாவது இந்தப் பக்கம் வந்தானா? என்று.

'அப்போதுதான் அந்த விஷயம் அவர்கள் மனத்திலும் உதித்தது.

'அட... ஆமா! வெண்ணிலா கல்யாணத்துக்கப்புறம் அவன் ஆளையே காணலை' என்று சொன்னார் நாகேஸ்வரி.

'அவன் கிடக்கிறான்... கிறுக்குப்பய... அவன் வராம இருக்கறதே நல்லது!' என்றார் சங்கரராமன் மிகவும் கடுப்பாக.

சொல்லப் போனால் சங்கரராமனின் சகோதரி மகன் அவன். ஆனால் அவருக்கு அவனைப் பிடிப்பதில்லை. தன் தங்கையின் வயிற்றில் பிறக்க வேண்டியவனே அல்ல என்றே சொல்லுவார். அதிலும் திருமணம் நிச்சயமான நிலையில் அடுத்த நாள் கல்யாணம் என்றிருக்கும் போது போய்க் கல்யாணத்தை நிறுத்தி விடு என்று மகளிடம் கேட்டான் என்றறிந்ததில் இருந்து மிகக் கடுமையான கோபம்.

ஆள் மட்டும் எதிரில் வந்தான் கடித்துக் குதறி விடுவேன் என்ற மனநிலையில்தான் இருந்தார். அதற்கேற்பவோ என்னவோ காத்திகேயன் மட்டுமல்ல அவன் பெற்றோரும் கூட அவர்கள் வீட்டுக்கு வரவேயில்லை.

'விட்டுது சனியன்... போ!' என்று தன் மனைவியிடம் சொல்லி விட்டார். ஆனால், அன்றைக்கெல்லாம் வீட்டுக்குப் போனபின்னும் செல்வம் ஏதோ யோசனையாகவே இருந்தான்.

தெரிந்தோ, தெரியாமலோ ஒரு முக்கியமான புள்ளியை நோக்கி தன் சிந்தனை போய்க் கொண்டிருக்கிறது என்பதை அவன் அன்றைக்கு அறியவில்லை.

∴ ∴ ∴

'சுதா.. என்ன ஆச்சு?' என்றாள் வெண்ணிலா ரகசியம் போல.

'அண்ணி! கிட்டத்தட்ட எல்லாம் முடிவான மாதிரித்தான்..!' என்றான் சுதாகரன்.

'சுதா! எதுக்கும் அவரைக் கேட்டுக்கணும் இல்லே! அவருக்கும் பிடிக்கணும் இல்லே!' என்றாள்.

'அதெல்லாம் நீங்க கவலைப்படாதீங்க... கிட்டத்தட்ட அதே மாதிரி ஒரு இட்டம் கோயமுத்தூருக்கு வருது. இந்த மாசக் கடைசியில அந்த அண்ணனுக்குக் காட்டி ஓ.கே. பண்ணி,



இங்கிருந்து ஒரு சிக்னல் குடுத்துட்டாப் போதும் ஒரே வாரத்துல இட்டம் வந்து இறங்கிடும்' என்றான்.

'என்னத்தைடா... இட்டம். இட்டம்னு ஏதோ சினிமாவுல கள்ளக் கடத்தல் செய்யறவங்க மாதிரி பேசிக்கறீங்க?' என்று வந்தார் வேலுசாமி.

சுதாகரன் செல்லமாக அப்பாவை முறைத்தான். 'என்னப்பா... நீங்க... எங்களை வில்லன் மட்டத்துக்கு இறக்கிட்டீங்க?' என்றாலும் விவரம் சொன்னான்.

வேலுசாமி ஆர்வமானார் 'பரவால்லைடா.. நல்ல ஐடியாதான்!' என்றார்.

'யாரோட ஐடியா?' என்று ஆர்வமாகக் கேட்டார்.

'வேற யாரு... இப்படியெல்லாம் யோசிப்பா? வெண்ணிலா அண்ணிதான்' என்றான் சுதாகரன்.

'பரவால்லையே மருமக!' என்று ராஜேஸ்வரியும் மகிழ்ந்து கொண்டார்.

வெண்ணிலா தனக்குள்ளாகவே ஆழ்ந்தவளாகச் சொன்னாள்.

'ஏங்க மாமா! இந்த சக்கர நாற்காலி வந்ததுக்குப் பிறகு அவரு ரொம்ப சந்தோஷமா இருக்காரு. அது மட்டுமல்ல... அகலமான பெஞ்சை ரெண்டு மூணு வரிசையா வைக்கச் சொல்லி மத்தவங்க தூக்கணுங்கற அவசியமில்லாம இப்பத் தானே நகர்ந்து சக்கர நாற்காலிக்கு வந்தர்றாரு... தெரியுமா?'' என்றாள்.

'ஆமா! நானும் பாத்தேன்!' என்றார் அப்பா. உடனே அம்மா பாசம் நிறைந்த குரலில் சொன்னார்.

'சின்னதா... இருக்கறப்பவே.... கீழே விழுந்தான்னா, தானேதான் எழுந்துக்கணும்னு அடம் பிடிப்பான். யாருக்கும்

தொல்லை குடுக்க மாட்டான். அவனுக்குப் போய்க் கடவுள் இப்படி சோதனை குடுத்துட்டாரே' என்றார் கண்கள் கலங்கிட.

'இப்ப எதுக்குக் கவலைப்படறீங்க! நான் கும்பிடற தெய்வமெல்லாம் உண்மையான தெய்வமாக இருந்தா... என் விரதமெல்லாம் உண்மையானதாயிருந்தா... இன்னும் ஒரு வருஷத்துல உங்க பிள்ளை எழுந்து நடமாடத்தான் போறாரு.' என்றாள் வெண்ணிலா சற்றே ஆவேசமாக.

சற்று நேரம் கனமான அமைதி நிலவியது. பிறகு சொன்னான் 'மாமா! நான் ஐடியா சொல்றேன். நம்ம மாருதி வேன்லயே அவரை தினமும் ஆபீசுக்குக் கூட்டிட்டுப் போனா... என்ன? தோட்டத்துக்கு அங்கே இங்கேன்னு வெளியே கூட்டிட்டுப் போனா... என்ன?' என்றான்.

'தட்ஸ் அன் ஐடியா' என்று உற்சாகமானான் சுதாகரன்.

'அண்ணி! இது எனக்கு ஏன் இத்தனை நாளாத் தோணலே... சரி. முதல்லே அவர் தினமும் ரெண்டு மணி நேரமாவது ஆபீஸ் வர்ற மாதிரி ஏற்பாடு செய்வோம்..' என்றான்.

தினகரன் பிற்பகலில் சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொள்வான்.

வெண்ணிலாவுக்கு உள்ளூர ஒரு கவலை இருந்தது. சமீபகாலமாகக் கணவன் ஒரு வெறியோடு உழைக்கிற மாதிரி இருந்தது. 'அதில் எத்தனை தடை வந்தால் என்ன? என்னை நான் புதுப்பித்துக் கொள்வேன்' என்கிற ஒரு வெறி தெரிந்தது. அந்த வெறியின் காரணமாக உடலை வருத்திக் கொள்கிற நிலை ஏற்பட்டுவிடக் கூடாதே என்ற பயமும் தோன்றியது. இயல்பான வெளி வட்டத்துக்குக் அவனைக் கொண்டு வந்தே ஆக வேண்டும் என்ற எண்ணம் வெகுவாகத் தோன்றியது.

பலவிதமாக யோசித்து யோசித்துத் திட்டங்கள் தீட்டிக் கொண்டிருந்தாள். அதன் முதல் படியாகத்தான் சக்கர நாற்காலி



யோடு அவனை அலுவலகத்தில் கொண்டு நிறுத்துவது என்ற முடிவு.

முடிவெடுப்பதில்தான் யோசனைகள் இருந்ததே தவிர செயல்படுத்துவதில் எல்லாரும் தீவிரமானார்கள்.

சரியாகப் பத்தாவது நாள்!

அலுவலகம் முழுவதும் அவன் வருகைக்குத் தயாராய் இருந்தது.

வெண்ணிலா தன் கணவனின் அறைக்குள் இரவு நுழைந்து செய்தியைச் சொன்ன போது அவன் அவளை ஆழப் பார்த்தான்.

அவள் இனம் கண்டு கொள்ள முடியாத உணர்வுகள் அந்தக் கண்களில் தோன்றி மறைந்தன.

அந்தக் கண்களில் தெரிந்த உணர்வுகளினால் கவரப்பட்டவளாக அவள் திகைத்துப் போய் நின்றாள்.

## 13



கும்பல் கும்பலாக அவனைப் பார்ப்பதற்கு வந்தார்கள்.

'விட்டுடுங்க... சுதா! ஒரு நாள்ல ஒண்ணும் வேலை கெட்டுடாது!' என்றாள் வெண்ணிலா.

'ஐயா... சின்னய்யா... நல்லாத்தான் எல்லா வற்றையும் நிர்வாகம் பண்ணினாங்க. ஆனாலும் நீங்க இருந்து நடத்தற மாதிரி இருக்குமுங்களா?' என்றார்கள்.

'அண்ணி! பாத்தீங்களா? ரொம்பத் தூக்கி வக்கற மாதிரி வச்சு கவுத்திட்டானுங்க பாத்தீங்களா?' என்று முணுமுணுத்தான் சுதாகரன்.

கோபித்துக் கொண்டு விட்டானோ என்று திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். ஆனால் சிரித்தான். அதற்குப் பிறகுதான் வெண்ணிலா நிம்மதியடைந்தாள்.

'ஏம்பா... தம்பி! ஒரு ரவுண்டு பாத்தர்லாமா?' என்றான்.

வெண்ணிலா தள்ளிக் கொண்டு வர சக்கர நாற்காலியை சம்பீரம் குறையாமல் ஒரு சுற்றுச் சுற்றி வந்தான்.

ஏதோ குகையிலிருந்து வெளியே வந்த மாதிரி இன்றைக்கு உணர்ந்தான். மகிழ்ச்சி பெருக்கெடுத்தது. ஆனால், காட்டிக் கொள்ளாமல் அமைதியாக எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டு வந்தான்.

தினமும் அலுவலக விஷயங்களை வாய்மொழியாக மற்றவர்கள் மூலம் கேட்டுக் கொண்டாலும் நேரடியாக வந்து பார்ப்பதன் தன்மை இருக்காதல்லவா என்று எண்ணிக் கொண்டான்.

வெண்ணிலாவுக்கு இன்னொரு விஷயம் ஆச்சரியம் தந்தது. வீட்டில் கலகலவென்று சிரித்துக் கொள்கிற அண்ணனும் தம்பியும் இங்கே 'பிஸினஸ் லைக்' என்பார்களே அப்படி அளவாகவே மற்றவர்களிடம் பேசினார்கள். தேவையான பேச்சு.. ஆணித்தரமான பேச்சு. ஆணையிடும் தொனியிலான பேச்சு.

எப்படி இப்படி இளம் வயதிலேயே கணவன் வெற்றிகரமாக இத்தனை சாதித்திருக்கிறார் என்பது அவளுக்குப் புரிந்தது.

முழுவதும் சுற்றி வரவே ஒரு மணி நேரமாகியது. பிறகுதான் அறைக்கு வந்தார்கள். முக்கியமான வேலாண்மை. அலுவலகங் களுக்கு மட்டும் ஒரு சிறிய மீட்டிங் நடந்தது. அதற்காகத் தனியறையும் இருந்தது.



வெண்ணிலாவுக்கும் அவனுக்கு அருகிலேயே இருக்கை கொடுத்தார்கள். அவளும் அமர்த்தலாகவே நடப்பதைக் கவனித்துக் கொண்டாள்.

தனது அலுவலகம் பற்றிய விஷயங்களை அவன் துல்லியமாகத் தெரிந்து வைத்திருந்ததும், ஒவ்வொருவரையும் துருவித் துருவிக் கேள்விகள் கேட்டு விஷயங்கள் தெரிந்து கொள்வதும் அவளுக்குப் புதுமையாக இருந்தது. ஆனால், குறுகுறுக்கும் பார்வையுடன் அவள் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டாள்.

ஏதோ பேசிக் கொண்டே திரும்பியவன் கண்களில் அவளது குறு குறு பார்வை பட்டது போலும். கண்களில் லேசாக ஒரு சிரிப்பு மின்னி மறைந்தது.

அன்று அவன் கிட்டத்தட்ட ஏழெட்டு மாதங்களுக்குப் பிறகு அலுவலகத்திற்கு வந்ததைக் கொண்டாடும் விதமாக ஊழியர் களுக்குப் பகலுணவு கம்பெனியே வழங்கியது.

அவனும் கூட மேலாண்மைத் துறையில் இருந்தவர்களோடு விருந்தில் கலந்து கொண்டான்.

விருந்து முடிந்து சற்றே ஓய்வாக அமர்ந்திருந்த போது ஜி.எம். வந்தார்.

'சார் நீங்க சீட்ல இல்லைன்னவுடனே சில கம்பெனிகள் எல்லாம் ஆர்டரைக் குறைச்சுகிட்டாங்க... சுதாகரன் சார் பாஃபாமென்ஸ் பாத்துட்டு தேவைன்னா அதிகப்படுத்திக்கறோம்னு கட் அன்ட் ரைட்டா சொல்லிட்டாங்க' என்றார்.

அவன் புன்னகைத்தான்!

'வியாபாரிகள்னா அப்படித்தான் இருப்பாங்க. அவங்க பாதுகாப்பையும் பாத்துக்குவாங்க இல்லே. நீங்க எதுக்கும் எல்லாருக்கும் போன் பண்ணி எம்.டி. இப்ப ஆபீசுக்கு வர

ஆரம்பிச்சட்டார் அப்படின்னு தகவல் குடுங்க. அப்புறமும் இம்ப்ருவ் ஆகலேன்னா... நான் பேசறேன். சரியா?' என்றான்.

'சரிங்க... சார்!' என்று மலர்ச்சியாகப் போனார்.

வெண்ணிலா குறுக்கிட்டாள். 'சரி.. போதுங்க! கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்குங்க. அப்புறம்.. கிளம்பிடலாம்..' என்றாள்.

அவன் ஒன்றும் பதில் பேசவில்லை. அவள் 'நான் ஜி.எம்கிட்டே இனிமே யாரையும் பாக்க அனுப்ப வேண்டாம். நாளைக்குப் பாத்துக்குலாம்னு சொல்லீட்டு.. வர்றேன்' என்று போனாள்.

சொல்லி விட்டுத் திரும்பி அறைக்குள் நுழைபவனின் கண்களில் அந்தக் காட்சி தென்பட்டது. அவன் மேஜை மேல் இருந்த கம்பெனியின் பெயர் போர்டை ஆசையுடன் தடவிக் கொடுத்தபடி தனது அறையை ஆவலான பார்வையால் அளந்து கொண்டிருந்தான்.

கனமான உணர்வுகள் முகத்தில் மோதி மறைந்தன. உதடுகள் துடித்தன. கண்களில் கண்ணீர் திரண்டது.

'அத்தான்!' என்றாள் அவள் சற்றே திகைப்புக் கலந்த பார்வையுடன்.

'என்ன ஆச்சு' ஏன் இப்படி இமோஷனலா ஆகறீங்க?' என்றாள் கலங்கின குரலில்.

அவன் சட்டென்று எதிர்பாராத விதமாக அவள் வயிற்றில் முகம் பதித்துக் கொண்டு மௌனமாகக் கண்ணீர் வடித்தான். அவன் கைகள் அவள் இடுப்பைச் சுற்றிக் கொண்டன.

வெண்ணிலா நெகிழ்ந்து போனாள். அன்புடன் அவன் தலையைக் கோதிக் கொடுத்தாள்.

அவளுக்குப் புரிந்தது. மின்னலைப் போல் வேகத்தோடும் சுறுசுறுப்போடும் நடமாடிக் கொண்டிருந்த ஒரு இளம் வயது



நிர்வாகிக்கு படுக்கையில் முடக்கிக் கிடப்பது என்பது எவ்வளவு கடினமான காரியம் என்றும், அவன் எவ்வளவு தூரம் தன் தொழிலை நேசித்திருக்கிறான் என்றும் மெல்ல அடங்கினான். நிமிர்ந்தான். முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டான். அவள் இங்கிதம் அறிந்தவளாய் பக்கத்தில் இருந்த ஒய்வறைக்கு சக்கர நாற்காலியை நகர்த்திப் போனாள்.

வாஷ்பேசினில் முகம் கழுவிக் கொண்டான். பிறகு சற்று முன் உதடுகள் துடிக்க அழுதது இவன்தானா என்று அவளே வியப்படையும் வண்ணம் பளிச்சென்று சிரித்தான்.

'தாங்க்ஸ்... நிலா! ரொம்பத் தாங்க்ஸ்' என்றான்.

அவள் புன்னகைத்தாள். 'உனக்குத் தெரியாது நிலா. பாத்துப் பாத்து நான் படிப்படியாக உருவாக்கின நிறுவனம் இது. அதுக்கே கூட வர முடியாம நிர்வாகம் பாக்க முடியாம... ரொம்ப ஏங்கிப் போயிட்டேன்' என்றான்.

'ஐ கேன் அன்டர்ஸ்டான்ட்!' என்றாள் வெண்ணிலா.

அவன் அவளைக் கவனியாதவன் போல தொடர்ந்தான்.

'அது மட்டும் இல்லே! சுதா கெட்டிக்காரன். ஆனா, இதுல அனுபவம் இல்லாதவன் எம்.டி எந்த நேரம் வேண்ணாலும் வருவாரு... அப்படின்னு இருந்தாத்தான் நிர்வாகத்துல ஒரு ஒழுங்கு இருக்கும்' என்றான்.

தினகரன் தன்னிடம் எந்த விதமான பதிலையும் எதிர்பார்க்க வில்லை என்பதை உணர்ந்து அவள் அமைதியாகக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

'இன்னைக்கு நான் ரொம்ப நிறைவா உணர்றேன். மை டியர் ஏன்ஜல்' என்று கலகலவெனச் சிரித்தான்.

முதன் முதலாகத் தன்னிடம் அப்படிப் பேசுகிற கணவனை அவள் நாணத்துடன் பார்த்தாள். ஆனால் பதில் எதுவும் தராமல் நின்றாள்.

அவன் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டாற் போல் இருந்தது.

'சரி... வெண்ணிலா! நாம கிளம்பலாம். ஜி. எம்மையும், பர்ஸனல் மேனேஜரையும் இன்டர்காம்ல கூப்பிடு. ஒண்ணு ரெண்டு முக்கியமான விஷயங்கள் சொல்ல வேண்டியிருக்கு' என்றான்.

அவன் கட்டளைக்கு உடனே கீழ்ப்படிகிற மனைவியை அவன் மகிழ்வுடன் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

∴ ∴ ∴

'என்னம்மா செய்யறே சமையல் ரூம்ல?' என்று வந்தார் ராஜேஸ்வரி.

'அத்தை. அவரு தூங்கறாரு. எனக்குத்தான் பகல் தூக்கம் பழக்கம் இல்லையே.

'ஆமாம்மா! அவனும் கூட முன்னேயெல்லாம் பகல்ல தூங்க மாட்டான். இப்ப இந்த ஆக்ஸிடென்டுக்குப் பிறகுதான்....

அவள் அன்புடன் சிரித்தாள். 'தெரியுங்கத்தே. முதல்லேயெல்லாம் தூங்க மாட்டாரு. நான்தான், சாயங்காலமும் பிஸியா இருக்கீங்க... கொஞ்சமாவது தூங்குங்கன்னு தூங்க வைப்பேன்' என்றாள்.

அத்தை எட்டிப் பார்த்தார். 'மைசூர்பாகு கிண்டிக் கொண்டிருந்தாள்.

'அடடே! மைசூர்பாகு... உனக்கே செய்யத் தெரியுமா... என்ன? எனக்கு வரவே வராது. நான் எது வேண்ணாலும் கடையில



வாங்கிக்கறது. தீபாவளி சமயங்களில் நிறைய எல்லாருக்கும் குடுக்க வேண்டியிருக்கும் இல்லே. அப்ப மட்டும் ஆளை வச்சுச் செஞ்சுக்கறது' என்றார்.

அவள் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டே மைசூர்பாகுக் கலவையைக் கிளறிக் கொண்டிருந்தாள். 'எங்க அத்தை ஒருத்தருங்க எல்லா ஐட்டமும் நல்லாச் செய்வாங்க... அவங்கதான் எனக்கு நிறைய டிப்ஸ் சொல்லிக் குடுத்தாங்க... இப்ப, உப்புமா முதல் கொண்டு கிச்சடி வரை தண்ணி வைக்கும்போது உப்புப் போடுவோம் இல்லே. அது லேசாக் கரிக்கிற மாதிரி இருக்கணுமாம். அப்புறம் கொதிச்சதுக்கப்புறம் ரவையோ, சேமியாவோ எதைப் போட்டுக் கிளறினாலும் உப்பு சரியா இருக்கும். அப்புறம், இந்த மைசூர்பா கிளறும் போது குமிழ் குமிழா வர்ற பதத்துல கிளறி நெய் விட்டு ஒட்டாம வர்ற வரைக்கும் கிளறி கெட்டிப் பதத்துல தட்டில ஊத்தி ஆற விடணும். அல்வா மாதிரி ஐட்டங்களுக்குக் குமிழ் பதத்துல இறக்கிடணும். இப்படி நிறைய சொல்வாங்க... அதைக் கேட்டுக் கேட்டு அவங்க செய்வதைப் பாத்து அப்புறம் கூடவே செய்யப் பழகிகிட்டேன்' என்றாள்.

பேசிக் கொண்டே கலவையை எடுத்துத் தட்டில் ஊற்றித் துண்டுகள். மாதிரிக் கீறி விட்டாள். 'அப்புறம் ஆறிருச்சுன்னா எடுக்க வசதியாயிருக்கும்' என்று சிரித்தாள்.

கேக் அவன் வாங்கிக் குடுங்க.... 'அத்தை! வீட்லயே கேக் செய்யறேன்' என்றாள்.

'வாங்கிக்கலாம்மா!' என்றார் அத்தை.

'அப்புறங்கத்தை! எங்க வீட்ல நான் ஒருத்திதானே எத்தனைதான் பலகாரத்தை நானே சாப்பிடறது. போங்க.. அதனால் எங்க அத்தை. மாமா எல்லாம் வரும்போது செய்வோம். ஆனா இங்கே சுதா, அவருன்னு சாப்பிடறதுக்கு ஆட்கள் இருக்கறதுன்னாலே செய்யறதுக்கு ஆர்வமா இருக்கு...' என்றாள்.

பேச்சுக்கு நடுவே அத்தை அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்தார்.

'எம்மா! இந்த வீட்ல நீ சந்தோஷமாத்தானே இருக்கே! நான் கேட்கறது புரியுதாம்மா' என்றார்.

அவள் அத்தையை நேரடியாகப் பார்த்தாள். பிறகு சொன்னாள். 'அத்தை! சந்தோஷம்கறது மனசுலதான் இருக்கு. இப்ப என்ன? அவருக்கும் சின்ன வயசுதான். எனக்கும் வயசிருக்கு. எனக்கு நம்பிக்கையிருக்கு. எப்படியும் இன்னும் ஒரு வருஷத்துக்குள்ள யாவது அவரு எழுந்து நடமாடுவாரு. உங்க மகன் ரொம்ப வில் பவர் உள்ள ஆளுங்க.. அத்தை! இதுவரைக்கும் இப்படி ஆகிப் போச்சேன்னு அவர் புலம்பி நான் பார்த்தது இல்லே. இதை நான் ஜெயிப்பேன்கற மனோபாவம்தான். அதனால எனக்குக் கண்டிப்பா நம்பிக்கையிருக்கு. எனக்கு மனசுல எந்தக் குறையும் இல்லங்கறதை. நீங்க நிம்மதியாக இருங்க' என்றாள்.

பேசிக் கொண்டே கொஞ்சம் கோதுமைப் பக்கோடா செய்தாள். அதே நேரம் சக்கர நாற்காலியைத் தன் கைகளால் உருட்டிக் கொண்டே 'ஹலோ! என்ன நடக்குது இங்கே!' என்று சுறுசுறுப்பாக வந்தான் தினகரன்.

அம்மா திரும்பி அவனைப் பார்த்தார். சிரித்தார்.

'தம்பி! நீ முதன் முதலா ஆபீசுக்குப் போனதுக்காக உன் வைஃப் ஸ்வீட் காரம்னு அமர்க்களப்படுத்தறா' என்றார்.

அவன் அவளைப் புன்னகையுடன் பார்த்தான்.

'எங்கே... அந்தக் கத்தியைக் குடு. வில்லையை எடுப்போம் என்று அவனே ஒரு வில்லையை எடுத்து வாயில் போட்டான்.

'சும்மா! அப்படியே வாயில் கரையுது. சூப்பர் டேஸ்ட்!' என்று சிரித்தான்.

வெண்ணிலா மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.



'சின்னவன்.... எங்கேப்பா? அவனை வரச்சொல்லு. அவனுக்கு மைசூர்பான்னா ரொம்ப இஷ்டம்' என்றார் ராஜேஸ்வரி.

அதற்குள் தினகரன் திரும்பி வெண்ணிலாவை பார்த்தான்.

'ஹேய்! நிஜம்மா... நீயேவா செஞ்சே? மைசூர்பா... அவ்வளவு சீக்கிரம் செய்ய வராதும்பாங்களே!' என்றான்.

ஒரு தட்டில் நிலா மறுபடியும் மைசூர்பாவையும் பகோடாவை யும் வைத்துக் கொடுத்தாள். சாப்பிட்டுக் கொண்டிருக்கையிலேயே அவள் சொன்னாள்.

'சும்மா.. ஒண்ணும் வர்லே. ஒரு தடவை உதிரி உதிரியா குழாய்ப்புட்டை உதிர்த்த மாதிரி ஆயிடுச்சு....' என்று சிரித்தாள்.

அவனும் சிரித்தான்.

'அப்புறம்.. ஒரு தடவை சுத்தியல் வச்சு உடைச்சோம்' என்று மறுபடியும் சிரித்தாள்.

தாயும், மகனும் சிரித்தார்கள். 'இப்படி ஒரு நாலைந்து தடவை மூக்குடைபட்டு, விழுப்புண்பட்டு, அப்புறம்தான் பக்குவம் கிடைச்சுது..' என்றாள்.

அவன் மனதில் 'ஆமா, வாழ்க்கைக்கும் கூட இப்படித்தான். இல்லே!' என்ற எண்ணம் தோன்றியது. அவள் கணவனிடம் சொன்னாள்.

'அத்தான்! அதுதான் அத்தை கிட்டே 'கேக்' ஓவன் வாங்கிக் குடுக்கச் சொல்லியிருக்கேன். எதுக்கும் தயாராயிக்குங்க... கொஞ்ச நாளைக்கு உங்களுக்குத் தீஞ்சு போன கேக்கெல்லாம்தான் கிடைக்கப் போகுது..' என்று சிரித்தாள்.

'கவலைப்படாதே... தங்கம்ஸ்' என் ஃபிரண்டோட வைஃப் ஒருத்தங்க... குக்கரி கிளாஸ் எடுக்கறாங்க... போயிட்டு வருவியாம் என்றான்.

'ம்ஹூம்... சான்ஸே இல்லை. நீங்க எழுந்து நடமாடற வரைக்கும்... நான் உங்களை விட்டுட்டு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் நகர்றதாகவே... இல்லை...' என்றாள்.

அம்மாவும், மகனும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு ராஜேஸ்வரி சொன்னார்.

'அதெல்லாம் நடக்காது... பொண்ணே! தலை தீபாவளி வருது. அப்ப மகனும் நீயும் உங்க அம்மா வீட்டுக்குப் போகத்தானே வேணும்' என்றார் சிரித்தபடியே.

அவள் அவனைக் கேள்விக்குறியாகப் பார்த்தாள். அவன் கண்ணமர்த்திப் புன்னகைத்தான்.

'போலாம்!' என்றான்.

மறுபடியும் அம்மா சிரித்தார். 'தெரியும்... பொண்ணே! நீ உன் வீட்டுக்காரன்... சரின்னு சொல்லாம வாயைத் திறக்க மாட்டேன்னு தெரியும்... அதெல்லாம்... நாங்க அவன்கிட்டே கேட்டுட்டோம். கேட்டுத்தான் உங்க வீட்டுக்கு சம்மதம் சொன்னோம்' என்றார்.

அதே நேரம் சுதாகரன் உள்ளே நுழைந்தான்.

'அடப்பாவி! மைசூர்பாகுக்கும் பகோடாவுக்குமா ஆபீஸை விட்டுட்டு ஓடி வந்தே?' என்று சிரித்தான் தினகரன்.

'சும்மாயிருண்ணா! அண்ணியோட கைப்பக்குவத்திலே சூடா சாப்பிடறதே... சுகம்தான்' என்றான் சுதாகரன்.

வெண்ணிலாவிடம் மெதுவாகச் சொன்னான். 'அண்ணி மெசேஜ் குடுத்து வரச் சொன்னதே அவருதான். இப்ப டிராமா பாருங்க!' என்றான்.

'தெரியும்... தெரியும்... அவரு அதெல்லாம் செய்வாரு' என்று



'என்னடா குசு குசுன்னு பேச்சு!' என்றான் தினகரன்.

'அதெல்லாம்... நீ கேக்கக் கூடாது!' என்றான் சுதாகரன்.

வெகு நாட்களுக்குப் பிறகு வீட்டில் கலகலப்புத் திரும்பியிருப்பதை ஆசையுடன் பார்த்துக் கொண்டார் ராஜேஸ்வரி.




ஹாலின் மையப்பகுதியில் கடைபரப்பினாற் போல் வித விதமான புடவைகள் பரந்து கிடக்க, தினகரன் சோபாவில் அமர்ந்தபடி அன்றைக்கு பார்வையிட்டுக் கொண்டிருந்தான்.

'எங்கே... அதை எடுங்க... இது...!' என்று தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தான்.

ஹாலின் நுழைவு வாயில் நின்ற வெண்ணிலா 'என்னங்க... செய்யறீங்க? என்றாள்.

'அடடா! வந்துட்டியா... நீ வர்றதுக்குள்ளே முடிச்சர்லாம்னு பார்த்தேன்...' என்று சிரித்தான்.

அவளை ஒரு நிமிடம் கூர்ந்து பார்த்தான்.

அன்று வெள்ளிக்கிழமையென்பதால் தலையைக் குளித்து விட்டு மெல்லிய கரை போட்ட பட்டுப் புடவையில் நின்றாள்.

'கோயிலுக்கு அபிஷேகத்துக்குக் குடுத்திருக்கேன்' என்று சொன்னாள் நேற்று இரவு

'என்ன விசேஷம்?' என்றான் தினகரன்.

'இல்லே... ஆபீசுக்குப் போக ஆரம்பிச்சிருக்கீங்க... எந்த விக்கினமும் இல்லாம... எல்லாம் நடக்கணும். அது மட்டுமில்லாம எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்துல நடந்து போகணும்' என்றாள்.

'ஐய்யோ! இவ்வளவு தூரத்திலிருந்து அவ்வளவு தூரத்துக்கு நடந்து போறதா?' என்று அவன் அதை வேடிக்கையாக்க முயன்றான்.

'இந்தக் குறும்புதானே வேண்டாங்கறது?' என்று சிரித்தாள். அந்த நேரம் அவனுக்குத் தன் அம்மா கேட்ட கேள்வி நினைவு வந்தது. அதற்கு தன் மனைவி சொன்ன பதிலும் நினைவு வந்தது.

இதுவரையிலும் தான் ஒரு தடவை கூட வருத்தப்பட்டுக் கொள்ளவில்லை. புலம்பவில்லை என்று அம்மாவிடம் பெருமையாகச் சொல்லிக் கொண்டது நினைவு வந்தது.

அவனுக்கும் அதே வியப்பு இருந்தது. அவளும் கூட இதுவரை வருத்தமாகப் புலம்பியதேயில்லை.

அவனுக்கு சுறுசுறுப்பாக இருக்கிற மாதிரி வேலைகள் இருக்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டாள். அவன் லேசாகக் களைப்பாக உணர்ந்தாலும் சரி உடனே புரிந்து கொள்வாள். அவனிடம் 'போதுங்கத்தான்... கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க' என்று நகர்த்தி வந்து விடுவாள்.

தனக்கு அது வேண்டும், இது வேண்டும் என்று யோசிக்கவே இல்லை. அவனைச் சுற்றியே தன்னுடைய நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டாள். அவனுக்கென்று ஒதுக்கிய நேரம் போகத்தான் தனக்கென்று நேரம் ஒதுக்கிக் கொண்டாள்.

போன வாரத்தில் ஒரு நாள் கேட்டான்' ஏன்... நிலா! ஹஸ்பெண்ட் அண்ட் வைஃப்ன்னு இருந்தா... ஒரு நேரம் சண்டை போடணும்... ஒரு நேரம் கொஞ்சிக் குலவிக்கணும்... இல்லே!' என்றான்.

அவள் புன்னகைத்துக் கொண்டு சொன்னாள். 'காலம், எங்கே போயிடப் போகுது? எல்லாம்... நடக்கத்தான் போகுது..' என்றாள்.

அவன் சுவாரசியமாகப் பார்த்தபடி கேட்டான்.



'ஏன்.. நிலா... என் ஃபிரண்ட்ஸ் எல்லாம் சொல்றாங்க.. லேடீஸ் மாதிரி அன்பைக் கொட்டறவங்களும் இருக்க மாட்டாங்க. லேடீஸ் மாதிரி சண்டை போடறவங்களும் இருக்க மாட்டாங்களாமே!' என்றான்.

அவள் முறுவலித்தபடி சொன்னாள். 'ஏங்க... எங்கே பிரியம் இருக்கோ... அங்கதானே எல்லா உணர்வுகளையும் கொட்ட முடியும்...' என்று.

'அது அப்படித்தான்' என்ற ஒத்துக் கொண்டான். ஆனால், அவனுடைய எதிர்காலத்தை உத்தேசித்து நடந்து கொள்வதாக நினைத்துக் கொண்டு. அவனைப் பற்றிய தனது உணர்வுகளை திரையிட்டு மறைத்துக் கொள்கிறான் என்பது தெரிந்திருந்தது. ஆனாலும் அவன் மனத்தில் நம்பிக்கை வருகிற வரை ஏன் தானாக மேலே விழுந்து பிடுங்க வேண்டும் என்பது போலவும் எண்ணிக் கொண்டாள். அதனால் அவன் போக்கிலேயே போனாள்.

இப்போது என்ன? திடீரென்று புடவை செலக்ஷன் நடக்கிறது என்று ஆச்சரியம். ஆனாலும் மகிழ்ச்சி.

'இங்க வா... நிலா... இது பிடிக்குதான்னு... பாரு!' என்று ஒரு புடவையைக் காட்ட, அவள் செல்லமாகச் சிணுங்கினாற் போலத் தலையசைத்தாள்.

'ம்.. ஹூம்...! எனக்குத் தெரியாம சர்ப்ரைஸாத்தானே செலக்ட் பண்ணனும்னு நினைச்சீங்க... இப்பவும் அப்படியே செய்ங்க... நான் மாடிக்குப் போறேன்.' என்று நகர்ந்தாள்.

'சரி... சரி... உட்காரு!' என்றான். சரியென்று அமர்ந்தாள்.

'தனது நிறத்துக்கும், உடம்பு வாகுக்கும் ஏற்றவாறு அவன் புடவைகளை செலக்ட் செய்து பார்த்து அவளுக்கு ஒரே ஆச்சரியம்

உயர்ந்த விலையில், நடுத்தர விலையில் என்று அவர்கள் எடுப்பதே அவளுக்கு சற்று அதிகமாகத் தோன்றியது.

'ஐயோ! இத்தனை விலையா?' என்றாள் ஆங்கிலத்தில்.

'ஆமா... நம்ம கம்பெனி ஆண்டு விழா வருது. தீபாவளி வருது... என்றான். மேலும் சிரித்துக் கொண்டே 'ஹேய்! எந்தக் கமெண்டும் சொல்றது இல்லேன்னு சொல்லியிருக்கே...!' என்றான்.

'ஓ.கே... ஓ.கே... சரி! சரி!' என்று அமைதியானாள்.

ஜவுளிக் கடைக்காரன் போனதற்குப் பிறகு மாடியில் தங்கள் அறையில் வைத்துக் கேட்டாள்.

'எப்படி இவ்வளவு அழகாகச் செலக்ட் செய்யறீங்க?' என்றாள்.

அவன் கண்களில் குறும்பு மின்னப் பார்த்தான். 'ஹேய்! நீ சந்தேகப் படற அளவுக்கெல்லாம் ஒன்றும் இல்லே. புடவை செலக்ஷன்னு உட்கார்ந்தது இதான் முதல் தடவை போதுமா?'

'ஐயய்யோ! நான் அப்படிச் சொல்லலே!' என்று அவள் பதற...

'சரி... சரி...' என்று ஆசுவாசப்படுத்தினான்.

'அத்தான்! உங்களுக்கு ஒன்றும் வாங்கிக்கலியா?' என்றாள்.

'நாளைக்கு மென்ஸ் வேர் கொண்டு வரச் சொல்லியிருக்கேன். நீயே செலக்ட் செய்' என்றான்.

மெது மெதுவாகத் தன் கணவனுக்குத் தன்மேல் நம்பிக்கை வருகிறது என்று மகிழ்ச்சியானாள் அடுத்த வாரத்தில் அப்படியொரு நிகழ்ச்சி நடக்கும்வரை.

∴ ∴ ∴

'அண்ணன்கிட்டே சொல்லீட்டீங்களா?' என்று ரகசியமாய் கேட்டான் சுதாகரன்.

'இல்லே... சுதா! நாளைக்கு அந்த மாடல் வருதா...?' என்றாள் வெண்ணிலா ஆர்வமாக.



'ம்...! ரெடியாயிடுச்சு!' என்றான் சுதாகரன்.

'என்ன ஐடியா பண்ணியிருக்கீங்க! முதல்ல ஒரு தடவை பாத்துட்டு பிடிச்சிருந்தா மறுபடியும் ஆர்டர் செய்யறதா?' என்றாள்.

'இல்லண்ணி! ஆல்மோஸ்ட் அண்ணாவோட தேவைகளுக் கேத்த மாதிரித்தான் இருக்குதுன்னாரு. வேணும்னா இதையே வச்சுக்கலாம்' மைனர் சேன்ஜஸ்ன்னா அவர் இங்கயே வந்து செஞ்சு குடுத்துருவாரு' என்றான் சுதாகரன்.

∴ ∴ ∴

'என்னங்க! சீக்கிரம் ரெடியாகுங்க!' என்று பரபரப்புக் காட்டிக் கொண்டிருந்தாள் வெண்ணிலா.

'எதுக்கு இப்படி பரபரன்னு இருக்கறே!' என்று கடுப்பானான் தினகரன்.

'ப்ளீஸ்! கோபிச்சுக்காதீங்க! உங்களுக்காக நானும் சுதாவும் ஒரு சர்ப்ரைஸ் வச்சிருக்கோம்' என்றாள்.

'என்னது?' என்றான்.

'நீங்க கீழே வாங்களேன்...' என்றாள்.

'என்னது. குச்சி மிட்டாய் வாங்கித் தரேன்னு குழந்தைக்குச் சொல்ற மாதிரி எனக்கும் பாவ்லா காட்டிக்கிட்டிருக்கீங்க...' என்று கேட்டான். ஆனால் சஸ்பென்ஸ் தாங்காதவனாக இறங்கி வந்தான்.

போர்ட்டிகோவுக்கு வெளியே வந்தவன் அங்கே இருந்த பொருளைப் பார்த்து மலைத்துத்தான் போனான்.

∴ ∴ ∴

போன மாதத்தில் ஒரு நாள்!

வெண்ணிலா ஒரு தமிழ் வார இதழில் ஊனமற்றவர்களுக்காக் கைகளிலேயே அனைத்தையும் இயக்குகிற மாதிரி ஒரு கார் வடிவமைத்திருந்த ஒருவரைப் பற்றிப் படித்தாள்.

உண்மையில் தான் ஓட்டுவதற்காக முதலில் காரை வடிவமைத்தவர். தன் நண்பர் ஒருவர் கேட்கவே விற்றுவிட்டாராம். தனது தொழிலை மேலே தொடர முடியாமல் போன நிலையில் இதையே ஏன் தொழிலாகச் செய்யக் கூடாது என்று யோசித்து முடிவு செய்தாராம்.

இப்போது ஊனமுற்றவர்கள் தேவைகள் அறிந்து அதற்கேற்ற வகையில் வடிவமைத்துக் கொடுக்கிறாராம். அந்தக் கட்டுரையை வெண்ணிலா சுதாகரனிடம் காட்ட இருவருமாக வேலுசாமியிடம் கலந்தாலோசித்தார்கள். ஆர்டர் செய்தார்கள்.

அதுதான் இங்கே நின்று கொண்டிருந்தது!

தினகரன் நெகிழ்ந்து போய் சக்கர வண்டியில் அமர்ந்திருந்தான்.

பயிற்சி கொடுப்பதற்காக ஒரு ஆளும் வந்திருந்தார்.

'எங்கே! ஒரு ரவுண்ட் போலாமா?' என்றான் ஆர்வமாக.

'ஓ...!' என்று அவர்கள் வீட்டைச் சுற்றியிருந்த' அந்த ரோடுகளிலேயே ஒரு ரவுண்ட் போய் வந்தார்கள்.

வரும்போது அவனே டிரைவ் செய்து வந்தான்.

அந்த உதவியாளர் இறங்கியபடி சொன்னார்.

'சார்! உங்க பிரதர் ஒரே நாள்ல ஓட்டிடுவாரு' என்று.

தினகரன் காரை விட்டு இறக்கவில்லை. சகோதரனிடம் சொன்னான்.

'சுதா! நான் இன்னைக்கு ஆபீசுக்கு லீவ்!' என்றான்.



வெண்ணிலாவிடம் சொன்னான் 'நிலா... சாப்பிட்டு மூட்டை எதுவும் கட்டறதுன்னாக் கட்டு... நம்ம தோப்புக்கு ஒரு டிரைவ் போயிட்டு வரலாம்' என்றான்.

'அப்ப சரி! நானும் இன்னைக்கு லீவ்!' என்றான் சுதாகரன்.

வேலுசாமி சிரித்தார். 'சரிப்பா! நான் போறேன் ஆபீசுக்கு' என்றார்.

'வேண்டாம்ப்பா! எல்லாருமா தோப்புக்குப் போலாம்' என்றான் தினகரன்.

ஒரு காரில் தினகரனும், பயிற்சியளிப்பவரும் ஓட்ட மற்றொரு காரில் மற்றவர்கள் போனார்கள்.

மூன்றே மணி நேரம் அதற்காக ஒதுக்கி அவன் அந்தக் காரைக் கையாளக் கற்றுக் கொண்டான். பயிற்சி கொடுக்க வந்தவர் பக்கத்தில் யாரையோ பார்க்க வேண்டுமென்று போய் விட்டு வருகிறேன் என்று போனார்.

தினகரன் தோட்ட வீட்டுக்குள்ளேயே போகவில்லை. நான் வெளியே இருக்கிறேன் என்று கயிற்றுக் கட்டிலில் சாய்ந்து கொண்டான்.

'நிலா! இன்டோர்ல இருந்து சலிச்சுப் போயிடுச்சம்மா. இந்த வெளிக்காற்றும், இந்தப் பயிர் பச்சையைப் பாத்து கிட்டு இருக்கறதும் ரொம்ப நல்லாருக்கு' என்றான் மகிழ்ச்சியாக.

'உங்க இஷ்டம்ங்கத்தான்!' என்றான். உள்ளே அனுதாபம் பொங்கியது. ஆனால், அனுதாபம் அவனுக்குப் பிடிக்காத விஷயம் என்பது தெரியும்.

போன வாரத்தில் டாக்டர் அவனிடம் சொன்னது நினைவுக்கு வந்தது.

'அம்மா! நானும் எத்தனையோ பேஷன்ட்ஸைப் பார்த்திருக்கேன். படிச்சவங்க, படிக்காதவங்க, வசதியானவங்க... எல்லாருமே ஆரோக்கியமா இருந்து இப்படி ஆனாங்கன்னா டிப்ரஷன் வரும். ரொம்ப இமோஷனலா ஆவாங்க... ஆனா, இது எதுவுமே இல்லாம, சரி... இப்படி ஆகிப் போச்சு! இதை என்ன செய்யலாம்னு யோசிச்சு, சூழ்நிலைகளையே தனக்கு ஏற்ற மாதிரி மாத்திக்கிற பேஷன்ட்ஸ் ரொம்பக் கம்மி. அதுல உன் ஹஸ்பென்ட் பெஸ்ட்ம்மா...' என்றார்.

அதை இப்போது கணவனிடம் பகிர்ந்து கொண்டாள். அவன் புன்னகைத்தான்.

'ஆமா! இப்படி ஆகிப் போச்சேன்னு புலம்பிகிட்டு இருக்கறதுனால என்ன ஆகப் போகுது? எப்படியோ நமக்கு மீறின விஷயங்களுக்கு வேற என்ன ஆல்டர் நேடிவ்ன்னு பாக்க வேண்டியதுதான்' என்றவன் ஒரு நிமிடம் அவளைப் பார்த்தான். பிறகு சொன்னான்.

'அதையேதான்.. நான் உனக்கும் சொல்றேன்' என்றான்.

அவன் பேச்சு இப்படித் திரும்பும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால், அதற்காக அயர்ந்து போய்விடவில்லை.

சுற்று முற்றும் பார்த்தாள். பிறகு குனிந்து அவன் முகத்தை ஒரு கைகளிலும் ஏந்தி பரிசுகள் அளித்தாள்.

அவன் திகைத்துப் போய் விழிப்பதை அன்புடன் பார்த்துச் சிரித்தாள்.

'அத்தான்! ஆல்டர்நேடிவ் யோசிக்கிற விஷயம் இதில்லை. ஏன் தெரியுமா? உங்களுக்கு என்னைப் பிடிச்சுப் போய் கல்யாணம் செஞ்சிங்க. நானும் மனசாரத்தான் சம்மதம் சொன்னேன். சம்மதம் சொன்னப்பவே...' என்று நிறுத்தினாள் முகம் சிவந்து போனது. மறுபடியும் தொடர்ந்தாள்.



'ஹஸ்பென்ட்ன்னு நினைக்க ஆரம்பிச்சாச்சு... நீங்களும் எத்தனையோ கற்பனைகள்ல இருந்திருப்பீங்க.. நானும் மனசால உங்களோட வாழ ஆரம்பிச்சாச்சு. அப்புறம்.. கேவலம் உடல் ஊனத்திற்காக விலகிப் போறவளா... நான்?' என்றாள்.

'ஆமா! நான் எவ்வளவோ கற்பனையில இருந்தேன். இப்பவும்... நான் ஏன் விலகி இருக்கேன் தெரியுமா? எதிலயும் அரை குறையாக அப்ரோச்சுங்கற பிடிக்காத விஷயம்?' என்றான். குரலில் ஆழ்ந்த சோகம் இழைந்தோடியது.

அவள் சட்டென்னு கலகலவென்று சிரித்தாள். 'இப்பவும்... என்னங்கத்தான்! எப்படியும் ஒண்ணு ரெண்டு வருஷத்துக்குள்ள உங்களுக்கு சரியாயிடும்னு எனக்கு நம்பிக்கையிருக்கு அதுவரைக்கும் மனமொத்த காதலர்களா இருப்போமே!' என்றாள்.

அவன் புன்னகைத்தான். தன் மனைவி தன்னைச் சமாதானப் படுத்துகிறாள் என்பது புரிந்தது.

அவன் கிசுகிசுப்பான குரலில் சொன்னான். 'நீ சரின்னு சொல்லு! இப்பவும் வாழ்க்கை பத்தின எத்தனையோ விஷயங்களை உனக்கு சொல்லிக் குடுக்க என்னால முடியும்' என்றான்.

அவள் முகம் சிவக்க கீழே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந் தாள். மெல்லிய குரலில் சொன்னாள்.

'நான் எப்ப மாட்டேன்னு சொன்னேன்?' என்று.

அவன் கலகலவென்று சிரித்தான்.

'அவள் பேச்சை மாற்ற விழைந்தவள் போல்.

'அத்தை கூப்பிடறாங்க!' என்று ஏதோ ஒன்றைச் சொல்லிக் கொண்டு நகர அவன் சிரிப்பு அவளைத் தொடர்ந்தது.

∴ ∴ ∴

'ஐய்யோ! வேண்டாங்க.. சார்! எதுக்கும் நீங்க ஒரு வாரம் இருந்துட்டுப் போங்க!' என்றாள் நிலா பயிற்சியாளரிடம்.

'வேண்டியதில்லிங்க... மேடம் 'உங்க வீட்டுக்காரர் இப்ப நாலு பேருக்கு டிரெய்னிங் குடுப்பாரு...' என்றார் அவர்.

'இல்லே சார்! எனக்கு பயமாயிருக்கு!' என்று அவள் வற்புறுத்துவதை அவன் ஒரு சிரிப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

'பாருங்க மேடம்! உங்களுக்காக ஒரு ரெண்டு மூணு நாள் இருக்கேன்!' என்றார்.

'ஹேய், நீ வா.. முன்னால உட்காரு' என்றான். அவள் அவன் அருகில் போய் அமர்ந்தாள்.

அவன் இலகுவாகக் கார் ஓட்டுவதையும் பழைய நாட்கள் போல் தானே ஒரு வாகனத்தைக் கையாள முடிகிறது என்ற மகிழ்ச்சி அவன் முகத்தில் தெரிவதையும் அவள் மகிழ்ச்சியுடன் கவனித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

கிளட்ச், பிரேக், ஆக்ஸிலேட்டர் எல்லாமே கையாலேயே கையாள்கிற மாதிரி வடிவமைக்கப்பட்டிருந்த கார் அவன் சொன்னபடி கேட்டது.

'ஹேய்! இப்பத்தான்... நானும் ஒரு மனுஷன்கற மாதிரி ந்தோஷமா இருக்கு!' என்று அவன் வாய்விட்டு சிரித்த போது வளும் சேர்ந்து கொண்டாள்.

இனிப் படிப்படியாக எல்லாம் சரியாகி விடும் என்று னைத்தற்கு மாறாகத் தன் வாழ்க்கையையே புரட்டிப் போடக் ய அந்தச் செய்தி அவளுக்காகக் காத்திருக்கிறது என்பதை ன் அறியவில்லை.






தலை தீபாவளியை சிறப்பாகவே கொண்டாடி முடித்து விட்டார்கள். தினகரனும் வெண்ணிலாவும்.

தலை தீபாவளிக்காக மாப்பிள்ளையும், பொண்ணும் வந்தது குறித்து வெண்ணிலாவின் பெற்றோருக்கு மிகவும் மகிழ்ச்சி. அதிலும் விஸ்ராந்தியாக இரண்டு நாட்கள் முன்னதாகவே வந்ததில் இன்னும் மகிழ்ச்சி.

தனது கம்பெனிக்கு தீபாவளி சமயத்தில் மூன்று நாட்கள் விடுமுறை கொடுத்து விடுவான் தினகரன். போனஸ் பெற்றுக் கொண்டு அவரவர்கள் வெளியூருக்குப் போக விரும்பினால் போய் வரட்டுமே என்பது அவன் எண்ணம்.

திருமணமாகாத இளைஞர்கள் பலர் வெளியூரிலிருந்து வந்து வேலை செய்தார்கள். அவர்கள் பெற்றோரைப் பார்த்து விட்டு வரட்டும் என்றும் நினைப்பான். அதனால் மாமனார் வீட்டுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகவே வந்துவிட்டான்.

தினகரனின் வீட்டோடு ஒப்பிடும் போது சிறிய அளவிலான வீடு என்றாலும் ஒரு ஹால், இரண்டு மூன்று அறைகள் இருந்தன என்பதால் பிரச்சினையிருக்கவில்லை.

தினகரனும், வெண்ணிலாவும் அவன் ஊனத்தை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளாதவர்கள் போல் இயல்பாகவே நடந்து கொள்ளவே யாருக்கும் அது பற்றிய பேசுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது.

வெண்ணிலா அவன் எடுத்துக் கொடுத்திருந்த அரக்கு நிறப் பட்டுப் புடவையில் வந்து நின்றபோது அவன் கண்கள் விழுங்கினாற்போல் பார்த்தன. அதற்கு மேட்சாக சிவப்பு வெள்ளைக் கற்கள் பதித்த ஒற்றை வரியிலான நெக்லஸ் மேட்சாக வளையல்கள் என்று அழகாக இருந்தாள்.

வெண்ணிலா*மகிழ்ச்சியோடு அம்மாவிடம் காட்டினாள். 'அம்மா.. இந்தப் புடவை அவர் செலக்ஷன்' என்றாள்.

அம்மாவும் ரசித்துப் பார்த்தார். 'ரொம்ப அழகா இருக்குடி' என்றவர் 'ஏண்டி தலை தீபாவளிக்கு நாங்க எடுத்ததைக் கட்டலையா?' என்றார்.

'அது கோயிலுக்குப் போகும் போது கட்டிக்கறேன். இப்ப முதல்ல அவர் செலக்ட் செஞ்சதுதான்' என்று மனைவி தன்னைப் பெருமைப் படுத்துவதை ரசித்துக் கொண்டான்.

செல்வத்தின் குடும்பத்தார் வந்திருந்தார்கள். 'அண்ணா! எப்படியிருக்கீங்க!' என்றான் செல்வம் அன்பாக.

'நல்லா இருக்கேன்!' என்றவன் 'செல்வம்' எங்க கம்பெனி யிலயே நல்ல ஒரு வேலை குடுக்கறேன் வந்தர்றீங்களா?' என்றான் தினகரன்.

செல்வம் புன்னகைத்தான். 'வேண்டாங்க அண்ணா! உறவுக் காரங்க கம்பெனியில வேலை செய்யக் கூடாது. சில நேரங்கள்ல உங்களுக்கும் தர்ம சங்கடமாகும். சில நேரங்கள்ல எங்களுக்கும் தர்ம சங்கடமாகும்....' என்றான்.

தினகரனின் பார்வையில மின்னல் மின்னினாற் போல் தெரிந்தது.

'உதாரணமா?' என்றான் புன்னகைத்தபடி. 'நான் ஏதோ தப்பு செஞ்சேன்னு வச்சுக்குங்க... நீங்க திட்ட வேண்டி வரும். அப்ப எனக்கு தர்ம சங்கடமாகும். பெரிய முதலாளிகள் கிட்டே அறிமுகப் படுத்தும் போது உங்களுக்கு தர்ம சங்கடமாகும். நிஜமாகவே உங்களுக்கு எனக்கு நல்லது செய்யணும்னு தோணுச்சன்னு வைங்க... உங்களுக்குத் தெரிஞ்ச ஏதாவதொரு கம்பெனியில பெரிய வேலையா வாங்கிக் கொடுங்க' என்றான்.

'அது ஈஸி. அது செய்யலாம். அதை விட நல்ல யோசனை ஒன்று சொல்றேன். ஒரு ஏஜண்ட் மாதிரி எங்க பிராடக்ஸ்க்கு ரைட்ஸ்



குடுக்கறேன். இன்னும் ஒரு ரெண்டு மூணு கம்பெனிகளும் புடிச்சுத் தர்றேன். ரெகுலர் ஒர்க் இருக்கும். நீங்களே ஆபீஸ் போட்டுக்கலாம்' என்றான்.

செல்வத்துக்கு அந்த ஐடியா மிகவும் பிடித்தது. தினகரன் மேலும் சொன்னான்.

'ஆபீஸ் போடறதுக்கான ஆரம்ப கட்ட செலவுக்கெல்லாம் வட்டியில்லாத கடனாப் பணம் தர்றேன். ஆனா, ஒரு கண்டிஷன்' என்றான்.

'என்ன? என்று செல்வம் பார்க்க.

'இங்க... எங்க மாமனார், மாமியார் வீட்டுக்குப் பக்கத்தில் ஆபீஸ் போடுங்க... நீங்க பக்கத்துல இருக்கறதுனால அவர்களுக்கு மாரல் சப்போர்ட் கிடைச்ச மாதிரி இருக்கும்' என்றான்.

'ஓ... எஸ்!' என்று உற்சாகமாய் செல்வம். அப்போதுதான் மனந்திறந்து அதற்கான காரணத்தைச் சொன்னான் தினகரன்.

'இல்லைங்க... செல்வம்.. நிலா என்னை பாத்துக்கறதிலேயே ஃபுல் டைம் செலவு பண்றா. போய் அம்மா வீட்ல ரெண்டு நாள் இருந்துட்டு வான்னா கேக்கறதில்லே.... உங்களை விட்டுட்டு நான் எங்கே போறது? அப்படிங்கறா. கொஞ்சம் பிரச்சினைகள் எல்லாம் சரியாகற வரைக்கும் நீங்க அவங்க பக்கத்துல இருந்தீங்கன்னா எனக்குக் கொஞ்சம் தெம்பா இருக்கும்' என்றான்.

'ஓ...! ஷ்யூர்!' என்றான் செல்வம்.

'ஆனா, உங்ககிட்டே இந்த விஷயம் எனக்குப் பிடிச்சுது செல்வம். சட்டுன்னு என் கம்பெனிக்கு வேலைக்கு வர்லேன்னு சொல்லீட்டீங்களே'' என்று சிரித்தான்.

'ஆமாங்கண்ணா! நம்ம உறவு என்னைக்கும் நிலைச்சிருக் கணும்.. இல்லே!' என்றான்.

'அது சரி! இவ்வளவு சென்சிபிளா நீங்க இருக்கீங்க... ஆனா, உங்களுக்கு நேர்மாறா இருக்காரே கார்த்திகேயன்' என்றான் தினகரன்.

அதைக் கேட்டவுடன் செல்வத்தின் முகம் இருண்டது. மெல்லிய குரலில் சொன்னான்.

'அவன் வெள்ளைத் துணியில கறுப்புப் புள்ளி விழுந்த மாதிரி எங்க குடும்பத்துக்குன்னு பேரைக் கெடுக்க வந்த கரும்புள்ளி' என்றான்.

தினகரன் அவனை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்ததை உணராமல் அவன் சொன்னான்.

'அவன்.. அவன்.. உங்களுக்கு என்ன செஞ்சிருக்கான்னு உங்களுக்குத் தெரியாது... அண்ணா!' என்றான் காட்டமாக.

அதற்கு தினகரன் பதில் சொன்ன விதம் கேட்டு செல்வத்தின் முகம் வெளிறிப் போனது.

அச்சத்துடன் தினரகனின் முகம் பார்த்தான்.

∴ ∴ ∴

இரவு மூழு மணியிருக்கும்!

கோவில் காம்பவுண்ட் விட்டு வெளியே வந்தாள் வெண்ணிலா.

சற்றுத் தொலைவில் முதுகைக் காட்டிக் கொண்டு நிற்கிற உருவம் பரிச்சயமான உருவம் போல் இருந்தது.

'யார் அது? அட... கார்த்தி அத்தான்!' என்று எண்ணுகையிலேயே பேசிக் கொண்டே திரும்பியது.

கார்த்திகேயனேதான்!

அவனைப் பார்த்து விட்டாள் என்று தெரிந்தது.



உடனே முகம் பீதியால் வெளுத்தாற் போலாகியது. வெடுக்கென்று திரும்பி வேகமாக நடந்தான்.

வெண்ணிலாவுக்கு வியப்பாக இருந்தது. 'கார்த்தி அத்தான் ஏன் இப்படி நடந்துக்கறாரு' என்று எண்ணிக் கொண்டாள்.

அவளுக்கு திடீரென்று தன் திருமணத்துக்கு முதல் நாள் வந்து தன்னைக் கல்யாணம் செய்துக் கொள்ளக் கேட்டது நினைவு வந்தது. அந்தக் கோபம் போலும் என்று எண்ணிக் கொண்டாள்.

அன்றிரவு!

கணவனிடம் படபடவென்று பொரிந்தாள்!

'ஏங்க... கார்த்தி அத்தானைப் பார்த்தேங்க.... அவரும் என்னைப் பாத்தாரு. பாத்துட்டு என்னமோ பேயைப் பார்த்த மாதிரி ஓடறாரு' என்றாள்.

'ஹேய்! உன்னைப் போய் யாராவது பேய்ன்னு நினைப்பாங்களா? அதுவும்.. இந்த அழகான பட்டுப்புடவையில, ஏதோ... அம்மன் திருவீதி உலாக் கிளம்பிட்டாப் போல இருக்குன்னு பயந்து ஓடியிருப்பாரு' என்றான்.

'உங்களுக்குக் கிண்டலா... இருக்கு... இப்படி ஒரு கிறுக்கு அத்தான் எனக்கு. எங்கப்பா எப்பப்பாரு அவரை 'கிறுக்குப் பய புள்ளே' ன்னே திட்டுவாரு. அது சரியாப் போச்சு. யாராவது நாளைக்குக் கல்யாணம் ஆகப் போற பொண்ணுகிட்டே வந்து கல்யாணத்தை நிறுத்துன்னு சொல்வாங்களா? இவரு வந்து சொல்றாரு. கிறுக்கு கிறுக்கு' என்றாள்.

'யாருக்குத் தெரியும்? இந்தக் காதல்ன்னு ஒன்று வந்தா... எல்லாரும்தான்.. கிறுக்கனுக ஆயிடறாங்க... இப்ப... என்னேயே எடுத்துக்க... அந்த ஃபாஷன் ஷோவில மகாராணியை பாத்த நாள்லேயிருந்து தூக்கம் போச்சுன்னு அலைஞ்சுகிட்டிருந்தேன்...

இந்த விஷயத்துல எது நியாயம்.. எது தப்புன்னு யார் சொல்ல முடியும்?' என்றான்.

அவள் துணிமணிகளை சூட்கேஸில் அடுக்கிக் கொண்டிருந் தவள் கணவனை ஆச்சரியமாகத் திரும்பிப் பார்த்தாள்.

அவன் கண் சிமிட்டிச் சிரித்தான். 'அது.... வேற வழியில்லே... கண்மணி! இன்னைக்கு இந்த பெட்டை நீங்களும் ஷேர் பண்ண வேண்டியிருக்கும்' என்றான்.

அவள் முகம் சிவக்கத் திரும்பிக் கொண்டிருந்தாள். அவன் சட்டென்று சீரியஸாக.

'ஏன் நிலா! நான் வாங்கிக் குடுத்த புடவை ஒன்றும் சாயம் போற ரகம் இல்லையே!' என்றான்.

'ஏன், அப்படிக் கேட்கறீங்க' என்றாள்.

'இல்லே, அந்த நிறம் பூராவும் உன் கன்னத்துல ஏறிகிச்சப் போல இருக்கு!' என்றான்.

அவள் பேசாமல் நின்றாள்.

'ஹேய்! இங்க வந்து பக்கத்துல உட்காரு' என்றான்.

அவள் மெல்ல அவன் அருகில் அமர்ந்தாள்.

'இன்னும்... கொஞ்ச... நாள்... பொறுத்துக்கலாமா!' என்றான் தினகரன்.

'ம்...!' என்றாள்.

'அதுவரைக்கும், இந்த மாதிரி சின்னச் சின்ன இடைஞ்சல்களைத் தாங்கிக்கணும்' என்றான்.

'இது ஒண்ணும் எனக்கு இடைஞ்சல் இல்லே!' என்றாள்.



'அப்ப சரி' என்று அமைதியானான். ஆனால், உறக்கத்தில் தன் மார்பில் சாய்ந்து கொள்கிற மனைவியை அவன் கைகள் ஆதரவாக அணைத்துக் கொண்டன.

வெகு நேரம் விழித்துக் கொண்டு படுத்திருந்தான். முகத்தில் சொல்ல வொண்ணா வேதனை தெரிந்தது. வேகமாக வந்த லாரி மோதிய விதமே கண்ணுக்குள் மின்னலாய் வந்து வந்து போனது.

கண்களில் கொலைவெறி மின்னியது.

∴ ∴ ∴

ஏதோ வெளிநாட்டுக் கம்பெனியைச் சேர்ந்தவர்கள் வரு கிறார்கள். அவர்களிடம் பேச வேண்டும் என்று போயிருந்தார்கள் சகோதரர்கள் இருவரும்.

'ஃபர்ஸ்ட் ரவுண்ட் டாக்ஸ் நாங்க ரெண்டு பேர் மட்டும் பேசறோம்' என்று சொல்லியிருந்தவன் தினகரன்.

அவளுக்கு அன்று காலை ஓய்வு கிடைத்தது. கணவனின் பீரோவைச் சுத்தம் செய்து துணி மணிகளை அடுக்கி விடலாம் என்று ஆரம்பித்தாள்.

பீரோவுக்குள் கல்யாண ஆல்பம் இருந்தது. ஆசையாக எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். சில இடங்களில் அவன் சிரித்தபடி நிற்பதைப் பார்த்ததும் அவள் மனதில் துக்கம் பொங்கியது.

எவ்வளவு ஆளுமையுடன் நடமாடிக் கொண்டிருந்தவன்.

'எதற்காக முதலிரவுச் சடங்கைத் தள்ளிப் போட்டானோ! முதல் ஒரு வாரத்தில் எல்லாம் நடந்து முடிந்திருந்தால் கொஞ்ச நாள் முழுமையாக வாழ்ந்த நிறைவாவது இருந்திருக்கும்.'

அப்போதுதான் அந்தக் கடிதம் கிடைத்தது.

'என்ன கடிதம் இது!' என்று எடுத்துப் படித்தாள்.

முகம் இறுகியது யார் எழுதியிருக்க முடியும்? இதென்ன கம்ப சூத்திரமா? கொஞ்சம் யோசித்தவுடனே பிடிபட்டு விட்டது.

கார்த்தி.... கிறுக்கு... அத்தான்தான் எழுதியிருப்பான்! இப்போது அவளுக்கு எல்லாம் புரிந்தது.

எத்தனையோ வாய்ப்புகள் இருந்தும் தன்னிடம் இருந்து ஏதோ உறுதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது போல் கணவன் விலகியே நின்றது. விபத்துக்கு முன்னும் சரி! பின்னும் சரி!

'கார்த்திகேயனை உனக்கு எவ்வளவு தூரம் பிடிக்கும்?' என்று பல விதங்களில் தன்னை விசாரித்தது இதற்குத்தானோ'!

ஒருவேளை.... இந்தக் கடிதத்தை நம்பிக் கொண்டாரோ! ஒருவேளை... தான்தான் அவர்கள் இரண்டு பேரையும் பிரித்து விட்டோம் என்று நினைத்துக் கொண்டாரோ!

இல்லையே! சடங்கு நடக்கப் போகிறது என்று தீர்மானிக்கப் பட்ட அந்த நாளில் கூடத் தன்னிடம் தனியாகப் பேசி உறுதி செய்து கொண்டாரே.

அழுகை வெடித்தது.

தனிமையில் அழுதாள்!

கார்த்திகேயன் எப்படிப்பட்ட கடுமையான சோதனையைத் தன் வாழ்க்கையில் ஏற்படுத்திவிட்டான் என்று அவளுக்குப் புரிந்தது.

இனித்தான் என்ன செய்ய வேண்டும்?

'எப்படி நீங்கள் என்னை அப்படி நினைக்கப் போச்சு! என்று சண்டை போடலாமா?' போட்டால்...!

'உன்னைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? அதிலும்.. கார்த்திகேயன்... வந்து அப்படி சொல்லும் போது... நான் என்ன நினைப்பது?' என்று கேட்டால்...!



ஒன்றும் பதில் பேசவே முடியாது. ஆனால், இன்னொன்றும் தெளிவானது.

இப்போதுதான் தன் கணவனின் மனம் தன் விஷயத்தில் தெளிவடைந்து வருகிறது.

மனம் விட்டுப் பேசுகிறான். சிரிக்கிறான். மெல்ல மெல்லத் தனது மனத்து உணர்வுகளை வெளியிட ஆரம்பித்திருக்கிறான்.

இப்போது போய் இந்தக் கடிதத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு எந்தப் பிரச்சனையையும் ஆரம்பிக்க வேண்டாம்.

'என்னுடைய நடத்தையால், அன்பால் அவர் மனத்திலுள்ள எல்லா சந்தேகங்களையும் விலக்கி ஜெயிப்போம்' என்று உறுதி மொழி எடுத்துக் கொண்டாள்.

அதற்குப் பிறகு மனம் லேசாகியது!

உள்ளத்தில தைரியமும், தெம்பும் கூடியது.

'வாங்க... சார்! வாங்க! இனிமேல்.. நீங்க பார்க்கப் போற வெண்ணிலா எப்படி இருக்கப் போறா... பாருங்க!' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டாள்.

கலகலவென்று சிரித்துக் கொண்டாள்.

அதே நேரம்!

தினகரனிடமிருந்து போன் வந்தது. அவன் பேசுவதற்குள்ளாக அவளே முந்திக் கொண்டாள்.

'என்னங்கத்தான்! மீட்டிங் முடிஞ்சுதா?' ஃபாரின் பார்ட்டியை யெல்லாம் ஓரங்கட்டி அனுப்பிச்சுட்டீங்களாக்கும். அதான் பெண்டாட்டி ஞாபகம் வந்துடுச்சு. போல இருக்கு...!' என்றாள்.

அவன் ஒரு நிமிடம் திகைத்துவிட்டான் போலும். பிறகு பதில் வந்தது.

'ஹேய்! அவனுங்க எல்லாம் இங்கதான் இருக்காங்க... பொண்டாட்டியை அடிக்கடி மறக்கற ஆள் நாங்க இல்லே... எவ்வளவு தூரம் ஞாபகம் வச்சுக்கறோம்கறதை டைம் வரும் போது நிரூபிக்கிறோம்... தேவியாரே! இப்ப நான் எதுக்குக் கூப்பிட்டேன்னா.. அந்த எல்லோ கலர் ஃபைல் இருக்கில்ல... அதை எடுத்துகிட்டு.. வந்து சேரு...' என்றான்.

அவளும் அந்தப் பதிலில் மனம் தெளிந்தவளாய் ஃபைலைத் தேடி எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.




நான்கு நாட்களாகவே தினகரன் படு பிஸியாக இருந்தான். நேரம் காலம் பார்க்காமல் செல்போனில் பேசிக் கொண்டிருந்தான்.

இன்றைக்குத்தான் சற்று ஓய்வாக போனை சற்றுத் தூர வைத்து விட்டு ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்.

வெண்ணிலா அவன் பிஸியாக இருக்கும் நேரத்தை உணர்ந்து கொண்டு அதிகம் தொல்லை செய்யாமல் அவன் கேட்டவற்றை மட்டும் செய்து கொடுத்தாள்.

இன்றைக்கு ரிலாக்ஸ்டாக இருப்பதை அறிந்து மெதுவாக நெருங்கினாள்.

'என்னங்கத்தான்! பிஸினஸ் டாக்ஸ் முடிஞ்சதா!'

'ம்.. ஒரு வழியா!' என்று சிரித்தான். 'பயங்கரமான ஆளு. ஒவ்வொரு சின்னச் சின்ன டீடெய்ல்லயும் கவனம் காட்டறாங்க. நாம அதெல்லாம் கத்துக்கணும்.' என்றான்.

'அது சரி! இன்னைக்கு கொஞ்ச நேரம் வீட்டைப் பத்தியும் நெனக்கலாமா?' என்றாள் கேலி போல.



'என்ன விஷயம். நிலா? ஏதாவது அவசரமா?' என்றான்.

'இல்லயே! உங்க கடி ஜோக் கேட்டு நாலு நாளாச்சு!' என்றாள்.

அவன் சட்டென்னு சிரித்தான்.

'அதுதானே பார்த்தேன்!' என்றவன் உடனடியாக இரண்டு மூன்று கடி ஜோக்குகளை அள்ளிவிட்டான். அவள் கலகலவென்று சிரித்துக் கொண்டு.

'எப்படிங்கத்தான்! எப்படி இப்படி ஸ்டாக் வச்சுக்கிட்டே இருக்கீங்க.. கேட்டவுடனே அள்ளி வீசறீங்க!' என்றாள்.

'அதெல்லாம் சொல்ல மாட்டோமே! தொழில் ரகசியத்தையெல்லாம் கேட்கக் கூடாது' என்றான்.

சற்று நேரம் கார்ட்ஸ் விளையாடினார்கள்.

மூன்றாவது சுற்றிலும் அவனே ஜெயித்தான். அவளுக்கு மூட் அவுட்டாகி விட்டது. முகத்தைக் கோணலாக்கிக் கொண்டு.

'என்னமோ... தில்லு முல்லு செய்யறீங்க!' என்று அவன் கைகளில் இருந்த சீட்டுக்களை எட்டிப் பார்த்தாள்.

'ஹேய்! இது அத்து மீறல்! நீ எப்படி என் சீட்டைப் பாக்கலாம். நான் வர்லே... விளையாட்டுக்கு...' என்று அவன் சீட்டுக்களை கீழே வீசினான்.

அவளைச் சட்டென்று தன்னருகில் இழுத்தான். 'வம்பு பண்றே இல்லே!' என்றான். அவள் சற்றும் எதிர்பாராத விதமாக அவள் முகத்தைத் தன் பால் இழுத்துத் தன் உணர்வுகளை வெளிப்படுத்தினான்.

அவள் முகம் சிவந்து போக மெல்ல விலகப் பார்த்தாள். அவன் விடவில்லை. சற்றுக் கழித்த பின்தான் விடுவித்தான்.

அவள் மெல்ல எழுந்து நின்றாள்.

'இதென்ன இது! திடீர்த் தாக்குதல்!' என்றாள்.

'பின்னே! தாக்குதல்ன்னா திடீர்ன்னு நடக்கறதுதான்' என்று குறும்பாகச் சிரித்தான்.

அவள் அவனிடமிருந்து தப்பிப்பவள் போல் 'இந்த நேரத்துக்கு கொஞ்சம் ஹார்லிக்ஸ் குடிப்பீங்க இல்லே! கொண்டு வரட்டுமா?' என்றாள்.

அவன் புரிந்து கொண்டவன் போல் சிரித்தான். 'சரி.. கொண்டு வா!' என்றான்.

அவள் அவசரமாகத் திரும்பிய வேகத்தில் அங்கே அவன் வசதிக்காகப் பக்கத்தில் வைத்திருந்த டீபாய் விலகியது.

அதன் பக்க முனை அவனது வலது காலில் பட்டது. அவன் அவசரமாக அந்த டீபாயை விலக்கினான்.

'ஹேய்! வலிக்குது!' என்றான் தினகரன்.

'ஓ... சாரி! சாரி!' என்றவள் அவசரமாக அதை வேறிடத்தில் நகர்த்தி வைத்தாள்.

அவனும் அதை மறந்தவன் போல் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் கையிலெடுத்தான்.

அறை வாசலுக்குப் போனபின்தான் அவளுக்கு அது உறைத்தது.

பரபரப்பாகத் திரும்பி அவனை நோக்கி வந்தாள்.

'ஏங்க... வலிக்குதுன்னு சொன்னீங்க இல்லே! எந்த இடத்துல!' என்றாள்.

அவனும் அப்போதுதான் அதை யோசித்தவன் போல் வலது முழங்காலுக்கும் சற்று மேலே தட்டிக் காட்டினான்.



அவள் சடாரென்று குனிந்து ஒருமுறை அழுத்தமாகக் கிள்ளினாள்.

'ஹேய்! என்ன இது! வலிக்குது' என்றான்.

அவள் நிமிர்ந்தாள் அழுகையும், சிரிப்புமாக அவன் முகம் பார்த்தாள்.

'இது நாள் வரைக்கும் இப்படி உங்களுக்கு ஃபீலிங் தெரியாதில்லே!' என்றாள்.

'அட! ஆமா!' என்றான். அவள் சிரித்துக் கொண்டே அழுதபடி வலது கால் முழுதும் எல்லாப் பகுதியையும் தொட்டுத் தொட்டு 'இங்கே.. ஃபீல் பண்ண முடியுதா? இங்கே... இங்கே!' என்று கேட்டாள்.

அவன் கண்கள் மனைவியின் மகிழ்ச்சி நிறைந்த முகத்தை ஆழப் படித்துக் கொண்டிருந்தன.

மெதுவாக இடது தொடையின் மீது கை வைத்து அழுத்தினாள் அவன் முகம் பார்த்தாள்.

அவன் 'ம்ஹூம்' என்பது போல் உதட்டைப் பிதுக்கினான். ஆனாலும், அவன் மகிழ்ச்சியாகச் சொன்னான்.

'எப்படியோ! ஃபீலிங் தெரிய ஆரம்பிச்சிருச்சில்லே!' என்றாள்.

கீழே போய் செய்தியை சொல்வதற்காகப் பரபரப்பாக ஓடினாள்.

∴ ∴ ∴

**வீடே** பரபரப்பானது!

டாக்டர் உடனடியாக வரவழைக்கப்பட்டார். எல்லாரையும் வெளியே அனுப்பி விட்டு அவர் மட்டும் இருந்து எல்லாப் பாகங்களையும். பரிசோதித்தார்.

சற்று நேரம் தினகரனிடம் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு வெளியே போனார்.

'என்ன சார்! இடது காலுக்கும் சீக்கிரம் உணர்ச்சி வந்துருங்களா?' என்று கேட்டார் வேலுசாமி.

'கண்டிப்பா... வரும்! எனக்கு தினகரனோட கேஸே விசித்திரமா இருக்கு. வலது கால்ல உணர முடியுதுகறப்ப... இடது கால்லயும்தான் உணர்ச்சி வந்திருக்கணும். என்னன்ன தெரியலே! ஆனா, இப்ப ஹோப் அதிகமாயிருக்கு. அதுவுமில்லாம் மெடிக்கல் ஸயன்ஸுக்கு அப்பாற்பட்ட எத்தனையோ விஷயங்கள்... உலகத்துல இருக்கத்தான்... செய்யுது' என்றார்.

முழுவதுமாக உணர்வு வரவில்லையென்ற குறை எல்லாருக்கும் இருந்த போதும் வலது கால் செயல்பட ஆரம்பித்து விட்டது என்பதில் எல்லாருக்கும் மகிழ்ச்சி.

'கொஞ்ச நாளில் ஊன்று கோல் வைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்து விடலாம்' என்றார் டாக்டர்.

தங்கள் தனிமையின் போது கணவன் முகத்தைத் தன்னிரு கைகளிலும் ஏந்திக் கொண்டு தனது மகிழ்ச்சியை எல்லாம் வெளிப்படுத்தினாள் வெண்ணிலா. ஆனாலும் அவனிடத்தி லிருந்து முழுமையான பிரதிபலிப்பு வரவில்லை.

இன்னமும் தயக்கம் இருக்கிறது போலும் என்று எண்ணிக் கொண்டாள் வெண்ணிலா. அவன் போக்கிலேயே விட்டு விட்டாள்.

∴ ∴ ∴

'குட் ஈவ்னிங் மேடம்!' என்று போலீஸ் உடுப்பில் அந்த இளைஞன் ஹாலில் நின்றபோது கொஞ்சம் அதிர்ந்துதான் போனாள் வெண்ணிலா..



'நான் கேசவன் நாயர் தினகரனோட ஃப்ரெண்ட்' என்ற வுடன்தான் சற்று ரிலாக்ஸானாள்.

'வாங்க..!' என்று அமரச் செய்தாள். மேலே போய்க் கணவனிடம் சொன்னவுடன் அவன்' இங்கயே கூட்டிட்டு வா... நிலா!' என்றான்.

அழைத்துப் போனாள்.

சற்று நேரத்தில் குமிழ் குமிழாக வெடிச்சிரிப்புக் கிளம்பியது கேட்டு மகிழ்ந்த வண்ணம் விருந்தினருக்கு ஸ்வீட், காரம் என்று எடுத்துச் சென்று உபசரித்தாள்.

'மேடம்! தினகரன் இப்படி ஒரு இடத்துல உக்கார்ர ஆள் இல்லை தெரியுங்களா? காலேஜ் டேஸ்ல பெரிய ஃபுட்பால் பிளேயர். வாலிபால் பிளேயர்.... ஆல் ரவுண்டர்!' தெரியுங்களா!' என்றான்.

அவள் ஆச்சரியமாகக் கேட்டுக் கொண்டாள். அதற்குள் தினகரன் குறுக்கிட்டு 'நிலா, இது என் காலேஜ் மேட்! அஸிஸ் டெண்ட் கமிஷனரா இங்க அப்பாயின்ட் ஆகி வந்திருக்கான்' என்று அறிமுகப்படுத்தினான்.

அவள் மரியாதைக்காகக் கேட்டு கொண்டாள். 'அஸிஸ்டெண்ட் கமிஷனரைத் தெரிந்து நமக்கு என்ன ஆகப் போகிறது?' என்று எண்ணிக் கொண்டாள் அப்போது அவளுக்குத் தெரியவில்லை ஒரு நாள் தான் அவனிடம் புகார் கொடுக்கிறேன் பேர்வழி என்று நிற்க வேண்டி வரும் என்று.

∴ ∴ ∴

புத்துணர்ச்சியுடன் குளியலறையை விட்டு வெளியே வந்தாள்.

இரவு படுக்கப் போகுமுன்பு குளித்து விட்டுப் படுப்பது அவள் வழக்கம்.

பவுடரைக் கொட்டி முன் கழுத்துப் புறத்தில், பின் கழுத்துப் புறத்தில் என்று தேய்த்துக் கொண்டு திரும்பினாள். திடுக்கிட்டுப் போனான்.

சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் தினகரன்.

'அத்தான்!' என்றாள் குரலே எழும்பாமல்.

'அது சரி போ! இப்படி டப்பா நிறைய பவுடரைக் கொட்டிப் பூசினா, அவனவன் ரூம்ல இருக்கறதா.. வேண்டாமா? வாசனை இழுக்குது' என்று சிரித்தான்.

வெண்ணிலா பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கையிலேயே அவளது படுக்கையை நோக்கி அவன் வீல் சேரை நகர்த்தினான் வலக்காலை ஊன்றிப் படுக்கைக்குத் தாவிக் கொண்டான். அலட்டிக் கொள்ளாமல் காலை நீட்டி அமர்ந்து கொண்டான்.

'என்ன நீ? இப்படி முழிச்சுகிட்டு நிக்கறே? யாருப்பா... நீ? என் பெட்ரூம்ல பர்மிஷன் இல்லாம நுழையறேன்னு கேட்பேன்னு பார்த்தேன்?' என்று கிண்டல் செய்து சிரித்தான்.

வெண்ணிலா புன்னகையுடன் அவளருகில் போய் அமர்ந்தாள்.

'நான் அப்படிக் கேட்பேனா? முத முதலா வந்திருக்கீங்கன்னு உபசரிக்கறதை விட்டுட்டு?' என்று அவளும் அமர்த்தலாகச் சொன்னாள்.

'அப்படி நாலடி தள்ளி உட்காந்துகிட்டு எப்படி உபசரிக்கறது?' என்றான் வலக்கையால் இழுத்தான்.

மெல்ல அவன் முதுகைக் கைகளால் நீவிக் கொடுத்தபடி ...க்கமாகச் சிரித்தான்.



'நிலா... உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? தினகரன்னு சொன்னா அர்த்தம் தெரியுமா? சூரியன். நீ வெண்ணிலா. இது எப்படிப் பொருத்தமாகும்? யோசிச்சேன். அப்பத்தான் புரிஞ்சுது. ஆப்போசிட் போல்ஸ் அட்ராக்ட் ஈச் அதர் என்று சற்று நேரம் பேசிக் கொண்டே தன் காரியத்தில் கண்ணானான்.

அவளும் பணிந்து கொடுத்தாள்.

∴ ∴ ∴

அதிகாலையில் தலையைக் குளித்து விட்டு காபி போட்டுக் கொண்டிருந்த மருமகளின் முகத்தில் தெரிந்த வித்யாசத்தைக் கூர்ந்து கவனித்தார் ராஜேஸ்வரி.

ஏதோ புரிகிற மாதிரி இருந்தது. புரியாத மாதிரியும் இருந்தது. எப்படிக் கேட்பது? தன் கருத்தைக் கணவனிடம் பகிர்ந்து கொண்டார். அவர் சிரித்தார்.

'இதைப் போய் எப்படி கேட்கறது? சரக்கு மலிஞ்சா சந்தைக்கு வந்துதானே ஆகணும்? பார்வையிலயும், பேச்சலயும் அசடு வழிய ஆரம்பிச்சுடுச்சன்னு வை. அப்ப எல்லாம் முடிஞ்சாச்சன்னு தெரிஞ்சு போகும்' என்று சிரித்தார்.

'அட! நான் எவ்வளவு சீரியஸான மேட்டர் பேசறேன். கொஞ்சம் கூடப் புரிஞ்சுக்காம?' என்றார் ராஜேஸ்வரி கோபமாக.

'என்னத்தை சீரியஸ்? மக்கு... மக்கு... அங்க பாரு உன் மருமகளை முகம் சிவந்து கிடக்கு. தனக்குத்தானே சிரிச்சுகிட்டு காபி எடுத்துகிட்டுப் போகுது. அப்புறமும் இன்னும் என்னத்தைக் கேட்கறது. போ... போய் வேலையைப் பாரு!'

'ஆமா...! என்ன வேலை இருக்கு இங்கே! ஏதாவது வேலை வேணும்னுதானே அலையறேன்' என்றார் ராஜேஸ்வரியும் அதே பாணியில்.

'என்னது?' என்றார் வேலுசாமி.

'ஆமாங்க...! இப்பவே ஏழெட்டு மாசம் ஓடிப் போச்சு... சீக்கிரமா.. ஒரு பேரன்.. பேத்தியை பெத்துக் குடுத்தாங்கன்னா வளர்த்துக் குடுத்தர்லாம். அப்புறம் சின்னவன் ஜோலியைப் பாக்கணும் இல்லே!' என்றார் கவலையாக.

'என்னது? இன்ஸ்டன்ட் காபி மாதிரி இன்ஸ்டன்ட் பேரன் கேட்கறே?' என்று சிரித்தார்.

'அப்படியில்லீங்க! உங்களுக்குத் தெரியாதுங்க... இவன் வாழ்க்கை என்ன ஆகப் போகுதோன்னு நான் எவ்வளவு கவலைப்பட்டேன்னு... இப்ப ஏதோ நம்பிக்கை வந்திருக்கற சந்தோஷத்துல உளறிகிட்டிருக்கேன்... அது புரியலியா?' என்றார்.

வேலுசாமியின் முகத்தில் நெகிழ்ச்சி தெரிந்தது. அன்பு நிறைந்த குரலில் சொன்னார்.

'ராஜி! எனக்கு மட்டும் அந்த கவலையில்லாமலா என்ன? கடவுள் நமக்கு ஒருவிதத்துல அதிஷ்டத்தை வாரி வழங்கிக் குடுத்திருக்காரு. ரெண்டு குழந்தைகளும் அருமையான குழந்தைங்க... யாருக்கும் கெடுதல் செய்யாதவங்க.. அவர்களுக்கு யார் கெடுதல் செஞ்சாலும் பனிபோல விலகிப் போயிரும். வாழ்க்கையில முதல்ல கஷ்டம் வர்லாம். கஷ்டத்தை அனுபவிச்ச அப்புறம் சந்தோஷத்தை அனுபவிச்சாத்தான் அதோட முழுமை யான அர்த்தம் புரியும். அதுக்குத்தான் கடவுள் இப்படியெல்லாம் சோதனை குடுக்கறாரு... போல' என்றார்.

'ஏங்க.. எதுல துரதிர்ஷ்டம் இருந்தாலும் அருமையான பொண்டாட்டி கிடைச்சா இல்ல. ஒரு நாள் நான் கேட்கறேன். 'ஏம்மா, எதிர்காலம் என்னாகுமோன்னு கவலைப் படதியாம்மான்னு. அதுக்கு அவ சொல்றா. அத்தே! என் எதிர் காலம் அவரோடன்னு முடிவு செஞ்சுதானே தாலி ஏத்துகிட்டேன். இனிமே எதுக்கு எனக்குன்னு ஒரு எதிர்காலத்தைப் பத்தி நான்



யோசிக்கறேன்?. அது மட்டுமில்ல. கல்யாணத்துல அக்னியை சுத்தி வரும் அப்ப நாம் என்ன உறுதி மொழி எடுத்துக்கறோம். சுக, துக்கங்கள்ல ஒண்ணா இருப்போம்னுதானே! அவரோட துக்கத்துல ஒண்ணாத்தான் இருப்பேன். அப்படி அவரு பைத்தியக் காரத்தனமா நினைக்கற மாதிரி விலகிடமாட்டேங்கத்தே 'அப்படீங்கறா...' என்றார்.

முகத்தில் பெருமை மின்னியது.

'ஆமா! ரொம்ப அருமையான பொண்ணு! இனிமே இந்தக் கால்லயும் உணர்ச்சி சீக்கிரம் வந்துடும்... எல்லாம் சரியாகும்னு எனக்கு நம்பிக்கை வந்துச்சு...' என்றார் வேலுசாமி.

'பின்னே? கும்பிட்ட சாமியெல்லாம் கை விட்டுடுமா.. என்ன?' என்றார் ராஜேஸ்வரி பிறகு விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தாற் போல்.

'அதுமட்டுமில்லிங்க! நம்ம வெண்ணிலா எத்தனை கோயில், விரதம்னு அலைஞ்சா...! அதுக்கெல்லாம் பலா பலன் இல்லாமலா போயிடும்?' என்றார்.

இருவரும் ஒருவரை ஒருவர் நிறைவாகப் பார்த்துக் கொண்டார்கள்.

'ரொம்ப அமைதியான பொண்ணு!' என்றார் வேலுசாமி.

அந்த அமைதியான பொண்ணும் விஸ்வரூபம் எடுக்கும் காலம் விரைவில் வரும் என்று அவர்களுக்கு அப்போது தெரிந்திருக்க வில்லை.

∴ ∴ ∴

'என்னதிது? சுறுசுறுப்பே இல்லாம உட்கார்ந்துட்டிருக்கீங்க ஆபீஸ் போக வேண்டாமா?' என்றாள் வெண்ணிலா.

'நான் இன்னைக்கு ஆபீஸ் போகலே... உன்னை விட்டுட்டு நகரவே மனசு வர்லே!' என்றான் தினகரன்.

அவள் குறும்பாகச் சிரித்தாள். 'அடடா! இன்னைக்கு சுதா வேறு இல்லே! நீங்களும் லீவு போட்டா.. என்னங்க... அர்த்தம்..?' என்று கடிந்து கொண்டாள்.

அவன் அமர்ந்த வாக்கில் காபியை ரசித்துக் குடித்தான்.

'ஹேய்! ஆனாலும் ரொம்ப மிரட்டறே!' என்று சிணுங்கினான்.

வெண்ணிலா போர்வையை எடுத்து அழுக்குக் கூடையில் போடுகிறவள் போல் நடித்துக் கொண்டு. 'நீங்க மிரட்டற மிரட்டலை விடவா?' என்றாள்.

'ஆமா! பின்னே. கெஞ்சினா... ஒன்றும் வேலையாக மாட்டேங்குது' என்று சிரித்தான்.

'ஹேய்!' என்று கையை நீட்ட, 'ம்ஹூம்! குளிச்சுட்டு வாங்க! ஆபீஸ் புறப்படுங்க' என்றாள்.

அவன் தயாராகிக் கொண்டே சொன்னான் 'நிலா! இனிமே மெது மெதுவா நிக்கறதுக்கு டிரை பண்ணலாம்னு டாக்டர் சொல்லிட்டாரு' என்றான். மெதுவாக எழுந்து ஒற்றைக் காலைத் தரையில் ஊன்றி அவள் தோளைப் பற்றிக் கொண்டு சற்று எம்பி நடந்து காட்டினான்.

வெண்ணிலா அன்புடன் அவன் நெற்றியில் முத்தமிட்டாள். பிறகு சொன்னாள்.

'நான் சொன்னேன் இல்ல. நீங்க பயங்கரமான வில் பவர் உள்ள ஆள்னு... நீங்க ஜெயிச்சுகாட்டுவீங்க... பாருங்க' என்றாள்.

அதே சமயம்!



தானும் தனது மனோசக்தியை நிருபிக்க வேண்டிய நேரம் வரும் என்று அவள் அன்றைக்கு சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் வந்தது.




'என்னடி... பொண்ணே! உனக்கு எங்க ஞாபகம் இல்லையோன்னு நினைச்சேன். பெத்தவங்க நாங்க ரெண்டு பேரும் இருக் கோம்னு இப்பவாவது உனக்கு ஞாபகம் வந்துதா?' என்றார் அம்மா நாகேஸ்வரி.

'சாரிம்மா! உனக்குத் தெரியுமில்லே! அவரை விட்டுட்டு வர முடியாத சூழ்நிலை. அதுவுமில்லாம... இங்கே வந்தாலே... அழுகை வந்துடுது. வந்து வந்து அழுதுட்டுப் போனா... உங்களுக்குக் கஷ்டமா இருக்குமில்லே. அதான்!' என்றாள்.

'அது சரி! உன் மனசு கஷ்டத்தை எங்க கிட்டே கொட்டாம வேற யாருகிட்டே சொல்லிக்குவியாம்' என்றார் அம்மா.

'எப்பவுமே மனசு கஷ்டத்தையே சொல்லிக்கணுமா என்ன இந்த தடவை சந்தோஷ சமாச்சாரம் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்' என்றாள் முகம் குங்குமமாகச் சிவந்தது.

அம்மா சுவாரசியமானார்.

'என்னடி கண்ணம்மா!' என்றார். அவள் தயங்கினாள் தரையைப் பார்த்தாள் சுற்று முற்றும் பார்த்தாள் முக சிவக்க.

'ஆனா, எப்படிச் சொல்றதுன்னுதான் தெரியலே!' என்றாள்.

அம்மா சட்டென்று புரிந்து கொண்டார். 'சொல்லவே வேண்டாமடி. புரிஞ்சுருச்சு!' என்றார் மகிழ்ச்சியாகச் சிரித்தார்.

'அவருக்கு... அவருக்கு.. வலது கால்ல உணர்வு வந்துருச்சு. இன்னும் இடது கால்.. மட்டும்தான்.. அப்புறம்... நேற்று.. நேற்று...' என்றாள். பேசத் திணறினாள் முகம் சிவந்தது.

'சரி... சரி.. சொல்ல வெக்கமா இருந்தா விட்ரு' என்றார்.

'என்னங்க!' என்று கணவரைத் தேட மகள் தடுத்தாள்.

'அம்மா.. நான் புறப்பட்டுப் போனதுக்கு அப்புறம் அப்பா கிட்டே சொல்லு...!' என்றாள்.

நாகேஸ்வரி உடனே பூஜையறைக்கு இழுத்து கொண்டு போனார். குங்குமம் எடுத்து நெற்றியில் வைத்தார்.

'யாரோ பொறாமைக்காரவங்க.. திருஷ்டி... இல்லாட்டி இவ்வளவு அருமையான புருஷன் கிடைச்சும் என் மக வாழ்க்கை இப்படித் தள்ளாடி நிக்கணுமா.. என்ன?' என்று பொரிந்தார்.

'அம்மா.. யாரையோ எதுக்குக் குறை சொல்லணும். நம்ம தலையெழுத்து...' என்றாள்.

'சரிம்மா! நான் கோவிலுக்குப் போறேன். போற வழியில உன்னைப் பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்' என்றாள்.

புறப்பட்டாள்.

கோவிலில் தனக்கு என்ன காத்திருக்கிறதென்று புரியாமல்.

∴ ∴ ∴

வெறித்த பார்வையுடன் அமர்ந்து விட்டாள்.

'ஐயா! நீங்க சொல்றதெல்லாம் நிஜம்தானா?' என்றாள் மறுபடியும்.

'அம்மா! என் பொண்டாட்டி புள்ளைங்க மேல சத்தியமா...!'



'அம்மா.. நீங்க நான் தவறாம கோயிலுக்கு வந்து உருகி வேண்டிக்கறதை நான் தினம் பாக்கறனுங்களே அம்மா! எனக்கும் ஏறத்தாழ உங்க வயசுல ரெண்டு பொண்ணுங்க இருக்காங்க. கல்யாணம் கட்டிக் குடுத்துட்டனுங்க.. மனசு கேக்கலே. அதனாலதான் இத்தனை நாள் கழிச்சு உங்கிட்டே சொல்றேன். எதுக்குன்னா உங்களுக்கு ஏதாச்சும் ஆயிராம... ஜாக்கிரதையா இருக்கத்தான்!' என்றார்.

'கோர்ட்டுக்கு வந்து சாட்சி சொல்லச் சொன்னா வருவீங்களா?' என்றாள்.

'அம்மா! இதைக் கிளர்றது நல்லதில்லே. உங்களுக்குப் பாதுகாப்பு பண்ணிக்குங்க...' என்றார் தயக்கத்துடன்.

'ஐயா.. இப்பத்தானே.. தனபால் அய்யா! என்னை உங்க பொண்ணு மாதிரின்னு சொன்னீங்க.. அப்படின்னா உங்க பொண்ணு இந்த மாதிரிக் கஷ்டம் அனுபவிச்சா பாத்துகிட்டு சும்மாயிருப்பீங்களா?' என்றாள்.

'நிரூபிக்கிறது கஷ்டம்மா!'

'அதை நான் பாத்துக்கறேன்!' என்றாள்.

'தனபால் பெருமூச்சு விட்டார். 'சரிம்மா... வர்றேன்' என்றார்.

'அது போதும்!' என்றாள் புறப்பட்டாள்.

அப்போது அவள் முகத்தில் தெரிந்த உறுதியைப் பார்த்து தனபாலுக்குத் தான் தவறு செய்து விட்டோமோ என்ற பயம் தோன்றியது.

∴ ∴ ∴

யோசித்தான்!

... கோணமாக யோசித்தான்.

தன் கணவனுக்குத் தெரிந்திருக்குமா தெரிந்திருக்காதா? தெரிந்திருந்தால் ஏன் சும்மா இருக்கிறார்! சுதாவிடம் பேசலாமா? வேண்டாம்.

இந்த வெட்கக் கேட்டை அவரிடம் போய் எப்படிப் பேசுவது?

தலையே வெடித்து விடும்போல் ஆகிவிட்டது. யோசித்துக் காய் நகர்த்த வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள்.

கடைசியாக அவளுக்கு மனதில் உதித்த பெயர் செல்வம். செல்வம் அத்தான்தான் தனக்கு இந்த விஷயத்தில் உதவியாக இருக்க முடியும்.

செல்வம் அத்தானிடம் நாளைக்கே பேசுவோம் என்று முடிவு செய்து கொண்டாள்.

செல்வத்திற்கு போன் செய்தாள். செல்வமும் வந்தான்.

'செல்வம்.. அத்தான்! நடந்த விஷயம் உங்களுக்குத் தெரியுமா?' என்று விவரமாகச் சொன்னாள்.

செல்வத்தின் முகத்தில் அதிர்ச்சி தெரியக் கூடுமென்று நினைத்தாள். ஆனால், எதிர்பார்த்த அளவுக்கு அதிர்ச்சி இருக்கவில்லை.

மாறாக அழுத்தமான குரலில் சொன்னான். 'அவசரப் படாதே நிலா! முதல்ல அவனைக் கண்டுபிடிப்போம். அதற்குப் பிறகு என்ன செய்யறதுன்னு பார்ப்போம்' என்றான்.

'அவனைக் கண்டு பிடிச்சு நமக்கு என்ன ஆகப் போகுது. அது நம்ம வேலையும் இல்லே! சொல்ற இடத்துல சொல்லிட்டோம்னா அவங்க பாத்துக்கறாங்க...' என்றாள்.

செல்வம் முகத்தில் பதட்டம் தெரிந்தது. 'வேண்டாம் நிலா! எதுவும் செய்யறதுக்கு முன்னாடி உன் ஹஸ்பெண்ட்கிட்டே பேசு. அவருக்கு எவ்வளவு தெரியும்னு பாத்துக்கோ...' என்றான்.



எனக்கென்னவோ.... அவருக்குத் தெரியாதுன்னுதான் தோணுது. தெரிந்திருந்தா... அவரு அவனைக் கொலையே பண்ணியிருப்பாரு...' என்றாள் ஆவேசமாக.

'எனக்கென்னவோ அப்படித் தோணலே' என்றான் செல்வம்.

நிலா வெறித்துப் பார்த்தாள்.

'செல்வம் அத்தான்! நீங்களே என்னமோ விட்டேத்தியாப் பேசற மாதிரித் தெரியுது?' என்றாள்.

அவன் புன்னகைத்தான். 'அப்படியெல்லாம் இல்லே நிலா. நீ எந்த அளவுக்குத் போகணும்னு நினைக்கறயோ... அந்த அளவுக்கு நானும் ஹெல்ப் பண்றேன். ஆனா, எதுக்கும்... உங்க ஹஸ்பெண்ட் கிட்டே பேசினதுக்கப்புறம் முடிவு பண்ணு. அதுக்குள்ளே நைஸா அவன் எங்கிருக்கான்னு நான் கண்டு பிடிக்கறேன்.. போதுமா' என்றான்.

உதவி செய்கிறானே என்ற அளவில் அவளுக்கு மனம் அமைதியானது. ஆனால், எதிர்பார்த்த அளவிற்கு வேகம் காட்டவில்லையே என்று ஆதங்கமாகவும் இருந்தது. ஆனால், அன்றிரவு கணவனிடம் பேசுவதற்கு முன் அவளுக்கு வேறு ஒரு யோசனையும் எழுந்தது.

∴ ∴ ∴

'ஹேய். நிலா!' என்று அன்று மாலை வெகு சீக்கிரமாகவே வந்து நின்றான்.

'என்னத்தான்! சீக்கிரம் வந்துட்டீங்க?' என்றாள் ஒரு சிரிப்புடன்.

'ஹேய்! இந்த லொள்ளுதானே வேண்டாங்கறது. ரொம்ப வற்புறுத்தினியேன்னுதான் ஆபீசுக்குப் போனேன்' என்றான்.

சற்று நேரம் பெற்றோரிடம் பேசிக் கொண்டு கலகலவென்று பொழுதைக் கழித்தான்.

பல நாட்களுக்குப் பின் இயற்கையான கலகலப்புடன் பேசுகிற மகனிடம் அவர்களும் சற்று நேரம் பேசினார்கள்.

தாயும், தந்தையும் நிறைவான பார்வை பரிமாறிக் கொண்டார்கள்.

அவன் மாடிக்கப் போனதற்குப் பின் அம்மா கணவனைப் பார்த்தார்.

'பாத்தியா! பையனோட சிரிப்பை பார்த்தாலே சந்தோஷம் புரியதில்லே!' என்றார்.

'ஆமாங்க! அத்தனை சங்கடத்தையும் உள்ளயே போட்டு வச்சகிட்டிருந்திருக்கான்' என்றார் அம்மா.

அதே நேரம்!

அவன் அங்கே மனைவியை சீண்டிக் கொண்டிருந்தான்.

'ஹேய்! சீக்கிரம் வாங்கன்னு வரச் சொல்வேன்னு பார்த்தா... எதுக்கு வந்தீங்கன்னு கேக்கறே?' என்றான் கோபம் போல்.

அவள் சிரித்தாள். 'நான் என்ன கேட்டா... என்ன? நீங்க செய்யறதைத்தான் செய்யப் போறீங்க' என்றாள்.

'புரிஞ்சாச் சரி!' என்றான்.

∴ ∴ ∴

நிறைவான ஒரு புன்னகையுடன் அவன் டி.வி முன் அமர்ந்து கொண்டிருந்தான். சுதாகரனிடம் முக்கியமான ஒரு டிஸ்கஷன் செய்து முடிந்திருந்தான்.

முதன் முதலாக அந்த செய்தி கேட்ட நாளிலிருந்து கிட்டத்தட்ட ஒரு மாதம் ஓடியிருந்தது.

எரிமலை உள்ளுக்குள் பொங்கிக் கொண்டிருந்தது போலும் அவள் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.



கணவனிடம் அன்பைப் பொழிந்தாள். அவனே ஆச்சரியப் படும்படியாக அவனது தேவையையெல்லாம் நிறைவேற்றினாள்.

செல்வத்திடம் இருந்து வரவேண்டிய செய்திக்காகக் காத்திருந்தாள். அவனிடம் இருந்து செய்தி வரவே இல்லை. இன்றைக்கு நாளைக்கு என்று இழுத்துக் கொண்டிருந்தான்.

இப்போது முடிவு செய்து கொண்டாள். 'இனிமேல் யாரையும் நம்ப வேண்டாம் நாமே இறங்கி விட வேண்டியதுதான்' என்று.

நிறைவான புன்னகையுடன் அமர்ந்து டி.வி பார்த்துக் கொண்டிருந்த கணவனிடம் நெருங்கி அமர்ந்தாள்.

அவன் திரும்பிப் பார்த்துப் புன்னகைத்தான். அவள் தோள் மேல் கையைப் போட்டு அமர்ந்து கொண்டான்.

மெதுவாகத் தன் கையிலிருந்து காகிதத்தை நீட்டினாள். 'அத்தான்! இது உங்க சூட்கேஸ்ல இருந்தது' என்றாள்.

அவன் வாங்கிப் பார்த்தான்.

'அடடா! இது உன் கையில கிடைச்சிருக்கா' என்றான் அலட்டிக் கொள்ளாமல்.

அவள் ஒன்றும் பேசாமல் அவனைப் பார்த்தாள். அவன் மேலும் தொடர்ந்து சொன்னான்.

'இந்தக் குப்பைக் காகிதத்துக்கு எதுக்கு நிலா மதிப்புக் குடுக்கணும்' என்றான்.

கிழிக்கப் போனான். அவள் அதற்குள் அவனிடம் இருந்து பிடுங்கிக் கொண்டாள்.

'ம்ஹூம்' இது எனக்கு வேணும்?' என்றாள் நிலா.

'எதுக்கு?!' என்றான் கேள்விக் குறியாக.

'இது யார்ன்னு எனக்குத் தெரியணும்?' என்றாள் கோபமாக.

'தெரிஞ்சு... என்ன பண்ணப் போறே?' என்றான்.

'அத்தான்! எனக்கு மழுப்பாம பதில் சொல்லுங்க...! நம்ம கல்யாணத்துக்கு முதல் நாள் கார்த்திக் அத்தான் உங்ககிட்டே வந்து பேசினாரா?' என்றாள்.

அவன் அவளை ஆழப் பார்த்துக் கொண்டு 'ஆமாம்!' என்றான்.

'நீங்க ஏன் அதைப் பத்தி இதுவரைக்கும் என்கிட்டே பேசலே?' என்றாள்.

'யார் சொன்னா பேசலேன்னு பேசினேனே. அன்னைக்கே உன் கிட்டே வந்தேன். பேசினேன். எனக்குக் கிடைக்க வேண்டிய பதில் கிடைச்சதுக்கப்புறம்தானே... கல்யாணத்தையே ப்ரொசீட் பண்ணினேன்' என்றான்.

அவள் விழித்தாள். அவன் சிரித்தான்.

'மக்கு! நான் அன்னைக்கு நைட்ல உன்கிட்டே வந்து கேட்டேன் இல்லே. மனப்பூர்வமாகத்தானே இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துகிட்டேன்னு நீயும் பதில் சொன்னே. அதுக்கு மேல அம்மிணியோட சிவந்த முகம் பதில் சொல்லிடுச்சு...!'' என்றான்.

'ஓ...!' என்றாள்.

'கல்யாணத்துக்குப்புறம்தான் இந்த லெட்டர் வந்துச்சா?' என்றாள் மறுபடியும் தீவிரமான குரலில்.

'ஆமா!' என்றான். 'ஹேய்! அடுத்தது என்ன? அதைப் பத்தி ஏன் பேசலேன்னு கேக்கப் போறியா? அது பத்தியும் நான் உன்கிட்டே பேசினேன். நமக்கு ஃபர்ஸ்ட் நைட் ஃபிக்ஸ் பண்றதுக்கு முன்னாடி நான் உனக்கு இதில் பூரண சம்மதமான்னு கேட்டேனே? ஞாபகம் இருக்கா? அது இந்தக் கடிதத்துனாலதான். ஆனா, அப்பவும் எனக்கு உன் மேல முழு நம்பிக்கை இருந்துச்சு. இருந்தாலும் ஒருவேளை இதுல ஒரு துளி உண்மையிருந்தாலும் நம்ம



வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லாமப் போயிடுமில்ல. அதுக்காகத்தான் கேட்டேன்.

அப்ப ஏன் இந்த லெட்டரைப் பத்திச் சொல்லலே?' என்றாள் கடுப்பாக.

அவன் முகத்திலும் கோபம் ஏறியது 'ஏய்! என்னை என்ன நினைச்சே? எவனோ ஒரு முதுகெலும்பில்லாத பய மொட்டைக் கடுதாசி அனுப்புவான் அதைக் கொண்டு வந்து கட்டின பொண்டாட்டிகிட்டே காட்டி விசாரணை நடத்தற ஆளுன்னு நினைச்சயா?' என்றான்.

'அப்புறம்... ஏன்? நிஜமா என்னைப் பிடிச்சிருக்கான்னு கேட்டீங்க...!

அவன் உள்ளடங்கிய குரலில் சொன்னான். 'பாரு நிலா! உனக்கும் எனக்கும் முன்னே பின்னே பழக்கம் இல்லே. உன் வாழ்க்கையில அதுக்கு முன்னாடி என்ன நடந்துச்சுன்னு தெரியாது. ஒரு வேளை.. என் பணம்.. உன்னைப் பெத்தவங்க மனசிலே ஏதாவது தூண்டுதல் ஏற்படுத்தியிருக்கலாம் இல்லே! அதைக் கன்ஃபார்ம் பண்ணிக்கனும்னு நெனச்சேன்' என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருந்தாள்.

அவன் குரல் குழையச் சொன்னான். 'அது ஒருவிதமான போராட்டம்... நிலா. ஒரு பக்கம் உன் மேல ஏற்பட்ட நேசம்.. ஒரு பக்கம் உன்னோட சந்தோஷம் முக்கியம்கற எண்ணம். அதனால அந்தக் கடிதம் மட்டும் உண்மையா இருந்துரக் கூடாதுங்க போராட்டத்தோடதான் உன்கிட்டே கேட்டேன்' என்றான்.

அவள் நேராக அவனைப் பார்த்தாள்.

'ஒருவேளை.... அது உண்மைதாங்கற மாதிரி நான் சொல்லியிருந்தா... என்ன செஞ்சிருப்பீங்க?' என்றாள்.

தினகரன் சற்று நேரம் விட்டம் பார்த்தான். பிறகு சொன்னான்.

'வேற என்ன செய்ய! ஒதுங்கியிருப்பேன்' என்றான்.

'ஏன்?' என்றாள்.

'இங்க பார்! காதல்ல ரெண்டு வகை இருக்கு. உனக்கு என்னைத்தான் பிடிச்சிருக்குன்னு தெரிஞ்சதுக்கப்புறம் இன்னொருத்தன் குறுக்கிட்டிருந்தா கொலையே பண்ணி யிருப்பேன். ஆனா, உனக்கு அவனைப் பிடிச்சிருந்தது. ஒரு கட்டாயத்துக்காகத்தான் ஒத்துக்கிட்டேன்னு தெரிஞ்சிருந்தா.. என்னைக் காட்டிலும் உன் சந்தோஷம்தான் முக்கியம்னு நினைச்சு ஒதுங்கியிருப்பேன்' என்றான்.

அவள் கணிகளில் நீர் பெருகியது. அவன் மார்பில் கதறிக் கொண்டு சாய்ந்தாள்.

'ஹேய்! என்ன இது!' என்றான் திகைத்துப் போய்!

'பேசாதீங்க!' என்றாள்.

திகைத்துத் திணறிப் போகும் அளவுக்குத் தன் மீது அன்பு மழை பொழிந்த மனைவியின் வெளிப்பாட்டில் கிட்டத்தட்ட பைத்தியமாகிப் போனான் தினகரன்.




குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான் தினகரன். வெண்ணிலா முறைத்தாள்.

'அதென்ன! காலைல இருந்து இப்படி சிரிச்சகிட்டே இருக்கீங்க...!' என்றாள்.

'வேறென்ன? சந்தோஷம்தான்' என்றான். மெல்ல அருகில் இழுத்தான்.



'ஹேய்! அப்படி ஒரு இடி, மின்னல், மழையை நான் எதிர்பார்க்கலை... ஆனா, என்ன ஆர்டர் மாறிப்போச்சு?' என்றான்.

அவள் வியப்பாய் பார்க்க' ஆமா, கண்ல இருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் மழை கொட்டிட்டே! அதைச் சொன்னேன்! அது சரி.. ஏன் அப்படி.. ஒரு அழுகை!' என்றான்.

'வேறென்ன? சந்தோஷம்தான்!' என்றாள் அவளும் அவனைப் போலவே.

'அப்படி சந்தோஷம் பீறிட்டுக் கிளம்பற அளவுக்கு நான் என்ன சொன்னேன்?'

'சொன்னீங்களே! உன் சந்தோஷம்தான் முக்கியம்னு விலகியிருப்பேன்னு அப்படி சொன்னா எவ்வளவு பிரியம் இருக்கணும்னு நெனச்சேன்.. அதான்..' என்றாள் தரையைப் பார்த்துக் கொண்டு.

'சே! ... இன்னைக்குத்தான் நிலா, நான் வெடுக்குன்னு நடக்க முடியாத குறையைப் பெருசா ஃபீல் பணறேன். இப்ப மட்டும் நடக்கற மாதிரி இருந்தா... மேடத்தைக் கூட்டிட்டு வோர்ல்ட் லெவல் டூர் கிளம்பிடுவேன்... தெரியுமா?'

அவள் முகத்தில் மென்மை தெரிய ஆதரவாக தலையை வருடிக் கொடுத்தாள்.

'போலாங்கத்தான்! கண்டிப்பாய் போலாம். உங்களுக்கு கண்டிப்பா கால் சரியாய் போகும்' என்றாள்.

'அதுக்கு முன்னாலே நீங்க முடிவு கட்ட வேண்டிய விவகா இருக்கு' என்று எண்ணிக் கொண்டாள். மனதுக்குள்தான்.

∴ ∴ ∴

சுதாகரனும், தினகரனும் அன்றைக்கு ரொம்பவும் பிஸியாக இருந்தார்கள்.

'அண்ணா! என்னண்ணா ஆச்சரியம்! அண்ணன் இன்னைக்கு என்னை நம்பி உன்னை அனுப்பிச்சட்டாங்க. நார்மலா அப்படி அனுப்ப மாட்டாங்களே!' என்றான் சுதாகரன். சிரித்தான்.

தினகரனும் சிரித்தான். 'ஆமாடா, தம்பி, இன்னைக்கு என்னமோ வர்லேன்னுட்டா!' என்றான். இன்றைக்கு வரவில்லை என்றாள். காலையில அவள் அப்படிச் சொன்ன போதே ஆச்சரியம்தான்.

'நீ களைப்பா... இருக்கே! ரெஸ்ட் எடு என்று சொன்னாலும் கூட கேட்க மாட்டாள். சில சமயங்களில் அவனை கான்ஃபரன்ஸ் அறையில் விட்டுத் தான் போய் ஓய்வறையில் ஓய்வு எடுத்துக் கொண்டு திரும்பவும் புதுமலர் போல் நிற்பாள்.

ஒருவேளை நேற்றைய நிகழ்வுகளால் வெட்கப்படுகிறாள் போலும் என்று எண்ணிக் கொண்டான். உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

தம்பி வேறு காரணம் கேட்கிறான். என்னத்தைச் சொல்வது? என்று எண்ணிக் கொண்டான்.

அன்றைக்கு போர்டு மீட்டிங் இருந்தது. காரசாரமான விவாதங்களுக்குப் பிறகு அறைக்கு வந்தான்.

எதிர்பாராத ஒரு விருந்தாளி வந்திருந்தான். செல்வம்.

'அண்ணா! நான் வீட்டுக்கு வர்லாம்னு நினைச்சேன். வர டியலை' என்றான்.

தினகரன் மௌனமாகக் காத்திருந்தான்.

'அண்ணா! நிலா கிட்டத்தட்ட ஒரு மாசமாவே என்னைத்



பண்ணியிருக்காப்பல. எத்தனை நாளைக்கு மறைக்க முடியும்னு தெரியலே. பயமாயிருக்கு...!' என்றான்.

தினகரன் புன்னகைத்தான்.

'அதைப் பத்தி ஒன்றும் பயப்படவேண்டாம். நான் பாத்துக்கரேன்..' என்றான்.

சமாதானம் செய்வது போல் பேசி அனுப்பினான். செல்வம் போனதற்குப் பிறகு சிந்தனையில் ஆழ்ந்தான்.

தனபாலைச் சந்தித்ததையோ, செல்வத்திடம் இது பற்றிப் பேசியதையோ ஏன் வெண்ணிலா தன்னிடம் இதுவரை தெரிவிக்க வில்லை?

தன் மனைவி தான் நினைத்தற்கும் மேலாக ஆழமானவளாக இருப்பாளோ? முதன் முதலாக அவன் மனத்தில் கவலை தோன்றியது.

அதே நேரத்தில் அவன் கவலை பன்மடங்காகிற மாதிரி ஒரு செயலை வெண்ணிலா செய்து கொண்டிருந்தாள்.

∴ ∴ ∴

போர்ட் மீட்டிங் முடிந்ததற்குப் பின் மேனேஜரை மட்டும் மறுபடி ஒரு ரவுண்ட் பிற்பகலில் சந்திக்கலாம் என்றிருந்தான் தினகரன்.

அப்போதுதான் அந்த போன் வந்தது!

'தினகரன்! நான் கேசவன் நாயர் பேசறேன்' என்றார் கேசவன்.

'என்ன குரல் ரொம்ப சீரியஸாய் இருக்கு!' என்று எண்ணிய படியே 'சொல்லுப்பா!' என்றான்.

'யப்பா! உன் வைஃப் என் எதிர்ல உட்கார்ந்திருக்காங்க. யார் மேலயோ கொலைக் குற்றம் சாட்டிப் புகார் கொடுக்கறாங்க' என்றான்.

'ஓ! கொஞ்சம் விவரமாச் சொல்லுப்பா!' என்றான்.

சற்று நேரத்திற்கு முன்பு!

வெண்ணிலா வந்து அஸிஸ்டென்ட் கமிஷரை கேசவன் நாயரைச் சந்தித்தாள்.

'சார்! நான் ஒரு புகார் குடுக்கணும்' என்றாள். முதலில் அவனுக்கு நினைவு வரவில்லை. பிறகு நினைவு வந்துவிட்டது.

'மேடம்! நீங்க மிஸஸ். தினகர்தானே! உட்காருங்க' என்று உபசரித்தான்.

பிறகு சிரித்துக் கொண்டே 'ஏன் மேடம்! ஏதாவது பிராக்டிகல் ஜோக்கா? இன்னைக்கு ஒண்ணும் ஏப்ரல் ஒண்ணு அப்படி யெல்லாம் இல்லையே?' என்று காலண்டரைப் பார்த்து சிரித்தான்.

'இல்ல... சார்! நான் சீரியஸாய் சொல்றேன்' என்றாள். விவரமாய்ச் சொன்னாள்.

அவன் கண்கள் கருங்கின. 'மேடம்' நீங்க சொல்றது கொலைக் குற்றம். பெரிய விஷயம்' என்றான் உள்ளடங்கிய குரலில்.

'தெரியும்! நடந்த அநியாயமும் பெரிய அநியாயம்தான்' என்றாள்.

'உங்க ஹஸ்பெண்டுக்கு நீங்க இப்படிப் புகார் கொடுக்கப் போறது தெரியுமா?' என்றான் மறுபடியும் தீவிரமான குரலில்.

'இப்ப வரைக்கும் தெரியாது. அவர் என்ன சொன்னாலும் அதைப் பத்தி எனக்கு கவலையில்லே!' என்றாள்.

அவன் லேசா விசிலடித்தாற்போல் அடித்து விட்டு சிரித்தான்.

புகார் கடிதத்தை வாங்கிப் படித்தான்.

'எனது அத்தை மகன் கார்த்திகேயன் எனது கணவரைக் கொலை செய்ய முயன்றதாக ஆதாரப்பூர்வமாகத் தெரிய வந்துள்ளது.



அவரைக் கண்டு பிடித்து தண்டனை வழங்குமாறு காவல் துறையைக் கேட்டுக் கொள்கிறேன்' என்கிற மாதிரி இருந்தது கடிதம்.

முகம் சீரியஸாக மாறியது. 'மேடம்' இதை நான் வாங்கிக்கலைன்னா என்ன செய்வீங்க!'

அவள் சிரித்தாள் 'என்ன சார் நீங்க? தெரிஞ்சவங்களேன்னு உங்ககிட்டே வந்தா? வேற போலீஸ் ஆபீசர் கிடைக்காமலா போயிடுவாங்க' கமிஷனர்கிட்டே குடுப்பேன்' என்றாள்.

முடிவோடுதான் இருக்கிறாள் என்று புரிந்து கொண்டான். பிறகுதான் தினகரனிடம் பேசினான்.

'எம்மா! நீ என்கிட்டே இதைச் சொல்லியிருக்கலாம் இல்லே!' என்றான்.

'சொன்னா! விட்ரு.. இதைக் கிளறாதே அப்படீம்பீங்க' என்றாள் காட்டமாக.

இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்தது நினைவுக்கு வந்தது.

'நிலா! என்ன ஆச்சு!' என்றான்.

அவள் அவன் முகம் பார்த்தாள். உதடுகள் துடித்தன. கண்கள் கலங்கின.

'அத்தான்! உங்களுக்கு நடந்துச்சே அது விபத்து... இல்லே! கொலை முயற்சி!' என்றாள்.

அவன் முகபாவம் மாறியது. சோஃபாவில் அமர்ந்தான். 'யார் சொன்னா!' வீணாக் கற்பனை பண்ணாதே' என்று கடிந்து கொண்டான்.

'கற்பனை இல்லை. நிஜம். கார்த்தி அத்தானோட! அத்தானா இனிமே என்ன அத்தான். அந்த நாயோட வேலை' என்றாள்.

அப்போது தினகரன் அழுத்தமான முகத்துடன் சொன்னான்.

'தெரியும்.. நிலா!' என்றான்.

வெண்ணிலா வெகுவாகத் திடுக்கிட்டுப் போனாள். அப்போதுதான் அவன் சொன்னான்.

'நிலா! மயங்கிச் சாயர நேரத்துல லாரியில் காபின்ல இருந்து ஒரு முகம் எட்டிப் பார்த்தது. நல்லாத் தெரியும்' என்றான்.

சற்று நேரம் கனமான அமைதி நிலவியது. பிறகு ஒரு நீண்ட பெருமூச்சுடன் சொன்னான்.

'நிலா! தீவிரமான அன்பு ஒருத்தர் மேலே வச்சுட்டோம்னு வையி. கிடைக்கலேங்கறப்ப வெறிதான் வரும். அந்த வெறி அந்தாளுக்கு வந்துருச்சு....' என்றான்.

'அதுக்காக! கொலை செய்யற அளவுக்குப் போயிடறதா?'

'நிலா! சில விஷயங்கள் காதல்லயும் போர்லயும் நியாயம்தான் கறாங்க.'

'அத்தான்! என்ன பேசறீங்க?' என்று வெடித்தாள் வெண்ணிலா. 'நீங்க எவ்வளவு சஃப்பர் பண்ணிட்டீங்க!' என்றாள் அழுகையும் தேம்பலுமாக.

'சரி... இப்ப என்ன விடு' சோதனைகள் வந்தாலும் நாம ஒருத்தர் மேல ஒருத்தருக்கு இருக்கிற அன்பை உறுதிப்படுத்திகிட்டோம். பாரு! நாலைஞ்சு நாளைக்கு முன்னாடி உலகத்துல இருக்கிற சந்தோஷத்தை எல்லாம் தேவியார் எனக்கு வாரி வழங்கினீங்க...! அது போதும் அவன் தோத்துட்டாங்கறதுக்கப்புறம் அவனுக்கு இனிமேலும் என்ன தண்டனை' என்றான்.

நிலா அப்போதைக்கு சமாதானம் ஆனாற்போல் அமர்ந்து கொண்டாள். ஆனால் சமாதானம் ஆகவில்லை. இப்போது போய் இப்படிப் புகார் கொடுக்கிறேன் என்று அமர்ந்திருக்கிறாளே என்று எண்ணிக் கொண்டான்.

கேசவனிடம் கேட்டான்.

'எம்ப்பா! ரொம்ப உறுதியா நிக்கறாப்பலயா!'

'ஆமாப்பா! நீங்க வாங்கிக்கலேன்னா கமிஷனர்கிட்டே போவேங்கறாப்பல...' என்றான் கேசவன்.

மறுபடியும் ஒரு பெருமூச்சு விட்ட தினகரன் சொன்னான்.

'சரி...! வாங்கிக்கப்பா! இப்போதைக்கு எப்.ஐ.ஆர் போடாதே!. முதல்ல கார்த்திகேயனைக் கண்டு பிடிங்க... அதுக்கப்புறம் என்ன செய்யறதன்னு பார்க்கலாம் என்றான்.

'ம்...சரி!' என்றான்.

புகாரை வாங்கிக் கொண்டான். 'மேடம்! கொஞ்சம் டைம் குடுங்க. அந்த ஆளை முதல்ல கண்டு பிடிக்கிறேன். அதுக்குப் பிறகு எஃப்.ஐ.ஆர் போட்டர்லாம்' என்றான் அவளுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில்.

சரியென்று கிளம்பிப் போனாள். வீட்டில் எரிமலை வெடிக்குமேயென்று போனாள். ஆனால் தினகரன் அதைப் பற்றிப் பேசவேயில்லை.

∴ ∴ ∴

'ம்ஹூம்... இப்படித் திரும்புங்க!' என்று முகவாய்க் கட்டையைப் பிடித்துத் திருப்பினாள்.

'கொஞ்ச நேரமாகவே இது நடந்து கொண்டிருந்தது.

'தினகரனுக்குத் தலைவாரி விடுகிறேன்' என்று வெண்ணில சீப்பை எடுத்துக் கொண்டு நின்றபோதே தினகரனுக்கு உள்ளூ சிரிப்பு.

சிரித்தால் கோபம் வரும் என்று அவள் விருப்பத்துக்குத் தலையைக் கொடுத்தான்.

'இருங்க' அதுக்கு முன்னாலே நல்லா ஹெட் மசாஜ் செய்து விடுகிறேன்' என்று எண்ணெயைக் கொட்டி செய்ய ஆரம்பித்தாள். சுகமாக இருக்கவே கண்களை மூடிக் கொண்டான்.

அதற்குப் பிறகு 'கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு அப்புறம் குளிப்பீங்களாம்' என்று காலை நீட்டி அமர்கிற வகையிலே அமர வைத்தாள்.

அதற்கு பிறகுதான் 'இருங்கத்தான்! உங்களுக்கு ரெண்டு மூணு ஸ்டைல்ல தலைவாரிப் பார்க்கறேன்' என்றாள்.

அதற்கும் பணிந்து கொடுத்தான். வேண்டுமென்றே தலையைக் கலைத்து விட்டு விட்டு சிரித்தாள்.

அவனும் அரைப் புன்னகையுடன் ஆழப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

'இது பாருங்க... நதியா ஸ்டைல்' என்று கொஞ்ச முடியைத் தூக்கிக் கட்டிக் கலாட்டா செய்ய.

'ஆமா.. நாரதர் கொண்டை மாதிரி இருக்கு' என்று சிரித்தான். மெல்ல வலக்கையை நீட்டி இடுப்பை வளைக்க முயல அவள் நகர்ந்து கொண்டாள்.

'வேண்டாம். இந்த வேலையைக் கெடுக்கற வேலையே வேண்டாம்' என்று மறுபடியும் சிரித்தாள்.

'ஹேய்! இப்ப என்ன உனக்கு வேற வேலை ஒண்ணும் இல்லையா?' என்றான்.

'ஏன்! இதைவிட வேறென்ன வேலை.. வேணும்? என் ஹஸ்பெண்டுக்கு ஏற்ற ஹேர்ஸ்டைல் ஃபிக்ஸ் பண்றேன். ட்ரிம்மா.. நடமாடணுமில்லே!



'ம்.. எப்படியும் தப்பிச்சு ஓட முடியாதுன்னு லொள்ளு பண்றே!' என்று சிரித்தான் தினகரன்.

வெண்ணிலா மெல்ல அவன் நெற்றியில் இதழ் பதித்து விட்டுச் சொன்னாள்.

'இப்ப மட்டுமல்ல... முதலாளி... சார்! எப்பவுமே என்கிட்ட இருந்து நீங்க தப்பிக்க முடியாது... தெரியுங்களா?' என்றாள்.

'தப்பிக்கணும்னு நாங்க நெனைக்கவே இல்லையே இப்படி சிக்கிக்கத்தான் விருப்பம்' என்று அருகில் இழுத்து அவள் காதில் ஏதோ சொன்னான்.

முகம் சிவக்க நிமிர்ந்தவள் முறைத்தபடி சோஃபாவில் மேல் இருந்த அந்த சின்னத் தலையணையை எடுத்து 'பொத் பொத்தென்று' நான்கைந்து அடிகள் அடித்தாள்.

கவனமாக மெல்ல அடிக்கிறாள் என்பதைக் கவனித்த கணவன் சிரித்துக் கொண்டான். ஆனால், மறுபடியும் 'ஓட முடியாதுன்னு தானே அடிக்கறே!' என்றான்.

அவள் உடனே நிறுத்திக் கொண்டாள். 'ஓட முடியற நாள் வருமில்ல. அப்ப இதைக் கணக்கு வச்சுகிட்டுக் குடுக்கறேன்...' என்றான்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கலகலவென் சிரிக்கையிலேயே அவன் கைகளில் சிக்கிக் கொண்டாள்.

அறை வாசலில் நிழலாடத் திரும்பினார்கள். சுதாகர் தயக்கத்துடன் நின்றான்.

'ஐ ம் ஸாரி அண்ணா! நான் அப்புறம் வர்றேன்' என்று ந முற்பட

'டேய்! நீ வாடா!' என்று வரவேற்றான் தினகரன்.

வெண்ணிலா முகம் சிவக்க ஏதோ வேலையிருப்பவள் போல் வேகமாக நகர்வதை ஒரு சிரிப்புடன் பார்த்து விட்டு அவன் திரும்ப சுதாகரன் அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'பயங்கரமான ஆள்றா... உங்கண்ணி!' என்று சிரித்தான் தினகரன்.

சுதாகரன் 'அண்ணா! என்ன திடீர்னு கம்ப்ளெயின்ட் பண்ற அளவுக்குப் போயிட்டாங்க!' என்றான்.

'ஆமடா! நானே எதிர்பார்க்கலை. இப்ப அழுத்தமா அதைப் பத்தி மட்டும் பேச மட்டேங்கறா' என்றான்.

'எனக்கும் புரியுது!' என்றான் சுதாகரன்.

'என்ன புரியுது?'

'அண்ணி ஏன் அப்படிப் பண்றாங்கன்னு?' என்றான்.

'ஏன்?'

'சொல்றேன்.. இன்னொரு நாளைக்கு...' என்றவன் 'மேற்கொண்டு என்ன செய்யலாம்?' என்றான்.

'அதான் யோசிக்கறேன்.'

'அண்ணா! இந்த விஷயம் பத்திரிகைக்காரனுங்களுக்குக் கிடைச்சா... லட்டு மாதிரி... அரைச்சுத் தள்ளிடுவாங்க' என்றான்.

'உங்க அண்ணி எதையும் கேக்கற நிலைமையிலே இல்லே! பாக்கலாம் என்ன செய்யறதுன்னு' என்றான்.

'என்னவாவது செய்ண்ணா!' என்றான் சுதாகரன்.

'ம்... உங்கண்ணி தடுக்குல நுழைச்சா நாம கோலத்துல நுழைய வேண்டியதுதான்' என்ற சொன்னவன் யாருக்கோ போன் போட்டான்.

மெல்லிய குரலில் செய்ய வேண்டியதைச் சொன்னான்.

∴ ∴ ∴






ஒரே பரபரப்பாக இருந்தது வீடு. 'இதென்ன? களேபரம்?' என்று எண்ணிக் கொண்டு கீழே இறங்கி வந்தாள் வெண்ணிலா.

'என்னங்கத்தே நடக்குது?' என்றாள்.

'உனக்கு விஷயம் தெரியாதா?' என்றார் ஆச்சரியமாக.

'இல்லையே! என்ன விஷயம்!' என்று விழித்தாள் நிலா.

'சரியாப் போச்சு. போ!' என்று சிரித்தார் மாமியார். உங்க வீட்டுக்காரருக்குக் கண்டிப்பா ரெண்டு மூணு நாளாவது ஊருக்குப் போகணுமாம். தோட்டத்துக்குப் போறானாம். ரெஸ்ட் வேணுமாம். உன்னைக் கூட்டிட்டுப் போறானாம். உனக்கே சொல்லலையா?' என்றார்.

'ஓ!' என்றாள்.

திரும்ப மேலே போனாள். அப்போது தினகரன் சக்கர நாற்காலியை அவனுடைய பீரோவுக்கருகில் போட்டுக் கொண்டு ஒரு பெட்டியில் துணிமணிகளை அடுக்கிக் கொண்டிருந்தான்.

அவள் நுழைவதை பார்த்து சிரித்தான்.

'அதுக்குள்ளே வந்துட்டியா? நீ வர்றதுக்குள்ளே பேக் பண்ணிடணும்னு நினைச்சேன்' என்று நிலாவின் துணிமணிகளை அடுக்க.

'ஐயோ! இதென்னங்க...? விடுங்க.. நான் அடுக்கறேன்' என்று அவள் பரபரக்க.

'பரவாயில்லை.. விடு!' என்று அடுக்கினான்.

ஒரே மணி நேரத்தில் புறப்பட்டார்கள் இருவர் மட்டுமே புறப்பட்டார்கள்.

காரை அவனே ஓட்டினான்!

'அத்தான்! ஒரு மணி நேரத்துக்கு மேலே ஓட்டணும்!' என்று அவள் தயங்க.

'ஹேய்! அவசரம்னா சென்னைக்கே ஓட்டியிருக்கேன்... தெரியுமா?' என்றான்.

அவள் அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

'என்ன திடீர்னு... தோட்டத்துக்கு?' என்றாள்.

'நாமதான் ஹனிமூன்னு... எங்கயும் போகலை? நேத்து [illegible]விதவிதமான ஹோர்ஸ்டைல்னு தலை சீவி விட்டயே? அது [illegible]ாதிரி. நமக்கும் நிறைய விஷயங்கள். வித விதமாத் தெரியும். [illegible]காஞ்சம் கத்துக் கொடுக்கலாம்னு...' என்று சொல்லி [illegible]டிப்பதற்குள்ளாக அவள் வாய்க்குள் முணுமுணுத்தாள்.

'என்ன முணுமுணுக்கறே!'

'ஒண்ணும் இல்லை!' என்றாள் வெளியே பார்த்துக் [illegible]ாண்டு.

'நான் சொல்லட்டா?' ஊர்ப்பட்ட லொள்ளுன்னு தானே [illegible]ன்னே?' என்றான்.

'ஆமா!' என்று ஆச்சரியமானாள்.

[illegible] என்னென்ன சமயங்கள்ல என்ன மாதிரிப் பேசவேன்னு இது வரைக்கும் நான் [illegible]ன்னா... [illegible]



அவன் மேற்கொண்டு பேசினால் வம்பு வளரும் என்று நினைத்து அமைதியாகி விட்டாள். திடீரென்று கவலையாக.

'எங்கத்தான்! எதுக்கும் யாரையாவது ஹெல்புக்குக் கூட்டிட்டு வந்திருக்கலாமோ?' என்றாள்.

'கவலையே படாதே! ஏதாவது பிராப்ளம்னா வழியில எங்க வேண்ணா நிறுத்திட்டு சுதாவுக்கு ஒரு போன் அடிச்சா... ஹெல்ப் வந்துடும்' என்றான்.

'எப்படி?' என்றாள்.

அவன் காரில் முன்னால் இருந்த கண்ணாடியை திருப்பிக் காட்டினான்.

'பாத்தியா! கொஞ்ச டிஸ்டன்ஸ்ல பின்னாலே ஒரு பைக் வந்துட்டிருக்கில்ல.. நம்ம சுதா அனுப்பியிருக்கான்... அடுத்த ஊருக்குப் போனதும் ஆள் மாறிடும். அங்க இருந்து வேற யாராவது வருவாங்க..' என்றான்.

'அவ்வளவு கஷ்டம் எதுக்கு? இதே ஆளையே முழு தூரத்துக்கும் அனுப்ப வேண்டியதுதானே?'

'அது...!' என்று சிரித்தான் தினகரன்.

'அது...'எனக்குத் தெரியாம செய்யறானாம்! எனக்குத் தெரிஞ்சா என்னோட ஊனத்தை கட்டிக் காட்டிட்டானேன்னு வருத்தப்படு வேனாம். என்னோட ஆசைக்கும் மதிப்பும் குடுக்கணும் ஆனா பாதுகாப்புக்கும் ஏற்பாடு பண்ணணுமாம்' என்றான்.

அவள் வியப்பாய் அவனைப் பார்த்தாள்.

'எங்கத்தான்.. நீங்க ரெண்டு பேரும் ரொம்ப அஃபக்ஷனேட்..' இல்லே!' என்றாள்.

[illegible] மேலும் தொடர்ந்து.

'ஆனா... நான் சொன்னாக் கேட்பான். ஒரு தடவை காலேஜ்ல படிச்சிட்டிருந்தப்ப ஒரு பொண்ணை லைக்... பண்ணி...' என்று அவன் ஆரம்பிக்க... அவள் இடையில் புகுந்து

'ஆமா.. சொன்னாரு!' என்றாள்.

'என்னது... உன்கிட்டே சொன்னானா?' என்றான்.

'ஆமாங்க... சொன்னாரு.' என்றாள்.

'ஹேய்! அப்ப.. உன்னை ஒரு முக்கியமான உறவா எத்துகிட்டான்னு அர்த்தம்.. அம்மா அப்பாவுக்கே சொன்னதில்லே தெரியுமா?' என்றான்.

அந்தப் பழைய நாளை நோக்கி அவன் நினைவு ஓடியது.

* * *

'ஏன்டா... தம்பி! என்று ஏதோ கேட்க எண்ணி அறைக்குள் நுழைந்தான். தினகரன்.

'என்னண்ணா!' என்று எழுந்து சுதாகரன் கண்களில் சோகம் தெரிந்தது.

சட்டென்று முக பாவத்தை மாற்றிக் கொண்டான்.

தினகரன் அவனை ஆழ்ந்து பார்த்தான்.

'என்னடா... இன்னும்... அதே வருத்தத்திலே இருக்கியா?' ...றான்.

அவன் மௌனமாக நின்றான்.

...இங்க பாரு! உனக்கு அந்தப் பொண்ணுதான் வேணும்னா... நான் ...ாணம் பண்ணி வைக்கிறேன்' என்றான்,

...இல்லண்ணே! வேண்டாம். பிரச்சினை என்னன்னா நான் ...வைப் பார்த்தவுடனே லைக் பண்ணிட்டேன். என்னோட



கற்பனைகளையெல்லாம் அவ மேலே திணிச்சு.. அந்தக் குணமெல்லாம் அவகிட்டே இருக்கணும்கற மாதிரி நானா முடிவெடுத்துகிட்டேன். ஆனா, தோற்றத்துல மட்டும்தான் அவ நான் எதிர்பார்த்த ஆள்ங்கறதையும், மற்றபடி உள்ளே வெறும் காலியிடம்தான்கறது போகப் போகத்தானே புரிஞ்சது' என்றான்.

தம்பியின் சிந்தனைத் தெளிவு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'ஆமப்பா! நான் ஸ்டெல்லா புருஸ்ன்னு ஒரு சிறுகதை எழுத்தாளர் சொன்னதைப் படிச்சிருக்கேன். இளவயசுல ஏற்படற காதல் எல்லாம் நமக்கு நாமே படைச்சுக்கற கற்பனை உருவங்கள் மேல வர்ற காதல்தான். ஆனா, நாம எதிர்பார்க்காத விதத்துல அவங்க வேறயா இருக்கும் போது ஏமாத்தமாயிடுது. இவ்வளவு தெளிவா யோசிக்கிற நீ ஏன் பின்னே மூட் அவுட்லே இருக்கே!' என்றான் வாஞ்சையாக.

'என்ன இருந்தாலும் பிரிவுங்கறதும், இழப்புங்கறதும் சோகம்தானே...?' என்றான்.

கண்கள் கலங்கின. உதடுகள் துடித்தன. சட்டென்று குலுங்கி அழுதுவிட்டான்.

'அழுது முடிச்சிடு... தம்பி! அழுது முடிச்சுட்டு.. உன்னோட கண்ணீருக்கு அந்தப் பொண்ணுக்குத் தகுதியிருக்கான்னு பாத்துக்க...' என்றான்.

அழுது முடித்தவன் நிமிர்ந்து சொன்னான்.

'அண்ணா! கண்டிப்பாக நிதர்சனமா நான் பாத்த ரீனாவுக்குத் தகுதியில்லே. ஆனா... நான் மனசுல படைச்சுகிட்ட ரீனாவுக்குத் தகுதியிருக்கு' என்றான்.

தினகரன் மௌனமாகவே அவன் தலையைத் தடவிக் கொடுத்தபடி சகோதரனைத் தோளில் சாய்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

பிறகுதான் அந்த முடிவெடுத்தான். 'தம்பி நீ கொஞ்ச நாளைக்கு வெளிநாடு போயிட்டு வா..'

'எதுக்கு?'

'போ! நமக்கு வசதியிருக்கு! உனக்கு வெளிநாடு போன மாதிரி இருக்கும். வாழ்க்கையோட வேறு வேறு கோணங்களைப் பார்த்த மாதிரியும் இருக்கும். அங்கே காதலும், வாழ்க்கையும் எவ்வளவு அலட்சியமாகக் கையாளப்படுதுங்கறதைப் பார்த்து ஒருவேளை தெளிவு வர்லாம்' என்றான்.

சொன்ன மாதிரியே அனுப்பி வைத்தான்.

அதை இப்போது மனைவியிடம் பகிர்ந்து கொண்டான். தொடர்ந்து சொன்னான்.

போயிட்டு வந்ததுக்கப்புறம் சொல்றான். 'அண்ணா! இங்கே சின்ன வயசுல செத்துப் போயி பொண்டாட்டிக்காக வாழ்க்கை பூராவும் பிரம்மச்சாரியா இருக்கறவங்க இருக்காங்க.. அங்க சட்டை மாத்தற மாதிரி ஆளை மாத்தறாங்க என்று சிரிக்கிறான். இப்ப ஓரளவுக்கு தெளிவாயிட்டான்' என்றான்.

நீண்ட பெருமூச்சு விட்டான். 'ஆனா. அந்த ரீனாவை மறுக்கறதுக்காக ரொம்பக் கஷ்டப்பட்டுட்டான்' என்றான்.

பிறகு மனைவியிடம் திரும்பி 'ஏய்.. ஒருத்தர் மேலே பிரியம் வைக்கறதுக்கறதும் அது திரும்பக் கிடைக்கறதுக்கறதும் ரொம்ப அற்புதமான விஷயம். ஆனா, திரும்பக் கிடைக்கலேங்கறப்ப... ஒரு வெறி வர்றது இயற்கைதானே?' என்றான் தினகரன் வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போல்.

கணவன் எங்கே வருகிறான் என்பது புரிய அவள் தயங்காமல் பதில் கொடுத்தாள்.



'வாழ்க்கையோட நியாயம் இடத்துக்கு இடம் மாறுங்க அத்தான்' என்றாள். மேற்கொண்ட அதைப் பத்திப் பேசாதே' என்பது போல் பேச்சை மாற்றினாள்.

தினகரனும் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுட்டு கியரை மாற்றினான். டாப்கியருக்குப் போனான்.

∴ ∴ ∴

'சார் இன்னும் எத்தனை தூரம் போகணும்?' என்றான் செல்வம்.

'எவனுக்குத் தெரியும்!' என்றான் கேசவன் நாயர்.

கேரளா பார்டரில் உள்ள ஒரு ஊரில் நுழைந்து பைக்கை வைத்து விட்டு ஊருக்குள் போய் வழி கேட்டார்கள்.

'மண்ணை தோட்டமோ.. என்னவோ! பெரியம்மா சொன்னாங்க! சார்' என்றான் செல்வம்.

'இதுக்குத்தான்டா! ∴ப்ரெண்ட்ஸ்கிட்டே கூட எந்த ஆப்ளி கேஷனும் வச்சுக்கக் கூடாதுங்கறது..' என்று சலித்துக் கொண்டான் கேசவன்.

'சார்! அண்ணனோட வாழ்க்கைப் பிரச்சினை சார்!' என்றான் செல்வம்.

'அதுக்காகத்தாப்பா... பாக்கறேன்' என்றான் கேசவன்.

காலையில் இருந்து இடம் கண்டுபிடிப்பதற்காக அலைந் கொண்டிருந்தார்கள். இடத்தைக் கண்டுபிடிக்கவில்லை.

சாப்பாட்டு நேரமே ஆகிவிட்டது. 'ஆறுமுகம் கிளப்புக் கடை என்று ஒரு போர்டு இருந்தது.

'சார்! இங்க இந்த ஒரு கடைதான் இருக்கு. பேசா சாப்பிட்ரலாம். சார்!' என்றான் செல்வம்.

'வந்ததுக்கு... அதுதான் நடக்குது நேர நோத்துக்கு டீ... சோறு...! ஆனா, வேலை மட்டும் முடியற மாதிரித் தெரியலை!' என்று உள்ளே நுழைந்தார்கள்.

கொட்டை கொட்டையான எக்குத்தல் அரிசிச் சோறு.

செல்வம் சாப்பிடுவதற்குள் திண்டாடிப் போய்விட்டான். ஆனால், கேசவன்.

'ஆஹா இப்படிச் சோறு சாப்பிட்டு எத்தனை நாளாச்சு!' என்று ஆசையாகச் சாப்பிட்டான். சாப்பிட்டுக் கொண்டே கடைக் காரரிடம் பேச்சுக் கொடுத்தான்.

'ஓ! ஆயானோ! அது மன்னற தோட்டம். இல்லை! மன்றாடி தோட்டம். அது இவடயல்லோ... உண்டு!' என்று வழி சொன்னார்கள்.

மறுபடியும் பைக்கில் சற்று தூரம் போனார்கள். பிறகு பைக் கூட நுழைய முடியாத ஒரு வழியில் ஆரம்பத்திலேயே பைக்கை நிறுத்தி விட்டு நடந்தார்கள்.

வழியில் இரண்டு புறமும் பச்சைப் பசேலென்ற செடிகள். குயில் கூவிடும் ஓசை.

'கேரளா கேரளாதான்... சார்! என்ன அழகு... பாருங்க! நம்ம திருப்பூரெல்லாம்... விவசாய நிலங்களே இருக்குமோ இருக்காது போல ஆயிட்டிருக்கு. போகப் போக வேல்யூ ஏறிக்கிட்டே போகுது. கையகல இடம் வாங்கக் கூட இனிப் பை நிறைய பணம் வேணுமாட்ட இருக்கு..!' என்றான் செல்வம்.

'கையகல இடம் பை நிறையப் பணம் நல்லாப் பேசறப்பா... நீ...' என்று சிரித்தான் கேசவன்.

ஒரு வழியாக அந்தத் தோட்டத்தை அடைந்தார்கள். சற்று தூரத்தில் ஒரு பெரிய கட்டிடம் தெரிந்தது. இவர்கள் நுழைந்த



பகுதியில் நான்கைந்து வீடுகள் இருந்தன. ஒவ்வொரு வீட்டுக்குப் பின்னாலும் செடி கொடிகள்.

'யாராணு?' என்று ஒருவர் வந்தார்.

'நான்... கேசவன். இவிட ஒரு ஆளை நோக்கணும்' என்று விளக்கினான் கேசவன்.

'ஓ! ஆயானோ! அவிட உண்டு' என்று இன்னும் சற்று தூரத்தில் இருந்த ஒரு குடிசையைக் காட்டினார்கள்.

'பெரிய ஆளுப்பா.. உன் தம்பி! எப்படி வந்து இடம் பிடிச்சிருக்கான் பாரு!' என்று சொல்லி கேசவன் சிரித்தான்.

'இல்ல, பார்! இந்தத் தோட்டத்துக்காரங்க... அவங்க பெரியம்மாவுக்கு சொந்தக்காரங்க. அந்த இன்ஃபுளுயன்ஸை யூஸ் பண்ணி இடம் பிடிச்சிருக்கான் போல' என்று வீட்டை நெருங்கினார்கள்.

ஒரு தட்டை முன்னால் வைத்து அப்போதுதான் சாப்பிட உட்கார்ந்த கார்த்திகேயன் திரும்பிப் பார்த்தான்.

உள்ளேயிருந்து பார்க்கும்போது யாரென்று தெரியவில்லை போலும். எழுந்து வந்தான்.

'யாரு!' என்றான்.

'யாரா! உனக்கு வந்திருக்கிற எமன்!' என்று உறுமினான் கேசவன்.

அதற்குள் செல்வத்தைப் பார்த்த கார்த்திகேயன், 'செல்வம்.. அண்ணா!' என்று ஆச்சரியமானான்.

செல்வம் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு நின்றான்.

'யோவ்! நான் பேசிக்கிட்டிருக்கேன் இல்ல. அங்க என்ன பேச்சு?' என்றான் கேசவன்.

'நீங்க யார் சார்?' என்றான் கார்த்திகேயன்.

'நாங்க யாரா? நாங்க.. போலீசு' என்றான் கேசவன்.

கார்த்திகேயனின் முகம் வெளுத்தது.

'பாருப்பா! நாங்க இங்கயே உட்கார்றோம்.. நீ சாப்பிட்டு முடிச்சுட்டு எங்களோட கிளம்பறு!' என்றான் கேசவன் கறாராக.

கார்த்திகேயன் பீதியால் வெளுத்த முகத்தோடு தலையை ஆட்டினான். கைகள் நடுங்க அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தான்.

சாப்பிட முடியவில்லை போலும். 'சார்! சாப்பிட முடியலே! கொட்டிடறேன்!' என்று எழுந்தான்.

பின்கட்டுக்குப் போனவன் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு ஓடத் தயாரானான்.

அதே சமயம் பீமசேனன் போல் பின்னால் நின்ற கேசவன்,

'தெரியும்டா! எத்தனை பேரை என் சர்வீஸ்ல பார்த்திருக்கேன். வழக்கை மேலே மேல சிக்கலாக்கிக்காம... கிளம்பி வா' என்று கொத்தாக அவன் முடியைப் பிடித்து இழுத்து உள்ளே அழைத்து வந்தான்.

ஓங்கி ஒரே ஒரு அறை விட்டான். கார்த்திகேயன் அலறுவதை செல்வம் ஒரு வேதனையோடு பார்த்துக் கொண்டு நின்றான்.




மெல்லச் சிரித்துக் கொண்டாள் வெண்ணிலா.

கணவனும் அவளுமாய்த் தோட்டத்துக்குப் போய் விட்டு வந்து இரண்டு மூன்று நாட்களாகயிருந்தது.



'கக்கு மிட்டாய் சாப்பிட்டவனுக்கு அந்தக் குளிர்ச்சி கொஞ்ச நேரம் வாய்க்குள் இருக்குமே.. அதுபோல அந்த நாட்களின் இனிமை அவள் மனதுக்குள் இனித்துக் கொண்டேயிருந்தது.

தோட்ட வீடு அழகாக இருந்தது!

பின்கட்டில் சமையல், வேலையாட்கள் இருந்தார்கள். அழைத்தால் மட்டுமே வருகிறவர்களாக. அதுவும் முன்கட்டில் நுழைந்து வருகிறவர்களாக இல்லாமல் கட்டிடத்தைச் சுற்றி முன்னறைக்கு வருகிற அளவுக்கு இங்கிதம் தெரிந்தவர்களாக இருந்தார்கள்.

வெண்ணிலாவுக்கு அங்கே வேலை என்று எதுவுமே இருக்கவில்லை. கணவனைக் கவனிப்பது தவிர.

அவனும் முற்றிலுமாகத் தன் அலுவலகப் பிரச்சினைகளை ஒதுக்கி வைத்துவிட்டு மனைவியுடனான ஒரு உலகத்துக்குப் போய் விட்டான்.

வெண்ணிலா வேலையாட்களிடம் சொல்லி சூடான பாலில் குருமிளகு போட்டு இரண்டு கப்புக்களில் எடுத்துக் கொண்டு வந்தாள்.

ஒன்றை அவனிடம் கொடுத்தாள். அவன் கையில் வாங்கிக் கொள்ளாமல் தன் சீண்டலை ஆரம்பிக்க இடம் கொடுத்தாள்.

விளையாட்டாய் சிரித்தபடி அவள் தோளில் முகம் பதித்துக் கொண்டு சொன்னான்.

'ஹேய்! வைஃப்ன்னா அர்த்தம் தெரியுமா? ஈவில் நெஸஸிடி' என்றான்.

அவள் கோபம் கொண்டாள் போல் அவனைத் தள்ளி விட்டாள்.

'ஓஹோ! ஈவிலா? அப்ப எதுக்கு இப்படிக் குழைய்டிக்கறீங்க!' என்றான்.

தினகரன் தலையணையின் மேல் சாய்ந்து கொண்டு அமர்ந்து கொண்டான்.

'வர வர உனக்குக் காதே சரியாக் கேட்கறதில்லை: நிலா நான் ஈவில்னா சொன்னேன். நாவல் தெசனிடின்னு சொன்னேன்' என்றான்.

வெண்ணிலா மலைத்துப் போனாள்.

'அத்தான்! பயங்கரமாய் புரட்டுப் பண்றீங்க!' என்றாள்.

'அதான்.. சக்ஸஸ்ஃபுல் முதலாளியா இருக்கேன்' என்றான்.

அவள் ஒற்றை ஆள்காட்டி விரல் நீட்டி மிரட்டினாள்.

'முதலாளி.. தொழிலாளியெல்லாம் உங்க கம்பெனியில. இங்க.. அதெல்லாம் கிடையாது' என்றாள்.

'சரிங்க.. முதலாளி!' என்றான்.

'லொள்ளு! சரியான லொள்ளு!' என்று நாலைந்துமுறை குட்டுவது போல நடிக்க அவன் தலையை வாகாகக் குனிந்து கொடுத்துக் கொண்டு அமர்ந்து நிமாந்தவன் ஒரு விதமாகச் சிரித்துக் கொண்டு அருகில் இழுத்தான்.

வேறு பதில்கள் கொடுத்தான். அவளைப் பேச விடாமல்.

* * *

பன்னிரண்டு மணியிருக்கும்!

நிலா விழித்துப் பார்த்தவள் திடுக்கிட்டாள். கேசவனை அருகில் காணவில்லை.

எழுந்து முன் ஹாலுக்கு வந்தாள்.



தங்கள் கட்டிடத்துக்கும் முன்னால் இருந்த வெற்றிடத்தில் ஒரு மரக் கட்டிலில் சாய்ந்திருந்தான். இரண்டு மூன்று தலையணை களைச் சாய்த்து அதில் அமர்ந்திருந்தான்.

மெல்ல அவன் அருகில் போய் நின்றாள்.

அவன் ஏதோ தியானத்தில் அமர்ந்திருப்பவன் போல அமர்ந்திருந்தவன் மெல்ல நிமிர்ந்து அவளைப் பார்த்தான். புன்னகைத்தான். 'உட்காரு தங்கம்ஸ்' என்றான்.

அவள் அமர்ந்தாள்! ஏதோ சொல்ல வாயெடுக்கையில் 'ஷ்' என்று அவள் வாயின் மேல் ஒற்றை விரல் வைத்து அமைதிப்படுத்தினான்.

மார்பில் சாய்ந்துக் கொண்டாள். 'அமைதியா.. உட்கார். லிஸன் டு த சரவுண்டிங்ஸ்... ரொம்ப அமைதியா இருக்கும் பார்..!'' என்றான்.

அவள் அமைதியாக அமர்ந்து கொண்டாள். அந்த நள்ளிரவு நிசப்தம் அற்புதமாக இருந்தது. சற்றே பயங்கரமாகவும் இருந்தது.

'நிமிர்ந்து பார் நிலா! அந்த பிரம்மாண்டமான மரங்களைப் பார்!' என்றான்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள்!

அவர்கள் பங்களாவைச் சுற்றிலும் சற்றுத் தொலைவு வெட்ட வெளிக்குப் பிறகு பெரிய பெரிய மரங்கள் இருந்தன.

சலசலப்பேயின்றி அமைதியாக இருந்து கொண்டிருந்தன.

இந்த மரங்களெல்லாம் இந்த இரவோட நிசப்தத்துல எவ்வளவு அருமையா இருக்கு. நிலா வெளிச்சம் வேற. இந்த நிலா வெளிச்சத்துல எத்தனை விதமாக பச்சை இருக்கு... பாரு' என்றான்.

அவள் அவன் தோளிலேயே வானம் பார்த்தாற் போல் சாய்ந்து கொண்டு அந்தப் பல்வேறு விதமான பச்சை நிறங்களை ரசித்தாள். அவன் அதே ரசனை மிகுந்த குரலில் தொடர்ந்து பேசினான்.

'அப்புறம்... பாத்தியா... ரெண்டு... நிலா!' என்றான்.

அவள் புரியாமல் அவனைப் பார்க்க,

'ஐயய்யோ! இதென்னடா நாலு நிலா..' என்று கிறக்கமாகச் சிரித்தான்.

'வானத்தில ஒரு நிலா! என் கைக்குள்ளே ஒரு நிலா. இப்பப் பார்த்தியே அப்படிப் பார்க்கும் போது...ரெண்டு கண்ணுலயும் நிலாக்கள் அற்புதம்!' என்றான்.

முகம் நோக்கிக் குனிந்தான்.

'ஐயோ! என்ன இது... இப்படி வெளியில' என்று விலக.

'டோண்ட் வொர்ரி மை டியர் மேடம்! முதலாளி ஐயா முதல் முதலா வைஃபோட லைஃபை என்ஜாய் பண்ண வந்திருக்காருன்னு தெரிஞ்சதுக்கப்புறம் குறுக்கிடக் கூடாதுன்னு எங்க ஆட்களுக்குத் தெரியும் கண்ணம்மா!' என்றான்.

சற்று நேரம் அவளைப் பேச விடவில்லை.

'ஐயோ! என்னங்க இது!' என்று முனகியபோதும் தடுக்க வில்லை பிறகு விடுவித்தான்.

'நிலா.. இந்த மாதிரி ஒரு ராத்திரியில இப்படி உட்கார்ந்து இந்த சுற்றுப்புறத்தை ரசிக்கிறது ரொம்பப் பிடித்த விஷயம். அதுவும் இன்னும் ரெண்டு நாள்ல பௌர்ணமிங்கறப்ப முழு வெளிச்சமும் வேற கிடைக்கும். தேவலோகம் போனது போல ஒரு அனுபவம். எத்தனையோ நாட்கள் ரெண்டு கையையும், தலைக்கு முட்டுக் குடுத்துட்டு வானம் பார்த்துட்டுப் படுத்திருக்கேன். நட்சத்திரங்களோட பேசியிருக்கேன். அப்பல்லாம்... தோணும்.. இந்த மாதிரி



சந்தோஷங்களையெல்லாம் விட்டுட்டு ஏன் மனுஷன் பொண்ணுங்களைத் தேடி ஓடறான்னு... உன்னைப் பார்த்ததுக்கப்புறம்தான்.. அது புரிஞ்சுது. அப்புறம் நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் உன்னை இப்படிக் கூட்டிட்டு வந்து இந்த மாதிரி அமைதியா ரெண்டு பேருமா உட்காரணும்னு கனவு கண்டேன்.. ஆனா, கல்யாணத்துக்கப்புறம் அது நடக்காமல் கூடப் போயிடுமென்று ஒரு பயம் ஏற்பட்ட மாதிரி சூழ்நிலைகூட அமைந்தது. ஆனா.. நல்ல வேளையா.. என் ஆசை நிறைவேர்றதுக்கான சூழ்நிலைகள் அமைஞ்சிருச்சு. அதான்.. சான்ஸ் கிடைச்சவுடனே.. கூட்டிட்டு வந்துட்டேன்' என்றான்.

அவள் மௌனமாக அமர்ந்தபடி அவன் சொல்வதையெல்லாம் மனதில் வாங்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

தினகரன் கனவில் இருப்பவன் போல் தொடர்ந்தான்.

'நிலா! ஒவ்வொருத்தரும்... ஹனிமூன் எப்படியெப்படியோ கொண்டாடணும்னு நினைப்பாங்க.. நான் என்ன கனவு கண்டேன் தெரியுமா? உன் தோள்ல கையைப் போட்டு முறுக்கு, சுண்டல் கொறிச்சிட்டு கதை பேசிகிட்டு தனிமையாக இடங்கள்ல... ரொம்ப தூரம் நடக்கணும்.. கதை கதையாய் பேசணும்..னு'' என்றான்.

அவன் குரலில் ஒலித்த ஏக்கம் அவள் மனதை வாள் கொண்டு அறுத்தாற் போல் தாக்கியது.

'அத்தான்! கவலைப்படாதீங்க. நிச்சயம்... நடக்கும். உங்களுக்கென்னங்க அத்தான் குறை.. உங்கள மாதிரி வில் பவர் உள்ள ஆளுங்களுக்கு நினைப்பதெல்லாம்... கிடைக்கும்.. நடக்கும்' என்றாள் கலங்கிப் போன குரலில்.

'ஆமா! எத்தனை நாளானாலும் சரி... அந்த ஆசையை மட்டும் நிறைவேத்திக்காம நான் விட மாட்டேன்' என்றான் சூளுரைப்பவன் போல' சட்டென்று தன் முகபாவத்தை மாற்றிக் கொண்டான்.

'சரி. இப்பத்திக்கு நான் கேட்கறதையெல்லாம் நிறைவேற்று' என்றான் ஆணையிடுவது போல்.

அவள் வெட்கத்துடன் இடம் கொடுத்தாள். சற்றுக் கழித்து கலகலவெனச் சிரித்தபடி நிமிர்ந்தான்.

சற்று நேரம் அமைதியில் லயித்து அமர்ந்திருந்தார்கள்.

அவள் நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள். 'ஆமாங்கத்தான்! இட் இஸ் வெரி பீஸ்ஃபுல்!'

'நிலா! மனிதர்கள் எல்லாம் இயற்கையில இருந்து ரொம்ப விலகிப் போயிட்டோம். நம்ம ஊர்ல கூட ஒரு ராத்திரியில் எழுந்து பால்கனியில் ஒரு சேரை போட்டு உட்கார்ந்துட்டு இப்படி அமைதியைக் கவனிக்கிறது ரொம்ப இஷ்டம்!' என்றான்.

அவள் அன்புடன் சிரித்தாள்.

'அத்தான்! நீங்க ரொம்ப சுவாரசியமான ஆள்!' என்றாள்.

'அதனாலதான் உன்னைப் பிடித்தது. நீ நடந்து போகும்போது ஒரு கம்பீரம் இருக்கு தெரியுமா? எல்லாத்துக்கிட்டேயும் இயல்பாய் பழகறே. அழகா இருக்கற எல்லாப் பொண்ணுங்ககிட்டேயும் நான் அழகு பார்' அப்படிங்கற ஒரு கர்வம் தெரியும். ஆனா, நீ அப்படி ஒரு விஷயத்தையே உணராத மாதிரி நடமாடிக் கிட்டிருப்பே' என்றான். மெல்ல அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

'அத்தான்! நீங்க சொல்றதை நான் ஒத்துக்கறேன். அழகு ஒரு அணிகலன் மாதிரி. அதை மூலதனமா நினைக்கக் கூடாது. பெண்கள் சுய சிந்தனை உள்ளவர்களாக இருக்கணும். ஆனா, அதே சமயத்துல எல்லாத்துலயும் வரப் பிடிவாதம் பிடிக்காம விட்டுக் கொடுக்கவும் தெரிஞ்சவங்களா இருக்கணும். திறமையால முன்னேறணும். அப்படியெல்லாம் சில கொள்கைகள் எனக்கிருக்கு'' என்றாள்.



தினகரன் தீவிரமான முகபாவத்துடன் சொன்னான். 'குட், தட்ஸ் ரியலி குட். கொஞ்சம் பொறு நான் ஸ்டெபிலைஸ் ஆனவுடனே உனக்கு எந்த ஃபீல்ட் பிடிச்சிருக்கோ அதுல நீ டெவலப் ஆகலாம்'' என்றான்.

'இப்போதைக்கு எனக்கு அந்த மாதிரிக் கனவுகள் எல்லாம் இல்லை. டாப் பிரையாரிட்டி உங்க ஹெல்த்துக்குத்தான் நீங்க நல்லானாப் போதும்' என்றாள் அக்கறையாக.

'ஐயய்யோ!' என்றான் தினகரன் அங்கலாய்க்கும் குரலில்.

'என்னங்க' என்றாள் கலவரமாக.

'இங்க பாரு! இது நியாயமேயில்லை. மேலே நிலா காயுது. சூழ்நிலை எவ்வளவு அழகா இருக்கு. நீ என்ன கொள்கை பரப்புச் செயலாளர் மாதிரி கொள்கை விளக்கமெல்லாம் சொல்லிக்கிட்டிருக்கே...' என்றான்.

அவள் முகம் சிவந்தது.

தினகரன் ரசனையும் கிறக்கமுமாக வேறு விஷயங்கள் பேச ஆரம்பித்தான்.

இப்போது அந்த நினைப்பெல்லாம் அலைமோத சிரித்துக் கொண்டாள்.

அந்த மூன்று நான்கு நாட்களிலும் முழுமையான ஒரு தோழனைப் போல் நடந்து கொண்டான். முழுமையான கணவனை நிரூபித்தான். எதிர்கால வாழ்க்கை பற்றி அவளிடம் நிறையப் பேசினான்.

அதற்குப் பிறகு இருவருக்குள்ளும் நெருக்கம் அதிகரித்தது.

இன்றைக்கென்னவோ காலையிலேயே கொஞ்சம் களைப்பா உணர்ந்தாள். சட்டென்று புரிந்து கொண்டவளாக

அண்ணியிடம் சொன்னது தவறோ என்று கூட அவனுக்குத் தோன்றியது.




'அண்ணா, கண்ணகி சிலம்பெடுத்துக்கிட்டு கோபமா நின்னதை நீ பாத்திருக்கியா?' என்றான் சுதாகரன்.

'என்னடா ஆச்சு.. உனக்கு? இப்ப வரைக்கும் நல்லாத்தானே இருந்தே? இப்ப திடீர்னு உளற ஆரம்பிச்சுட்டே?' என்றான் தினகரன்.

'இல்லண்ணா! அண்ணி அப்படி ஒரு உக்கிரமான தோற்றத்துல நின்னாப்லே' என்றான்.

தினகரன் பார்த்துக் கொண்டிருந்த ஃபைலில் இருந்து பார்வையை நகர்த்தி நிமிர்ந்து பார்த்தான்.

ஏதோ பிரச்சனை என்று அவன் மனக்குரளி சொன்னது.

'அவளா? அவளுக்குப் பெருசா கோபப் படவே தெரியாதேடா?' என்றான்.

'நீ வேற ஒரே நிமிஷம்தான். சட்டுன்னு முக பாவத்தை மாத்திக்கிட்டாங்க. ஒண்ணுமில்லே சுதா அப்படின்னு பேச்சை மாத்திட்டாங்க' என்றான்.

'அது சரி எதுக்குக் கோபப்பட வேண்டிய அவசியம் வந்தது?'

'நான் பாரு, சொல்ல வேண்டிய முக்கியமான மேட்டரைச் சொல்லாம வேற எதை எதையோ சொல்லிக்கிட்டிருக்கேன். அண்ணா, கேசவன் போன் செஞ்சாரு. கார்த்திகேயன் கிடைச்சுட்டாப்லயாம்.'

'ஓ! அதை நீ அண்ணிகிட்டே சொன்னியா!' என்று கேட்டான் வேகமாக.



'ஆமா!' என்று சாவதானமாக அண்ணியிடம் பதில் சொன்னவன் அண்ணன் முகம் போன விதம் பார்த்து மிரண்டு போனான்.

'அடப்பாவி! யு ஹேவ் மேட் எ கிரேவ் மிஸ்டேக்' என்றவன் வேகமாக எழுந்தான்.

'கிளம்பு... கிளம்பு..' என்றான் அவசரமாகப் புறப்பட்டான்.

சுதாகரன் கலவரமாகப் பார்த்தான்.

தினகரன் மறுபடியும் குற்றம் சாட்டும் வண்ணமாகச் சொன்னான்.

'தம்பி, டேய் நீ இதைப் பத்தி சொல்லியிருக்கக் கூடாது. அவ ரியாக்ஷன் எப்படியிருக்கும்னு சொல்ல முடியாது. என்னைக் காட்டிலும் அவன் மேல ரொம்பக் கோபமா இருக்கா!' என்றான் கவலை தொனிக்கும் குரலில்.

'ஓ! நான் ஏதும் ப்ராப்ளம் பண்ணிட்டேனா?'

'அப்படித்தான் நினைக்கிறேன்' என்றான் சற்றும் தயவு தாட்சண்யம் இல்லாமல்.

புறப்படும்போது சுதாகரன் மறுபடியும் சகோதரனை ஆச்சரியமாகப் பார்த்தான்.

'அண்ணா! அந்த சஸ்பென்ஸ்..' என்றான் எச்சரிக்கும் குரலில்.

'அடப்போடா! அம்மியே ஆடிக்காத்தில பறக்குதாம்... குளவியைப் பத்திக் கவலைப் படறான்' என்று அவன் எச்சரிக்கையைப் புறந்தள்ளி விட்டுப் புறப்பட்டான். சுதாகரனும் கூடக் கிளம்பினான்.

புறப்பட்டவன் மறுபடியும் திரும்பி 'டேய்! எதுக்கும் வீட்டுக்கு போன் போடு. இருக்காளான்னு பாரு!' என்றான்.

போட்டார்கள். 'அம்மா. இப்பத்தான் அவசரமா எங்கயோ கிளம்பிப் போனாங்க' என்றார் வேலையாள்.

'நினைச்சேன்!' என்று அண்ணனின் முகம் தீவிரமாவதைப் பார்த்த சுதாகரன் தான் மிகப் பெரிய தவறு செய்து விட்டோம் என்ற கவலையில் ஆழ்ந்தான்.

∴ ∴ ∴

செல்வம் பதை பதைத்துப் போனான்.

'நிலா! நீ எதுக்கு இங்கே வந்தே? உனக்கு எப்படித் தெரிஞ்சது? தினகரண்ணா என்னைக் கோபிச்சுக்குவாரு' என்று படபடவென்று பொரிந்தான்.

வெண்ணிலா கோபமாக முறைத்தாள். 'ஓஹோ! நீங்களும் இதுல கூட்டா!' என்று திரும்பிப் பார்த்தாள்.

கார்த்திகேயனை ஒரு சேரில் கட்டி உட்கார வைத்திருந்தார்கள். பக்கத்தில் கேசவன் மிடுக்காக ஒரு சேரில் உட்கார்ந்திருந்தான்.

'ஐயோ! வெண்ணிலா உன் மேல் பிரியம் வச்சதுக்கு எனக்குக் கிடைச்ச பரிசு பாத்தியா?' என்று பிலாக்கணம் வைத்தான் கார்த்திகேயன்.

'பிரியம் வச்சா? அதுக்கு இப்படியெல்லாம் செய்யச் சொல்லுச்சா?' என்று 'பொடேர்' என்று ஒரு அடி போட்டான் கேசவன்.

அவன் 'கப்'பென்று வாயை மூடிக் கொண்டான்.

∴ ∴ ∴

'ஏம்மா! கார்த்தி அத்தானை மட்டும் எப்பப் பாரு ஏதாவது சொல்றே?' என்று தாயிடம் சண்டைக்கு நின்றாள் வெண்ணிலா.



'ஆமாடி! ஊமைக் குசும்பனாட்டம் ஏதாவது செஞ்சுகிட்டே இருக்கான். இதே செல்வம் பாரு ஒழுங்காய் படிக்கிறேன். நல்ல மார்க் எடுக்கிறான். நம்ம வீட்டுக்கும் சரி... அவங்க வீட்டுக்கும் சரி.. எவ்வளவு உதவியா இருக்கான்' என்றார் அம்மா.

'அம்மா.. என்ன இருந்தாலும் அது உங்கண்ணன் மகன்.. அதனால இப்படி உசத்தியாப் பேசறே?' என்றாள் வெண்ணிலா.

நாகேஸ்வரி அடிபட்டாற் போல் பார்த்தார்.

'ஏண்டி.. இப்படியெல்லாம் என்னைக் கேவலப்படுத்தறே? நான் அப்படியெல்லாம் வித்தியாசம் படுத்திப் பாக்கறவளாடி? கொஞ்சம் ரோஷம் கிளப்பி விட்டா அவனைப் போல இவனும் உருப்படியாவானேன்னு பார்த்தேன்..' என்றார் வருத்தமாக.

வெண்ணிலா உடனே அம்மாவின் தாடையைப் பிடித்துக் கொஞ்சினாள்.

'சாரிம்மா! உன்னைத் தப்பாகச் சொல்லலே. சும்மா குத்தம் சொல்லிக்கிட்டே இருந்தா.. அப்புறம் மழுங்கலாயிடுவாங்க.. அதுக்குச் சொன்னேன்!' என்றாள்.

அப்போது வெண்ணிலா பன்னிரெண்டாம் வகுப்பில் இருந்தாள். அப்போது மலர்ந்த பூப்போல இருப்பாள்.

நாகேஸ்வரியும், கணவர் சங்கரராமனும் திருமணத்திற்கு முன்பே தூரத்து உறவினர்கள். அதுமட்டும் இல்லாமல் இருவரது வீடும் அக்கம் பக்கத்துத் தெருக்களிலே இருந்தன. திருமணத்திற்குப் பிறகு அவர்கள் இந்த வீட்டிற்குக் குடி வந்ததற்குப் பிறகும் அவர்களது பெற்றோர்கள் அடுத்தடுத்த தெருக்களிலேயே குடியிருந்தார்கள். அது என்னவோ அவர்களுடைய நெருங்கிய வட்டம் எல்லாம் அந்த இரண்டு மூன்று தெருக்களுக்குள்ளாகவே இருந்தார்கள். அதனாலேயே என்னவோ வெண்ணிலாவும் செல்வமும், கார்த்திகேயனும் மாற்றி மாற்றி மூன்று வீட்டிலு

ஏதாவது ஒரு வீட்டில் இருப்பார்கள். கிட்டத்தட்ட ஒன்றாகவே வளர்ந்தார்கள்.

செல்வம் வெண்ணிலா பெரியவளான பிறகும் ஒரு விகல்பமும் இல்லாமல் பழகினான். ஆனால் கார்த்திகேயனுக்கு வெண்ணிலாவை எதிர்காலத்தில் திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அந்த நினைப்பிலேயே என்னவோ அவன் படிப்பில் பெரிதாக நாட்டம் கொள்ளவில்லை. வெண்ணிலா பன்னிரண்டாம் வகுப்பில் இருந்தபோது அவன் பட்டப் படிப்பில் இறுதியாண்டில் இருந்தான். ஆனால், ஏகப்பட்ட அரியர்ஸ் வைத்திருந்தான்.

'அத்தான்! ஒழுங்காக படிங்கத்தான்!' என்று மும்முரமாக அறிவுரை சொன்னாள். அவன் அதைக் காதில் வாங்காமல் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பான்.

'நிலா! இப்பல்லாம் நீ ரொம்ப அழகா இருக்கே' என்பான்.

'ஆமா! இப்ப அது ரொம்ப முக்கியமாக்கும். படிக்கற வழியைப் பாருங்கத்தான்!' என்று நிலா கடுப்பாகக் கிளம்பி விடுவாள்.

அப்படி இப்படியென்று தட்டுத் தடுமாறி கல்லூரியிலிருந்து வெளியே வந்து ஓராண்டுக்குப் பிறகுதான் அவன் எல்லாப் ...ரீட்சையிலும் தேர்வாகி முடித்தான்.

வெண்ணிலாவின் தந்தை அவனை ஒரு கடையில் கணக்கு ...ழுதச் சேர்த்தார். ஒரு வாரத்தில் வந்து விட்டான்.

'என்னடா.. இப்படிச் செய்யறே?' என்று மாமன் கேட்டார். ...பாங்க... மாமா! கடையில கணக்கெழுதி என்னத்தைச் ...பாதிச்சு... நான் வெண்ணிலாவைக் கண் கலங்காம வச்சுக்கறது? ...ன் பெரிய தொழிலுக்குப் போகப் போறேன்' என்பான் ...ளையாட்டைப் போல.



'ஆமா... உனக்கு யாரு.. பொண்ணு தரப் போறா?' என்றார் சங்கரராமனும் பாதி விளையாட்டும் பாதி உண்மையுமாக.

அவன் பதில் பேசாமல் நகர்ந்து விடுவான். வெண்ணிலாவும் சிரித்துக் கொண்டே 'அத்தான்! இப்பல்லாம் நெருங்கின சொந்தக்காரங்க கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுங்கறாங்க.. உங்களுக்கு நானே நல்ல பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வக்கறேன்' என்பாள்.

'போடி! வேலையைப் பாத்துக்கிட்டு' என்று கோபமாக சென்று விடுவான்.

வெண்ணிலாவுக்கு செல்வம், கார்த்திகேயன் இருவரையும் பிடிக்கும். ஆனால், அவர்கள் கேலியை அரட்டையை எல்லாமே இயல்பாக எடுத்துக் கொள்வாள்.

பொதுவாக அத்தை மக்கள், மாமன் மக்கள் என்றால் கேலி செய்கிற பழக்கம் மக்களிடையே இருந்தது என்பதால் யாருமே அந்தப் பேச்சுக்களை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. கார்த்திகேயனைத் தவிர.

பைத்தியக்காரன் போல் காதல் கவிதைகளை விழுந்து விழுந்து படிப்பான். ஒரு தடவை ஒரு கவிதையைக் கொண்டு வந்து வெண்ணிலாவிடம் படித்துக் காட்ட அவள்,

'அத்தான்! இந்த மாதிரிக் கவிதையெல்லாம் என்கிட்டே படிச்சுக் காட்டினா நான் இனிமே உங்ககிட்டே பேசவே மாட்டேன்' என்று எச்சரிக்கவே அதோடு விட்டு விட்டான்.

வேகமாகப் பணக்காரனாக வேண்டும். வெண்ணிலாவை தங்கத் தட்டில் வைத்துத் தாங்க வேண்டும் என்பது போன்ற கனவுகளில் ஆழ்ந்ததாலோ என்னவோ அலைபாய்கிற மனதுக்காரனாகவே இருந்தான்.

மெதுமெதுவாக படிப்படியாக முன்னேற்றம் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. அது பற்றிய நம்பிக்கையும் இல்லாதவனாக இருந்தான்.

வெண்ணிலா எப்போதும் போல் அவனிடம் இருந்தாள். இதில் ஆச்சரியம் என்னவென்றால் செல்வத்திடம் கூட அவன் தன் மனதில் இருப்பதைச் சொல்லவில்லை.

மும்பையில் வேலை என்பான். கொல்கத்தாவிலே வேலை என்பான். ஆனால் எந்த வேலையிலும் நிலை கொள்ளாமல் அலைந்தான்.

பெரிய பணக்காரனாகி வந்து பெண் கேட்க வேண்டும் என்று நினைத்தான். ஏனென்றால் தன் மாமன் மனதில் தன்னைப் பற்றி பெரிய அபிப்ராயம் எதுவும் இல்லை என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அவன் நினைத்த வண்ணம் பெரிய வீடு கட்டி பெரிய தொகையைச் சம்பாதிக்க முடியவில்லை.

வெண்ணிலா அவனுக்கு நேர் மாறாக மிகப் பக்குவமாகப் பெண்ணாக வளர்ந்தாள். நல்ல தோழிகள், வசதியானவர்களாக இருந்தாலும் பண்புள்ளவர்களாக அமைந்தார்கள்.

தோழிகளிடம் நல்ல புத்தகங்கள் வாங்கிப் படிப்பாள். பொது அறிவை வளர்த்துக் கொண்டாள். அடக்கமாயும் இருப்பாள்!

'பாருங்கடி... பொண்ணுகளா! இருந்தா வெண்ணிலா மாதிரி விஷயமாகவும் இருக்கணும். விஷமமில்லாமலும் இருக்கணும்' என்று ஆசிரியர்கள் பாராட்டும் அளவிலேயும் இருந்தாள்.

கல்லூரியிலும் அவள் கவனம் முழுவதும் படிப்பின் மேலேயே இருந்தது.

'என்னடி... உனக்கு மட்டும் பாய்ஸ் பேர்ல இன்ட்ரஸ்ட் வராதா? சரியான சாமியார்டி' என்று தோழிகள் கேலி செய்தால்,



'போங்கடி! கல்யாணம், வாழ்க்கை, குழந்தை எல்லாம் எங்கடி போகப் போகுது. அப்புறம் அந்த வாழ்க்கைக்குள்ளே போனால் இப்படியெல்லாம் நம்மைப் பத்தி சிந்திக்க நேரமிருக்குமோ என்னவோ. அதனாலே எவ்வளவுக்கு எவ்வளவு அறிவை வளர்த்துக்க முடியுமோ அவ்வளவு அறிவை வளர்த்துக்கணும். நம்ம பேரண்ட்ஸுக்கு நமக்கு எது நல்லதுன்னு தெரியும்!' என்பாள்.

தோழிகள் சிரிப்பார்கள். 'ஐயோ! இவகிட்டே வாயைக் குடுக்காதீங்கடி. இவ காரைக்காலம்மையார், ஔவையார் ரேஞ்சுக்குப் பேசுவா!' என்பார்கள்.

வெண்ணிலா சிரிப்பாள்!

வெண்ணிலா பட்டப் படிப்பை முடித்து வீட்டில் சும்மா இருப்பானேன் என்று ஏதாவது ஒரு கிளாஸுக்குப் போய்க் கொண்டிருப்பாள்.

திடீரென்று அவளுக்கு திருமணம் அமைந்தது. கார்த்திகேயன் கொடுத்திருந்த விலாசத்துக்குத் திருமணம் முடிவானவுடனேயே தந்தியே கொடுத்தார் சங்கரராமன். ஆனால் அவன் கைக்கு அது கிடைக்கவில்லை.

திருமணத்திற்கு முதல் நாள்தான் பத்திரிகை அவன் கையில் கிடைத்தது.

அதிர்ந்து போனான்!

வெண்ணிலா தனக்குத் துரோகம் செய்ய மாட்டாள். அவளுடைய பெற்றோர்கள் அவளை வற்புறுத்தித்தான் சம்மதிக்க வைத்திருப்பார்கள் என்று அவனாகவே கற்பிதம் செய்து கொண்டான். திடமாக நம்பி விட்டான்.

எப்படியோ பணம் புரட்டி விமானத்தில் பறந்து வந்து சேர்ந்தான்.

வெண்ணிலாவிடம் பேசினான். எடுபடவில்லை. மாப்பிள்ளையிடம் பேசினான்.

மாப்பிள்ளை பதில் சொன்ன விதம் பார்த்துக் கல்யாணம் நின்றுவிடும் என்று நம்பினான்.

காத்துக் கொண்டிருந்தான்.

கெட்டி மேளம் முழங்கியது.

புன்னகை தவழ வெட்கத்தால் கன்னம் சிவக்கக் குனிந்து தாலி கட்டிக் கொள்கிற வெண்ணிலாவைப் பார்த்தும் அவன் விஷயம் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ளவில்லை என்பதை விட அவன் மனம் உண்மையை ஏற்றுக் கொள்ள மறுத்தது.

தினகரன் ஏமாற்றி விட்டான் என்றே எண்ணத் தொடங்கினான்.

எப்படியாவது சடங்கை ஒத்திப் போட முடியுமா என்று யோசித்துத்தான் அந்தக் கடிதத்தை எழுதினான்.

ஏதோ யாருடைய கதையையோ சொல்வதுபோலப் பலரிடமும் பேசினான்.

உறவினர்களிடையே ஜாடை மாடையா விவரம் தெரிந்து கொண்டான்.

'என்னவோ... தெரியலை. மாப்பிள்ளை இன்னும் ஒரு வாரம் கழிஞ்சுச் சடங்கு வச்சுக்கலாம்னு சொல்லிட்டாராம்' என்று முணுமுணு என்று அவனது அம்மாவும் அத்தையும் பேசிக் கொள்வதைப் பார்த்து உள்ளுக்குள் பூரித்துப் போனான்.

'வைக்கறண்டா... தினகரா.. உனக்கு வேட்டு' என்று கறுவிக் கொண்டேயிருந்தான். ஆனால் இன்னொரு மனசு சொன்னது.

'ஒருவேளை ஒரு வாரத்திற்குள் மாப்பிள்ளை ஏதாவது டிராமா செய்து பெண்ணைத் தன்னிடத்தில் ஒப்படைப்பாராயிருக்கும்.



அதற்குள்ளாக வெண்ணிலாவின் மனது தெரிந்துபோகும்' என்று எண்ணிக் கொண்டான்.

ஏதாவது ஒரு விதத்தில் வெண்ணிலாவை அந்த வீட்டில் இருந்து கிளப்பிக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று திட்டமெல்லாம் போட்டுப் பார்த்தான். ஒன்றும் நடக்கிற காரியம் இல்லை என்று அவனுக்கே பட்டது.

இதற்குள்ளாக வெண்ணிலா சந்தோஷமாகத்தான் இருக்கிறாள் என்ற செய்தி அவன் காதுக்குள் வந்து விழுந்தபோது அவன் வெறி பிடித்த மனம் அதை நம்ப மறுத்தது.

'பாவம்! அவளை அப்படியே மிரட்டிப் பணிய வைத்து விட்டார்கள்' என்று திடமாக நம்பினான்.

அவளை இந்த இக்கட்டில் இருந்து காப்பாற்ற வேண்டிய கடமை தன்னுடையதுதான் என்று நம்பினான்.

யாரிடமாவது ஆலோசனை கேட்க வேண்டும். யாரிடம் கேட்பது?

தன்னைப் புரிந்து கொண்டவர்களாக இருக்க வேண்டும். யாரிடம் கேட்பது?

அப்போதைக்கு ஒருவரிடம் ஆலோசனை கேட்டான்.

கிடைத்த ஆலோசனை பயங்கரமானதாக இருந்தது. அதற்கு அந்த ஆள் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

காதலிலும், சண்டையிலும் எதுவுமே நியாயம்தானாமே? 'அட ஆமா! தனி மனிதன் ஒருத்தனைக் கொன்னா அது கொலை! சண்டையில கொன்னா அதுக்கு மெடல் இல்ல தராங்க' என்று உள் மனது விளக்கம் வேறு சொன்னது.

தயாரானான்!

முழுமையாகத் தயாரானான்!

## 22



எல்லோருமே திகைத்துப் போனார்கள். தினகரன், சுதாகரன், செல்வம், கேசவன், வெண்ணிலா எல்லோருமே திகைத்துப் போய் கார்த்திகேயனைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்படியொரு குற்றச்சாட்டை வைத்தான் கார்த்திகேயன்.

'எல்லாத்துக்கும் காரணம் இந்த செல்வம்தான். எனக்கு ஐடியா குடுத்ததே இவன்தான். இவனுக்கு உன் மேலே இன்ட்ரஸ்ட். அதனாலதான் இப்படி ஒரு ஐடியா குடுத்திருக்கான். தினகரனை என்னை வச்சே முடிச்சிட்டா, என்னையும் காட்டிக் குடுத்துட்டு ஜெயிலுக்கு அனுப்பிரலாம். அப்புறம், ஐயாவுக்கு விருப்பம் எல்லாம் அமையும்னு நெனப்பு. ஆனா, எதுவுமே நடக்கல.' என்று வெறி பிடித்தாற் போல் சிரித்தான்.

சற்று முன்புதான் வெண்ணிலா இந்த இடத்துக்கு வந்து சேர்ந்தாள்.

யதார்த்தம் போல் பேசி சுதாகரனிடம் கார்த்திகேயனை எங்கே வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டாள்.

வீட்டு உபயோகத்துக்கென்று இருக்கும் காரை டிரைவரை எடுக்கச் சொல்லிப் புறப்பட்டு வந்தாள்.

கேசவன் இவளை எதிர்பார்க்கவில்லை. செல்வமும் கூட அதனால்தான் அப்படிக் கேட்டான்.

அதே சமயம் சர்ரென்று ஒரு கார் வந்து நிற்க அதிலிருந்து தினகரனும், சுதாகரனும் இறங்கினார்கள்.



மேலோட்டமாக ஒருமுறை திரும்பிப் பார்த்து விட்டு மறுபடியும் திரும்பிக் கொண்டாள்.

அவர்கள் வருவது கூட அவள் மனதில் பதியவில்லை.

'மேடம்! நீங்க வந்திருக்கறது தெரிஞ்சா தினகர், ரொம்பக் கோபிச்சுக்குவாரு' என்றார் கேசவன்.

'சார்! யாருடைய கோபத்தைப் பத்தியும் எனக்குக் கவலையில்லை. இப்பப் பிரச்சினையில இருக்கிறது என்னோட வாழ்க்கை. நீங்க முழு உண்மையும் வரவழைங்க..' என்றாள்.

அதற்குள்ளாக சுதாகரனும், தினகரனும் உள்ளே வந்து விட்டார்கள்.

இப்போது தினகரன் சேரில் அமர்ந்திருந்தான். மற்றவர்கள் நின்றபடி கார்த்திகேயனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்படி ஒரு வெடியைத் தூக்கிப் போட்டிருந்தான் கார்த்திகேயன்.

வெண்ணிலாவுக்குத் திருமணம் முடிந்தவுடனே அவளுக்கு என்னவாவது செய்து அவளை மீட்டாக வேண்டும் என்ற யோசனை மனதை அரித்தது.

யாரிடம் யோசனை கேட்கலாம் என்று யோசித்தான் முடிவாக செல்வத்திடம் போனான்.

'செல்வம்! என் ஃபிரெண்ட் ஒருத்தன் ஒரு பொண்ணு மேல ரொம்பப் பிரியம் வச்சுட்டான். ஆனா, இன்னொரு ஆள் அந்தப் பொண்ணை வலுக்கட்டாயமாகக் கல்யாணம் செய்து முடிச்சிருக்கிறான் என்ன பண்றது... சொல்லு' என்றான்.

செல்வம் இவன் வெண்ணிலாவை மனதில் வைத்துக் கொண்டு கேட்கிறான் என்று சற்றும் சந்தேகிக்கவில்லை.

யதார்த்தமாகக் கேட்டான்.

'அந்தப் பெண்ணோட மனசுல என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்கிட்டு மேலே ஸ்டெப் எடுங்க' என்றான்.

'கண்டிப்பா அந்தப் பொண்ணுக்கு என் ஃபிரண்ட் மேல்தான் இன்ட்ரஸ்ட். ஆனா, சுத்தியும் இருக்கிறவங்க எல்லாரும் அழுது பிளாக்மெயில் செஞ்சு அந்தப் பொண்ணைக் குழப்பறாங்க' என்றான்.

'ஓஹோ!' எனறான்.

'இப்ப நான் கேக்கறேன். உனக்கு மனசுக்குப் பிடிச்ச பொண்ணு.. ஒருத்தன் கடத்திக்கிட்டுப் போறான் என்ன செய்வே?'

'என்னடா.. கேள்வி இது? அப்படியெல்லாம் என் மனசுக்கு டிச்ச பொண்ணை விட்டுக் கொடுக்க மாட்டேன்டா. அதுவும் ற்புறுத்திக் கல்யாணம் பண்றாங்கன்னு தெரிஞ்சா... ஆப்போசிட் ார்ட்டியோட கையைக் காலை வெட்டிப் போட்டாவது என் ளைக் காப்பாத்துவேன்டா!' என்றான் ஆவேசமாக.

அதையே பிடித்துக் கொண்டான். கார்த்திகேயன் இன்னும் ஒரு மேலே போனான்.

கையைக் காலை என்னத்துக்கு உடைக்கறது? ஆளையே ச்சாறது!' என்று முடிவு கட்டிக் கொண்டான்.

ட்டம் போட ஆரம்பித்தான். லாரி ஒன்றும் கார் ஒன்றும் ாடு செய்துகொள்வது.

ாகரன் வரும்போது காரை வேகமாக ஓட்டும் போது தினகரன் வர வேண்டி வரும். அந்த நேரத்தில் லாரியை ஏற்றுவது துல்லியமாகத் திட்டம் போட்டான்.

போதுதான் விபத்து மாதிரி... அதுவும் எதேச்சையாக மாதிரி இருக்குமாம். ஏற்ற வகையில் ஒத்துழைக்கிற ாரத் தேடினான்.



அப்போதுதான் டிரைவர் தனபால் கிடைத்தார்.

அவரும் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருந்தார். அவர் மனைவிக்கு அறுவை சிகிச்சை ஒன்று அவசரமாக செய்ய வேண்டியிருந்தது. ஐம்பதாயிரம் ரூபாய் பணம் தேவைப்பட்டது. அந்த விவரம் அறிந்து பேசினான்.

'ஐயோ! கொலை முயற்சியா?' என்று தயங்கினார்.

'ஐயா! நீங்க கருணை காட்டற அளவுக்கு அவன் ஒன்றும் நல்லவன் இல்லை. பணம் இருக்குங்கற திமிரினாலதானே... இஷ்டம் இல்லாத பொண்ணை இப்படி வலுக்கட்டாயமா கல்யாணம் பண்ணியிருக்கான்!' என்று கதையாகச் செய்து காட்டினான்.

அவனது கதையில் வெண்ணிலாவின் மனதைப் புரிந்து கொள்ளாத பெற்றோராக தினகரின் பணத்தைப் பார்த்து ஆசைப் பட்டு மகளையே பிளாக் மெயில் செய்த கொடுமைக்காரர்களாகச் சித்தரிக்கப்பட்டார்கள்.

கடைசியாக ஆசிடைப் போல, திராவகம் போல் அந்த வார்த்தையை எடுத்து வீசினான்.

'ஐயா! நினைச்சுப் பாருங்க. இது மட்டும் உங்க பொண்ணுக்கு நடந்திருந்தா... நீங்க சும்மா இருப்பீங்களா?' என்றான்.

அவருக்கும் ரெண்டு பெண்கள் இருந்தார்கள். இந்தக் கேள்வி அவரையும் அசைத்துப் பார்த்தது.

ஒரு வழியாக ஒத்துக் கொண்டான். உடனடியாக இதுவரை யிலும் தன் சேமிப்பாக வைத்திருந்த ஐம்பதாயிரத்தைக் கொண்டு வந்து கொடுத்தான்.

கோழைகளுக்கேயுரிய அந்தத் தந்திர குணம் அவனிடம் இருந்தது. ஒவ்வொன்றையும் யோசித்து திட்டமிட்டான்.

'அதுசரி! நீங்க பாட்டுக்கு என்னமோ கடையில் போய் கடலை மிட்டாய் வாங்கற மாதிரி என்னமோ ஐடியா பண்றீங்க... எப்படி நடத்தறது?' என்றார் டிரைவர்.

'எல்லாம் அவரோட கம்பெனி வளாகத்திலே நடத்த வேண்டியதுதான்' என்றான் கார்த்திகேயன்.

'ஐயோ!' என்றான் டிரைவர்.

'ஆமாங்க சார்...! அப்பத்தான் யாருக்கும் சந்தேகம் வராது. அவனோட ஏரியாவுக்குள்ளேயே நடந்துச்சுங்கறதுனால எல்லாருமே விபத்துன்னுதான் நினைப்பாங்க' என்றான்.

அடுத்த கட்டத்துக்குப் போனார்கள்.

'எப்படி நடத்தறது?' என்ற கேள்விக்கு விடை தேட வேண்டியிருந்தது.

'அனேகமா, நைட் டைம்ல நடந்தா.. ரொம்ப தெளிவா ஒரு முடிவுக்கு வர முடியாது...'

'அது சரி! ராத்திரி நேரத்துல அந்தாளு எதுக்கு.. கம்பெனிக்கு வரப் போறாரு?' என்றார் டிரைவர்.

'வர வைக்கணும்... ஏதாவது எமர்ஜன்சி இருந்தாத்தான் வருவான். எமர்ஜன்சியை நாமளே உருவாக்கிட வேண்டியதுதான்' என்றான்.

திட்டம் போடப் போடத் தான் ஏதோ கெட்டிக்காரத்தனமான காரியம் செய்கிறோம் என்று நம்பத் தொடங்கி விட்டான்.

அடுத்த கட்டமாக எமர்ஜென்சியை உருவாக்குவதற்கான அவன் போட்ட திட்டம்தான் பஞ்சு குடோனைப் பற்றி எரியச் செய்வது.

'ஐயய்யோ! அப்ப கூட்டம் கூடிடுமே?' என்றார் டிரைவர்.



அவன் வில்லனைப் போல் சிரித்தான்.

'கூட்டத்துக்கு நடுவே நடத்தினாத்தான் இயற்கையாக இருக்கும். யாருக்கும் சந்தேகமே வராது' என்றான்.

இன்னும் இரண்டு நாட்களில் மனைவிக்கு ஆபரேஷன் என்றபோது இந்த விஷயத்தை முடித்துக் கொடுத்தால்தான் பணம் கிடைக்கும் என்ற நிலையில் டிரைவர் ஒத்துக் கொண்டார்.

சரியாக நடக்கிறதா என்று பார்ப்பதற்காகக் கார்த்திகேயன் லாரியிலேயே அமர்ந்து கொண்டான்.

தினகரன் அடிபட்டுச் சாய்கிற நேரம் எதிரில் வந்த ஒரு காரில் இருந்து ஹெட்லைட் எரிய அந்த வெளிச்சத்தில் கார்த்திகேயன் முகத்தை அடையாளம் கண்டு கொண்டுதான் சாய்ந்தான் என்பது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இதற்கிடையில் எதிர்பாராத திருப்பம் ஒன்றும் நேர்ந்தது.

∴ ∴ ∴

'ரொம்பக் கிரிட்டிகல் பொஸிஷனில்தான் தினகரன் இருக்கிறான்' என்று டிரைவர் சொன்னவுடனே கார்த்திகேயன் டிரைவருக்குப் பணத்தைக் கொடுத்து விட்டுத் தலைமறைவாகி விட்டான்.

தினகரன் பிழைத்துக் கொண்டது டிரைவருக்கு அதிர்ச்சி. அதோடு கூட பயமும் ஏற்பட்டது.

கொஞ்சம் கலவரமாகவே நடமாடிக் கொண்டிருந்தார்.

ஒருநாள்!

சுதாகரனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு கோயிலுக்கு வந்திருந்தாள் வெண்ணிலா.

அசப்பில் தினகரனைப் போலவே இருக்கக் கண்டு அவன்தானாக்கும் என்று கலங்கிப் போனான்.

அன்றைக்கு வீட்டில் பீதி படிந்த முகத்துடன் அமர்ந்து கொண்டிருந்த தந்தையை அவருடைய பெரிய மகள் அணுகினாள்.

ஒரு கம்பெனியில் கிளார்க்காக வேலை செய்து கொண்டிருந்தாள்.

'அப்பா! என்னப்பா... கொஞ்ச நாளாவே ஒரு மாதிரி இருக்கீங்க..' என்றாள்.

டிரைவர் உச்சுக் கொட்டினார். 'ஒண்ணும் இல்லேம்மா' என்றார்.

'இல்லப்பா.. ஏதோ இருக்கு! அம்மாவுக்கு ஆபரேஷனுக்கு ஐம்பதாயிரம் சரி பண்ணிக் குடுத்தீங்களே! அப்ப இருந்தே நீங்க சரியில்லை. என்னப்பா... நடக்குது?" என்றாள்.

அந்தக் கணம் மனம் உடைந்த டிரைவர் தழுதழுத்த குரலில் நடந்ததெல்லாம் சொன்னார்.

'அப்பா... எவ்வளவு பெரிய தப்பு செஞ்சுட்டீங்க?' என்றாள் கலங்கிப் போனவளாய்.

'அம்மா... வலுக்கட்டாயமாக ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்றானேன்னுதான் ஒத்துக்கிட்டேன். ஆனா, இப்ப அந்த ஆள் கால் வராமல் கிடக்கறான். அந்தப் பொண்ணு தினம் கோவிலுக்கு வந்து கும்பிட்டுப் போறதைப் பார்த்தா... அந்தக் கார்த்திகேயன் பொய் சொல்லியிருக்கான்னு தோணுது'' என்றார்.

'அப்பா! லாரியை நீங்களா ஓட்டினீங்க?' என்றாள் மகள் கவலையுடன்.

'இல்லம்மா... அதுக்கு எனக்கு மனசு ஒத்துக்கல்லே. அதுக்கு ரெளடிப் பசங்க இருக்காங்களே அவங்களை செட் பண்ணி விட்டுட்டேன்' என்றான்.



'அப்பா.. எப்படியோ அந்தப் பணத்தைச் சரி செய்து... திருப்பிக் குடுத்தர்லாம்பா...' என்றாள் மாலா.

அதேபோல இரண்டு மாதங்களுக்குள்ளாக பணத்தைச் சரி செய்து கார்த்திகேயனிடம் திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

இதற்குள்ளாக டிரைவரின் மகள் வெண்ணிலாவைப் பற்றி விசாரித்து முடித்தாள். வெண்ணிலாவுக்கு அப்படியொன்றும் கார்த்திகேயன் மீது ஆர்வம் இல்லையென்று புரிந்து கொண்டு தகப்பனிடம் சொன்னாள்.

டிரைவர் தனபால் கடுப்பானார்.

அடுத்த முறை வந்த கார்த்திகேயனிடம், 'பாருப்பா! இதோட உனக்கும் எனக்கும் இருந்த உறவு விட்டுப் போச்சு. இனிமே இங்கே வராதே..' என்று டாக்ஸி ஸ்டாண்டில் வைத்துச் சொல்லிக் கொண்டிருக்கும்போதுதான் வெண்ணிலா அவனைப் பார்த்தது.

அதே நேரத்தில் தினகரன் வேறு ஒரு வேலை செய்தான். அதை அப்போது கார்த்திகேயன் அறிந்திருக்கவில்லை.

இன்றைக்குச் செல்வத்தின் மீது குற்றம் சாட்டியபடி மிதப்பாகப் பார்த்தான்.

வெண்ணிலா திரும்பி செல்வத்தை ஆழமாகப் பார்த்தாள். அவன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

'நிலா! உனக்கே என்னைப் பத்தித் தெரியும். பூர்ணிமாவைப் பத்தித் தெரியும். அப்புறம் இவன் சொல்றதை நம்பப் போறியா?' என்று அழுது விடுபவன் போல் சொன்னான்.

வெண்ணிலா மனம் தெளிந்தவளாய் திரும்பிக் கார்த்திகேயனைப் பார்த்தாள்.

'செல்வம் அத்தான்.. அப்படியெல்லாம் செய்கிறவர் இல்லை. நீ பொதுப்படையாகக் கேட்டிருக்கே.. அவரு பொதுப்படையாகப்

பதில் சொல்லியிருக்காரு.. அதை வச்சு நீ திட்டம் போட்டுட்டு இன்னைக்கு அவரைக் குற்றம் சொல்லாதே!' என்றாள்.

அந்தக் குரல் இரும்பாக ஒலித்தது. கார்த்திகேயன் அவளை வெறித்துப் பார்த்தான்.

'நிலா! உன்னை எல்லாரும் சேர்த்து என்னமோ பயமுறுத்தியிருக்காங்க. அதான் இப்படியெல்லாம் பேசறே. இதுவரைக்கும் எது நடந்திருந்தாலும் சரி, இப்பக் கூட நீ இந்தாளை விட்டுட்டு வா... நான் உன்னைப் பூ மாதிரி வச்சுக் காப்பாத்தறேன்.. எங்காயாவது போயிரலாம்' என்றான்.

வெண்ணிலா காட்டமான பார்வையுடன் அவனை நோக்கிப் போனவள் யாரும் சற்றும் எதிர்பாராத வண்ணம் ஓங்கி அறைந்தாள்.

'உன்னோட அழுக்குப் பிடிச்ச வாயாலே இன்னும் என்னென்ன குப்பையை அள்ளி வீசலாம்னு இருக்கே' என்று கத்தினாள்.

கார்த்திகேயன் நம்ப முடியாதவனாக அவளைப் பார்த்தான். அவன் கண்களில் காயம் பட்ட உணர்வு தெரிந்தது.

அதைப் பார்த்தவுடன் வெண்ணிலா அழ ஆரம்பித்தாள்.

இரண்டு கைகளாலும் அவனது சட்டைக் காலரைப் பிடித்து உலுக்கிக் கொண்டு பேச ஆரம்பித்தாள்.

அவள் பேசப் பேச கார்த்திகேயன் கண்களில் அடி பட்ட பறவை போல சோகம் பரவியது.

செல்வமும், சுதாகரனும் வாயடைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றால் தினகரன் உணர்வுகளால் தாக்கப்பட்டவனாய் பேசற்றுப் போய்த் தன் வலக்கையால் தன் தலையைக் கோதிக் கொண்டு ஆழப் பார்த்துக் கொண்டிருந்தான்.



பேசியதென்னவோ இரண்டு நிமிடங்கள்தான் என்ற போதும் பேச்சில் பொதிந்திருந்த உணர்வுகளின் தாக்கத்தால் அவள் களைப்படைந்து போய் கிட்டத்தட்ட விழப் போகிற நிலைமையில் அவன் எழுந்து தாங்கிக் கொண்டான்.

தன் மார்பில் முகம் பதித்து வெடித்து அழுகிற மானைவியை கண்களில் நேசம் வழியப் பார்த்துக் கொண்டு அவள் தலையைக் கோதிக் கொடுத்துக் கொண்டு லேசாக இதழ்களால் அவள் நெற்றியை வருடிக் கொடுத்தபடி சுற்றுப்புறம் மறந்து நின்றிருந்தான் தினகரன்.

'ஆமாம்! நின்றிருந்தான்!'



## 23

கார் சீரான வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

மௌனமாக, ஆனால் நிறைவான முகத்துடன் காரின் பின் சீட்டில் சாய்ந்து அமர்ந்திருந்தான் தினகரன். வெண்ணிலா அவன் தோளில் சாய்ந்து அமர்ந்திருந்தாள்.

தோட்டத்திற்குப் போயிருந்தபோது நடந்த விஷயம் ஒன்று தினகரனின் மனதுக்குள் படமாக ஓடிக் கொண்டிருந்தது.

'உன் தோளில் கை போட்டுக் கொண்டு ரிலாக்ஸ்டாக நடக்க வேண்டும்' என்பது என் கனவாக இருந்தது என்று கணவன் சொன்னது அவள் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

கணவன் உறங்கிய பிறகும் அவளுக்கு உறக்கம் வரவில்லை. அப்படி நடக்க முடியாமல் போனதற்குத் தானும் ஒரு காரணம்

என்பதை எண்ணிய போது அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை.

கேவிக் கொண்டே படுத்திருந்தாள்.

சற்றுக் கழித்து ஏதோ உந்துதலின் பேரில் விழித்த தினகரன் பதறிப் போனான்.

'என்னடா.. என்ன ஆச்சு?' என்றான்.

'என்னால... என்னாலதானே இப்படி ஆச்சு... வைஃப் கூட விச்ராந்தியா நடக்கனும், என்ஜாய் பண்ணனும்கற நியாயமான ஆசை கூட நடக்காமல் போச்சு. ஏன்... என் மேல ஆசை வச்சீங்க? உங்களுக்கு எத்தனையோ பொண்ணுங்க... கிடைச்சிருப்பாங்க... ஏன் இப்படி நடக்கனும்?' என்று வெடித்து அழுதாள்.

'ஹேய்! என்ன இது? எல்லா சாதாரணப் பொண்ணுங்களையும் மாதிரிப் புலம்பறே. நீதானே எப்பவும் என்னை என்கரேஜ் செய்வே? உங்களால முடியும் அத்தான். நீங்க நடப்பீங்க அத்தான்னு நீ குடுத்த நம்பிக்கையினாலதானே... நான் எழுந்து நிற்கிறேன். இப்ப.. இப்படி நீயே அப்சட்டானா..எப்படி?' என்று தேற்றினான்.

'ஐயய்யோ... எல்.கே.ஜி. பாப்பா மாதிரி மூக்கு சிவந்து போச்சு... பாரு' என்று கேலிசெய்து மூக்கைப் பிடித்து ஆட்டி, காதைக் கிள்ளி விட்டுச் சிரிக்கச் செய்து விட்டான்.

சிரித்தாள்... இந்த வேலை செஞ்சது கார்த்திகேயன்தான்னு தெரிஞ்சும் ஏன் இப்படி அமைதியா இருந்தீங்க?' என்றாள் கோபம் கொப்பளிக்கும் குரலில்.

அவன் செல்லமாக அவள் தலையைக் கோதி விட்டான்.

'டேய்! பாதிக்கப்பட்டது நான்.. கோபப்பட்டுக் கொதிச்சிருக்க வேண்டியது நான். ஆனா, நானே பேசாம அடங்கியிருக்கேன்னா..



ஏதோ காரணம் இருக்கனுமில்லே...' என்றான் விளக்கம் சொல்வது போல்.

'சரி.. அப்ப அந்தக் காரணத்தையாவது சொல்லுங்க' என்றாள்.

'ப்ளீஸ்டா! என் மேல நம்பிக்கை வைடா. நான் நேரம் வரும்போது எல்லாத்தையும் சொல்றேன்' என்று அமைதிப் படுத்தினான்.

அவள் அமைதியானாள். ஆனால் சிரித்தாள். 'பயங்கரமான ஆளு தினகரா.. நீ! ஒன்னு மிரட்டறது... இல்லேன்னா கெஞ்சறது... எப்படியாவது என்னை மடக்கிறது..' என்று சிரித்தாள்.

அவனும் கூடச் சேர்ந்து சிரித்தான். உடனே பார்வை கிறக்கமாக மாறியது.

'மடக்கிப் போட்டது நீதான். நான் பாட்டுக்கு நானுண்டு.. என் தொழிலுண்டுன்னு.. இருந்தேன். இடையில நுழைஞ்சு.. டிஸ்டர்ப்.. செய்தது யாரு. நீதான். இப்பக் கூட இந்தக் காலே வராமல் போனாலும் சரி... நீ என் கூட இருந்தாப் போதும்னுதான்' என்று அவன் சொல்ல அவள் சட்டென்று அவன் வாயைப் பொத்தினாள்.

'வேண்டாம்! அப்படி மட்டும் சொல்லாதீங்க.. நீங்க கண்டிப்பா நல்லாயிருவீங்க' என்றாள்.

'சரிடா! ஒரு பேச்சுக்குச் சொன்னேன்..' என்று ஆறுதல் படுத்தினான். பிறகு மீண்டும் பழைய மூடுக்கு மாறி...

'ஹேய்! திடீர்னு அழுகறே! திடீர்னு சிரிக்கறே! திடீர்னு தினகரான்னு கூப்பிட்டு மிரட்டறே!' என்று கிறக்கக் குரலில் பேச ஆரம்பிக்கவும் அவள் குறும்புச் சிரிப்புடன்,

'குழைய ஆரம்பிச்சாச்சு!' என்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

இப்போது அந்த நினைவுகள் வர தினகரன் மெல்ல குனிந்து மனைவியைப் பார்த்தான். அவள் அந்த உணர்ச்சி வெளிப் பாட்டிற்குப் பிறகு அயர்ந்து போனவளாய் அவன் தோளில் கண் மூடியபடி சாய்ந்திருந்தாள்.

சற்று நேரத்திற்கு முன்பு..! அவள் வெடித்த வெடிப்பைப் பார்த்துத் திகைத்துப் போனவனாய் அமர்ந்திருந்தான். உள்ளே மட்டும் மகிழ்ச்சி ஊற்றாய்ப் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது.

இந்தச் செல்வம்தான் ஐடியா.. குடுத்தான் என்று அழிச் சாட்டியமா அவள் சொன்னபோது மற்ற எல்லாரும் திகைத்துப் போனார்கள்.

'பச்சைப் பொய்! வெண்ணிலா! உனக்கு பூர்ணிமாவைப் பத்தித் தெரியும் இல்லே!' என்று செல்வம் அழாத குறையாக அவளிடம் முறையிட்டபோது அவள் அவனிடம் நெருங்கினாள்.

'கார்த்தி.. அத்தான்! ஏன் இப்படி.. ஆயிட்டே! இன்னும் என்னென்னா பொய்கள் சொல்லி உன்னையே ஏமாத்திக்குவே.. நாம ஒன்னா வளர்ந்தோம். அப்ப எப்படி நான் உன்னை வேற விதமா.. நினைக்க முடியும்? உன்னால எப்படி அப்படி நினைக்க முடிஞ்சது? நான் எப்பவாவது உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லியிருக்கேனா! எதுக்காக.. எதுக்காக.. என் வாழ்க்கையை சீரழிக்கிறே! இப்படி என் வாழ்க்கையைச் சீரழிக்காதே!' என்று சீறினாள்.

கார்த்திகேயன் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போனான். பார்த்துக் கொண்டிருந்தான்.

'உனக்குத் தெரியுமா? இந்த எட்டு மாசமா இவரு பட்ட வேதனை! எப்படி கம்பீரமா நடப்பாரு... கம்பீரமா நிப்பாரு.. அப்படிப் பட்டவரு.. அப்படிப் பட்டவரு..' என்று கேவினாள்.



'அவரை.. ரெண்டு மூனு பேரு சேர்ந்து சாய்வு சேர்ல உட்கார வைப்பாங்க. அந்த சமயத்துல கண்ணை மூடிப்பாரு... அந்த ஒரு நிமிஷ இடைவெளியில் அவரு கண்ணுக்குள்ள எவ்வளவு வேதனை மின்னி மறையும். தெரியுமா? நிர்வாகம், பொறுப்பு வேலைன்னு பட்டாம் பூச்சியாய் பறந்து கிட்டிருந்த மனுஷனை என் மேல பிரியம் வச்ச ஒரே காரணத்துக்காக... சிறகொடிச்சு படுக்க வச்சியே! நீயெல்லாம் ஒரு மனுஷனா? நீயென்ன நினைச்சே? அப்படி ஏதாவது அவருக்கு ஆகியிருந்தா.. உன்னைக் கல்யாணம் பண்ணியிருப்பேன்னா.. உலகத்துலயே கடைசி ஆம்பளை நீயாயிருந்தாக் கூட.. உன்னை மாதிரி ஒரு வக்கிரப் புத்திக்காரனை என்னை மாதிரி ஒரு பொண்ணு ஏத்துக்கவே மாட்டா.. தெரிஞ்சுக்க'' என்றாள்.

பித்துப் பிடித்தாற் போல் பார்த்துக் கொண்டிருந்த கார்த்திகேயனைப் பார்த்தும் அவள் மனம் இளகவில்லை.

இன்னும் தெரிஞ்சுக்க... இடுப்புக்குக் கீழே உணர்ச்சி இல்லாமல் போன நிலைமையில் கூட அவரு என்ன சொன்னாரு.. என்னை விட்டுப் போ நிலா.! உன் வாழ்க்கையாவது நல்லா இருக்கும்னு. அதுக்குப் பேருதான்யா... அன்பு.. அப்படி, தனக்கு எது ஆனாலும் பரவாயில்லை. மனசுக்குப் பிடிச்சவளுக்கு வாழ்க்கை நல்லா யிருக்கணும்கற நினைப்பு.. ஆனா, நீ... சே!' என்று அவள் வெறுப்பைக் கக்கி வெடித்து அழுதபோது கார்த்திகேயன் வெறித்துப் பார்த்தபடி நின்றான்.

சட்டென்று எழுந்த தினகரன் தன் மனைவியை தன்னிடம் இழுத்துக் கொண்டு தலையைக் கோதிக் கொடுத்தான்.

சற்று நேரம் மனசு விட்டு அழுதவளுக்கு அது சட்டென்று உரைத்தது.

கணவன் நின்று கொண்டிருக்கிறான்!

திடுக்கிட்டவள் போல் குனிந்து பார்த்தாள்.

'அத்தான்! நீங்க நிக்கறீங்க!' என்றாள். பின்னும் அழுகை வெடித்தது. இப்போது அது மகிழ்ச்சியின் வெளிப்பாடாய் இருந்தது.

தினகரன் ஒரு விதமான புன்னகையுடன் வாஞ்சையாய் அவள் முன் நெற்றி முடியை ஒழுங்கு படுத்தினான்.

'ஆமாம்' என்பதுபோல் தலையசைத்தான்.

அப்போதுதான் அவனுக்கு அது நினைவுக்கு வந்தது. சற்று நேரத்துக்கு முன்பு சகோதரர்கள் இருவரும் காரில் இருந்து இறங்கி நடந்து வந்தார்கள். தான் இந்தக் கார்த்திகேயனைக் கவனித்துக் கொண்டு அவன் மேல் இருந்த கோபத்தில் கணவன் நடந்து வருவதைக் கூட நான் கவனிக்கவில்லை என்பது புரிந்தது.

ஆர்வமாகவும், கண்களில் அன்பைத் தேக்கியவளாகவும் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

தினகரன் மெல்லிய குரலில் பேசினான். நடக்க ஆரம்பிச்சு நாலைஞ்சு நாளைக்கு மேல ஆச்சு. ஆபீஸ்ல மட்டும் நடந்துக்கறது. உனக்கு மட்டும் சொல்லாம வச்சிருந்தோம். வரப்போற உன்னோட பிறந்த நாள் அன்னைக்கு நடந்து வந்து உனக்கு சர்ப்ரைஸ் கொடுக்கணும்னு நினைச்சிருந்தேன்' என்றான்.

அவள் கலகலவென்று சிரித்தாள். அவன் மார்பில் சாய்ந்து கொண்டு அவன் மார்பை நீவிக் கொடுத்தாள். மறுபடியும் நிமிர்ந்து பார்த்து மறுமுறையும் கலகலவென்று சிரித்தாள்.

தினகரன் சுற்றுப் புறம் மறந்தவன் போல் அவள் சிரிப்பில் ஈர்க்கப்பட்டு சட்டென்று குனிந்து அவள் நெற்றியில் இதழ் பதித்தான். பின் நிமிர்ந்தான்.



வெண்ணிலாவும் நிமிர்ந்து பார்த்து தனது கைகளால் அவன் கழுத்தை வளைத்துக் கொண்டு நிமிர்ந்த அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள். இரண்டு பேரும் சிரித்தார்கள்.

வெறித்துப் போன பார்வையாக இதைப் பார்த்துக் கொண்டிருந்த கார்த்திகேயனுக்கு அந்தக் கணத்தில் தான் செய்து கொண்ட கற்பனைகளின் அபத்தம் புரிந்தது.

வெண்ணிலா தன் கணவனை நேசிக்கிறாள். தான் கற்பனை செய்து கொண்டதைப் போல அவள் தன்மீது எந்தவிதமான ஈர்ப்பும் கொண்டவளாக இருக்கவில்லை.

இப்போது தன் கண் முன் நடக்கிற எல்லாமே அந்தக் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே நிலவுகிற அன்பின் செயல்முறை விளக்கமாக இருந்ததை அவன் புரிந்து கொண்டான்.

தனது அர்த்தமற்ற போராட்டத்தின் முடிவு அவனுக்கு விளங்கியது. எப்படிப்பட்ட தவறைச் செய்துவிட்டோம்.

விஷயங்களைத் தவறாகப் புரிந்து கொண்டு தவறாகவே அணுகி.. சே.. எல்லாம் தப்பு.. அடிப்படையே தப்பு...

தன்னையே நொந்து கொண்டவனாய் கண்களை மூடிச் சேரில் சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

அதேநேரம்!

தினகரன் மறுபடியும் குனிந்து மனைவியின் நெற்றியில் இதழ் பதிக்க... சுதாகரன் சற்றே சங்கடமான மௌனத்துடனும், ஒருவித சிரிப்புடனும் திரும்பி ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். கிட்டத்தட்ட செல்வமும் அதேபோல நெளிந்து கொண்டு நின்றான்.

கேசவனுக்குத்தான் அதற்கு மேல் பொறுமையிருக்கவில்லை. தொண்டையைச் செருமினான்.

'அடேய்! அடேய்! நாங்கள்லாம் இங்கே இருக்கோம்டா... கொஞ்சம் ஞாபகம் வச்சுக்குங்க...' எனவும் தினகரனும், வெண்ணிலாவும் ஏதோ வேற்றுக் கிரகத்தில் இருந்து வந்தவர்கள் போல திடுக்கிட்டு விழித்தார்கள். விலகினார்கள்.

இத்தனை நாள் எத்தனையோ கேஸ் பாத்திருக்கேன்டா... ஆனா, இப்படிக் குத்தவாளியைப் பிடிச்சிட்டேம்னு நான் கெத்தா நிக்கறப்போ.. நீயுமாச்சு.. உன் குத்தவாளியுமாச்சுன்னு, ரொமான்ஸ் பண்ற நிலைமை இதுவரைக்கும் வந்ததில்லைடாப்பா..' என்று தனது கனமான குரலில் சொல்லிக் கொண்டு அட்டகாசச் சிரிப்பு சிரித்தான் கேசவன்.

தினகரனும், வெண்ணிலாவும் ஒருவரையொருவர் வெட்கத்துடன் பார்த்துக் கொண்டார்கள் என்றாலும் பிரிய மனமில்லாதவர்கள் போல் ஒட்டினாற் போலவேயே நின்றார்கள்.

கணவனுக்குக் கால் நன்றாக ஆகிவிட்டது என்றவுடனே தான் இருப்பதைக் கூட வெண்ணிலா கண்டு கொள்ளவில்லை. தன்னை ஒரு தூசுக்கும் சமானமாகக் கூட அவள் கருதவில்லை என்பது புரிய கார்த்திகேயன் உயிரே இல்லாதவனாய் அமர்ந்து கொண்டான்.

வெண்ணிலா வெட்கத்துடன் சுதாகரனைப் பார்க்க, அவன் அன்பாய்ப் புன்னகைத்தான். அதே பார்வையால் செல்வத்திடமும் பேசினன்.

'சரிடாப்பா! நீங்க கிளம்புங்க. இப்ப நீங்க ரொம்ப ஹேப்பி மூட்ல இருக்கீங்க. இப்பப் போய் எங்க விசாரணை சய்யறது. எப்புறம் வச்சுக்கலாம்' என்றான் கேசவன் நிலைமை ரிந்தவனாக.

தினகரன் நன்றிப் பார்வையை வீசியவனாக மனைவியின் ான் மேல் கையைப் போட்டுக் கொண்டு நகர ஆரம்பித்தான்.



இரண்டு எட்டுக்கள் எடுத்து வைத்தான். 'நிலா, நீ காருக்குப் போ! நான் வரேன்' என்று மெல்லிய குரலில் சொல்லி அவளை அனுப்பினான். நிலா செல்வத்தைப் பார்த்து மட்டும் தலையாட்டி விட்டுப் போனாள். கார்த்திகேயன் பக்கம் திரும்பவேயில்லை.

'டேய் கேசவா! வெயிட் பண்ணு. அவசரப்படாதே!' என்று முணுமுணுப்பாகச் சொன்னான்.

'ஆமடா, பாரு..! நான் இத்தனையும் அன் அஃபிசியலாத்தான்.. ரெண்டு நாளா லீவு போட்டு செஞ்சுகிட்டிருக்கேன். சரியான சாட்சி இல்லாம நான் என்ன பண்ணட்டும் சொல்லு' என்றான் கேசவன். அவனுக்கு மட்டுமே கேட்கும் விதமாக.

'வேண்டாம் இப்ப எதுவும் பேச வேண்டாம். வீட்டுக்குப் போய் நான் செல்லில பேசறேன்' என்று கிளம்பினான்.

அவர்கள் அந்தப் பக்கம் போனார்களோ இல்லையோ, கார்த்திகேயன் பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்து விட்டான்.

பொங்கிப் பொங்கி அவன் அழுவதை செல்வமும் கேசவனும் ஒரு பரிதாபமாகப் பார்வையுடன் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

∴ ∴ ∴

நடந்து போனவைகளை நினைத்தபடி தினகரன் மெல்லிய ஆனால் நிறைவான புன்னகையுடன் தன் மனைவியின் தலையைக் கோதிக் கொடுத்துக் கொண்டு மௌனத்தில் ஆழ்ந்து கிடந்தான்.

சுதாகரனும் அந்த மௌனத்தைக் கலைக்காமல் அமைதியாகவே காரோட்டினான்.

தன் கணவனுக்குக் கால் வந்து விட்டது என்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்த அன்னி கார்த்திகேயனை அதற்குப் பிறகு திரும்பியும்

தான் பார்க்கவில்லை என்பதும் தூசுக்கும் சமானமாகக் கூட மதிக்கவில்லை என்பதும் அவனுக்கும் ஆச்சரியமாக இருந்தது.

நிலா தன்னைப் பொறுத்தவரை கார்த்திகேயன் என்று ஒரு நெருங்கிய உறவினர் இருந்தான் என்பதை மறந்து விட்டவளாய் நடந்து கொண்டாள்.

கார் வரை தன்னுடன் நடந்து வந்த கணவனின் கால்களையே குனிந்து குனிந்து பார்த்துக் கொண்டு சிரிப்பும், அழுகையுமாய் கார் வரை வந்தாள்.

சுதாகரன் டிரைவர் சீட்டில் அமர்ந்திருப்பதைக் கூடப் பொருட்படுத்தாமல் அவன் கன்னம் தடவி நெட்டி முறித்தாள்.

'ஐயோ என்னோட வேண்டுதலுக்கெல்லாம்... அந்த அம்மன் பதில் குடுத்துட்டா..' என்று சற்று நேரம் வளவளவென்று பேசினாள்.

தினகரன் புன்னகைத்தான், மென்மையாக.

'நிலா! ரிலாக்ஸ்! எல்லா சந்தோஷத்தையும் இன்னைக்கே கொட்டிடணுமா... என்ன? நிதானமா அனுபவிக்கலாம், என்ன?' என்றவன் ஜாடையால் சுதாகரன் இருப்பதை உணர்த்தினான்.

அவளும் நிதானப்பட்டாள். ஆழ்ந்த அமைதியில் பயணித்தபோதும் அவளுக்குள் நிறையக் கேள்விகள் இருந்தன என்பதும் இன்னும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் இருக்கின்றன என்பதும் தினகரனுக்குப் புரிந்துதான் இருந்தது.




'பிறந்த நாள் வாழ்த்துக்கள்' என்று பூங்கொத்துடன் கணவன் காலையில் எழுப்பிய போதே வெண்ணிலாவுக்கு மகிழ்ச்சி.

'எனக்கு முன்னமேயே எழுந்திருச்சிட்டீங்களா? மனைவின்னா பின் தூங்கி முன்



எழணுமாமே' என்று சிரித்தாள் வெண்ணிலா, 'தாங்க்ஸ்' என்றாள்.

'அது ரெண்டு பேரும் டயத்துக்கு தூங்கினா அப்படி... இங்கதான்..' என்று அவன் ஏதோ சொல்ல ஆரம்பிக்க.

'ம்ஹூம்!' என்று அவள் அவன் வாயில் கை வைத்துப் பொத்தினாள்.

'சீக்கிரம் ரெடியாகி வா!' என்று அவசரப்படுத்தினான்.

குளித்து விட்டு வரும்போதே புதிய புடவை, ஒரு பரிசு என்று தயாராக இருந்தது.

வெண்ணிலா ஆசையுடன் பிரித்துப் பார்க்க அழகான செபியில் வடிவமைக்கப்பட்ட கடிகாரம்.

'மேடம் ஒவ்வொரு தடவையும் லப் டப் என்று அடிக்கும் போது அது என் இதயத்துடிப்பு மாதிரிக் கேட்கணும். இருபத்தி நாலு மணி நேரமும் என்னை நீங்க நினைக்கணும்' என்று அருகில் அணைத்துக் கொண்டான்.

கடந்த நாட்களில் முதல் முறையாகத் தன் அறைக்கு வந்தபோது பவுடர் வாசம் இழுக்குது என்று வந்தானே அது நினைவுக்கு வந்தது. இப்போதும் அதேபோல் அவள் கன்னத்தில் இழைந்தபடி.

'அதென்ன.. பவுடர் வாசம்... இப்படிக் கிறங்கடிக்குது' என்று கிறங்கினான்.

'போச்சு! இனி மறுபடி ஒரு கோட்டிங் அடிக்கணும்' என்று சிரித்தாள்.

'சரி.. எத்தனை கோட்டிங் அடிச்சாத் தாங்குமோ... அத்தனை அடிச்சுட்டுக் கீழே வா' என்று முன்னே இறங்கிப் போனான்.

'பார்த்து.. ரொம்ப வேகமா போகாதீங்க' என்றாள் அக்கறையாக.

கொஞ்ச நேரத்தில் அவள் கீழே இறங்கி வந்தபோது கீழே ஹாலில் மாமனார், மாமியார், கொழுந்தன் எல்லாரும் தயாராக நின்று கொண்டு வரவேற்றார்கள்.

எட்டு மணிக்கு அவளுடைய பெற்றோர்கள் காரில் வந்திறங்கினார்கள்.

செல்வம் தன் பெற்றோர்களுடன் வந்திருந்தான். தினகரனுடைய நெருங்கிய உறவினர்கள் கொஞ்சம் பேரும் வந்திருந்தார்கள்.

நிலா கூடப் பெற்றோர்கள் வந்திருந்தாள்.

'நிலா! ரொம்ப அழகா... இருக்கடி' என்று கட்டிக் கொண்டாள் நீலா.

வெண்ணிலாவுக்கு இதெல்லாம் ஒரு ஆச்சரியமாக இருந்தது. தனக்குப் பிறந்த நாள் என்பதே முதல்நாள் தான் ஞாபகம் வந்தது. அதைக் கூட அவனிடம் சொல்லவில்லை. ஆனால், தனது பிறந்த நாளை நினைவில் வைத்துக் கொண்டு இத்தனை ஏற்பாடுகளையும் செய்திருந்தது அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

'அத்தான்! எதுக்கு இத்தனை பிரமாதப்படுத்தறீங்க!' என்றாள் மெல்லிய குரலில்.

'நிலா! நீ இந்த வீட்டுக்கு வந்ததுக்கப்புறம் நம்ம வீட்ல நடக்கிற ஒரு குடும்ப ஃபங்ஷனா இது இருக்கட்டுமேன்னு நினைச்சேன். என் காதல் மனைவியின் கரம் பிடித்ததற்குப் பிறகு வந்த முதல் பிறந்த நாள் வேற. அப்படியெல்லாம் சும்மா விட்ற முடியுமா?'' என்று சிரித்தான்.



பிறந்த நாள் கேக் வெட்டுகிற நிகழ்வு வந்தது. ஏனோ தினகரன் கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. ரெண்டு முக்கியமான விருந்தாளிங்க வரணும்' என்றான்.

சற்றுக் கழித்து அவளுக்கு சிகிச்சையளித்த டாக்டர் வந்தார். வேறொரு இளம் பெண்ணும் வந்தார்.

அந்தப் பெண் வரும்போது மட்டும் தினகரனின் குறும்புப் பார்வை செல்வத்திடம் பாய்ந்து மாறியதை யாரும் கவனிக்கவில்லை. செல்வத்தின் முகம் சற்றே வெளிறிப் பின் குழப்பத்தில் ஆழ்ந்தது.

∴ ∴ ∴

பெரிய கேக். அதன் மேல் ஒரு மெழுகுவர்த்தி வைக்கப்பட்டிருந்தது.

'இத பாருங்கப்பா இன்னும் இந்த லேடீஸ் தங்களோட வயசைச் சொல்றதில்லேங்கறதிலே எவ்வளவு பர்டிகுலரா இருக்காங்க' என்று சிரித்தபடியே வந்தான் கேசவன்.

'நீ வேறப்பா! என் வைஃப் அதிலெல்லாம் ரொம்பப் பர்டிகுலர். விளக்கை ஏத்தறதுதான் நம்ம கலாச்சாரம். எதுக்காக ஊதி அணைக்கறது அப்படீம்பாப்லே. அதனால அந்த மாதிரி ஒரு ஏற்பாடு..' என்ற தினகரன் மனைவியை மெழுகுவர்த்தியை ஏற்றச் சொன்னான்.

வெண்ணிலா மிகவும் கூச்சத்துடன் மெழுகுவர்த்தியை ஏற்றினாள்.

சுற்றிலும் எல்லாரும் கைதட்டி வாழ்த்தினார்கள். அதற்குப் பிறகு குழுக்களாகப் பிரிந்து பேச ஆரம்பித்தார்கள். அப்போதுதான் டாக்டர் தினகரனிடம் சொன்னார்.

'தினகரன்! உங்களுடைய நிலைமை என்னன்னு சட்டப்படியும், நியாயப்படியும் நீங்க எனக்கு சொல்லியேதான் ஆகணும்ன்னு உங்க மனைவி பூரா விஷயங்களையும் கேட்டுத் தெரிஞ்சுகிட்டாப்ல. 'மேடம்! உங்க கணவருக்கு உணர்வு வராமலேயே போகக் கூடிய அபாயம் இருக்குன்னு சொன்னேன். சார் நானும், அவரும் செஞ்சுக்கிட்டது கல்யாணம். வாழ்க்கை ஒப்பந்தம், வாழ்விலயும், தாழ்விலயும் ஒன்னா இருப்போம்னு அக்கினி சாட்சியா ஒப்பந்தம் போட்டிருக்கோம். ரொம்ப ஆதரவும், பரிவும் தேவையாயிருக்கிற நேரத்துல கைவிட்டுட்டுப் போறதுக்கு நாம மிருகங்கள் இல்லே. மனித ஜாதி. உடல் சம்பந்தமான உறவுங்கறது வாழ்க்கையோட ஒரு அம்சம்தான். அவர் மனசால என்னை நேசிச்சுக் கல்யாணம் செய்தவரு. என்னை அவரோட மனசுல குடியேத்திகிட்ட அந்தக் காரணத்துக்காகவே நானும் அந்த மனசை எவ்வளவு மகிழ்ச்சிகரமாக வச்சுக்க முடியுமோ.. அவ்வளவு வச்சுக்கணும்னு அந்தப் பொண்ணு சொன்னாப்ல' என்றார்.

அந்த நேரத்தில் வெண்ணிலா அருகில் இருக்கவில்லை. விருந்தினர்களை உபசரித்துக் கொண்டிருந்தாள்.

டாக்டர் சொன்ன அந்த செய்தி தேன் போல் மனதில் பாய அவன் அந்தச் செய்தியை அனுபவித்துக் கொண்டு பார்வையைச் சுழற்றுகிற வேளையில் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டு நிற்கிற அந்தப் பெண் பார்வையில் பட்டாள்.

மற்றொரு புறத்தில் தவித்துக் கொண்டு நின்ற செல்வம்.

'டாக்டர்.. வாங்க சாப்பிட உட்காருங்க!' என்று அவரை அமர்த்தி விட்டு அந்தப் பெண்ணிடம் போனான்.

'மேடம்! உங்களுக்கு போன் பண்ணி இன்வைட் பண்ணினது நான்தான்' என்றான்.

'ஓ! ஆனா எனக்கு.. எனக்கு..'



'ஒண்ணும் புரியலையாக்கும்..!' என்று சிரித்தவன், 'இப்பப் புரியும் பாருங்க!' என்று தன் மனைவியை அழைத்தான்.

மனைவியிடம் அறிமுகப்படுத்தினான்.

'நிலா.. இவங்க.. யார் தெரியுமா? பூர்ணிமா.. மிஸ் பூர்ணிமா...' என்றான்.

'ஓ!' என்று அவள் முதலில் விழித்துப் பின் 'இவங்களைத் தெரியும். இவங்க செல்வம்.. அத்தானோட..!' என்று இழுத்து நிறுத்தினாள்.

'எஸ்! இப்ப நீ செல்வத்தைக் கூப்பிட்டு இவங்களுக்கு இன்ட்ரொட்யூஸ் பண்ணு' எனவும் நிலா ஆச்சரியமானாள்.

'செல்வம் அத்தானை இவர்களுக்கு இன்ட்ரொட்யூஸ் பண்றதா! என்னங்க அத்தான்.. இது?' என்றாள்.

'ஹேய்..! நான் சொல்றதைச் செய்!' என்றான். அவள் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு செல்வத்தை அழைத்து அறிமுகப் படுத்தினாள்.

அவர்கள் இருவரும் சற்றே அசடு வழிந்தாற்போல் சிரித்துக் கொண்டு வணக்கம் சொல்லிக் கொண்டார்கள்.

'அவர்கள் பேசிக் கொள்ளட்டும்' என்று மனைவியை அந்தப் பக்கம் அழைத்து போனான்.

'இங்க.. பாரு! இப்ப செல்வத்தோட அம்மா.. அப்பா கிட்டே பேசப் போறேன்.. நீ உங்க அம்மா... அப்பா கிட்டே பேசித் தயார் செய்..' என்று சிரித்து விட்டுப் போனான்.

கணவனின் நாடகம் புரிந்து அவளும் ஒத்துழைத்தாள்.

'இத பாருங்க..! சித்தப்பா.. இந்தப் பொண்ணு செல்வத்தோ குணத்துக்கு ரொம்ப ஏத்தப் பொண்ணா இருக்கும்' என்று அவ பீடிகையோடு ஆரம்பித்தான்.

அதே நேரம், நிலாவும் தன் பெற்றோரிடம் பூர்ணிமாவைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

∴ ∴ ∴

எல்லாரும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார்கள்.

சுதாகரன் செல்வத்திடம் கிண்டல் செய்தான். 'பரவால்லே... எங்கண்ணன் பிஸினஸ் மேன்னு இங்கேயும் காட்டிட்டாரு... எங்கண்ணிக்கு பர்த்டே கொண்டாடறாருன்னு நெனச்சேன். ஆனா.. கையோட இன்னொரு ஜோடியையும் சேர்க்கறதுக்கும் பூர்வாங்க வேலை ஆரம்பிச்சுட்டாரு..' என்றான்.

செல்வம் வெட்கத்துடன் சிரித்தான்.

'என்ன இருந்தாலும் உங்கண்ணன் மாதிரி வராதுப்பா... இந்தப் பொண்ணைத்தான் எனக்குப் பிடிச்சிருக்கு. கல்யாணம் பண்ணி வையுங்கன்னு போய் உங்கப்பா கிட்டே டக்குன்னு கேட்டாராமே... எனக்கு இன்னும் அந்தத் தைரியம் வர்லே' என்றான் செல்வம்.

'ம்ஹூம்! நீங்க சொல்ற மாதிரி கேட்கலே. இந்தப் பொண்ணுதான் என்னோட வாழ்க்கை. எனக்கு வாழ்க்கைன்னு ஒன்னு வேணும்னா... இவளை எனக்குக் கல்யாணம் பண்ணி வைங்கன்னு சொன்னாரு' என்றான் சுதாகரன்.

'ஓ!'

'ஆமா! எப்படிண்ணா.. அப்படி டக்குன்னு முடிவு செஞ்சே அப்படின்னா... ஆழ் மனசின் குரல்! அப்படிங்கறாரு.. ஆனா வேறொரு பெண்ணாயிருந்தா.. அண்ணனுக்கு இப்படியானப்ப என் வாழ்க்கை இப்படி ஆயிப் போச்சேன்னு புலம்பித் தீர்த்திருப்பாங்க... ஆனா.. அண்ணி ஒரு நாளும் அப்படிப் புலம்பினதில்லை.. சுதா உங்க அண்ணன் நடப்பாங்க, கண்டிப்பாக நடப்பாங்க.. அப்படிம்பாங்க.



'சுதா.. நான் எப்பவும் உங்கண்ணனை நடந்து வந்தப்ப.. அவரு கூடப் போற மாதிரிதான் கற்பனை பண்ணிக்கிறேன். என்னோட அந்தக் கனவு 'கண்டிப்பா நிஜமாகும்னு' சொன்னாங்க...' என்றான் சுதாகரன்.

'ஆனா கார்த்திகேயன்கிட்டே அப்படிக் கோபப்படுவாங்கறது நான் எதிர்பார்க்காதது' என்றான் செல்வம்.

'அதுமட்டுமில்லே.. செல்வம்.. அண்ணி! அப்பத்தான் அண்ணி எவ்வளவு நல்லா அண்ணனைப் புரிஞ்சு வச்சிருந்தாங்கன்னு இப்பத்தான் புரியுது. அண்ணனும் டஃப் பர்சனாலிட்டிதான். அண்ணியும் மெண்டலி ஸ்ட்ராங்தான். அதனாலதான் ரெண்டு பேருமா சேர்ந்து நின்னு இந்த சோதனையைச் ஜெயிச்சாங்க' என்றவன் சற்றே குரலைத் தாழ்த்தி.

'அதுசரி! அந்தக் கார்த்திகேயன் தடியன் என்ன ஆனான்?' என்றான் ஆவலாக.

செல்வம் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். அண்ணன் புறப்படறப்ப குசுகுசுன்னு கேசவன் சார்கிட்டே என்னத்தையோ சொல்லிட்டுப் போனாப்ல. அப்புறம் கார்த்திகேயனைக் கட்டியிருந்த கயித்தை அவுத்து விட்டுட்டு 'டேய்! உனக்கு இந்த மாதிரி மனுஷங்க சொந்தக்காரங்களா அமைஞ்சாங்க பாரு.. அது ரொம்பத் தப்பு.. அதிர்ஷ்டம்பா... உனக்கு.. தொலை.. எங்கேயோ பிழைச்சுப் போ' என்று சொல்லிட்டு என்னையும் கூட்டிட்டு வந்துட்டாரு.'

'அவன் மறுபடியும் ஏதாவது தொல்லை செய்வானோ?'

'இல்லல்லே! இனிமே அந்த தைரியம் வராது! பயந்து போயிட்டான். அது மட்டும் இல்லே! வெண்ணிலா கேட்ட கேள்விகள்ல நொந்து போயிட்டான். அவனே வெண்ணிலா என்னைக் கூப்பிட்டாலும் கூட வந்துடுவுங்கற மாதிரி ஒரு

கற்பனையில இருந்திருக்கிறான். அது உடைபட்டுப் போனப்ப.. அவனும் உடைஞ்சு போயிட்ட மாதிரிதான் எனக்குத் தெரியுது..' என்றான் ஆழ்ந்த வருத்தத்துடன்.

'எங்க போனான்னு ஏதாவது தெரியுமா?' என்று கேட்டான் சுதாகரன்.

'தெரியலே.. நாங்க யாருமே அவன் எங்க போனான்னு கேட்டுக்க நினைக்கலே' என்றான் செல்வம்.

அதே நேரம்!

சங்கரராமன் தினகரனின் இரு கைகளையும் தனது கைகளால் சேர்த்துப் பிடித்துக் கொண்டார்.

'மாப்பிளே! என் பொண்ணு ரொம்ப பாக்கியம் செஞ்சிருக்கா.. இப்படி அன்பும், பிரியமும் கிடைக்க அது மட்டுமில்ல! அந்த விஷயத்துக்காகவும், நான் உங்களுக்கு நன்றி சொல்லணும்' என்றார்.

'பரவாயில்லே! உங்க பொண்ணு மட்டும் இல்லே.. நானும்தான் பாக்கியம் செஞ்சிருக்கேன்... என்னுடைய கஷ்டமான நேரங்கள்ல எல்லாப் பொண்ணுங்களையும் மாதிரிப் பிழியப் பிழிய அழுகாம... மனதைரியத்துடன்நின்று, நாம இதை ஜெயிப்போங்கத்தான்னு... எனக்கு நம்பிக்கை குடுத்து... கோயில் கோயிலாக போய் எனக்காகப் பிரார்த்தனை பண்ணி, அவளோட நம்பிக்கையும் பிரார்த்தனையும்தான் என்னைத் தூக்கி நிறுத்தியிருக்குன்னு நான் நினைக்கிறேன்.'

'ஆமாங்க மாப்பிளே! மனமார ஆழ்ந்த நம்பிக்கையுடன் செய்யற பிரார்த்தனைக்கு ஒரு சக்தியிருக்குன்னு சொல்றாங்க... மனசோட எண்ணங்களுக்கு ஒரு சக்தி இருக்குப்பா... எண்ணங்கள்தான் நம்பிக்கையா மாறுது... ஆழ்ந்த நம்பிக்கை



அடிக்கடி வாழ்க்கையையே புரட்டிப் போடும்ப்பான்னு சொல்லுவா' என்றார் பெருமையாக.

அதேநேரம்! தினகரனின் முக பாவம் தீவிரமாகியது.

'மாமா! இன்னமும் அந்த விஷயம் உங்க மகளுக்குத்தெரியாது. நானாய் சொல்ற வரைக்கும்.. நீங்க அவகிட்டே அதைப் பத்திப் பேச வேண்டாம்' என்றான்.

அவர்களை நோக்கி வந்த வெண்ணிலாவுக்கு அப்போதுதான் அந்தச் சிந்தனை உதித்தது.

'என்னதிது அப்பா.. அம்மாவோ யாரும் கார்த்தி அத்தானைப் பத்தி எதுவுமே பேசவதில்லையே இன்றைக்குக் கூட கார்த்தி அத்தானின் அம்மா அப்பா, வரவில்லை. இதுவரையிலும் கார்த்திகேயன் செய்த பாதகச் செயலை அவன் தன் தாய் தந்தையரிடமோ கார்த்திகேயனின் பெற்றோரிடமோ பேசவில்லை. ஆனாலும், சமீப காலமாக அம்மாவும் அப்பாவும் கார்த்திகேய னைப் பற்றிப் பேசவதேயில்லை என்ற எண்ணம் தோன்றியது.

சரியாக அந்த நேரத்தில் அவளது தந்தை, 'சரிங்க... மாப்ளே! நான் அந்த விஷயம் பத்தின பேச்சே எடுக்கலை.. போதுமா?' என்று சொல்லிக் கொண்டிருநதார்.

'என்ன விஷயங்கத்தான்?' என்றாள் வெண்ணிலா. தினகரன் திரும்பி சிரித்தான். 'இல்லே! சீக்கிரம் பேரனோ, பேத்தியோ வேணுமாம்.'

'இப்பத்தான்.. வாழ்க்கையே ஆரம்பிச்சிருக்கு. இன்னும் ரெண்டு வருஷத்துக்கு அந்தப் பேச்சே எடுக்காதீங்கன்னு சொல்லிக்கிட்டிருக்கேன்' என்றான் தினகரன்.

மருமகனின் அந்த அபாரமான சமாளிப்பை மாமனா உள்ளுக்குள் சிலாகித்துக் கொள்கையிலே வெண்ணிலாவுக்குத் த கணவன் பொய் சொல்கிறார் என்பது புரிந்து போனது.




வீட்டிற்குச் சென்ற பிறகும் யோசனையிலேயே இருந்தான் செல்வம்.

'நீ கோடு மட்டும் போட்டா நான் ரோடு போட்டுடுவேன்' என்று வசனப் பேச்சு கேட்டிருக்கிறேன். அதுமாதிரி லேசாகப் பேச்சு வாக்கில் தினகரனிடம் சொன்னது எப்படி வளர்ந்திருக்கிறது என்று அவனுக்கு ஆச்சரியம்தான்.

கார்த்திகேயன் சட்டென்று தன் மேல் பழியைப் போட்டவுடன் அதிர்ந்து போனான் செல்வம்.

பேச்சு வாக்கில் ஆலோசனை சொன்னதை அதுவும் அவன் தனது பெயரையோ வெண்ணிலா பெயரையோ சொல்லாமல் பொதுப்படையான ஆலோசனை கேட்டதற்குத் தானே ஆலோசனை சொன்னோம். அதை இப்படிக் கதையையே மாற்றிப் பேசி விட்டானே என்று அவனுக்கு ஆறவேயில்லை.

அப்போதுதான் அவன் 'நிலா இது அபாண்டம். நான் உன்னை மாமன் மகள் என்றே நினைத்ததேயில்லை. சொந்த சகோதரியாகத்தான் நெனச்சேன். அந்தத் தடியன் என்னென்னமோ சொல்லிட்டான்' என்று அடுத்த நாள் அவர்கள் வீட்டில் மாடியில் வைத்துப் புலம்பிக் கொண்டிருந்தபோதுதான் தினகரன் அலுவலகத்தில் இருந்து திரும்பி வந்து தூய்மை செய்து கொள்வதற்காகப் போயிருந்தான்.

டவலால் முகம் துடைத்துக் கொண்டே திரும்பி வந்தவன்,

'செல்வம்...! நேத்துக் களேபரத்திலே நான் இதைக் கேட்க மறந்துட்டேன். அது யார் பூர்ணிமா?' என்று கேட்டான் குறும்பாக.

அதற்குள் இடைமறித்த வெண்ணிலா, 'இதை நான் சொல்லி முடிச்சுடறேன்' என்று செல்வத்தை நோக்கித் திரும்பினாள்.



'செல்வத்தான்! இனிமே அந்தத் துரோகி கார்த்திகேயனைப் பத்தியே என்கிட்டே பேசாதீங்க.. அது இருந்தா.. எனக்கென்ன இல்லாட்டிப் போனா எனக்கென்ன' என்றாள் வெகு ஆத்திரத்துடன்.

செல்வம் திரும்பி தினகரைப் பார்க்க அவன் மறுக்கவும் இல்லை. ஆமோதிக்கவும் இல்லை. அமைதியாக அமர்ந்திருந்தான்.

செல்வம் ஒரு பெருமூச்சு விட்டான்.

'ஆமா.. உன் கோபமும் நியாயமானதுதான். கெட்ட விஷயத்தைத் திரும்பத் திரும்ப நினைக்கும் போது மனக் கஷ்டம்தான் அதிகமாகும்' என்றான் ஆதரவான குரலில்.

கனமான அமைதி நிலவியது. அதை உடைப்பது போல் இடையில் புகுந்த தினகரன்,

'செல்வம்... நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லலே.. பூர்ணிமாங்கறது யாரு?' என்றான். யாரு என்று சொல்லும்போது சற்று அழுத்தமாகச் சொன்னான்.

செல்வமும் வெண்ணிலாவும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

'பூர்ணிமா... அத்தானோட ஃப்ரண்ட்' என்றாள் வெண்ணிலா.

'ஃப்ரண்ட்னா?' என்று தினகரன் ஒரு மாதிரியான குரலில் கேட்க,

'ஃப்ரண்ட்னா?' என்று இழுத்த செல்வம் லேசாகச் சிவந்த முகத்துடன் விளக்கினான்.

∴ ∴ ∴

பிறந்த நாள் கொண்டாட்டம் முடிந்து எல்லோரும் கிளம்பிப் போய்விட்டார்கள்.

வெண்ணிலா சற்றே களைப்பாக உணர்ந்தாலும் அதைக் காட்டிலும் மகிழ்ச்சியாய் இருந்தாள். உறவுக்காரர்களை அழைத்துத் தன் பிறந்த நாளை இவ்வளவு சிறப்பாகக் கணவன் கொண்டாடுவான் என்று அவள் எதிர்பாராதது.

எல்லாருடனும் அவள் நின்று பேசி அவரவர்களுக்குத் தகுந்தவாறு பேசி மகிழச் செய்து அனுப்பினாள்.

அவள் பால்கனியில் மேல் நின்று கொண்டு கணவன் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இப்போதெல்லாம் அவள் கணவனை வரவேற்கப் போர்டிகோ வரை செல்வதில்லை. மேலேயே நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருப்பாள்.

இரண்டு நாட்களுக்கு முன்பே அவள் கணவன் சிரித்துக் கொண்டே அவளிடத்தில் கேட்டான்.

அவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டு சொன்னாள்.

'அப்படி வந்தா உங்க கூடத்தானே வரணும். இப்படி மேலே பால்கனியில் நின்னு பார்த்தா... நீங்க நடந்து வர்றதைப் பார்க்கலாம் இல்லே... கம்பீரமா.. நிதானமா.. அழகா.. நடந்து வர்றீங்களே... அதைப் பார்க்கலாம்.. இல்லே' என்றாள்.

அவன் குனிந்து அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

'நினைச்சேன், இப்படித்தான் ஏதாவது சொல்லப் போறேன்னு நினைச்சேன்' என்றான்.

'எனக்குத் தெரியும்... அத்தான்... எத்தனை நாள் நாங்க யாரும் சுற்றி இல்லாதப்ப... கண்ணை மூடி உட்கார்ந்திருப்பீங்க... முகத்திலே வேதனை தெரியும்... உங்களுக்குத் தெரியாம... நான் கவனிச்சுப் பார்த்திருக்கேன். தனியா அழுதிருக்கேன்' என்றாள்.



'தனியா.. மட்டுமா.. அழுதிருக்கே... அடிக்கடி உங்க அம்மா அப்பாகிட்டேயும் போய் பொங்கிப் பொங்கி அழுதிருக்கே..!'

'ஆமா.. இங்க மாமா கிட்டேயும் அத்தைகிட்டேயும் அழுதா.. அவங்க வேதனை அதிகமாகும். அதனால் எங்க அம்மா.. அப்பா.. கிட்டே போய் சொல்வேன்.'

'அவர்களுக்கு வேதனை அதிகமாகாதா?'

'இருக்கும்தான்... அப்புறம் வேற யார்கிட்டே அழறது?' என்றாள்.

'சரி.. சரி... சும்மா இப்ப எதுக்கு அழற விஷயம் பத்தின பேச்சு.. இப்போதைக்கு சிரிக்கற விஷயம்... சந்தோஷமான விஷயமாப் பேசு' என்றான்.

அவன் ஏதோ சொல்ல வாயெடுக்கு முன்னே அவளே மறுபடியும் பேசினாள்.

'அடடா! தப்பாச் சொல்றேன்... யாரு.. பேச்சு எதுக்கு? வேண்டாம்..' என்றாள்.

செயல்படுத்தினாள்.

∴ ∴ ∴

மகிழ்வான அமைதியில் கணவனின் மார்பில் சாய்ந்த வண்ணம் அமர்ந்திருந்தாள் வெண்ணிலா.

'அத்தான் இன்னைக்கு முதன் முதலா ஒரு பொய் சொல்லியிருக்கீங்க... தெரியுமா?' என்றாள்.

'என்ன பொய்?' என்றான் முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல்.

'எங்கப்பா கிட்டே பேசிகிட்டிருந்தீங்க... அப்ப.. நான் கேட்டேன். என்ன பேசிகிட்டிருந்தீங்கன்னு.. அதுக்கு, நீங்க

குழந்தை பத்தின பேச்சே இப்ப வேண்டாம்னு பேசிகிட்டிருக்கோம்னு சொன்னீங்களே அதுதான்' என்றாள்.

தினகரன் முகத்தில் சிக்கிக் கொண்ட முகபாவம் ஒரு கணம் மின்னி மறைந்தது. ஆனால், உடனே மாற்றிக் கொண்டான்.

'அட.. நிஜமாத்தான்..' என்றான். மெதுவாக வேறு விஷயம் பேசினான். ஆனால், உள்ளுக்குள்ளே கடந்த கால நிகழ்வுகள் ஓடி மறைந்தது.

லாரியிலிருந்து எட்டிப் பார்த்த உருவம் கார்த்திகேயன் என்பது அவனுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. கால் எலும்பு முறிவு என்றபோது கூட அவன் மனதில் பெரிதாகக் கோபம் எழவில்லை. ஆனால், இடுப்புக்குக் கீழே உணர்வு வராது என்றபோது கடுங்கோபம் எழுந்தது.

பிரைவேட் டிடெக்டிவ்வை வைத்து டிரைவரை முதலில் பிடித்தான். அவன் மிரட்டிய மிரட்டலில் டிரைவர் பயந்து போனான். ஏற்கனவே வருத்தம் வேறு.

'அய்யா! நீங்க வலுக்கட்டாயமா அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்றதா... அந்த ஆள் சொன்னாரு. அதனால்தான். ஒத்துக்கிட்டேன். ஆட்களைமட்டும் அறிமுகம்தான் செஞ்சேன்' என்று கதறினான்.

நூல் பிடித்துக் கொண்டே போய் விஷயம் கறந்தான். கிட்டத்தட்ட கார்த்திகேயன் எங்கேயிருக்கிறான் என்று கூட கண்டுபிடிச்சிட்டான். எதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னால் உறவினர்களுக்குத் தெரிவித்துவிட வேண்டும் என்று நினைத்தான்.

கார்த்திகேயனின் பெற்றோரை வரவழைத்தான் விஷயம் சொன்னான்.

முதலில் மறுத்தார்கள். கார்த்திகேயனின் அப்பா...



'அப்படியெல்லாம் செய்யறதுக்கு அவனுக்குத் தைரியம் கிடையாதுங்க.. என் மகன் பொறுப்பில்லாதவன்தான். ஊர் சுற்றிதான்.. ஆனா, இப்படிக் கொலையெல்லாம் செய்கிற அளவுக்குப் போறவன் இல்ல' என்றார்.

தினகரன் கசப்பாகச் சிரித்தான். பிறகு சொன்னான்.

'அய்யா! உங்களுக்கு விஷயம் புரியலை.. பெரும்பாலான சமயங்கள்ல கோழைகள்தான் தந்திரக்காரன்களாகவும் இருக்காங்க தெரியுமா?' என்றான்.

'இப்ப நான் என்ன செய்யட்டும்?' என்று ஆதாரங்களை எடுத்து வைத்தான்.

கண்ணுசாமியும், கனகம்மாளும் திகைத்துப் போய் அமர்ந்து விட்டார்கள்.

'கண்டிப்பா.. நான் நடவடிக்கை எடுக்கத்தான் போறேன்' என்று அனுப்பி வைத்தான். அவர்கள் அழுது கொண்டே போனார்கள்.

அன்று பிற்பகல்!

ஏதோ ஒரு ஃபைலில் ஆழ்ந்திருக்கையில் அலுவலகத்தில் உதவியாளர் வந்தான்.

'சார்! உங்க மாமனார் வந்திருக்காரு' என்றான்.

அவன் ஆச்சரியமானான் ஆனால், உடனே எது பற்றிப் பேச வந்திருக்கக் கூடும் என்றும் புரிந்தது.

'வாங்க!' என்று தன் தனியறைக்கு அழைத்துப் போனான்.

அவன் சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டு வருவதை அவர் அளவு கடந்த வேதனையுடன் பார்த்தபடி சோஃபாவில் அமர்ந்திருந்தார்.

திடீரென்று குலுங்கியழுதார். 'மாப்பிளே! ஐயோ இந்தக் கொடுமையை நான் எங்கே போய் சொல்ல.. என் பொண்ணு வாழ்க்கை இப்படியாகிப் போச்சேன்னு நானும் என் மனைவியும் நினைக்காத நாளில்லே. வேதனைப் படாத நாளில்லே. ஆனா கடைசியிலே... இந்தக் கொடுமைக்கு... ஆளாக்கினது... என்னோட ரத்தம்னு நினைக்கும் போது எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியலையே!' என்று அழுதார்.

தினகரன் தேற்ற முற்படவில்லை. முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான். பிறகு மெதுவாக,

'ஆக.. உங்களுக்கு விஷயம் தெரிஞ்சுருக்கு' என்றான். பிறகு ஆவேசமான குரலில் கேட்டான்.

'உங்களுக்குத் தெரியுமா? நான் எவ்வளவு வேதனைப் பட்டேன்னு.. மனசுக்குப் பிடிச்ச பொண்ணு பக்கத்திலே ஆனா அவளுக்கு நான் வாழ்க்கை குடுக்க முடியலே... அவ எனக்கு நர்ஸ் மாதிரி வேலை செஞ்சுகிட்டு ஓட்டறதுக்கா, அவளை நான் கல்யாணம் பண்ணிகிட்டு வந்தேன்னு.. எத்தனை நாள் வேதனைப்பட்டிருப்பேன் தெரியுமா? அப்படியாவது பிரிஞ்சு போகட்டும்னு அவளை வேதனைப்படுத்திப் பாத்திருக்கேன். ஆனா.. அவ.. அப்படியெல்லாம் போற ஆளு இல்லேன்னுட்டு... என் கூட இருந்தா.. இருக்கா.. எதுக்காக நான் இத்தனை வேதனைப்படணும்! கேவலம் ஒரு கோழைப் பயலோட சதிச் செயலாலயா? அவனைச் சும்மா விடப் போறதில்லை மாமா.. நான்..' என்றான்.

சங்கரராமன் மௌனமாக அமர்ந்திருந்தார். அவன் மறுபடியும் ஆவேசமானான்.

'என்ன மாமா! பேசாம இருக்கீங்க? நீங்க அரிவாளைத் தூக்கிட்டு இந்நேரம் கிளம்பியிருக்க வேண்டாமா?' என்றான்.



சங்கரராமன் பெருமூச்சு விட்டான். 'கண்டிப்பாகக் கிளம்பியிருக்கணும் மாப்பிளே! இந்நேரம் கிளம்பியிருக்கணும். எனக்கும்தான் ரத்தம் கொதிச்சது. இப்ப நீங்க சக்கர வண்டியிலே வந்தீங்களே. அந்த வண்டியோட சக்கரம் ஒவ்வொரு சுத்து சுத்தும் போதும் என்னோட நெஞ்சு மேல ஓடற மாதிரி இருக்குதுங்க... மாப்பிளே!' என்றார். ஆனா, அந்த வேதனையைக் காட்டிலும் வேறு ஒரு உணர்வும் தெரிந்தது.

'விரக்தி!

திரும்பி வெளியே பார்த்தார்.

'வாங்க வந்து தொலைங்க!' என்றார். அப்போது கண்ணுசாமியும், அவர் மனைவியும் உள்ளே வந்து தடாலென்று சக்கர நாற்காலிக்கு முன்னால் விழுந்து நமஸ்காரம் செய்தார்கள்.

தினகரன் மாமனாரைப் பார்த்தான். பிறகு சொன்னான்.

'மாமா, இந்தக் கால்ல விழுந்து பிரயோஜனமே இல்லை. ஏன்னா, இது உணர்ச்சியேயில்லாத கால்' என்றான்.

அவருக்கு என்ன பேசவது என்று தெரியவில்லை. அவர்கள் எழுந்தார்கள்.

'நீங்க உட்காருங்க.' என்று உபசரித்தான்.

அவர்கள் உட்கார்ந்தார்கள். அந்த உபசரிப்பு அந்த வேளையில் அபத்தமாகக் கூட இருந்தது!

'இப்ப என்னை என்ன செய்யச் சொல்றீங்க?' என்று.

மாமனார்தான் பேசினார்.

'மாப்பிளே! பாதிக்கப்பட்டது என் பொண்ணு. அவள் வாழ்க்கை கேள்விக்குறியா இருந்தாக் கூட அவ என்கிட்டே ஒரே ஒ வார்த்தை சொன்னா.. 'அப்பா... உடல் சுகம்கறது வாழ்க்கையோ

அம்சம்தான்.. ஆனா, அதுவே வாழ்க்கையாயிடாது. அக்கினியைச் சுத்தி வந்து கல்யாணத்தின் போது நாம உறுதி எடுத்துக்கறோம்.. என்னன்னு தெரியுமா? உன்னோட சுக துக்கங்கள்லயெல்லாம் நானும் துணை நிப்பேன்னு... அப்படியிருக்கும்போது நான் அவரோட துக்கத்தில துணை நிற்க மாட்டேனா? அது மட்டுமில்லேப்பா.. வாட்ட சாட்டமா, ஆண்மையோட உள்ள ஒரு ஒழுக்கமில்லாதவனுக்கு சுயமரியாதை இல்லாதவனுக்கு மனைவியாயிருக்கிறதை விட, தன்னோட ஊனத்தைத் தைரியமா எதுத்து நிற்கற என் ஹஸ்பெண்ட்டுக்கு மனைவியா இருக்கிறதை நான் பெருமையா நினைக்கிறேன். அப்படீன்னா... ஒரு குழந்தையைத் தத்தெடுத்துக்க சொன்னாக் கூட இப்ப அப்படியில்லம்மா... விஞ்ஞானம் எத்தனையோ வளர்ந்திருக்கு.. ஒரு டெஸ்ட் ட்யூப் பேபி பெத்துக்கிட்டு அவருக்கே நானே மனைவியா இந்தப் பிறவியைக் கழிச்சர்றேங்கறா... அந்த ஒரு வார்த்தையில நீங்க ஜெயிச்சிட்டீங்க.. மாப்பிளே!' என்றார்.

அவன் முகத்திலும் கனிவு ஏறியது.

தொடர்ந்தார்.

'ஆனா.. கிறுக்குப் பய புள்ளே! இந்தக் கார்த்திகேயன் வாழ்க்கைன்னா.. என்ன? வரப் போறது என்ன? என்றெல்லாம் யோசிக்காம.. இப்படி மடத்தனம் பண்ணிப் போட்டான். ஆனா.. மாப்பிளே! இதோ இங்க கரைஞ்சு கரைஞ்சு அழுகிறாளே, இவளுக்கு நான் செய்ய வேண்டிய கடமை இருக்கு.. மாப்பிளே.. நான் இவளுக்கும் சகோதரன். நான்தான் இவளை வளர்த்துக் கல்யாணம் செஞ்சு வச்சேன். இப்ப இவ வாரிசே... என் வாரிசு வாழ்க்கையைக் கெடுத்துட்டு நிக்கறான். நான் என்ன செய்யட்டும் சொல்லுங்க?' என்றான்.

தினகரன் சற்றுத் திகைத்துப் போனான். முகத்தில் வேதனை படர்ந்தது.



'சொல்லுங்க.. மாப்ளை! ஒரு தகப்பனா என் ரத்தம் கொதிக்குது. ஆனா, ஒரு சகோதரனா அது அப்படியே உடைஞ்சு போய் நிக்குது... இதுல நான் எதுக்கு ரியாக்ட் பண்ணட்டும்! சொல்லுங்க' என்றார்.

தினகரன் அமைதியாக அமர்ந்துவிட்டான்! பிறகு சொன்னான்.

'மாமா! என் மனசுக்குப் பிடிக்கிற மாதிரி ஒரு பொண்ணைப் பெத்து வளர்த்து எனக்குக் குடுத்திருக்கீங்க... அந்த ஒரு நன்றிக்காக நான் இந்தக் கோரிக்கையை ஏத்துக்கறேன். ஆனா, அவன் எனக்கு எதிரில் வந்தா அவனுக்கு ஆபத்துதான். எங்கேயோ போயி பிழைச்சுக்க.. சொல்லுங்க' என்றான்.

கார்த்திகேயனின் பெற்றோரை அனுப்பி விட்டு மாமனாரை மட்டும் இருக்கச் சொன்னான். அப்போதுதான் அவர் சொன்னார்.

''மாப்பிளே! என் மகளுக்கு இது தெரிய வேண்டாம். தெரிஞ்சா.. யாராயிருந்தாலும் சட்டத்துக்குக் கட்டுப்படணும்பா... ஆனா.. இந்தக் கனகா அழுதே செத்துப் போயிருவா போல இருக்கு... நான் என்ன செய்யட்டும்'' என்றார்.

'புரியுது மாமா! விடுங்க... ஆக்ஸிடென்ட் ஆக்ஸிடென்டாகவே இருக்கட்டும் என்றான். இப்போதுதன் கைப்பிடியில் நிம்மதியாக சாய்ந்து கொண்டு அமர்ந்திருக்கிற மனைவியிடம் இதையெல்லாம் எப்படிச் சொல்ல முடியும்?' என்று அவன் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையிலேயே அவள் மெல்லக் கண் விழித்து தினகரனைப் பார்த்தாள்.

'ஹலோ! என்ன ரொம்ப யோசனை?' இந்தத் தலைக்குள்ளே என்னென்னமோ ஓடிட்டிருக்கு' என்றாள்.

'ஆமா! அதையேன் கேக்கறே! எல்லாத்தையும் சொன்னா... நான் கேக்கறதையெல்லாம் கிடைக்குமா' என்று பேச்சை வேறு திசையில் மாற்ற -

'ஆமா. ஒவ்வொன்றும் கேட்டுத்தான் நடக்குதாக்கும்' என்றான்.

செல்போன் ஒலிக்க அவன் எடுத்தான். அந்தப்புறம் கேசவன் குரல்.

'தினகரன்! அந்தக் கார்த்திகேயனை விடச் சொன்னேன்னு விட்டேன். அவன் இன்னைக்கு வந்து சரண்டர் ஆயிட்டான்' என்றான்.

தினகரன் திடுக்கிட்டான்.

சிந்தனையுடன் செல்போனை ஆஃப் செய்தான்.

'என்னங்கத்தான்!' என்றாள், வெண்ணிலா.

'ஒன்றுமில்லை! ஏதோ ஆபீஸ் மேட்டர்!' என்றான்.

வெறித்துப் பார்த்த அவள் சொன்னாள் 'இரண்டாவது பொய்' என்று.

'வாட்!'

'இல்லே! ஒரே நாள்ல ரெண்டாவது பொய் சொல்றீங்க..' என்றாள்

அவன் சிந்தனையுடன் சொன்னான்.

'இல்லே! கார்த்திகேயன் மறுபடியும் சரண்டர் ஆயிட்டானாம்!' என்று.

வெண்ணிலா முகத்தில் உணர்ச்சியே இல்லாதவள் போல் பார்த்தாள்.

பிறகு எழுந்து படுக்கையைச் சரி செய்து விட்டுப் படுக்கையில் சாய்ந்தாள் ஒவன்றுமே நடக்காதது போல்.

தினகரன்தான் உறங்காமல் அமர்ந்து கொண்டிருந்தான்.






'சார்! இந்தாங்க.. நீங்க கேட்ட வவுச்சர்... எங்க பாஸ் குடுத்தனுப்பினாங்க..' என்றாள் பூர்ணிமா.

'சரிங்க... நேத்தே எங்க பாஸ் கேட்டாங்க..' என்றான் செல்வம்.

பூர்ணிமா எழுந்தாள். டேபிளின் மேல் இருந்த கர்ச்சீஃபை எடுத்தாள். பூர்ணிமா... செல்வம் ஒரு நிமிடம் அவள் முகத்தைப் பார்த்து விழித்தான்.

'மேடம்! இது என்னோட கர்ச்சீஃப்' என்றான். அவள் 'இல்லையே! இது என்னோடதாச்சே!' என்றாள்.

'மேடம்! எதுக்கும் உங்க பேக்கிலே இருக்குதான்னு பாருங்க' என்றான் செல்வம்.

அவளும் குனிந்து வேகமாக திறந்து பார்த்தாள். இருந்தது. முகத்தில் வேசாக அசடு வழிய 'சாரி.. சார்' என்றாள்.

அப்போது செல்வம் கேட்டான். 'ஏங்க மேடம்! ஜென்ட்ஸ் தானே இந்த மாதிரி கொஞ்சம் பெரிய சைஸ் கர்ச்சீஃப் வச்சருப்பாங்க' என்றான்.

'ஆமா சார்..! அதென்னவோ எனக்கு இது பிடிக்குது. பேருக்காக சின்னதா ஒரு கர்ச்சீஃபை வச்சுக்கிறது அவ்வளவு பிடிக்கிறது இல்லே!' என்றாள்.

'ஓ!' என்றான் புன்னகையுடன்.

'அதுசரி ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு மாதிரிப் பிடிக்குது' என்றான்.

அவளும் ஆமோதித்துக் கிளம்பினாள். அடுத்த வாரத்தில் ஒரு நாள் வந்தாள்.

'சார்! எங்க பாஸ் உங்களைப் பார்க்கணுமாம்... சாயங்காலம் வரச் சொன்னாங்க' என்றாள்.

'சும்மா உங்க பாஸ் என்னைப் பாத்து என்ன செய்யப் போறாராம்? எதுக்கும்மா... பெரிய இடத்துல தொடர்பு?' என்றான் செல்வம் தயக்கத்துடன்.

'இல்ல சார்! நேரம் காலம் பாக்காம வேலை செய்யற ஒருத்தர் அந்தக் கன்ஸன்ல இருக்காரு... அக்கவுண்ட்ஸ் எல்லாம் சரியா வச்சிருக்காருன்னு' சொன்னேன். பார்க்கணும்றாரு' என்றாள்.

'தேங்க்ஸ் மேடம்! இப்படி ஒரு நல்ல ஒபீனியன் வச்சிக்கிறதுக்கு' என்றான் செல்வம்.

மேலும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். காபி வரவழைத்துக் கொடுத்தான்.

'அன்றைக்கும் புறப்படும்போது அவன் மேஜை மேல் இருந்த பேனாவை எடுத்துப் பையில் போட்டாள்.

'மேடம்! இது என்னோட பேனா!' என்றான் செல்வம்.

'இல்ல சார்! இது என்னோடது!' என்றாள் பூர்ணிமா.

'ஓ!' என்றவன் தனது மேஜை டிராயரைத் திறந்து பார்க்க பேனா அதில் இருந்தது.

'சாரி! மேடம்!' என்றான் லேசாக அசடு வழிந்தபடி.

பூர்ணிமா சிரித்துக் கொண்டே சொன்னாள். 'என்ன சார்! உங்களோட பெரிய தொல்லையாப் போச்சு. என்னோட பேனா மாதிரியே வச்சிருக்கீங்க.. என்னோட கர்ச்சீஃப் மாதிரியே வச்சிருக்கீங்க.'

'மேடம்! நானும் கூட இதையே கேட்கலாம்.'

'ஆனா, நான் தானே கேட்டேன்?'

'நல்லா ஆச்சு போங்க... கேள்வி கூடவா ஒரே மாதிரியாக் கேக்கணும்?' என்றான்.



'ஒத்த சிந்தனை' என்றாள் பூர்ணிமா.

சிரித்துக் கொண்டே புறப்பட்டு விட்டாள். ஆனால் ரெண்டு பேருக்குமே அதைப் பற்றியே சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது.

செல்வம் வெண்ணிலாவிடம் சொன்னான்.

'ஓஹோ! அத்தான் விழுந்தாச்சு!' என்று கலாட்டா செய்தாள்.

'தெரியலே, வெண்ணிலா.. ஆனா அந்தப் பொண்ணு சிரிப்பு. நடை, பேச்சு, இதெல்லாம் என் மனசுக்குள்ளே ஓடிக்கிட்டே யிருக்கு... நான் உன்னைத்தான் என் சிஸ்டர் மாதிரி நினைச்சிட்டிருக்கேன்... அதனாலதான் உன்கிட்டே சொல்றேன். எப்படிப் போய் திடீர்னு ஒரு பொண்ணு மனசைத் தெரிஞ்சுக்கிறது? எப்படிக் கேக்கறது?' என்றான்.

'ஐயோ! அத்தான்! இது பெரிய விஷயமா? நான் எதுக்கு இருக்கேன்? கவலையை விடுங்க' என்றாள்.

வெண்ணிலாவே நேரில் போய் பூர்ணிமாவை அலுவலகத்தில் சந்தித்தாள். நட்பை ஏற்படுத்திக் கொண்டாள்.

இடையில் செல்வத்தை சீட் மாற்றி விட்டார்கள். அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டி வந்தது. அப்போதெல்லாம் பூர்ணிமா வெண்ணிலாவுக்கு போன் செய்து ஜாடைமாடையாக விசாரிப்பாள். அதிலிருந்து பூர்ணிமாவுக்கும் தன் அத்தான் பேரில் ஆர்வம் இருக்கிறது என்று புரிந்து கொண்டாள். ஆனால், வெளிப்படுத்திக் கொள்வதற்குத் தயங்குகிறார்கள் என்றும் புரிந்தது. என்ன செய்யலாம்? இந்த சினிமாக்களில் எல்லாம் ஹீரோவுக்கு அடிபட்டு விட்டது என்று போன் செய்து வரவழைப்பார்களே? அப்படிச் செய்யலாமா? சே ஓல்ட் டெக்னிக் என்று நினைத்துக் கொண்டாள்.

வேற என்ன செய்யலாம்? இந்த இன்ரைக்ட் டெக்னிக் எல்லாம் நினைக்கறதுக்குப் பதிலா ரெண்டு பேருக்கிட்டேயும், 'பேசிப்

பார்த்துடுங்க என்று அறிவுரை சொல்லிடலாமா? அதாங் கரெக்ட்...' என்று முடிவு எடுத்துக் கொண்டாள்.

இதேபோல இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவளது பிறந்த நாள். அப்போது செல்வம் அத்தானிடம் எனக்கு ட்ரீட் குடுங்க என்று சண்டை போட்டு ஹோட்டலுக்கு அழைத்துப் போகச் சொன்னாள்.

அவனும் சிரித்துக் கொண்டே அழைத்துப் போனான். பெற்றோர்கள் அனுமதியுடன், இடைப்பட்ட வேளையில் வெண்ணிலா பூர்ணிமாவுக்கு போன் செய்து 'செல்வம் அத்தான்! எனக்கு பர்த்டேவுக்காக ஒரு ட்ரீட் குடுக்கறாங்க.. உங்களையும் கூப்பிடச் சொன்னாங்க' என்றாள்.

'நானா' என்று தயங்க...

'நிஜம்தாங்க.. புறப்பட்டு வாங்க' என்றாள். வந்தாள்.

ஹோட்டலுக்குள் நுழைந்தவுடன்தான் விஷயம் சொன்னாள்.

'அத்தான்! நீங்க கூப்பிட்டதாகச் சொல்லி பூர்ணிமாவை இன்வைட் பண்ணியிருக்கேன்' என்றாள்.

'நிலா!' என்று அவன் திகைக்க...

'அத்தான்! நியாயப்படி பிறந்த நாளைக்கு நீங்க பரிசு குடுக்கணும். நான் ட்ரீட் குடுக்கணும். ஆனா, இங்க கதை மாறிப் போச்சு பாத்தீங்களா? நான் பரிசு குடுக்கறேன். நீங்க ட்ரீட் குடுக்கறீங்க?' என்று கலகலவென்று சிரித்தாள். மேலும் தொடர்ந்தாள்.

'அந்தப் பக்கமும் இன்ட்ரஸ்ட் இருக்கிற மாதிரித் தெரியுது. நான் ஆரம்பிச்சு விட்டுட்டேன். நீங்க முன்னேறிக்க வேண்டியது' என்றாள்.



அதேபோல் அவன் ஐட்டம்ஸ் ஆர்டர் செய்துவிட்டு காத்திருக்கிற இடைவெளியில் தனிமையும் கொடுத்தாள்.

'அத்தான்! இந்த ஹோட்டல்லேயே ஒரு டிபார்ட்மென்டல் ஸ்டோர் இருக்கு. அங்க ஒரு பர்ஸ் வாங்கணும்... வாங்கிட்டு வந்தர்றேன்' என்று நகர்ந்தாள்.

செல்வம் பூர்ணிமாவை பார்த்தான்.

'பூர்ணிமா மேடம்! அந்தக் கர்சீஃப், பேனா சமாச்சாரம் சொன்னதிலே இருந்து இந்த நிலா ஒரே கிண்டல்' என்று ஆழம் பார்த்தான் செல்வம்.

'என்னென்னு?' என்றாள் பூர்ணிமா.

'இல்லே! எனக்கு ஏதோ உங்க மேலே இன்ட்ரஸ்ட் இருக்குன்னு' என்று லேசாக முகம் சிவந்தான்.

'நிலா.. உங்க முறைப் பொண்ணில்லையோ' என்றாள் பூர்ணிமா.

'ஐயய்யோ! நிலா.. எங்க மூணு குடும்பத்துக்கும் சேத்து ஒரே பொண்ணு. எனக்கு அவ சிஸ்டர் மாதிரி.. எந்நேரமும் ஒண்ணாவே இருந்தவங்க.. அவளை எப்படிங்க... அப்படி நினைக்க முடியும்?' என்றான் செல்வம் அவரமாக.

பூர்ணிமா முகத்தில் விடுதலையானாற் போல 'ஒரு உ.ணர்வு' தோன்றி மறைந்தது.

'இல்லே! நீங்க ரெண்டு பேரும் ரொம்பப் பாசமா... பழகறதைப் பார்த்து!' என்று தயங்க...

'மேடம்! நீங்க கரெக்ட்டான வார்த்தை போட்டீங்க... அது பாசம்...' என்றான். பிறகு ரொம்பவும் சீரியஸாக முகபாவத்தை வைத்துக் கொண்டு...

'அதுவும் என் மனசு வேறெங்கேயோ இருக்குன்னும் எனக்கே தெரியுது' என்றாள்.

பூர்ணிமா அவன் மேலே பார்க்கிற விதத்தைப் பார்த்து கலகலவென்று சிரித்தாள்.

'மனசு வேறெங்கயோ இருக்குன்னு விட்டத்தைப் பாக்கறீங்க' என்றாள்.

'பின்னே? நேராப் பாத்துச் சொல்றதுக்குத் தைரியம் வரலியே?' என்றான்.

'ஒரு தடவை சொல்லித்தான் பாருங்களேன். பிடிச்சிருந்தா.. சரிங்கப் போறாங்க.. இல்லையா? சாரிங்கப் போறாங்க... அவ்வளவுதானே?' என்றாள்.

'அப்படியா சொல்றீங்க? சரி.. அப்ப நேராவே சொல்லிட றேன்.. பூர்ணிமா... உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு' என்றான்.

அவள் எதிர்பார்த்ததுதான் என்றாலும் சட்டென்று நேரடியாகச் சொல்லவும் திணறி விட்டாள்.

'ஓ' என்றாள்.

'ஓன்னா?' என்று அவனும் மறுபுறம் கேட்க,

'சரின்னு அர்த்தம்' என்றாள்.

'அப்பாடா! எங்கே சாரின்னு சொல்லிடப் போறீங்களோன்னு பயந்தேன். ஒரேயொரு கால் போட்டா... விஷயமே மாறிப் போயிடுது பாத்தீங்களா?' என்றான்.

அவள் வெட்கம் நிறைந்த முகத்துடன் அங்கேயும் இங்கேயும் பார்க்க,



'எங்க, கால் போட்டுடுவீங்களோன்னு' என்று முடிக்கு முன்பாக தன் வாக்கியத்தின் அர்த்தம் புரிந்து அவன் சட்டென்று நிறுத்தினான்.

'ஐயய்யோ! தப்பான அர்த்தத்திலே சொல்லலீங்க.. நான் எழுத்தைத்தான் சொன்னேன்' என்று திணறினான்.

'சரி.. போதும்.. ரொம்ப விளக்காதீங்க!' என்றாள் வெட்கத்துடன்.

'ஆமா வார்த்தையில விளக்கம் எதுக்கு?' என்று வாக்கியத்தை முடிக்காமலேயே அவன் சிரிக்க,

'பாத்தீங்களா? சரின்னு சொன்னவுடனே தைரியம் வந்திருச்சில்லே?' என்றாள் பூர்ணிமா.

அதே நேரம்!

குறும்புச் சிரிப்புடன் வந்தாள் வெண்ணிலா.

'பர்ஸ் கிடைச்சுதா?' என்றாள் பூர்ணிமா.

இரண்டு பேர் முகங்களிலும் தெரிந்த உணர்வின் கனத்தைப் புரிந்து கொண்ட நிலா சிரித்துக் கொண்டாள்.

'ம்ஹூம்! நான் எதிர்பார்த்த மாடல் கிடைக்கலே' என்றவள் இயல்பாகத் திரும்பி 'சரி.. உங்க வேலை முடிஞ்சுதா?' என்றாள்.

'எங்க வேலையா?' என்று அவள் விழிக்க பூர்ணிமா தன் வெட்கப் புன்னகையுடன் 'ஆச்சு' எனறாள்!

செல்வம் திகைத்துப் போய் அமர்ந்து விட்டான். 'என்ன ஆச்சு?' என்றாள் வெண்ணிலா.

'இல்லே! உங்கத்தானுக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு ஒரு வழியா உங்கத்தான் சொன்னாங்க' என்றாள் பூர்ணிமா.

'ஓ! அப்ப நான் இருக்கட்டுமா? போகட்டுமா?' என்றாள்.

இருவருமே பதறிப் போனார்கள்.

'என்ன நிலா! உனக்குத்தானே ட்ரீட்? நீ இப்படிச் சொல்றே?' என்றார்கள்.

அதற்குப் பிறகு நடந்த கலாட்டாவில் சிரித்துக் கொண்டார்கள்.

இதெல்லாம் நினைவு வர செல்வம் சிரித்துக் கொண்டான். தினகரனிடம் வேறு இன்றைக்கு சொல்லி வைத்து என்று நினைத்துக் கொண்டான்.

சென்ற இரண்டு பிறந்த நாட்களையும் செல்வம் அத்தானுடனும், பூர்ணிமாவுடனும்தான் கொண்டாடினேன் என்று அவன் சொன்னதை மனதில் வைத்துக் கொண்டு இந்த பிறந்த நாளுக்கு பூர்ணிமாவை அழைத்ததோடு இதையே முகாந்திரமாக வைத்துக் கொண்டு தம் பெற்றோருக்கும் பூர்ணிமாவைப் பற்றிச் சொன்னதையும் நினைத்துக் கொண்டான் செல்வம்.

வெண்ணிலாவின் திருமணம் முடிந்த பிறகு பெற்றோரிடம் சொல்லலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

வெண்ணிலாவின் வாழ்க்கையில் ஏற்பட்ட குழப்பம் அவன் மனதை வருத்தியது. வெண்ணிலாவிடமும் அவன் பெற்றோரிடமும் அவன் தனது வருத்தத்தை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை என்ற போதும் உள்ளூர அளவு கடந்த வேதனையில் இருந்தான்.

எப்படி இந்தச் சூழ்நிலையில் பூர்ணிமாவைப் பற்றிச் சொல்வது என்று அவன் யோசிக்கையிலே கார்த்திகேயன்தான் வெண்ணிலாவின் வாழ்க்கைக்கே குழப்பத்திற்குக் காரணம் என்றபோது இன்னும் குழம்பிப் போனான்.

வெண்ணிலா அவனுக்கு தண்டனை கிடைத்தே ஆக வேண்டும் என்று நின்றாள். ஆனால் தினகரனோ அவனை விடுவித்து விடுவதற்காக முயன்று இருந்தான். ஆனால், முடிவு எதுவாக



இருந்தாலும் கார்த்திகேயன் இருப்பிடத்தை கண்டுபிடிப்பதற்கு அவன் உதவி தேவை என்றார்கள்.

செய்தான்.

கடைசியில் பிடிபட்ட நேரத்தில் தினகரன் நடந்து வந்த சந்தோஷத்தில் வெண்ணிலா மற்ற எல்லாவற்றையும் தூக்கி வீசி விட்டாள் என்பது மட்டுமல்ல, கார்த்திகேயனைத் திரும்பிப் பாராமல் கணவனுடன் கிளம்பிப் போய்விட்டாள்.

செல்வமும், கேசவனும் நொந்து போனார்கள். வெண்ணிலாவை விட்டு விட்டு வந்து நேரத்திலேயே தினகரன் திரும்பவும் வந்தான்.

'கேசவா! இவனை விட்டுடுங்க... மிஸ்டர் கார்த்திகேயன் எங்கேயாவது போயிருங்க. இனி.. எங்க வாழ்க்கையிலே குறுக்கிடாதீங்க'' என்றான்.

அப்போது செல்வம் சொன்னான். 'கார்த்தி! நீ அவரை முடிச்சே போடணும்னு நினைச்சே! தெய்வம் அவரைக் காப்பாத்தி விட்டுருச்சு. அவரே நடந்து வந்து உனக்கு மன்னிப்பும் குடுக்கிறாருன்னா. அதிலயே புரிஞ்சுக்க' என்றான்.

ஆச்சரியம் என்னவென்றால்... கார்த்திகேயன் தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருந்தானே ஒழிய வாயைத் திறக்கவேயில்லை. ஆனால், உள்ளுக்குள் நொறுங்கிப் போய்விட்டான்' என்பது செல்வத்துக்குப் புரிந்தது.

தினகரனுக்குப் புரிந்ததோ என்னவோ காட்டிக் கொள்ளவில்லை. மறுபடியும் தினகரன் போனதும் கேசவன் அவன் கட்டுகளை அவிழ்த்து,

'யு ஆர் ஃப்ரீ... நீங்க போகலாம்' என்று சொல்லி விட்டு செல்வத்தையும் அழைத்துக் கொண்டு போய்விட்டான்.

ஓரளவுக்கு எல்லாம் பிரச்சினைகளும் முடிவுக்கு வந்து விட்டாலும், இனிமேல் பூர்ணிமா மேட்டரைப் பெற்றோரிடம் சொல்லித் திருமணம் செய்து கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டான்.

பூர்ணிமாவின் நினைவில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருக்கையில் கேசவனிடம் இருந்து போன் வந்தது.

'செல்வம்! உங்க அருமைச் சகோதரன் கார்த்திகேயன் என்னோட ஸ்டேஷன்ல வந்து சரண்டராயிருக்காப்ல. இனி நான் வெளியே எதுக்கு இருக்கணும்? செஞ்ச குத்தத்துக்கான தண்டனையாவது அனுபவிக்கிறேன்கறாப்ல' என்றார்.

செல்வம் திகைத்தான். 'சார்! அதில்லை பிரச்சினை! தினகரன் ஒரு ஃபேமஸ் இன்டஸ்ட்ரியலிஸ்ட். 'அத்தை மகளின் காதலைப் பெற தொழிலதிபரைக் கொலை செய்ய முயற்சித்தவன் சரணடைந்தான்' என்று பத்திரிகையில் போட்டு நார் நாராகக் கிழிப்பாங்களே' என்றான் செல்வம்.

'அதுதான் நானும் யோசிக்கிறேன்... சரி நீங்களும் புறப்பட்டு வாங்க!' என்று போனை வைத்தான் கேசவன்.

அடுத்த தலைவலி ஆரம்பம் என்று புரிந்தது செல்வத்துக்கு.




**வி**க்கிவிக்கி அழுகிற கார்த்திகேயனை எல்லோரும் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தினகரன், செல்வம், கேசவன் மூவரும் அவனைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்.

இந்த முறை தினகரன் மேலிடம் வரைக்கும் சென்று மீளவும் கேஸ் பதிவு செய்யாமல் பார்த்துக் கொண்டான்.



ஒரே நாள் டைமில் கூட மாற்ற முடியுமா என்று பார்க்கலாம் என்று பேசி வைத்துக் கொண்டார்கள்.

'பாரு கார்த்தி...உன் மேல எனக்கு எக்கச்சக்க கோபம்தான். ஆனா, என் மாமனாரும் உங்க அம்மா அப்பாவும் வந்து என் காலிலயே விழுந்துட்டாங்க... அதுக்கப்புறம் நான் என்ன செய்ய முடியும்? இப்ப, எதுக்கு.. மறுபடியும் சரண்டாகணும்கிறே!'

அவன் இப்போது தந்திரப் பார்வை பார்க்கிற கார்த்திகேயனாக இல்லாமல் நேராகப் பார்த்தான்.

'வெளியே எனக்கு என்ன இருக்கு?' என்றான்.

தினகரன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

'உன்னை.. எனக்குப் புரியுது. ஆனா, எப்பவும் இந்த மாதிரி விஷயங்கள்ல ரெண்டு பக்கமும் பிரியம் இருக்கான்னு பார்த்துக்கணும். உன் விஷயத்துல என் மனைவிக்கு உன் மேல பிரியம் பாசம் எல்லாம் இருக்கு. ஆனா, நீ நினைக்கிற மாதிரி உணர்வு இருக்கலே. அதை முதல்லயே நீ தெளிவு பண்ணியிருக்கணும் இல்லே!' என்றான்.

கார்த்திகேயன் இறங்கிய குரலில் சொன்னான்.

'ஆமா..! வெண்ணிலா எப்பவும் என்கிட்டே உரிமையாப் பழகுவா. அதை நான் தப்பாய் புரிஞ்சுக்கிட்டேன்' என்றான்.

தினகரன் தொடர்ந்தான். 'அதுமட்டுமில்லே... உன்னோட அஃபெக்ஷனை நீ காட்டின விதமும் தவறு.'

'இல்லையே... கல்யாணத்துக்கு முன்னால முதல் நாள் வெண்ணிலாகிட்டே பேசினப்ப, நீங்க முதல்லயே சொல்லியிருக்கலாமில்லே அத்தான்னுதானே! கேட்டாள்.

'ஆமா.. அதைப் பத்தி நான் அவகிட்டே கேட்டேன். அதுக்கு அவள் என்ன சொன்னாத் தெரியுமா? 'அத்தான் மட்டும்

முதல்லயே என்கிட்டே கேட்டிருந்தா நான் உங்களை அப்படி நினைக்கலேன்னு தெளிவா சொல்லியிருப்பேன்னு சொன்னா' என்றான் ஒரோஷமாக.

கார்த்திகேயன் அடிவாங்கினாற் போல அமர்ந்து விட்டான். தினகரன் தொடர்ந்தான்.

'கார்த்தி... நல்லா யோசியுங்க.. ஒருவேளை எனக்கு ஏதாவது ஆகியிருந்தா.. அதுக்குக் காரணம் நீங்கதான்னு தெரிய வந்திருந்தா... அதுக்கப்புறம் வெண்ணிலா உன்னை ஏத்துக் கிட்டிருப்பான்னு நினைக்கறியா?' என்றான்.

கார்த்திகேயன் மௌனத்தில் ஆழ்ந்தான்.

'நிச்சயமாக வெண்ணிலா ஏத்துக்கிட்டிருக்க மாட்டா' என்றான் செல்வம்.

'சரி.. இப்ப.. என்ன? நான்தான் தண்டனையை அனுபவிக் கிறேன்றனே' என்றான் கார்த்திகேயன்.

'கார்த்தி.. இப்பவும் நீங்க வெண்ணிலாவுக்கு நன்மை செய்யலே... இந்த விஷயம் பத்திரிகைகள்ல வெளிய வந்தா.. கெட்ட பெயர்தான்.. கொலை முயற்சி நடந்துச்சன்னா ஒருத்தன் கொலை பண்ற அளவுக்கு அவர்களுக்குள்ளே என்ன நடந்துச் சோன்னுதான் பேசுவாங்க. ஆளாளுக்கு வெண்ணிலாவை அரைச்சுடுவாங்க.. தெரியுமா? அதுக்கப்புறம் அவளால நிம்மதியா... இருக்க முடியுமா?' என்றான்.

கார்த்திகேயனுக்கு இப்போதுதான் தான் செய்த காரியங்களின் விபரீதம் புரிய ஆரம்பித்தது.

'கார்த்தி! நீங்க செஞ்ச காரியம்...உங்க குடும்பத்தவங்க, எங்க குடும்பத்தவங்க.. வெண்ணிலா குடும்பத்தவங்க... மூணு குடும்பத்து மானத்தையும் பாதிக்கிற விஷயம் தெரியுமா!' என்றான்.



கார்த்தி தலையைக் கவிழ்ந்து கொண்டு அமர்ந்து கொண்டான்.

'எத்தனையோ நாட்கள் வெண்ணிலா நடு ராத்திரியில எழுந்து எனக்கு மட்டும் இந்த ஊனம் பர்மனென்ட்டா ஆயிருந்தா... என்னவாகியிருக்கிறதுன்னு நினைச்சு.. தூக்கத்துல கூட தூக்கிப் போட்டா மாதிரி உட்கார்ந்தர்றா தெரியுமா...!' என்றான்.

அவன் மௌனம் கலைந்தது. 'வேண்டாங்க சார். இனி ஒவ்வொண்ணா அனலைஸ் பண்ணிப் பேசப் பேச துக்கந்தான் ஆகும். அடிப்படையில் நான் செஞ்சது மிருகத்தனம். அதை நீங்க மன்னிச்சது தெய்வத்தனம். அந்த ஒரு வார்த்தையில் விஷயத்தை விட்டுருங்க' என்றான்.

'போதும்.. நான் தெய்வமோ இல்லையோ.. நீங்க இந்த அளவுக்குப் புரிஞ்சிக்கிட்டதே.. பெரிய விஷயம். இனிமேலாவது லைஃபை நல்லபடியா லீட் செய்யப் பாருங்க... நான் உங்களுக்கு மும்பைல நல்ல வேலை வாங்கித் தரேன்' என்றான்.

மேலும் சற்று நேரம் பேசினான். கார்த்திகேயன் மனம் தெளிந்தது. ஆனாலும் தினகரன் புறப்படும்போது கேட்டான்.

'தினகர்.. சப்போஸ் நீங்க சொன்ன சஜஷன்னை நான் ஒத்துக்காம இருந்தேன்னா... என்ன செஞ்சிருப்பீங்க?' என்றான்.

தினகரன் குறும்பாகவும், அழகாகவும் சிரித்தான்.

'கேஸை உடைப்பேன்' என்றான்.

'எப்படி?' என்றான் கார்த்திகேயன்.

எப்படி என்று அப்போதே நிரூபித்துக் காட்டினான் தினகரன்.

கார்த்திகேயனுக்கு அப்போதுதான் எப்படிப்பட்ட சக்தியுடன் மோதியிருக்கிறோம் என்று புரிந்தது.

∴ ∴ ∴

மூணாவது பிறந்த நாளுக்கும் பூர்ணிமாவைக் கூப்பிட்டு பார்ட்டி குடுத்துட்டேன். அட்லீஸ்ட் இப்பவாவது அவர்களை சேத்து வைக்கனும்னு தோணலியா... உனக்கு?' என்றான் திவாகரன் மனைவியை அருகில் இழுத்தபடி..

வெண்ணிலா அவனை சிந்தனையுடன் பார்த்தாள்.

'ஆமாங்க! நானே சொல்லனும்னு நினைச்சேன்! கல்யாணத்தை நீங்களே முன்னால நின்னு நடத்தனும்' என்று சொன்னாள்.

'ஹேய்! என்ன வயசான தாத்தா மாதிரி என்னை ட்ரீட் பண்றே! முன்னால நின்று நடத்தறதுக்கு நிறைய பெரியவங்கள்ளாம் இருக்காங்க' என்றான்.

'ஐய்யோ! அந்த அர்த்தத்துல சொல்லலே. நீங்க சொன்னா செல்வம் அத்தான் வீட்ல உடனே ஏற்பாடு செய்வாங்க' என்றாள்.

'ஆமா! பாவம்.. செல்வமும் உனக்காகத்தான் தியாகம் செஞ்சிருக்காரு' என்றான் திவாகரன்.

'எனக்காகவா!' என்றாள் வியப்புடன்.

'ஆமா! எனக்கு பிரச்சனையெல்லாம் ஆனவுடனே... வெண்ணிலா வாழ்க்கை இப்படியிருக்கறப்ப நாம எப்படி கல்யாணம் பண்ணிக்கறதுன்னு யோசனையில் இருந்தாராம்' என்றான் திவாகரன்.

வெண்ணிலா நெகிழ்ந்து போனாள்.

'ஏங்க.. என் நிலைமையைப் பாத்தீங்களா? அப்படி ஒரு அத்தான்.. இப்படி ஒரு அத்தான்!' என்றாள்.

திவாகரன் முகம் அவளை நோக்கிக் குனிந்து சற்று நேரம் அவளைத் திணறடித்தவன் மெல்ல நிமிர்ந்து சிரித்தான்.



'அவங்க ரெண்டு பேரும் உன் மேல வச்சது அன்புதான். இதுவும் அன்புதான்' என்றான்.

'இது அன்பா! சரியான லொள்ளு!' என்றாள் வெண்ணிலா.

'நிலா! கார்த்தியை நீ திரும்பியும் பார்க்காம வந்த பாரு... அப்ப விழுந்துடுச்சி அவனுக்கு அடி. நொந்து போயிட்டான். இனிமே என்ன இருக்கு? நான் ஜெயிலுக்கே போறேன்னு கிளம்பிட்டான்' என்றான்.

'அத்தான்! இது என்ன விதமான அன்பு அத்தான். ஒருத்தர் கிடைக்கலேன்னா அவர்களைப் பத்திக் கன்னா பின்னான்னு மொட்டைக் கடுதாசி போடறது... கையைக் காலை உடைக்கிறது. கொலை செய்யறது... இதுக்கெல்லாம் பேரு அன்பா?' என்றாள் கோபமாக!

'ஆமா.. மனோதத்துவ ரீதியா அனலைஸ் பண்ணினா... அன்புதான். ஆனா, நெகட்டிவ்வான அன்பு. எனக்கே கிடைக் காதது இன்னொருத்தருக்குக் கிடைக்கறதாங்கற ஆத்திரம்' என்றான்.

'அப்புறம் கார்த்திகேயன் நிலைமை என்ன ஆச்சுன்னு கேட்க மாட்டியா?' என்றான்.

அவள் உச்சுக் கொட்டினாள்.

'ஐ டோன்ட் கேர்' என்றாள்.

'யு மே நாட் கேர். ஆனா யு ஷீட் நோ..' என்றான்.

'தண்டனை அனுபவிச்சே தீருவேன்னு நின்னாப்ல. ஆனா, நானும் கேசவனும் வாபஸ் வாங்க வச்சுட்டோம்' என்றான்.

'ஏன்?' என்றாள்.

'ஏன்னா? உனக்காகத்தான். நமக்கும் இந்த லைன்ல தொழில் போட்டிக்காரங்க இருப்பாங்க. பேப்பர்ல தினம் இந்த மாதிரி நியூஸ் வந்தா ரொம்ப என்ஜாய் செய்வாங்க' என்றவன் மேலும் பேசினான். அப்போது வெண்ணிலாவின் தந்தையும், கார்த்திகேயனின் பெற்றோரும் வந்து தன்னிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டதை விவரமாகச் சொன்னான்.

'ஓ!' என்றாள் வெண்ணிலா இறங்கிய குரலில்.

'உங்கப்பா மட்டும் இதுல குறுக்க வராம இருந்தா.. கார்த்திகேயனை பொட்டலமாகக் கட்டியிருப்பேன்' என்றான்.

அந்த நேரம் அவன் முகத்தில் ருத்ராகாரமான தோற்றம் பார்த்து அவள் சற்றே பயந்து போனாள். அவன் சட்டென்று பூமிக்கு வந்தான்.

'சரி.. விடு! முடிஞ்சு போன விஷயம்..! இனி ஆகறதைப் பார்க்கலாம்' என்றான். ஆனா வெண்ணிலா கேள்விக்குறியாகவே அவனைப் பார்த்தாள். பிறகு கேட்டாள்.

'இல்லே! ஒரு மொட்டைக் கடுதாசி வந்திருந்தது இல்லே. இதுவரைக்கும் நீங்க அதைப் பத்தி பேசவே இல்லை!' என்றாள்.

'அது பொய்தான்கறது நிருபணமாயிருச்சு இல்லே!' என்று இடியிடி என்று சிரித்தான்.

'எப்படி?'

'எப்படின்னா.. இப்படி?' என்று எப்போதும் அவளை வெட்கப்பட வைக்கிற மாதிரி இப்போதும் விளையாடிச் சீண்டினான். அவள் பொய்க் கோபத்துடன் தள்ளி விட்டாள்.

'பாத்தியா! இந்த வெட்கம். எப்ப அது இயற்கையாக.. வருதோ.. அப்ப அந்த பேப்பர்ல இருக்கறதுன்னு பொய்ன்னு ஆயிடுச் சல்லே... கல்யாணத்துக்கு முதல் நாள்.. ஆர்வத்தால் வந்து




பேசினப்பவே.. உன் முகத்தில வெட்கம்' என்ற போது கலீரென்று சிரித்தான்.

'அன்னைக்குத்தான் உனது ரூமுக்கு வந்து சந்திச்சனே?' என்றான்.

'ஆமா.. அன்னைக்கு ஆரம்பமானதுதான்' என்றாள் அவளும் சோகம் போல்.

'நிலா... உங்கத்தான் கதை எழுதினா நல்லா எழுதலாம். அவனே மனசுக்குள்ளே கற்பனைகளை வளர்த்துட்டு... உருக்கமா.. ஒரு லெட்டர். அதனாலதான் சடங்கை ஒரு வாரம் தள்ளிப் போட்டேன். நம்ம வீட்ல இயல்பாய் ஒட்டிக் கொண்ட விதம், நான் பக்கத்துல வரும்போது உன்னோட ரியாக்ஷன் எப்படிங்கறதையெல்லாம் தெரிஞ்சுக்கிட்டேன்' என்றான்.

'அதுதான் எப்படின்னு கேட்கறேன்?' என்றாள்.

'எப்படின்னா?' என்று இழுத்தான், பிறகு சொன்னான்.

'தொடாதீங்கன்னா.. அப்படின்னு சிணுங்குவே... ஆனா.. பக்கத்துலதான் நிப்பே... அப்புறம்... லேசான எதிர்பார்ப்பு.. ஆனா, அது இல்லாத மாதிரி நடிப்பு..' என்று அவன் அடுக்க...

'போதும்!' என்று அவன் வாயைப் பொத்தினாள்.

'ஹேய்! மனசுக்குப் பிடித்தவன் பக்கத்தில் நின்னா பெண்கள் நிற்கிற விதத்துலயே ஒரு அழைப்பு இருக்கும். உரிமை இருக்கும். அன்பு தெரியும்' என்றான் தனக்குள் ஆழ்ந்தவனாக.

'ஓ!' என்றாள்.

'ஆமா..ஆனா, நீ பாட்டுக்குப் போய் புகார் குடுப்பேங்கறது நான் எதிர்க்காதது. அதுக்கப்புறம்... புயலாய்ப் புறப்பட்ட அம்மணியை சரிக்கட்றது பெரிய விஷயமாய்ப் போனது' என்றான்.

அந்த டிரைவர்கிட்டே இருந்து விஷயம் தெரிஞ்சவுடனே... என்னால ஜீரணம் பண்ண முடியவே இல்லை. ஆனா, நீங்க எப்படி விஷயம் தெரிஞ்சும் சும்மா இருந்தீங்க' என்றாள்.

'சொல்லட்டுமா? நான் என்ன சொன்னேன் தெரியுமா? ஒருவேளை எனக்கு கால் வராமலேயே போயிருந்தா.. கார்த்திகேயன் உன்மேல ரொம்பப் பிரியமா இருந்திருக்கிறான்.. அவன் கிட்டே உன்னை ஒப்படைக்கலாம்னு உள்ளூர எண்ணம் இருந்தது.

அவள் வேதனையுடன் அவனைப் பார்த்தாள்.

'ஹேய்! அப்படிப் பாக்காதே! ஆனா, என் வாழ்க்கைக்காக உன்னைப் பலிகடா ஆக்க முடியுமா? அப்படி நான் யோசிச்சேன்' என்றான். அவனே தொடர்ந்தான். 'தியாகமெல்லாம் முதல் கொஞ்ச நாள் நல்லா இருக்கும். ஆனா, அப்புறம்... வாழ்நாளெல்லாம் ஒரு நோயாளியை வச்சுக் காப்பாத்தறதுங்கறது எவ்வளவு கஷ்டம்ங்கறது உனக்குத் தெரியாது' என்றான்.

'மனசுக்குப் பிடிச்சவர்களா இருந்தா... எதுவும் பாரமா தெரியாது' என்றாள் வெண்ணிலா.

'அதான் அதேதான்... கொஞ்ச நாளைக்கு எல்லாமே நல்லா இருக்கும். அப்புறம்... இந்த மனப்பான்மை மாறிடும்னு நினைச்சேன். ஆனா, நீதான் சட்டையைப் பிடிச்சு மிரட்டிட்டியே..' என்று சிரித்தான்.

அவள் அவனை ஆழ்ந்துப் பார்த்தாள்.

'ஏங்க.. சப்போஸ் நான் சரின்னு விலகியிருந்தா நீங்க எப்படி இருந்திருப்பீங்க?'



'எப்படியா? உயிரோட இருந்திருப்பேன்... ஆனா ஒரு பக்கம் ஏதோ கழன்று போன மாதிரி ஃபீல் பண்ணியிருப்பேன். நடை பிணம் மாதிரி. ஓ! நடக்க வேற வராதா? அப்ப கிடை பிணம் மாதிரி இருந்திருப்பேன்' என்றான்.

'ஐயோ! அப்படி வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க... அத்தான்' என்றாள். அழுது விட்டாள்.

'ஹேய்! என்ன இது? ஒரு பேச்சுக்காகத்தானே பேசுகிறோம்.'

'அத்தான் பேச்சுக்காகக் கூட எதுக்காகக் கெட்டதை நினைக்கணும். கெட்டதில் சிக்கி கஷ்டப்பட்டாச்சு. இனி எதுக்கு அதையே நினைச்சு வருத்தப்பட்டுக்கணும்' என்றாள்.

'ஓகே! ஓகே! வி கம் டு தி பிரஸன்ட்.'

'ஏங்கத்தான் எனக்கு ஒரு சந்தேகம்' என்று ஆரம்பிக்க...

'போதும்.. இனஃப், சந்தேகங்களையெல்லாம் கொஞ்சம் மூட்டை கட்டி வச்சுட்டு கொஞ்சம் சந்தோஷம் பத்தி யோசிக்கலாம்.. வா' என்றான். அவளும் இழைந்து கொடுத்தாள்.

எனினும் 'கிடைபிணம்' அவன் பயன்படுத்திய வார்த்தை அவளை வெகுவாகத் தாக்கி விட்டது. அதிர்ச்சியிலிருந்து அவளை மீட்டெடுப்பதற்காக அவனும் எத்தனையோ முயற்சிகளைச் செய்ய வேண்டியிருந்தது.



## 28

'நாங்கள்ளாம் இந்த வரிசை. பொண்ணு வீட்டுக்காரங்க அந்த வரிசை' என்றான் சுதாகரன்.

பெரியவர்கள் எல்லோரும் அப்படியே அமர்ந்தார்கள். இடையில் இருந்த வரிசையில்

வெற்றிலை பாக்கு அடுக்கி வைத்திருந்தார்கள். பூர்ணிமாவை அவர்களுக்கு நடுவே அழைத்து வந்து அமர்த்தியிருந்தார்கள்.

செல்வம் சற்றுப் பின்னே தள்ளி நண்பர்களுடன் நின்று கொண்டிருந்தான். மாப்பிள்ளை வீட்டில் வரிசையில் அமர்ந்து கொண்டிருந்த வெண்ணிலா செல்வத்தைப் பார்த்துப் புன்னகைத்த அதே வினாடியில் இதேபோலத் தங்கள் நிச்சயத்தின் போது தன் கணவன் சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்ததை நினைத்துக் கொண்டாள்.

இப்போதும் அதேபோல் சற்றுத்தள்ளி லேசாகக் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு நின்றிருந்தான். பட்டுசட்டை பட்டு வேட்டியில் பாந்தமாக இருந்தான். வெண்ணிலா அவன் நிற்கிற தோரணையைக் கண்களால் பார்த்துக் கொள்வதைப் பார்த்து சட்டென்று கண் சிமிட்டிச் சிரித்தான்.

வெண்ணிலா வெடுக்கென்று திரும்பிக் கொண்டாள். அதே நேரம் சுதாகரன், 'என்னங்க.. பேச்சு வார்த்தை ஆரம்பிக்கலாமா?' என்றான்.

அவன்தான் அந்தத் திருமணத்தில் கலாட்டா செய்து கொண்டிருந்தவன் கூட வெண்ணிலாவின் தோழி நீலா வேறு.

நீலா வேண்டுமென்றே போய் பெண் வீட்டார் வரிசையில் அமர்ந்து கொண்டிருந்தாள். திருமண வீடுகளில் இந்தப் பேச்சு வார்த்தையின் போது இரண்டு பக்கத்தாரும் சற்றுக் கலாட்டாவாகப் பேசிச் சிரிப்பது வழக்கம். அதுபோல்தான் இன்றைக்கும் சுதாகரன் செய்த கலாட்டாவைப் பெரியவர்கள் அனுமதித்துக் கொண்டிருந்தார்கள்.

'ம்.. அப்புறம்.. பொண்ணுக்கு என்னென்ன செய்வீங்க?' என்றான் சுதாகரன் தோரணையாக.



அந்த நேரம் யாரும் எதிர்பார்க்காத விதமாக தினகரன் எதிர் வரிசையில் வந்து வேட்டியை அழகாக எடுத்துக் கால் மேல் போட்டுக் கொண்டு சப்பணமிட்டு அமர்ந்தான்.

கலகலப்பாகியது. பெரியவர்கள் சிரித்தார்கள்.

'என்ன வேணும்னு கேளுங்க!' என்றான் தினகரன்.

'ஒரு வண்டி வாங்கிக் குடுப்பீங்களா?' என்றான் சுதாகரன்.

'ஏங்க... இது என்ன அநியாயம்? பொண்ணுக்கு என்னென்ன செய்வீங்கன்னு கேட்டுப் போட்டு மாப்பிள்ளைக்கு வண்டி கேட்கறீங்க' என்றான் தினகரன்.

'வண்டி வாங்கிக் கொடுத்தா.. உங்க வீட்டுப் பெண்ணுதானே.. பின்னாடி உட்காரப் போகுது' என்றாள் வெண்ணிலா.

'ஓஹோ' என்ன நீலா.. வாங்கிக் குடுத்தர்லாமா?' என்றான் தினகரன்.

'ம்.. வாங்கிக் குடுத்திடலாம்' என்றாள் நீலா.

'ஒத்தை மாட்டு வண்டியா? ரெட்டை மாட்டு வண்டியா' என்றான் தினகரன் சிரிக்காமல்.

சுற்றியிருந்தோர் கூட்டத்தார் சிரித்தார்கள்.

'ம் ரெண்டு பேரும் ஒல்லிதான். பேசாம ஒத்தை மாட்டு வண்டியே வாங்கிரலாம்' என்றாள் நிலா.

சுதாகரன் கடுப்பானவன் போல் நடித்தான்.

'விட்டா.. நடை வண்டி வாங்கிக் குடுபீங்களாட்ட இருக்கு!' என்றான்.

'அடே! அது கூட நல்ல ஐடியாதான்' என்றான் தினகரன்.

'அப்புறம்.. அண்ணா! கிலுகிலுப்பை அதை மறந்துட்டீங்களே! அது கூட வாங்கிக் கொடுப்போம்' என்று கூட ஒத்து வாதினாள் நீலா.

எல்லோரும் சிரித்து விட்டார்கள். மணப்பெண் கூட அடக்க முடியாமல் குலுங்கிச் சிரித்தாள். ஆனால், முகத்தை ஒரு புறம் திருப்பிக் கொண்டு.

தினகரனும், சுதாகரனும் இப்படியே கலாட்டாவாகத் திருமண நிச்சயதார்த்தத்தை நடத்தினார்கள்.

'அத்தான்! இதென்ன இப்படிக் கலாட்டா பண்றீங்க' என்றாள் வெண்ணிலா தனிமையில்.

'ஆமா இதெல்லாம்... வாழ்க்கையோட அம்சங்கள்தானே! இப்பப் பாரு செல்வமும், பூர்ணிமாவும் நம்ம கல்யாணத்தை தினகரனும், சுதாகரனும் இப்படி நடத்தினார்கள், அப்படி நடத்தினார்கன்னு பேசிப்பாங்க இல்லே' என்றான்.

'அது உண்மைதான்!' என்று ஒத்துக் கொண்டாள் வெண்ணிலா.

∴ ∴ ∴

'என்ன சுதா! கல்யாணம் வரைக்கும் இருந்துட்டுப் போகக் கூடாதா?' என்றான் செல்வம்.

சுதாகரனை வழியனுப்ப எல்லோரும் ஏர்போட்டில் நின்று கொண்டிருந்தார்கள்.

பாதியில் நின்றிருந்த படிப்பை முடித்து விட்டு வந்து விடுகிறேன் என்று புறப்பட்டிருந்தான். எல்லோரும் வழியனுப்ப வந்திருந்தார்கள்.



'செல்வம்.. அண்ணா! கல்யாண சமயத்தில் முடிஞ்சா வரேன்.. அதுதான் நிச்சயமெல்லாம் கூட இருந்து நடத்திக் கொடுத்திட்டேன் இல்லே!' என்றான்.

'ஆமாமா! கலாட்டாவா நடத்திக் குடுத்துட்டீங்களே!' என்றான்.

சுதாகரன் அவனருகில் நெருங்கி வந்து 'ஏண்ணா! கல்யாணத்தை மூணு மாசம் கழிச்சு வச்சுட்டாங்க.. இப்ப என்னை வழியனுப்பறதுக்குன்னு சொல்லி அவங்களை வரச் சொல்லியிருக்க வேண்டியதுதானே!'

'டேய்! அதெல்லாம் அவனுக்குச் சொல்லித் தர வேண்டியது தில்லை. தெரியுமா! அங்க பாரு பூர்ணிமா வர்றதை' என்று இடையில் நுழைந்தான் தினகரன்.

பூர்ணிமாவுக்கும், செல்வத்துக்கும் இன்னும் இரண்டு மாதத்தில் திருமணம் என்று நிச்சயித்தார்கள். ஏற்பாடுகளில் தினகரனும் வெண்ணிலாவும் முன்னிற்கவே குடும்பத்திற்கு ஏக மகிழ்ச்சி.

'சுதா! முடிஞ்சா.. அங்கயே நல்ல பொண்ணா பார்த்துக்குங்க' என்றான் செல்வம்.

'ம்ஹூம்! அந்த வேலையே கிடையாது! ஒரு ஜோக் இருக்கு. தெரியுமா? அமெரிக்கன் சேலரி ஆனா இந்திய மனைவி வேணுமாம்.. ஏன்னா அப்படி இந்தியப் பெண், மனைவி உயர்வானவள்னு உலகத்துல ஒவ்வொருத்தனும் நினைக்கிறான். இப்ப நம்ம வீட்டயே பாருங்களேன். அண்ணனுடைய கஷ்டமான நேரங்கள்ல அண்ணி எப்படி ஒரு மாரல் சப்போட்டா, தாயா, தோழியா இருந்தாங்க... அது மாதிரிப் பொண்ணாப் பாத்து எனக்கு செலக்ட் செஞ்சு குடுங்கண்ணின்னு அண்ணிகிட்டே பொறுப்பைக்

குடுத்துட்டேன். நான் ஹாய்யா படிப்பை முடிச்சுட்டு இங்க வரப் போறேன்' என்றான்.

'வெண்ணிலா.. உன் கொழுந்தன் அசத்திட்டாரு..' என்றான் செல்வம். குரலில் பெருமை தொனிக்க மனைவியைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டு நின்றான் தினகரன்.

∴ ∴ ∴

'ஏங்க.. கார்த்திகேயன் நான் சரண்டர் ஆயித்தான் தீருவேன்னு வந்து நின்னாரே... அதை எப்படி டாக்கிள் செஞ்சீங்க?'' என்றாள் வெண்ணிலா.

'அதுவா! அந்த டிரைவரை வரவழைச்சேன். மத்த சாட்சிகளையெல்லாம் வரவழைச்சு அவர்களையே பேச விட்டேன். கேஸை எப்படி உடைப்பேன்னு அவனுக்கு விளக்கிச் சொன்னேன். பய பின்வாங்கிட்டான்' என்றவன் மனைவியைத் தன் கையணைப்பில் கொண்டு வந்தான். பிறகு சொன்னான்:

'நீதான்.. அவனுக்குப் பெரிய தண்டனையைக் குடுத்துட்டியே.. 'நீயெல்லாம் ஒரு மனுஷனா? நீயிருந்தா எனக்கென்ன? செத்தா எனக்கென்னன்னு சொல்லிட்டு திரும்பிப் பார்க்காம வந்துட்டியே.. அதுல நொறுங்கிப் போயிட்டான். இனிமே எனக்கு வெளியே என்ன இருக்கு.. உள்ளேயே இருக்கறேன் அப்படிங்கறான்.'

'ஆமா.. உள்ளயே இருக்க நீங்க விட்டிருக்கலாம்' என்றாள் கோபமாக.

'ஐயோ! துர்கா தேவி! சாந்தம்.. சாந்தம்! அமைதி!' என்று கிண்டல் செய்தான்.



அவள் கடுப்பாகி முறைத்தாள். 'பின்னே என்னங்க! வீரம் இருக்கிறவன் எதிர்த்துப் போராடணும். அதை விட்டுட்டு கோழைங்கதான் இந்த மாதிரி வழி எல்லாம் கையாள்வாங்க. ஆள் வச்சு அடிக்கறது, ஆக்ஸிடென்ட் பண்றது, கொலை வெறியோட அலையறது. நாம என்னங்க கற்காலத்துலயா இருக்கோம்!' என்றாள். மூச்சு வேக வேகமாக வருவதைப் பார்த்த தினகரன் ஒரு நிமிடம் திகைத்துப்போனான். பிறகு மெல்ல நீவி விட்டான்.

'ரிலாக்ஸ், ரிலாக்ஸ்' என்றான்.

'பின்னே என்னங்க! அன்பு காதல் இதெல்லாம் மென்மையான உணர்வுகள். சொல்ல வந்தவன் அடிச்சு வரவழைக்க முடியுமா!' என்றாள்.

அவள் வெடித்த வேகத்தைப் பார்த்த தினகரன், 'அவனும் பாவம்தான்' என்று சொல்ல வந்தவன் அடக்கிக் கொண்டான். பிறகு சொன்னான்.

'அது.. நிலா.. நம்ம குடும்பங்கள்ல ஒரு தப்பு செய்யறாங்க... சின்ன வயசிலேயே முறை மாப்பிள்ளைன்னு இணைச்சு கலாட்டா செய்யறது. அது சில நேரங்கள்ல மனசுல பதிஞ்சுருது. விளையாட்டாய்ப் பெரியவங்க செய்யற காரியங்கள் விபரீதத்துல போய் முடிஞ்சுருது' என்றான்.

'ஆமாங்க! என்று அவளும் பெருமூச்சு விடாள். பிறகு அவன் கழுத்தைக் கைகளால் வளைத்துக் கொண்டு புன்னகைத்தாள்.

'ஆனாலும்.. நீங்க.. ரொம்பவே நல்லவங்க... ஆப்போசிட் பார்ட்டிக்கே அனுதாபம் காட்டிட்டீங்க' என்றாள்.

'என்ன செய்யறது? இப்படி ஒரு அருமையான பெண்ணைப் பெத்து எனக்குக் குடுத்திருக்கிற மாமனாரோட வேண்டுகோளாய்ப்

போச்சு.. அதனால கூல்டவுன் ஆயிட்டேன்' என்றான். 'ஆனா அன்னைக்கு அவனோட சட்டையைப் பிடிச்சு உலுக்கிப் போடு போடுன்னு போட்டியே... அன்னைக்கு எனக்குப் பெருமிதம் ஆயிடுச்சு.. 'போடா! எனக்கு கிடைக்க வேண்டியது கிடைச்சாச்சு இனி, நீ இருந்து என்ன? போனா என்னன்னு' உன்னோட மென்டாலிட்டிக்கே நானும் வந்துட்டேன்' என்றான்.

தோட்டத்திற்கு வந்திருந்தார்கள். அவனுடைய அன்பு ஆசையை நிறைவேற்றுவது போல நிலவொளியில் மெல்ல நடந்து கொண்டிருந்தார்கள்.

இடையிடையே நின்றும் நடந்தும் பேசிக் கொண்டும் போய்க் கொண்டிருந்தார்கள்.

'ஹேய்! எனக்கு எப்படிப்பட்ட ஒரு லக் பாத்தியா. நான் பாத்து ரசித்த வானத்தில் ஒரு நிலா... பக்கத்துல ஒரு நிலா...' என்றவன் கிறக்கமான குரலில்,

'வசனம் நல்லாயிருக்குல்ல' என்றாள்.

'கொன்னுடுவேன்.. வசனமா! ஃபீலிங்.. மேடம்! ஃபீலிங்!' என்றான்.

'ம்!' என்றாள் கிண்டலாக.

'ஹேய்! உனக்கு என்னமோ அந்த மாதிரி ஃபீலிங் எல்லாம் இல்லாதமாதிரி நடக்காதே! நான் நடக்க ஆரம்பிச்சதுக்கப்புறம் போர்ட்டிகோவில் நின்னுகிட்டு நான் நடந்து வர்றதையே பாத்துக்கிட்டிருப்பே இல்லே! அப்ப இந்தக் கண்களிலே எப்படி வழியும் தெரியுமா!'

'எது அசடா?' என்றாள் வெண்ணிலா.



'காதல்.. பெண்ணே! காதல்' என்றான்.

'உங்களுக்குத் தெரியாதுங்க... எத்தனை கோயில் போனேன் எத்தனை தெய்வத்தை வேண்டினேன்னு. நீங்க நடந்து வர்ற மாதிரி... தானா எழுந்திருக்கிற மாதிரியெல்லாம் கற்பனை பண்ணிக்குவேன்... ஆனாலும் உங்களுக்கு வில்பவர் அதிகம்தான்' என்றாள்.

மீண்டும் அன்றொரு நாள் வெட்டார வெளியில் கட்டில் போட்டு அமர்ந்தாற்போலவே அமர்ந்தார்கள்.

'நிலா! எங்க அப்பாவோட நண்பர் ஒருத்தர் கல்யாணத்துக்கு அப்புறம் நடுத்தர வயதிலே இந்த மாதிரி ஆகி ரெண்டு காலும் வராமல் போயிடுச்சு. ஆனா, கொஞ்சம் கூட கலங்காம ஒரு அரசுப் பள்ளிக் கூடத்துல தலைமையாசிரியரா இருந்து ரிடையர் ஆனாரு. இப்பவும் இலக்கியப் பணி செய்யறாரு. அவரைத்தான் என் ரோல் மாடலா நினைச்சிக்கிட்டேன். நல்லவேளையாய் கடவுள் எனக்கு நியாயம் கொடுத்தாரு.

வெண்ணிலா தன் வெட்கத்தையெல்லாம் புறந்தள்ளி விட்டுக் கணவனை வேண்டுமட்டும் கவனித்தாள். அவன் உணர்வு மயமானான். சற்றுக் கழித்துத்தான் விடுவித்தாள்.

'தாங்க்ஸ் டியர்!' என்றான். மேலும் தொடர்ந்தான்.

'நிலா! உனக்குத் தெரியாது. நான் உன் மேல வச்ச பிரியம் உண்மையானதா இருந்தா, உன் வாழ்க்கையை செப்பனிட்டுக் கொடுக்கனும் இல்லேன்னு, என் மனசாட்சி என்னைக் கேட்க கேட்டுக்கிட்டே இருந்தது. இன்னொரு மனசோ உன்னை விட்டுப் பிரியறதா... கூடவே கூடாதுன்னு.. எச்சரிக்கை சொல்லிட்டே இருந்தது. எப்படிப்பட்ட போராட்டம் தெரியுமா?

'அது உங்க நல்ல மனசோட அடையாளம். ஆனா, எனக்கு அந்தக் குழப்பம் இல்லவே இல்லை. ஏன்னா.. இந்தப் பிரச்சனை தற்காலிகமானதுதான் என என் உள்மனசு சொல்லிகிட்டே இருந்தது.'

ஒண்ணு தெரிஞ்சுக்குங்க... அத்தான், உள்ளம்கறது ஒரு கோவில் மாதிரி... அதுல தெய்வங்களையெல்லாம் டர்ன் ட்யூட்டி கொடுத்தா மாதிரி... மாத்திகிட்டிருக்க முடியாது. எப்ப நீங்க நம்ம நிச்சய தார்த்தத்தப்போ நேர்ல எதிர்ல நின்னுகிட்டு விழுங்கிற மாதிரிப் பார்த்துக்கிட்டிருந்தீங்களோ.. அப்பவே ஒரு கதிர் என் மனசுக்குள்ளே பாய்ஞ்சிருச்சு' என்றாள்.

அவன் மெல்லச் சிரித்துக் கொண்டு குழைய ஆரம்பித்தான். 'ஹேய்'நான் தினகரன் இல்லே... அதாவது சூரியன். கதிரவன் அவன் கதிர் பாய்ஞ்சிருச்சு.. ஆனா, கதிரவன் ஒளி சூடானதாச்சே' என்றான்.

'யார் சொன்னாங்க. அத்தான்! உங்களுக்கு விஷயமே தெரியலே. நிலாங்கற கிரகத்துக்கு தனி ஒளி கிடையாது. அது சூரியன் கிட்டேதான் ஒளிக் கதிரை வாங்கிக்குது. அப்புறம் அதையே குளிர்ச்சி பொங்க பூமிக்குக் குடுக்குது தெரியுமா?'

'இத பார்ரா! சைண்டிபிக்கா விளக்கம் சொல்றா...எது எப்படியா? இப்ப ஐயா கொஞ்சம் சூடாத்தான் இருக்கேன்' என்றான்.

'போச்சுடா! ஆரம்பமாயாச்சு.. இதென்ன இங்க வெளியில உட்கார்ந்துட்டு' என்றாள்.

'எல்லா வேலையாட்களையும் அனுப்பியாச்சு. யாரும் இங்கே வராத அளவுக்கு ஏற்பாடு பண்ணியாச்சு.. நிம்மதியா.. நாம நாம மட்டுமே' என்றான்.

எழுந்து நின்றான்!



இருவரும் மெல்லக் கட்டிடம் நோக்கிச் சென்றார்கள்... தனிமை நாடி!

உறவில் திளைத்தார்கள்!

சற்றுக்கழித்து...

தன் கோபத்தையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு குளிர் ரேகையாய் மாற்றி அன்பை வழங்கிய மனைவியின் உள்ளக் கோயிலிலே தான் குடியிருக்கிற அற்புதத்தை அனுபவித்தபடி அமைதியாய் அமர்ந்திருந்தான். பிறகு சொன்னான்.

'அருமையா விளக்கம் சொன்னே! பொண்ணே!' என்று மீண்டும் மீண்டும் பாராட்டிக் கொண்டான்.

'சாதாரணமாகச் சொல்வாங்க! ஆப்போசிட் போல்ஸ் அட்ராக்ட் ஈச் அதர்ன்னு. நமக்குக் கல்யாணம் அமைஞ்சப்போ நம்ம பேர்ப் பொருத்தம் பாத்து அப்படி நினைச்சேன். ஆனா, நாம ஆப்போசிட் போல்ஸ் இல்லே! மேட் ஃபார் ஈச் அதர்ன்னு அழகா விளக்கம் சொல்லிட்டே' என்று பாராட்டிக் கொண்டான்.

அவனிடமிருந்து கிடைத்த பதிலுக்கு மகிழ்ந்துபோனாள். 'அதுசரி! அதான்.. உள்ளமெனும் கோயிலிலே வச்சிருக்கேனே! அதுவே போதாதாக்கும்னு... நான் கேட்கற விஷயத்துக்கெல்லாம் நெகட்டிவ்வா பதில் சொல்லாதே' என்று எச்சரிக்கையாக ஒரு வாக்கியம் போட்டு வைத்தாள்.

அவன் மூக்கைப் பிடித்து ஆட்டி விட்டுச் சொன்னாள்.

'அடடா! பெரிய பிஸினஸ் மேக்னட்டுக்கு இந்த விஷயம் புரியாதாக்கும்! ஒரு பொண்ணு உள்ளம்கற கோவில்லயே இடம் குடுத்தாச்சுன்னா... அதுக்கப்புறம்... எதுக்குமே.. எதிர்மறையான பதிலே கிடையாதுன்னு புரியலை?'

'அப்படிப் போடு! இன்னைக்குத்தான் ஜாக்பாட் அடித்த மாதிரி இருக்கு' என்று அவன் வெடிச் சிரிப்பு சிரிக்க 'இப்படியே என்றும் இவரை சிரிக்க வைக்க வேண்டும்' என்று உறுதி எடுத்துக் கொண்டாள் வெண்ணிலா.

நீல வானத்திலிருந்து குளுமையான நிலாக் கதிர்கள் ஜன்னல் வழியாகத் தலை நீட்டி அந்தக் காதலர்களின் சிரிப்பையும்; உறவையும் ஓரக் கண்ணால் வெட்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்க அந்தக் கணவனும், மனைவியும், தங்கள் கனவுகளை நனவாக்கிக் கொள்ளும் முயற்சியிலே தங்களை மறந்திருந்தார்கள், மகிழ்ந்திருந்தார்கள்.

துன்பம் என்பது கடந்த காலம். இனி இன்பம் என்பதே எதிர்காலம் என்ற உறுதி அவர்கள் உள்ளத்தில் ஏறியிருந்தது.

குளிர் நிலவின் தண்ணொளியே எங்கும் பரவியிருந்தது.

